# மறைமுதல்வன்

## சிறுகதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைமுதல்வன் சிறுகதைகள்

ஆக்கியோன்

மறைமுதல்வன் G. P. வேதநாயகம்

கவிதாலயா வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்



| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | மறைமுதல்வன் சிறுகதைகள் |
| ஆக்கியோன் | : | G.P.வேதநாயகம் [மறைமுதல்வன்] |
| மொழி | : | தமிழ் |
| வகை | : | சிறுகதைகள் |
| பதிப்பு ஆண்டு | : | 2020 |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| வடிவமைப்பு | : | வேதா |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ டிஜிட்டல், வெள்ளவத்தை |
| வெளியீடு | : | கவிதாலயா |
| பக்கங்கள் | : | 174+ |
| விலை | : | ரூபா 400 |

| | | |
|---|---|---|
| Title of the book | : | Maraimuthalvan Sirukathaikal |
| Language | : | Tamil |
| Subject | : | Short Stories |
| Written by | : | G. P. Vethanayagam |
| First Edition | : | 2020 |
| Copyright of | : | The Author |
| Wrapper designed by | : | Vetha |
| Printed at | : | Sri Digitals, Wellawatta |
| Published by | : | Kavithalaya |
| No.of pages | : | 174+ |
| Price | : | Rs.400 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



றொபேட் வேதா

தட்டிக் கொடுத்திடவும்
தட்டியே கேட்டிடவும்
தம்பி நீயுண்டுரிமையுடன்
நம்பி இறங்கிடலாம் நட்டாற்றில்
நல்ல துணை நீ இருந்தால் - கூர்
அம்பு வாள் தேவையில்லை
அடுத்து வரும் பகை வெல்ல - யார்
தடுத்தாலும் நேர் செல்லத்
துணிவு தருமுன் சொல் போதும்
தாள் பணிந்திச் சிறு நூலைத்
தந்தேன் நான் சமர்ப்பணமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

சிறுகதை என்றால் என்ன என்பது பற்றிப் பலரும் பல காலமாகப் பல வாறும் எழுதி வந்துள்ளார்கள். தமிழில் இதுகாலவரை ஆயிரக்கணக்கில் இலட்சக்கணக்கில் சிறுகதைகள் பிரசுரமாகிவிட்டன. நானும் ஒரு சிறுகதை ஆசிரியன் என்று மார்பை நிமிர்த்திக்கொண்டு வலம் வந்தவர்களும் வருகி றவர்களும் ஏராளம்.

ஆனால் அப்படியாக நானும் என்னைக் கூறிக்கொள்ளக் கொஞ்சம் சங் கடமாக இருக்கிறது. ஏனெனில் நான் அவர்களையெல்லாம் போல ஏராள மாக எழுதிக் குவித்தவனல்ல. அருந்தலாக ஒரு சில கதைகளை எழுதி, அவற்றுள் சில பிரசுரமாகின. பிரசுரத்துக்கு அனுப்பப்படாமலே அடிப் பெட்டிக் குள் முடங்கிப்போனவை பல.

ஏதோ தப்பிப் பிழைத்த ஒருசிலவற்றைத் தூசு தட்டி ஒரு புது வாசக னாக நானே மாறி வாசித்துப் பார்க்கையில் நானும் சில நல்ல கதைகளை எழுதியிருப்பது போலத்தான் தெரிகிறது. சிலருக்குச் சிலரது சில கதைகள் பிடிக்கலாம். சில கதைகள் பிடிக்காமல் போகலாம். அது அவரவரது அனுப வத்தை, சார்பு நிலையைப் பொறுத்தது.

ஒட்டு மொத்தமாக ஒருசேர வாசிக்கும்போதுதான் ஒரு சிறுகதை யாசிரியனின் பலமும் பலவீனமும், சிறப்பும் சாமான்யமும் தெரியவரும். பரவலாக எனது சிறுகதைகள் ஏதும் வெளிவந்திராத காரணத்தால் எந்த விமர்சகனது/ திறனாய்வாளனது பார்வையும் என் மீது விழுந்ததில்லை. இனிச் சிலவேளை விழக்கூடும்; விழாமலும் போகலாம்.

சிறுகதை என்றால் இப்படித் தான் இருக்கவேண்டும் எனும் சில சட்ட கங்களுக்குள், கோட்பாடுகளுக்குள் தங்களைத் திணித்துக் கொண்டு அதற் கேற்ப சிறுகதை உருவாக்குபவர்கள் இருக்கிறார்கள். அவற்றையே சிறந்த இலக்கியச் சிறுகதைகளாக சிலாகித்துக் கொண்டாடும் புத்திஜீவிகளான திற னாய்வாளர்களும் அவர்களை வழிமொழியும் வாசகர்களும் இருக்கிறார்கள்.

இத்தகைய வாய்ப்பாடுகளுக்குள்ளோ வரைமுறைகளுக்குள்ளோ அடங்க விரும்பாதவன் நான். எனக்குப் பிடித்தமான கருவை, பிடித்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவத்தில் சிறுகதையாகவோ நாடகமாகவோ நான் வடிக்கிறேன். சிறு கதை எழுத்தில் சுஜாதாவையும் அ.முத்துலிங்கத்தையும் எஸ்.பொ.வையும் ஓரளவுக்கு ஆதர்சமாகக் கொண்டேன் எனக் கூறினாலும் தவறில்லை.

அடிப்படையில் நானொரு நாடக எழுத்தாளன். குறிப்பாக வானொலி நாடக எழுத்தாளன். நல்ல சில நாடகங்களை எழுதியுமுள்ளேன். சிறுகதை போலவே நாடகமும் ஓர் இலக்கிய வடிவம்தான். நாடகங்கள் எழுதுவதில் பெரும்பாலான எனது நேரத்தைச் செலவிட்டதால் சிறுகதை எழுதுவதில் என்னால் அவ்வளவாக மினக்கெட முடியவில்லை. பல சிறுகதைகளை நாடகங்களாக மாற்றி எழுதமுடியாது. ஆனால் நாடகங்களை இலகுவாக சிறுகதைகளாகவோ குறு நாவலாகவோ மாற்றிவிட முடியும். ஆயினும் அவ் வவற்றுக்குப் பொருத்தமான வடிவங்களில்தாம் அவை சிறப்புப் பெறுகின் றன.

சிறுகதைகளுக்குச் சமதையான அளவு தரத்தையும் பரிமாணத் தையும் நாடகங்களும் கொண்டுள்ள போதிலும் சிறுகதை எழுத்தாளர்களைப் போல் நாடக எழுத்தாளர்கள் கணிக்கப்படுவதில்லை. இலங்கையர்கோன், எஸ்.பொ.போன்ற பல முன்னணிச் சிறுகதை எழுத்தாளர்கள் நாடகங்களும் எழுதியுள்ள போதிலும் அவர்களது நாடகங்கள் பற்றிக் கவனத்திற் கொள்ளப் படுவதில்லை. இந்நிலை மாற்றப்படவேண்டும்.

சிறுகதை எழுதுவது ஒன்றும் பிரம்ம சூத்திரமல்ல. எழுத்து நடை கை வரப் பெற்றவனுக்கு எல்லாமே ஒன்றுதான். புதுமைப்பித்தனில் தொடங்கி ஜெயகாந்தன், தி.ஜானகிராமன், மௌனி, லா.சா.ரா., சுஜாதா எனவும் இலங்கையர்கோனில் ஆரம்பித்து எஸ்.பொ., அ.முத்துலிங்கம். எஸ்.ரஞ்ச குமார் எனவும் எழுதிவரும் பல்லாயிரக்கணக்கான எழுத்தாளர்களை வாசித் தும் வியந்தும் காலப்போக்கில் மறந்தும் கூடப் போனதுண்டு.

நல்ல எழுத்தாளர்களின் சிறுகதைகளை வாசிக்கும்போது ஏற்படும் வியப்பும் மலைப்பும் நாமும் எழுதலாம் எனும் முனைப்பையே மழுங்கடித் துத் தாழ்வுச் சிக்கலில் நம்மைத் தள்ளிவிடக்கூடும். எதிர்மறையாக, மிக மோசமான ஒரு சிறுகதையை எழுதிவிட்டு மகத்தான சாதனை புரிந்துவிட் டது போலக் கொக்கரிக்கும் சில சில்லறை எழுத்தாளர்களைக் காணும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமும் எழுதத்தான் வேண்டும் எனும் ஓர் உத்வேகம் எழுவது ஒரு முரண் நகையே.

இரு சிறுகதை போட்டிகளில் கலந்து கொள்வதற்காக நான் எழுதிய இரண்டு சிறுகதைகளும் வீரகேசரி வார மலரில் நான் 1978 இல் எழுதிய எனது முதற் சிறுகதையும் பின்னைய நாட்களில் 'இருக்கிறம்' சஞ்சிகைக்காக வானொலி நண்பர் இ.தயானந்தாவின் தூண்டுதலால் எழுதப்பட்ட சில நகைச்சுவை அனுபவக் கதைகளும் சில ஒரு பக்கக்கதைகளும், கற்பனை கொஞ்சம் கலந்த உண்மைக் கதைகள் சிலவும் சமகால வரலாறு, திகில், நகைச்சுவை எனப் பல்வேறு பரப்பையும் உள்ளடக்கிய - ஆயினும் பிரசுரிக்கப்படாது புத்தம் புதிதாக நூலில் சேர்க்கப்பட்டுள்ள - வேறு சில கதைகளும் உள்ளடக்கப்பட்டதாக இந்நூல் உருவாகியுள்ளது. ஏதோ ஓர் அருட்டுணர்வில் எழுத ஆரம்பித்துப் பின் இடைநடுவில் கைவிடப்பட்டுச் சமீபத்தில் முற்றுப் பெற்ற ஓரிரு கதைகளும் இவற்றுள் அடக்கம்.

வீரகேசரி, திசை, இருக்கிறம் - பத்திரிகை / சஞ்சிகைகளுக்கும், ஆறுதற் பரிசுக்கு 'தண்டனை' சிறுகதையைத் தெரிவுசெய்த 'பன்னாட்டுப் புலம் பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்துக்கும், மிகக் குறுகிய காலத்தில் இந்நூலைச் சிறப்புற அச்சிட்டு மிக நேர்த்தியாக வெளிக்கொணர்ந்த வெள்ளவத்தை ஸ்ரீ டிஜிற்றல் அச்சகத்தாருக்கும் நூல் வெளியீட்டில் பக்கத்துணையாக நின்ற 'ஆதவன்' வானொலி நிகழ்ச்சி முகாமையாளர் சுந்தரேஸ்வரன் பிரதீப்புக்கும் எனது இதயங்கனிந்த நன்றிகள். சென்றடையவேண்டிய வாசகர்களை மட்டுமாவது இந்நூல் சென்றடைந்தால் என் ஜென்மம் சாபல்யம் பெற்றதாகும்.

என்றும் அன்புடன்,

G.P. வேதநாயகம் [மறைமுதல்வன்]

**email: gpv1611@gmail.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே..


| | | |
|---|---|---|
| 01. | ஒரு சிறுவன் சினிமா பார்க்கப் போகிறான் | 01 |
| 02. | மனிதனைத் தேடி | 07 |
| 03. | தண்டனை | 15 |
| 04. | முல்லேரியா | 32 |
| 05. | சாதி | 43 |
| 06. | வீடு | 56 |
| 07. | மரண அறிவித்தலும் மணமகன் தேவையும் | 62 |
| 08. | ஒரு புதிய போர்ப்பரணி | 71 |
| 09. | இடறல் | 83 |
| 10. | ஒரு கொலைகாரனின் வாக்குமூலம் | 91 |
| 11. | மன்மதனுக்கு அம்னீஷியா | 101 |
| 12. | பாட்டுக்குப் பூட்டு! | 105 |
| 13. | நான் TV நடிகனான கதை | 117 |
| 14. | சொல்லக்கூடாத வில்லங்கம் | 127 |
| 15. | காசு மேல காசு வந்து | 132 |
| 16. | கோச்சி வரும் கவனம் | 138 |
| 17. | சுயநலமி | 143 |
| 18. | என்னதான் முடிவு | 145 |
| 19. | பழிக்குப் பழி | 147 |
| 20. | இதோ ஒரு சிறுகதை | 150 |
| 21. | ஒரு ராஜாவின் கதை | 160 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *ஒரு சிறுவன் சினிமா பார்க்கப் போகிறான்*



'அம்மா காய்ச்சலில் முனகிக் கொண்டு கிடக்கிறாள். தங்கச்சி பசியால் கண்ணைக் கசக்கியபடி விம்மிக்கொண்டிருக்கிறாள். மருந்து வாங்க வீட்டில் காசுமில்லை; காலைச் சாப்பாட்டிற்கும் வழி தெரியவில்லை. பாடசாலைப் பரீட்சை வேறு கிட்டுகிறது'. எல்லாவற்றையும் எண்ணிப் பார்க்கும்போது அருள்ஜோதிக்கு எரிச்சல் எரிச்சலாக வருகிறது.

அறுபது வயதின் பக்குவம் அவனுக்குப் பன்னிரண்டு வயதிலேயே சித்தித்துவிட்டது. கடன் சொல்லிக் காக்கா கடையில் ஒரு பணிஸ் வாங்கி வந்து தங்கச்சி கையில் கொடுத்துவிட்டு அவசர அவசரமாகப் புத்தகங்களை அள்ளிக்கொண்டு ஓடுகிறான். பள்ளிக்கூடத்துக்கு நேரமாகிவிட்டது.

வழியில் பைப் தண்ணீரில் முகத்தைக் கழுவிக்கொண்டு ஒண்டுக்குப் பெய்யவென்று காற்சட்டையைக் கிளப்பிப்பிடித்தபடி மூலைச் சுவரோரம் ஒதுங்கியபோதுதான் அவன் கண்ணில் அந்தப் 'போஸ்டர்' விழுந்து தைக்கிறது .

இன்றுமுதல் "சொந்த வீட்டுப் பிள்ளை" – என்று கொட்டை எழுத்தில் எழுதியிருப்பதை அவன் மேய்ந்துகொண்டிருக்கையில் பின்புறமாகப் பிடரியில் ஒரு பலமான அறை விழுந்தது. சிலிர்த்துக் கொண்டு திரும்பிய அவன் முகத்தை பீடிப் புகை மூட்டமிட்டது. அவனைவிட நாலைந்து வயது கூடிய பையனொருவன் ஆத்திரம் முகத்தில் கொப்பளிக்க நின்றுகொண்டிருந்தான். "படுவா ராஸ்கல் யேண்டா, ஒனக்கு ஒண்ணுக்குப் பேய வேற எடம் அம் பிடல்லியா? எங்க வாத்யார் மூஞ்சீலயாடா பேயறே?" பேச்சைத் தொடர்ந்து முகத்தில் ஓர் அறை விழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தை உராஞ்சிக் கொண்டு அவ்விடத்தை விட்டகன்று, அடித்தவன் அணுக முடியாத தூரத்தில் போய் நின்றபடி நாக்கைப் பிதுக்கிக் காட்டி, "போடா போடா" என்று விட்டு அருள்ஜோதி மீண்டும் ஓடுகிறான். மனதிற்குள் இதற்குக் காரணமான யார் மீதோ இனம் புரி யாத ஆத்திரம் கறுவுகிறது.

பாடசாலைக்குள் அவன் நுழையும்போது 'பிறேயர்' முடிந்து முதற் பாடம் ஆரம்பமாகிவிட்டது. 'பிரம்படி நிச்சயம்'. "என்ன துரைக்கு இப்ப தான் விடிஞ்சுதாக்கும்?" பிரம்பைச் சுழற்றியபடி அந்தோனிப்பிள்ளை மாஸ்டர் நெருங்குகிறார். முதல் நாள் பின்னேரம் போட்ட அரைப் போத்தல் இன்னும் வேலை செய்கிறதென்பது அவர் கண்களில் தெரி கிறது. 'வீய்வீய்' என்று பிரம்பு ஆகாயத்திற்கும் பூமிக்குமாகச் சுழன்று சதிராடுகிறது. அடி உரக்கின்றது.

கன்றிச் சிவந்து வீங்கிக் கோடிழுத்துவிட்டிருந்த தழும்பினில் எச்சிலைப் பூசித் தேய்த்துவிடும்போது ஏனோ அவனுக்குத் தாயைப் பற் றிய நினைவு எழுகின்றது. அவன் அழுகின்றான். சாமியாடி முடிந்த மாஸ்டர் களைப்புத்தீர ஃபோர் ஏஸஸ்' ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு கதிரையில் சாய்ந்து விடுகிறார். அவர் இனிப் படிப்பிக்க மாட் டார்!

"சொந்த வீட்டுப் பிள்ளை போட்டிருக்கானே... பாக்கேல்லையா மச்சான்? "சல்லி இல்லை மச்சான்... எங்க சரி கிளப்பணும்... அம்மாட சல்லிமுட்டீல இருந்தா வாசி.." பக்கத்தில் இருந்தவர்களின் கதை அருள்ஜோதியின் சிந்தனையைத் தட்டி எழுப்புகிறது. 'ஒரு எழுவத் தஞ்சுசேம் மாத்திரம் இருந்திசின்னா... யாருகிட்ட சரி கேப்பம்.. பீட்டர் வச்சிருப்பானா...?'

பீட்டர்தான் அருள்ஜோதியின் ஒரே நண்பன். படிப்பில் கெட்டிக் காரன். அவன் தந்தைக்கு ஹார்பரில் கூலி வேலை. அதனால் அருள்ஜோதியிலும் பார்க்க அவன் கொஞ்சம் வசதியானவனாக இருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மச்சான் ஒரு எழுவதஞ்சேம் இருந்தா தாயேண்டா... நாளைக்கு திருப்பி தந்துடுறேன்..."

"எங்கிட்ட இல்லியே மச்சான்... 'றிப்போட்' வாங்க சொல்லி அம்மா தந்து விட்ட சல்லிதான் இருக்கு. வாங்கிட்டு போவாட்டி மாட்டுதான்.."

"நாளைக்குதான் 'றிப்போட்' தரலாம்னு மாஸ்டர் சொன்னார்ன்னு சொல் லேன்... இன்னைக்கு மட்டும் ஒரு நாள்தானே.." அருள்ஜோதியின் குரல் குழைந்தது. அரை மனதுடன் தன்னிடமிருந்த எழுபத்தைந்து சதத்தை அருள்ஜோதியிடம் கொடுக்கிறான். அருள்ஜோதியின் மனதில் மகிழ்ச்சி அலைகள் பொங்கிப்புரள்கின்றன.

'ரெண்ணு மணிக்கு 'ஷோ ஸ்ராட்' ஆவும். பன்னெண்டு மணிக்கின்னாலும் உள்ளுக்கெடுத்துடுவான். ஸ்கூல் முடிஞ்சு போறதின்னா வேலையில்ல. 'இன்ரவெல்'லோட 'கட்'டப் போட்டுட்டுப் போனாத் தான் சரி'. இடைவேளை வரும் வரை அவன் மனம் குதிபோட்டுக் கொண்டேயிருந்தது. அடிபட்ட நோக்கூட மறந்துபோய்விட்டது. 'இண்ட வெல்' மணியடித்ததும் புத்தகங்களைப் பீட்டரிடம் ஒப்படைத்துவிட்டு அவன் நைஸாகக் கம்பி நீட்டி விடுகிறான்.

தியேட்டர் வாசலின் முன் கூட்டம் குழம்பி வழிகிறது. கதாநாய கனின் 'கட்டவுட்' மிக உயரமாக – பிரமாண்டமாக, 'நான் ஆணயிட்டால்' போஸில் கையில் சவுக்குடன் உயர்ந்து நிற்கிறது. சின்னப் பொடியன் கள் சிலர் அண்ணாந்து அதையே பார்த்தபடி ஆவென வாய் பிளந்து தம்மையே மறந்துபோய் நிற்கின்றனர். மீசை அரும்பும் விடலைப் பரு வத்துப் பையன்கள் இருவர் கதாநாயகியை அந்தக் கதாநாயகன் இறுக்கி இழுத்தணைத்து ஏதோ செய்யும் பான்மையை ரசித்து விமர் சித்தபடி நிற்கிறனர்.

கலரி கேற்றுக்கு முன்னால் முண்டியடித்து முட்டிமோதி இடிபட் டுப் பிதுங்கும் கூட்டத்துள் அருள்ஜோதியும் போய் ஒட்டிக்கொள் கிறான். அவன் சிந்தனை எல்லாம் 'கேற்' திறந்தவுடன் எப்படி நுழைந் தால் முன்னுக்குப் போகலாம் என்பது பற்றித்தான். தற்செயலாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருப்பக்கம் பார்வையைத் திருப்பிய அருள்ஜோதியின் நெஞ்சம் 'திடுக்'கென ஒரு கணம் நின்று பின் இயங்கியது.

அந்தோனிப்பிள்ளை மாஸ்டர் டாக்ஸிக்காரனுக்குக் காசு கொடுத்துக் கொண்டு நிற்கிறார். 'தற்செயலாகத் திரும்பினால் போச்சு. அம்பிடவேண்டியதுதான்'. சாரன்காரன் ஒருவனின் பரந்த முதுகின் பின்னால் தன்னை அடைக்கலமாக்கிக் கொள்கிறான். அவனுடம்பில் இருந்து வீசிய மீன் மணம் மூக்கைச் சுளிக்கவைக்கிறது. 'ஷோட் லீவை'ப் போட்டுவிட்டு மாஸ்டரும் படம் பார்க்கத்தான் வந்திருக்கிறார். சாரன்காரனுக்கும் மற்றொரு பீடிக்காரனுக்கும் இடையாகத் தெரியும் நீக்கலுக்கூடாக அந்தோனிப்பிள்ளை மாஸ்டரை அவன் அவதானிக்கிறான்.

திடீரென ஒரு பரபரப்பு அங்கு சூழ்கிறது. கலரி கேற் திறக்கப்படவும் கூட்டம் நசுங்கிப் பிதுங்க ஆரம்பிக்கிறது. மனிதர்களில் ஒளிந்திருக்கும் மிருகங்கள் தம்மை இனங்காட்டிக் கொள்ளப் புறப்படுகின்றன. குறுகிய அந்த வாசலூடாக எப்படியாவது உள்ளே நுழைந்துவிட வேண்டுமெனும் முனைப்பு ஒவ்வொருவரையும் பிடித்துந்த, ஆவலோடும் ஆவேசத்தோடும் அவசரமாகவும் மற்றவர்களை முட்டி மோதி, விழுத்தி மிதித்து நெரித்து, நெளிந்து ஓடையென நீண்டு செல்லும் 'போளினி'ல் , பட்டியில் அடைக்கப்படும் மந்தையென இரஸிகர் கூட்டம் இறுகி வழிகிறது. அந்த ஜீவமரணப் போராட்டத்தில் தோல்வியுற்ற சில 'சீவன்கள்' வெளியே அந்தரித்து நிற்கின்றன.

ஒரு பொலீஸ்காரன் தன் கையில் இருக்கும் 'பட்டனால்' அகப்பட்டவர்களின் எலும்புகளையெல்லாம் எண்ணிப் பார்க்கிறான். அவனுக்கு யாரில் என்ன ஆத்திரமோ? பாவம் அருள்ஜோதியின் தலையில் நல்ல ஒரு அடி. வீங்கிச் சிவக்கும் நெற்றியை அமத்திப் பிடித்து, பல்லைக் கடித்தபடி வலியை விழுங்கிக் கொள்கிறான். 'திரும்பிப் போய்விடலாமா?', என்ற ஒரு கண நினைப்பை மறக்க வைக்கிறது பின்னால் நெருக்கும் கூட்டம். 'கேற்' இழுத்துப் பூட்டப்படும் ஒலி பலமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறது. இனி 'டிக்கட்' கொடுக்கப்படும்வரை அவர்கள் அடைக்கப் பட்ட தற்காலிகக் கைதிகள்.

வியர்வையின் நாற்றம்; உடல்களின் கசகசப்பு; போதாக்குறைக்கு தலை நோ வேறு. இப்போது பார்த்துத்தானா காலையில் இருந்து தனக்கு எது வும் தரப்படவில்லை என்பதை வயிறும் ஞாபகப்படுத்த வேண்டும்? எல்லாமாக அவனை என்னவோ செய்கின்றன. மூச்சு விடுவதுகூட மிகுந்த சிரமமாக இருக்கின்றது. மீண்டும் 'திரும்பிப் போய்விடலாமா' எனும் எண்ணம் தலை தூக்குகிறது. திரும்பிப் பார்த்தால் தூரத்தில் தெரியும் வாசல் வரையும் அடைத்துப் பிடித்த பன்றிக் கூட்டம் போல ஒரே தலைகள்; தலைகள்- மனிதத் தலைகள். 'டிக்கட்' இன்னும் கொடு படுவதாகத் தெரியவில்லை.

மத்தியான வெய்யில் மேலே போடப்பட்டிருக்கும் தகரத்தைச் சூடாக்கித் தலையிலும் இறங்குகிறது. அங்காலோ இங்காலோ கொஞ் சம்கூட அசையமுடியாத நிலை. வியர்வையில் நனையும் 'சேட்' உடம் போடு ஒட்டிப் பிசுபிசுக்கிறது. 'பாண் போறணை மாதிரி இருக்கு. டிக் கட் கொடுத்தாங்கன்னாலாவது உள்ளபோய்த் தண்ணியக் குடிக்க லாம்.' நத்தையாக நேரம் ஊர்கி றது.

திடீரென ஓர் ஆசுவாசம். டிக்கட் கொடுக்க ஆரம்பித்துவிட்டார் கள். மீண்டும் ஒரு ஜீவமரணப் போராட்டம். மோட்ச வாசலே திறந்து விட்டதுபோல அவதியுடன் தள்ளுமுள்ளுப்படுகின்றனர். நிற்பவர்களின் தோள்களையே பாட் டையாகக் கொண்டு தலைகளுக்கு மேலாக ஓர் ஊர்வலம். பின்னால் உள்ளவர்கள் முன்னேறுகிறார்கள். மெலியோர் வலியோரால் நசுக்கப்படுகிறார்கள். செயலிழந்து தடுமாறி நிற்கிறான் அருள்ஜோதி. அவனுக்கு நாக்கு வரண்டு போய்விடுகிறது.

வயிற்றை என்னவோ செய்கிறது. கண்கள் இருண்டு கொண்டுவர, விழுந்து விடுவோமோ என்ற பயத்துடன் பக்கத்துச் சுவரை இறுகப் பற்றிக்கொள்கிறான். 'க்ளாக்' – பக்கத்தில் நிற்கும் யாரோ ஒருவன் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் சத்தி எடுத்துவிடுகிறான். அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கு அருகில் நின்றவனுக்கு ஆத்திரம் கிளர்ந்தெழுகின்றது. தான றிந்த மொழிகளிலுள்ள அரியதான சொற்களைத் தெரிந்து அவனை இவன் ஏசுகிறான். சத்தியெடுத்தவனுக்கு ஆதரவாக அவனுடைய 'காண்ட' வெகுண்டெழ, அங்கு ஓர் உக்கிரமான கைகலப்பு மூழ்கிறது.

நிழலிற் பார்க்கப்போவதை நிஜமாகவே நடாத்திப் பார்க்கி றார்கள். அந்தக் 'கலரி ஷேத்திர' யுத்தத்தில் இடையில் அகப்பட்ட அருள்ஜோதி நைலோன் வலை மீனாக நசுங்க.... 'எழுவத்தஞ்சு சேத்து டிக்கட்டு வாங்கி வெளீல ரெண்டு றூவாய்க்காச்சும் வித்தாக்க, அம் மாக்கு மருந்து எதுசரி வாங்கிக் குடுக்கலாம்...' என்ற அவனது நம் பிக்கை கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்கிறது.

நம்பிக்கையுடன் சேர்ந்தே கைப்பிடியும் நழுவ, அவன் சரிந்து, துவண்டு கீழே... கீழே அதல பாதாளத்தை நோக்கி விழுகிறான். அவன் நினைவுகள் அவனை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக விலக ஆரம்பிக் கின்றன. அவனைக் கவனிப்பார் யாருமில்லை. மனிதாபிமானத்தைக் கால்களின் கீழே போட்டு மிதித்துவிட்டு முன்னேறும் மனிதக் கும் பலுக்கு அவனைப் பற்றிக் கவ னிக்க நேரமெங்கே? அவர் களின் ஒரே இலக்கான 'டிக்கட் கவுண்டரை' நோக்கி அவர்கள் திமிறிப் பாய்ந்து, முண்டியடித்து மூச்சுப் பிடித்து முன்னேறுகின்றனர். 'அதுகளின்' கால் களின் கீழ் அந்த அன்புத் தாயின் நேசகுமாரன், உழக்குப்பட்டு உதை பட்டு, உயிர்க் காற்றுக்குத் தவித்துப்போய்க் கிடக்கிறான். அங்கு ஓர் உயிர்க்கொலை இந்தப் பட்டப்பகலில் நடைபெறப்போகின் றது.

அதைப்பற்றி எங்களுக்கென்ன? அதோ தியேட்டரில் இருந்து ஒலி பெருக்கி மூலம் வியாபித்துப்பரவும் அந்த இனிய பாடலுக்கான காட்சி யில் அந்தக் கதாநாயகியின் தரமான நடிப்பை, நடையழகைக் கண்டு மெய் மறந்து ரஸித்துக் கைதட்ட அல்லவா நாம் காத்திருக்கிறோம்.

*24.09.1978 – ஞாயிறு வீரகேசரியில்*

*வெளியான சிறுகதை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதனைத் தேடி...



**மா**ன்குட்டிபோல் அவள் துள்ளித் துள்ளி ஓடிவந்து கொண்டிருந்தாள். அவளுக்கு ஆகக்கூடினால் ஆறு வயதுதான் இருக்கும். அவள் பின்னால் அவளை எட்டிப்பிடிப்பது போல, ஆனால் அவளின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாததால் சற்றுப் பின் தங்கியவனாக, அவளைவிட இரண்டு வயது சிறியவனாக அவளது தம்பி ஓடி வந்துகொண்டிருந்தான்.

அவள் வாய் ஏதோ ஒரு பாடலை மழலைக் குரலில் மெல்ல மிழற்றிக் கொண்டிருந்தது. அதற்கிசைவாக அவளது தம்பியும் ராக மிழுத்தபடி ஓடிவந்துகொண்டிருந்தான். அவர்களின் களங்கமற்ற முகங் களைப்போலவே நீல வானமும் நிர்ச்சலனமாகக் காட்சியளித்தது. பரந்து விரிந்துகிடந்த வயல் வரம்புகளினூடாக, தடுமாறாமல் இலாவ கமாக, இலயம் பிசகாமல் அவர்கள் ஓடிக்கொண்டிருந்தனர்.

ஓடிய களைப்பில் அவள் நின்று திரும்பிப் பார்த்தாள். தூரத்தே தென்னை மரங்களாலும் வாழை மரங்களாலும் சூழ வர மறைக் கப்பட்ட அவர்களின் குடிசை - வைக்கோல் வேயப்பட்டு மஞ்சளாகத் தெரிந்தது. தாயின் குரல் எட்ட முடியாத தூரத்திற்கு அவர்கள் வந்து விட்டார்கள். அம்மாவை 'உச்சிப் போட்டு' ஓடிவந்து விட்டதை நினைக்க அவளுக்குச் சிரிப்பு வந்தது. அவள் சிரித்தாள். அரிசிப் பற்கள் பளீரிட அவள் வாயை அங்காந்தபடி அழகாக, ஆனந்தமாகச் சிரித்தாள். அவள் சிரிப்பதைக் கண்டு அவள் தம்பியும் சேர்ந்து சிரித்தான். அவனது சிரிப் புக்குக் காரணம் வேண்டியிருக்கவில்லை. வீட்டில் இருந்தால் தூளியில் தூங்கும் சின்னத் தங்கையைப் பார்த்துக் கொள்ளும்படி அம்மா சொல் லுவாள். அதிலவளுக்கு இலயிப்பில்லை. அழுதபடி அல்லது மூத்திரம் பெய்தபடி இருக்கும் தங்கையைத் தூக்கி ஆட்டுவதைவிட இப்படி உல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாசமாகத் தம்பி யுடன் ஓடித்திரிவதில்தான் அவளுக்குப் பிரியமதிகம். நல்ல வேளையாக இன்று அப்பாவும் வீட்டில் இல்லை. விதை நெல்லு வாங்குவதற்காக அவர் விடியற்காலையிலேயே புறப்பட்டு 'ரவுணு' க்குப் போய்விட்டிருந்தார். அவர் இருந்தால் ஒன்றில் அவர் முன் புத்த கத்துடன் இருக்கவேண்டும். அல்லது தோட்டத்தில் அவருடன் கூடமாட ஒத்தாசைக்கு நிற்க வேண்டும். இரண்டுமே அவளுக்கு அலுப்புத் தரு பவை.

இன்று அவளுக்குச் சுதந்திர நாள். அவள் உள்ளத்தில் பொங்கும் மகிழ்ச்சிப் பெருக்கிற்கு எல்லையே இல்லை. அவள் மீண்டும் ஓட ஆரம் பித்தாள். எதிரே கரும் பச்சையாகக் கவிந்து மறைத்திருந்த காட்டில் இடைக்கிடையே தலை நீட்டிய சூரியன் குஞ்சுகள்' அவளை 'வா வா' வென அழைப்பது போல் ஒளி ஜாலங்காட்டின. அந்தக் காட்டை நோக் கித்தான் அவள் ஓடிக்கொண்டிருந்தாள். அங்கேயெல்லாம் போகக் கூடாதென்று தாய் அவளை நெடுகிலும் எச்சரித்த போதிலும்கூட அங்கே சென்று, தாழ வளைந்து நிற்கும் மரக்கொப்புகளில் ஏறிக் குதிப் பதுதான் அவர்களுக்கு அலுக்காத ஒரே விளையாட்டு.

காட்டை அண்மிய போது அவள் ஓட்டம் தடைப்பட திடீரென அவள் நின்றாள். அவள் பார்வை தூரத்தே நிலை குத்திப் பதிந்தது. அவள் பார்வை சென்ற திசையில் தம்பியும் பார்த்தான். அவன் கண்களில் திகைப்பும் மிரட்சியும் கலவையிட்டன. எதிரே ஓர் உருவம் நிலத்தில் மல்லாந்தபடி கிடந்தது. "வாக்கா திரும்பிப் போயிடலாம்" அவள் சட்டை யைப் பிடித்து இழுத்தபடி தம்பி நின்றான்.

"பொறுடா என்னன்னு பார்ப்போம்". அந்த மனிதன் யார்? அவன் ஏன் அப்படிக் கிடக்கிறான்? என்பதை அறிந்துவிட அவாவும் உள் ளார்ந்த ஆர்வத்துடன் அவள் மெல்ல மெல்ல அம்மனிதன் படுத்துக் கிடக்கும் இடத்தை நோக்கி அடியெடுத்து வைக்கலானாள்.

கிட்டச்சென்று பார்த்த போதுதான் அவள் நெஞ்சைப் 'பக்கென'ப் பயம் கௌவியது. அதைத்து வீங்கிய முகமும், இரத்தம் வடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறைந்த உதடுகளும், சிராய்ப்புற்றுக் குருதி பெருகும் உடம்பும், அலங் கோல ஆடையுமாக அண்ணாந்து கிடந்த அவன் தோற்றம் – அந்நிசப்த வனத்தின் பயங்கரத்தை மிகைப்படுத்துவதாக இருந்தது.

திரும்பி ஓடி விடுவோமா என்ற எண்ணத்தை அவள் செயல் படுத்த முனைகையில், அம்மனிதனின் முனகலோசை அவளைத் தடைப்படுத் தியது. அவள் திரும்பிப் பார்த்தாள். இப்போ அவன் கண்கள் சிறிது திறந்த மாதிரித் தெரிந்தன. தலையைத் தூக்க முயன்று முடியாமல் அவன் தலை மீண்டும் மண்ணில் மோதியது. அவன் அனுங்கத் தொடங் கினான்.

அவளுக்கிப்போ பயம் போய்விட்டது. அவனைப் பார்க்கப் பரிதா பமாக இருந்தது. அவனுக்காக அழவேண்டும் போல மனதில் ஓர் இரக்க உணர்வும் சுரந்தது. அவனுக்குத் தான் ஏதாவது உதவி செய்ய முடி யுமா என்று யோசித்தாள். அவளின் அப்பா சில வேளைகளில் நல்ல குடி வெறியில் இப்படிக் கிடந்து புலம்பும்போது, அம்மா முகத்தில் தண் ணீரால் விசிறியடித்து உணர்வு வரப்பண்ணுவதை அவள் கண்டி ருந்தாள்.

"வாடா, தண்ணி எடுத்துக்கொண்டு வருவம்". தம்பியை இழுத்துக் கொண்டு அவள் காட்டுப் பாதையை விலக்கியபடி ஓடினாள். மாரியில் சலசலத்தோடும் சிற்றருவி ஒன்று ஓடிய சுவடுமட்டும், கோடு கிழித்தாற் போல் வெண்மணற்பரப்பிட்டுக் காணப்பட்ட ஓரிடத்தில் அவள் பரபர வென மண்ணைத் தோண்டலானாள்.

பூமாதேவி கருணைக் கண்ணைத் திறந்தாள் போலும். குட்டை நீரால் நிரம்பியது. காட்டுச் செடியொன்றின் பெரிய இலையொன்றைப் பிடுங்கித் தன் தம்பி கையில் நீரைக் கொள்ள ஏற்றவாறு வளைத்துக் கொடுத்தாள். தன் சின்னஞ் சிறு கைகளாற் குட்டையிலுள்ள நீரைக் கோலிக் கோலி இலையை நிரப்பினாள். அவள் மனம் போல இலையும் நீரால் நிறைந்து தளும்பியது. தம்பியிடம் இருந்த அதை வாங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு, ஊற்றுப்படாமல் பதனமாக அடியெடுத்து நடந்து அம் மனிதன் விழுந்து கிடந்த இடத்தை அடைந்தாள்.

உணர்வு வரப்பெற்று அவன் எழுந்து பார்த்தபோது அவர்கள் அங்கிருக்கவில்லை. இரண்டு விளாம்பழங்களும் இரண்டு மாம்பழங்களும் மட்டும் அவன் தலைமாட்டில் காணிக்கைப் பொருட்கள் போல் வைக்கப்பட்டிருந்தன. அவள் மீண்டும் தம்பியுடன் வீட்டினுள் ஓடி நுழைந்தபோது தாயின் அர்ச்சனைக் குரல்தான் அவர்களை வரவேற்றது.

"ஏண்டி நீ பாட்டுக்கு சுத்திட்டு இப்ப தான் வர்றியா? போதாக் குறைக்கு அவனை வேற இழுத்துகிட்டுப் போ. நான்தான் தங்கச்சியையும் பாக்கணும்; சமையலும் செய்யணும்; தோட்டத்தையும் பாக்கணும். மூதேசி, நீ எதுக்கடி பொறந்தே? ஒடுகாலிக் கழுதை நீ செத்தாத் தாண்டி எனக்கு நிம்மதி". பொரி பொரி என்று அவள் பொரிந்து தள்ளினாள். விழுந்து கிடக்கும் மனிதனைப் பற்றி அம்மாவிடம் சொல்லவேண்டும் என நினைத்துக்கொண்டு வந்தவள் வாயை மூடிக்கொண்டாள். பசி வயிற்றைக் கிள்ளியது. பேசாமல் குசினிக்குள் போய்க்குந்திவிட்டாள்.

"சனியனே, இந்தா திண்ணு தொலை" என்ற வசவுடன் அம்மா பீங்கானை அவள் முன் வைத்தாள். சாப்பிடும்போது அம்மனிதனின் முகம் தான் அவள் கண்முன் நிழலாடியது.

"பாவம். அவனுக்குப் பசிக்குமே.." என்று நினைத்துக் கொண்டாள். சாப்பிட்டுக் கை கழுவியானதும் மீந்த சோற்றை ஒரு வாழை இலையில் சுற்றிக்கொண்டாள். மெதுவாக நழுவிவிடலாம் என்றுதான் அவள் பார்த்தாள். ஆனால் படலையைத் திறந்தபோது அது 'கிரீச்'சிட்டு அவளைக் காட்டிக்கொடுத்துவிட்டது. தங்கச்சிக்கு பாலூட்டிக் கொண்டிருந்த அம்மா எழுந்துவர முடியாததால் அங்கிருந்தே சத்தமிட்டாள்.

"அந்தச் சொறி நாயோட சங்காத்தம் வச்சுக்காதேன்னா கேக்க மாட்டேங்கறே.. இரு இரு அப்பா வரட்டுக்கும். கொல்ல சொல்றேன் உன்ன.. " உச்ச ஸ்தாயியில் கத்தும்போது அவள் குரல் விகற்பமுற்றுக் கீச்சிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இது அதுக்கில்லேம்மா'' என்றபடி அவள் பதிலுக்குக் காத்து நிற்காமல் ஓடியே போய்விட்டாள். அவள் கொணர்ந்து தந்த சோற்றை அகோரப் பசியுடன் 'அவுக் அவுக்'கென அவன் அள்ளி விழுங்கியபோது அவள் தூரத்தே நின்று அவனையே வியப்புடன் பார்த்தபடியிருந்தாள்.

பசி கொஞ்சம் ஆறியதும் நன்றியுணர்வுடன் அவன் அவளைப் பார்த்து மெல்லச் சிரித்தான். வெடித்த உதடுகளுக்கிடையே அச்சிரிப்பு வெகுளித்தனமாக வெளிப்பட்டது. அவன் சிரிப்பைக்காண அவளுக்குச் சந்தோஷமாக இருந்தது. தைரியமாக அவனை நெருங்கி ''நீயார்? எங்கிருந்து வந்தாய்?'' என்று கேட்டாள். அவள் கேள்வி அவனுக்குப் புரிந்தது. ஆனால் மொழி புரியவில்லை. இருவரும் இரு வேறு மொழியினர். ஆனால் மொழிக்கு அப்பாற்பட்ட மனித உணர்வு அவர்களை இணைத்திருந்தது.

அவனது மகளுக்கும் இவளுடைய வயசுதான் இருக்கும். பூ உதிர்வது போல என்ன மாதிரிச் சிரிப்பாள். வாய் ஓயாமல் எந்நேரமும் எத்தனை 'கிழவிக் கதைகள்' சொல்வாள். ''நான் அப்பா பிள்ளை' என்று சொல்லிச் செல்லம் கொட்ட மடி மீது ஏறிக் குந்திக்கொள்வாளே அவளை..... அவளை..

அவன் நினவுச் சக்கரம் பின்னோக்கிச் சுழல ஆரம்பித்தது. அன்று பியதாசாவின் திருமண அழைப்பிதழ் கையில் கிடைத்த போது அவன் எவ்வளவு சந்தோஷப்பட்டான். கொழும்பில் அவன் வேலை செய்த காலத்தில் அவன் தங்கியிருந்த வீட்டுக்காரரின் மகன்தான் பியதாஸ.

அவன் ஒரு யதார்த்தவாதி. ஒத்த உணர்வுகள் கொண்டோரிடையே நட்பு மலர மொழி ஒரு தடையல்லவே. தியேட்டர், கடற்கரை என்றெல்லா இடமும் அவர்கள் இணைந்தே திரிந்தனர். யாழ்ப்பாணத்துக்கு அவன் மாற்றலாகிச் சென்ற பின்னர்கூட அவர்கள் தொடர்பு அறுந்துவிடவில்லை அவனது திருமணத்தின்போது பியதாஸ நாலு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் அவன் ஊரில் வந்து நின்று ஒரு 'கலக்குக் கலக்கி'ப் போட்டுத்தான் போனான்.

வழமை போல அன்றும் ட்ரெயினில் நல்ல 'கிரவுட்'தான். அதில் மனைவிக்கும் பிள்ளைக்குமாக இடமெடுத்துக் கொடுத்துவிட்டு, வாச லில் கொக்குத் தவமியற்றியபடி நின்ற அவன் பியதாஸவுடன் கழித்த பசுமையான நாட்களைப் பற்றிய நினைவுகளில் மகிழ்ந்து காத்திருந்த வேளையில்தான் அந்த எதிர்பாராத சம்பவம், மதுவைப் போல மொழி வெறியும் கூட எவ்வளவு அனர்த்தங்களை விளைவித்து விடலாம் என்று உணர வைத்த இரத்த வெறியாட்டம் நடந்தது.

தனது மகள் யன்னலால் தூக்கி எறியப்பட்டபோது என்ன நடக் கிறது என்று அவனால் உணர முடியவில்லை. மனைவி துகிலுரியப்பட்ட போது அவன் ஓடிக்கொண்டிருந்தான். உயிரைக் கையில் பிடித்தபடி கண் மண் தெரியாத வேகத்தில், ஒரு பைத்தியக்காரனைப் போலப் பயந்தடித்து, காட்டை ஊடறுத்தபடி அவன் ஓடிக்கொண்டிருந்தான். இந்த இரண்டு நாட்களும் அவன் அவனாகவே இல்லை. இப்போதுதான் தெளிவாக அவனால் சிந்திக்க முடிகிறது.

'சீ..கேவலம். இந்த உயிரைக் காக்கவா நான் இப்படி ஓடி வந்தேன்?' நினைக்கும்போது அவனுக்குத் தன் மீதே வெறுப்பு வந்தது. அவன் கண் களினின்றும் உவர் நீர் ஊற்றுக்கள் உதயமாயின. அவன் கேவிக் கேவி அழத் தொடங்கினான். பார்த்துக் கொண்டிருந்த அவளுக்குப் பயமாகப் போய்விட்டது. வீட்டைத் திரும்பிப் பார்த்தாள். தூரத்தே அவளின் தந்தை யின் உருவம் நிழற் கோடாகத் தெரிந்தது.

"அப்பா கண்டாப் போச்சு" என்றபடி அவள் ஒளிவதற்கு இடம் தேடலானாள். நிறை வெறியில் தள்ளாடித்தள்ளாடி நடந்துவந்து கொண் டிருந்தார் அவளின் அப்பா. அவர் கையில் ஒரு வேட்டைத் துப்பாக்கி. அவரைப் பின்தொடர்ந்து இன்னும் நாலைந்து பேர் வந்து கொண்டிருந் தார்கள். அவர்கள் அவனை நெருங்கி வந்துவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆ, அந்த அவன்.." என்று அவர்களில் ஒருவன் அவனைச் சுட்டிக் காட்டினான். யாரோ ஒரு மனிதன் அந்தக் காட்டின் கரையில் விழுந்து கிடக்கும் விஷயம், அவள் தம்பி மூலம் அம்மாவுக்கும், அவளிடமிருந்து அப்பாவுக்கும் பின் மற்றவர்களுக்கும் பரவி, அவனைத் தேடிக்கொண்டு இதோ அவர்கள் வந்துவிட்டார்கள். அவர்களைக் கண்டதும் அவன் எழுந்து ஓடப் பார்த்தான். ஆனால் அவனால் முடியவில்லை.

"அடோ, உம்ப கௌதடோ?""கொய்த இந்தலா ஆவே? பற தெமலோ, கத்தா கொறண்டடோ" சரமாரியாகக் கேள்விக் கணைகள் அவனை நோக்கிப் பாய்ந்தன. பயத்தாலும் மொழி பேசமுடியா மடமை யாலும் அவன் பேந்தப் பேந்த விழித்தான். தப்பி ஓடி வந்துவிட்ட கைதி யைப் பார்ப்பதுபோல அவர்கள் அவனை வன்மத்துடன் பார்த்து நின் றார்கள்.

அவளின் அப்பா துப்பாக்கியைச் சடாரென ஒடித்து நிமிர்த்தி னார். கண்ணில் வைத்துக் குறிபார்த்தபோது தடுமாறி விழப் பார்த் தார். அவனது கும்பிட்ட கைகள் வட்டத்தினூடாக மங்கலாகத் தெரிந் தன. "ஹோ..ஹோ.." வென்ற எக்காளச் சிரிப்புடன் துப்பாக்கி விசையில் அவர் கை பதித்தார். சன்னம் சீறிப் பாய்ந்தது. கை துண்டாடப்பட்ட நிலையில் அவன் துடித்துப் புரண்டான். விழுந்துவிடாமலிருக்கத் துப் பாக்கியை ஊன்றி இவர் தன்னைச் சமநிலைப்படுத்திக்கொண்டார். அடுத்த ரவை அவன் காலைத் துளைத்துக்கொண்டு போயிற்று. சூடான அந்த வயல் நிலத்தில் அவன் இரத்தம் தெறித்து அதைக் குளிரச் செய் தது. தணியாத தாகத்துடன் அவன் உடம்பினின்றும் பெருகிய குருதிப் புனலை அந்த வரட்டுத்தரை வேகமாக உறிஞ்சிக்கொண்டது.

சுற்றி நின்ற கூட்டம் ஜெய கோஷம் செய்து இவருக்கு உற்சாக மூட்டியது. வேட்டை நாய்களால் சூழப்பட்ட முயற்குட்டி போல அவன் மொழியிழந்து போனான். அந்த மனிதனின் மரணம் அவர்களின் மகிழ்ச்சி ஆரவாரமானது. அவனுடலில் என்னவெல்லாம் செய்ய முடி யுமோ அத்தனையையும் அவர்கள் செய்தார்கள். அவன் தலையைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டாடிப் பந்தாடினார்கள். யார் மீதோ அல்லது எதன் மீதோ அவர்களுக்கு இருந்த ஆத்திரத்தை அவர்கள் அவன் உடம்பின் மீது காட்டினார்கள். அவர்களின் அடிமன உந்தல்களின் வெளிப்பாடாக - வக்கிரங்களின் வடிகாலாக - பலவீனங்களின் பிரதிபலிப்பாக அந்த மனிதனை அவர்கள் பயன்படுத்திக் களித்தார்கள். காட்டு மிராண்டி களைப்போல அவனை அவர்களால் கடித்துத் தின்னத்தான் முடிய வில்லை. முடிந்திருந்தால் அதையும் செய்திருப்பார்கள்.

அன்று பின்னேரம் மரத்தடியில் மயக்கமாக விழுந்துகிடந்த வளைத் தூக்கி வந்து கட்டிலில் கிடத்தியபோது அவள் காய்ச்சலுடன் புலம்பிக்கொண்டு கிடந்தாள்.. "மனிதன்... மனிதன்..." என்று. காலைப் பொழுது விடிந்தபோதும்கூட அவள் கண் திறக்கவில்லை. அவள் தாயின் ஒப்பாரி இதயத்தைத் தொட்டு உலுக்குமாப்போல உரத்து ஒலிக்கிறது. அதைப் புரிந்துகொள்ளப் பாஷை தேவையில்லை.

***திசை – 27-10-1989 [சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றது.]***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனை



பாலாவைச் சிலவேளை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம் 70-80களில் இலங்கை வானொலியைக் கேட்பவராக நீங்கள் இருந்திருந்தால் பாலாவின் குரலையாவது நீங்கள் கட்டாயம் கேட்டிருப்பீர்கள். தொலைக்காட்சிகள் பரவலாக புழக்கத்துக்கு வருவதற்கு முன்னால், இலங்கை வானொலியும் அதில் ஒலிபரப்பான திரைப்படப் பாடல்களும் நாடகங்களும்தான் பாமர ரசிகர்களின் பிரதான பொழுதுபோக்குகளாக இருந்தன.

அக்காலகட்டத்தில் வானொலியில் கோலோச்சிய ஒருசில நாடக நடிகர்களுள் பாலா பிரபல்யமானவன். பிரபல்யம் என்ற சொல்லுக்குப் பின்னால் அவனது வீழ்ச்சிக்கான ஆபத்தும் பின்னிப் பிணைந்திருந்ததை அவன் உணர்ந்திருக்கவில்லை.

ஆபத்து அந்தரம் என்று இப்படியாக நான் பீடிகை போட்டால் உங்களுக்குத் தலையும் புரியாது வாலும் புரியாது. கொஞ்சம் பின்னோக்கிப் போய் பாலாவின் சரித்திரத்தையும் கூடவே இலங்கை அரசியல் வரலாறையும் தெரிந்து கொண்டால் இலகுவாக இருக்கும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் விரும்பியோ விரும்பாமலோ ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்விலும் அரசியல் ஊடுருவிவிட்டது. தமிழர்களைப் பொறுத்தமட்டில் அது கொஞ்சம் ஆழமாகவே ஊடுருவி ஆறாத வடுக்களைப் பரிசாகவும் தந்துவிட்டது.

யாழ்ப்பாணத்தவரை இலங்கையில் படித்த சமூகத்தவர் என ஏனையோர் மதித்த காலம் ஒன்றிருந்தது. தடுக்கி விழுந்தாலும் ஒரு தமிழ்ச் சட்டம்பியார் வீட்டுக்கு முன்னால்தான் விழவேண்டியிருக்கும், எனச்சிலாகித்துச் சொல்லுமளவுக்கு படித்தவர்களாக யாழ்ப்பாணத்தவர் இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனாலேயே யாழ்ப்பாணத்தவர் கொஞ்சம் இறுமாப்புடனும் மிதப்புடனும் உலவிவந்த காலகட்டத்தில்தான் யாழ்ப்பாணத்து வடம ராட்சியில் உள்ள ஒரு குக்கிராமத்தில் ஒரு வெள்ளாளக் குடும்பத்தில் பாலா பிறந்தான்.

இலங்கை வரைபடத்தில் இடம்பெறாவிட்டாலும் பெயர்பெற்ற பல தமிழ் அறிஞர்கள் பிறந்ததால் சிறப்புற்ற கிராமமது. 'சாதி இரண் டொழிய வேறில்லை' என வாயளவில் கூறிக்கொண்டு வாழ்ந்தாலும் கூட ஈழத்தமிழரின் வாழ்விலும் அரசியலிலும் சாதி இரண்டறக் கலந்து தான் இருந்தது.

வெள்ளாளர்களின் மேலாதிக்கம் 70களின் பின் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர, சாதியரக்கனின் கோரப்பற்கள் வேறு ரூபத்தில் தலைநீட்ட ஆரம்பித்தன

ஆனைக்கொரு காலம் என்றால் பூனைக்கும் ஒரு காலம் வரத் தானே செய்யும். வெள்ளாளர்களால் அடக்கி ஒடுக்கப்பட்ட பஞ்சமர் களின் பழியுணர்விற்கு இயக்கங்களின் தோற்றம் வாகாக அமைய வெள்ளாளர்கள் பலிக்கடாவாக்கப்பட்டனர். ஆயுதங்களின் முன் அறிவு லகம் கூர்மழுங்கி மௌனித்துப் போனது. தமிழுணர்வு என்ற திரையின் பின் உண்மைகள் மறைக்கப்பட்டுவிட்டன.

வெள்ளாளனாகப் பிறந்தது ஒன்றும் பாலாவின் குற்றமல்லத்தான். ஊரில் அவனது தந்தைக்கு நல்ல மதிப்பிருந்தது. ஆசிரியராக இருந்து பின் அதிபராக ஆனவர் அவர். ஆசிரியர்களின் இலக்கணமான கண்டிப் பும் அவருடன் கூடவே பிறந்தது. சாதித்தடிப்பும் பரம்பரைச் சொத்தாகச் சேர்ந்தே வந்திருந்தது. பள்ளிக்கூடத்திலும் சரி வீட்டிலும் சரி அவர் வைத்ததே சட்டம். அவர் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசாத அம்மா. அந்நாளைய லலிதா பத்மினி போல அழகான இரு அக்காமார். வீட்டின் கடைக் குட்டியாகப் பிறந்தவன்தான் பாலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவான அழகான குடும்பம் அவர்களுடையது. அவ்வப்போது சில ஏற்றஇறக்கங்கள் இருந்தபோதிலும் அவர்களது இயல்பு வாழ்க்கை இனிமையாகத்தான் ஓடிக்கொண்டிருந்தது.

இயல்பாகவே பாலா துறுதுறுப்பானவன். தமிழில் அவனுக்கிருந்த விருப்பும் கலைகளில் அவனுக்கிருந்த நாட்டமும் அவனை ஒரு கலைப் பித்தனாக உருமாற்றிக்கொண்டிருந்தன. 'மனோகரா' படம் வெலிங்ட னில் வெற்றிகரமாக ஓடியபோது அவனுக்குப் பத்து வயதும் ஆக வில்லை. அரண்மனை தர்பாரில் 'புருஷோத்தமரே, புரட்டுக்காரியின் உருட்டு விழியிலே உலகத்தைக் காண்பவரே....'என ஆரம்பித்து அடுக்கு மொழியிலே ஐந்து பக்க வசனத்தை ஒரே மூச்சிலே சிவாஜி கணேசன் ஒப்புவிப்பதைப்போல சக நண்பர்கள் மத்தியில் பேசிக்காட்டிக் கைதட் டல் வாங்கி பாலாவும் ஒரு குட்டி சிவாஜியாக வலம்வந்துகொண்டிருந் தான்.

பாடசாலை மாணவர் மன்றப் பேச்சுப் போட்டியின்போது வகுப் பாசிரியையின் அனுசரணையுடன், ஒட்டு மீசையும் தலைப்பாவுமாக பாரதிபோல வேடமணிந்து வந்து நின்று, 'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.. உச்சிமீது வானிடிந்து வீழுகின்றபோதிலும்...' என அவன் முழங்கியபோது அப்பழங்காலப் பள்ளிக்கூடக்கூரையே இடிந்து விழுந்துவிடுமோ என அதிபரே கவலைப்படுமளவுக்கு கர கோஷத்தால் அச்சிறு பள்ளிக்கூடமே அதிர்ந்தது.

எவ்வித எதிர்ப்புமின்றி இலகுவாகவே முதற்பரிசைத் தட்டிச் சென்றுவிட்ட அவனைத் தேடிப் பாராட்டுகள் வந்து குவிந்தபோதிலும் ஒரே ஒரு சோடிக் கண்கள் மட்டும் வெறுப்பை உமிழ்ந்தபடி குரோதத் துடனும் பொறாமையுடனும் பார்த்துக்கொண்டிருந்தன.

முக்கித்தக்கி மூன்றாவது இடத்தைப் பெற்றுவிட்டபோதிலும் அதற்கான பாராட்டோ பின்னூட்டமோ கிடைக்காத காரணத்தால் நொந்துபோயிருந்த அவனை இப்போதைக்குச் சீண்டாமல் விட்டு விடு வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு நடிப்பில் மட்டுமல்லாமல் ஏனைய பாடங்களிலும் ஏன் விளையாட்டிலும்கூட பாலாவின் கொடிதான் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது.

சர்வதேச வர்த்தக மொழியான ஆங்கிலத்தின் அவசியத்தை உணர்ந்து என்ன விலை கொடுத்தும் அதைக் கற்றுக் கொள்ளத் துடித்த யாழ்ப்பாணிகளுள் பாலாவின் தந்தையும் அடக்கம்.

அந்நாளில் வேதக்காரப் பள்ளிக்கூடங்களில்தான் ஆங்கிலம் முறையாகப் போதிக்கப்பட்டது. அதற்காகவே சைவத்தில் இருந்து வேதத்திற்கு மாறியவர்கள் பலர். ஆனாலும் பாலாவுக்கு அத்தகைய நிர்ப்பந்தம் ஏற்படவில்லை. விளையாட்டு உட்பட அனைத்துப் பாடங்க ளிலும் அவன் காட்டிய ஆர்வமும் ஆற்றலும் சேர்ந்து தாமாகவே அவனை உள்ளீர்க்க வைத்துவிட்டன.

அவனது சாதகக் குறிப்பைப் பார்த்த சோதிடர்கள், பின்னாளில் அவனடையப்போகும் உயர்வுகளைப்பற்றி ஆரூடம் கூறினார்களே யன்றி நாற்பது வயதில் அவனுக்கு நேரப்போகும் எதிர்பாராத கண்டம் பற்றிக் கடுகளவும் கண்டுகொண்டதாக இல்லை.

சாதாரணமாக ஓ.எல்.லை எட்டிப்பார்த்தாலே காணும். வேலை வீடுதேடிவரும் காலமது. நாலைந்து திறமைச் சித்திகளுடன் தேறிய பாலாவுக்குச் சொல்லவேண்டுமா! ' வாத்தியார் பிள்ளை வாத்தி' என ஆவதில் பாலாவுக்கு உடன்பாடிருக்கவில்லை.' மூச்சுப்பிடித்து இத் தனை நாளும் ஓடியது காணும். இனியாவது கொஞ்சம் ஆறியிருந்து சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கலாமே' என அவன் மனம் அங்க லாய்த்தது.

அதற்குத் தோதாக எழுது வினைஞர் பரீட்சையில் அவன் சித்தி பெற்ற செய்தியும் வந்து, அதைத் தொடர்ந்து கொழும்பில் அரசாங்க இறைவரித் திணைக்களத்தில் வேலையும் கிடைத்துவிட்டது 'உத்தி யோகம் புருஷ லட்சணம்' எனும் முதுமொழியை மெய்ப்பிக்கும் முனைப்புடன் மூட்டை முடிச்சுகளுடன் புறப்பட்ட பாலாவைச் சுமந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற 'யாழ்தேவி' கொழும்புக் கோட்டையில் அவனைப் பத்திரமாக இறக்கிவிட்டு ஆஸ்வாசப் பெருமூச்சு விட்டது.

"மாத்தையா கோ இந்தலா? யாப்பனத?" (அய்யா எங்கிருந்து வாறியள்? யாழ்ப்பாணமோ?") என்ற இளனி வியாபாரியின் சிங்களம் முதலில் அவனை மிரள வைத்தது. அவன் கையில் அனாயாசமாக விளையாடிக் கொண்டிருந்த கொடுவாட் கத்தி அச்சத்திற்கு அத்திவா ரம் போட்டது.

கொழும்பில் காலடி வைத்த ஒருசில நாட்களிலேயே சிங்களம் தெரியாமல் அங்கு காலம் கடத்துவது அவ்வளவு இலகுவான காரிய மல்ல என்பது புரிந்தது. 'சிங்களம் படிக்காதே! சிறுமைப்பட்டுப் போகாதே! ' எனத் தமிழரசுக் கட்சியினர் பன்னிப்பன்னிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களது அரசியல் ஏடான 'சுதந்திரன்' சிங்கள வர்களுக்கெதிரான காழ்ப்புணர்வைத் தாராளமாகக் கக்கிக்கொண் டிருந்தது.

திணைக்களத்தில் அரைவாசிக்கும் குறையாமல் தமிழர்களாக இருந்தது ஆறுதலளித்தது. அதனால் சிங்களம் தெரியாதது பெரிதாகத் தோற்றவில்லை. போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவானதால் சிங்கள வர்களைவிடத் தமிழர்கள்-அதுவும் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர் கள் அரச அலுவலகங்களில் செல்வாக்குடன் சுதந்திரமாக வலம்வந்து கொண்டிருந்தார்கள்.

இந்நிலைமை சில சிங்களத் தலைவர்களின் பொறாமை உணர் வைத் தூண்டுவதாக அமைந்தது. போதாக்குறைக்கு தமது அரசியல் ஆசான்களாக அவர்கள் வரித்துக்கொண்ட தமிழக தி.மு.க.வினரின் 'வடக்கு வாழ்கிறது; தெற்குத் தேய்கிறது' என்ற கோஷத்தை மாற்றிப் போட்டு, 'தெற்கு வாழ்கிறது; வடக்குத் தேய்கிறது' என்றோலமிட்ட தமி ழரசுக் கட்சியினரின் கிளிப்பிள்ளை வாய்ப்பாடு, எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல சிங்களவரின் எதிர்ப்புணர்விற்குத் தூபம் காட்டுவதாக ஆனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்த ஆண்டியைப்போல வாயிருந்ததால் வினையை விலைக்கு வாங்கிய வீணாகிப் போனவர்களைப்பற்றிப் பேசி என்ன புண்ணியத்தை? ஒரு தமிழன் சிங்களத்தைப் படிக்க விரும்பினாலும்கூட இரகசியமாகவே படித்துத் தொலைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை. அயலவனாக இருந்த சிங்களவனை அந்நியனாகப் பார்க்க வைத்தவர்கள் பழியை மட்டும் சிங்களவனில் போட்டுவிட்டுத் தப்பித்துவிடப் பார்த்தார்கள். ஆனால் காலம் அவர்களுக்கான பாடத்தைக் கற்றுக்கொடுத்தபோது அதைக் கண்டுணர அவர்கள் இல்லை. 'பாவத்தின் சம்பளம் மரணம்' எனும் ஆன்றோரின் வாக்குப் பொய்க்கவில்லை.

பாலாவுக்குச் சிங்களவனை வெறுக்கக் காரணம் இருக்கவில்லை. அலுவலகத்தில் அருகருகே பணிபுரிந்த சிங்களவர்கள் நல்ல மாதிரித்தான் பழகினார்கள். மொழி புரியாத பேதமை பரஸ்பரம் நெருங்கத் தடையாக இருந்தது. ஆங்கிலத்தில் பேச இருபகுதியினருமே சங்கோஜப்பட்டனர் அருகருகே இருந்த போதிலும் கூட பாலம் போடப்படாத தனித்தனித் தீவுகளாகவே அவர்கள் இருந்தனர்.

கொழும்பில் காலடி வைத்த புதிதில் வெள்ளவத்தையில் இருந்த - ஊரைவிட்டு ஓடிப்போய் உழைப்பாலோ அதிர்ஷ்டத்தாலோ உயர்ந்துவிட்ட-ஒரு ஒன்றுவிட்ட மாமன் வீட்டில் அழையா விருந்தாளியாக பாலா அடைக்கலம் ஆனான்.

மாமனிடத்தில் பணமிருந்தது. தன்னை உதாசீனம் செய்த உறவினரை எள்ளி நகையாடும் குணமும் இருந்தது. நல்லவேளையாக அவருக்கு ஒரு மகள் இருக்கவில்லை. மகன் என்று ஒருவன் இருந்தான். அவனுக்குத் தமிழ் தெரியவில்லை. ஆங்கிலம் அவன் நாவில் அரசோச்சியது. மாமனோ சிங்களத்தில் சதிராட்டம் போட்டார்.

இந்த இடம் தனக்குச் சரிப்படாது என்று ஓரிரு நாட்களிலேயே பாலாவுக்கு விளங்கிவிட்டது. முனகாமல் முண்டாமல் மெல்லமாக அங்கிருந்து விலகித் தனக்கென ஒரு தனியறையை பாலா தேடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான். கொட்டாஞ்சேனை வீதிகளைச் சல்லடை போட்டுத் தேடித் தனது 'வசந்த மாளிகை'யைக் கண்டடைய அவன் நடாத்திய நடைபயணங்களைப் பற்றி எழுதப்போனால் அது தனிக்கதையாகி விடும்.

சிங்களக் குடும்பம் ஒன்றின் முன்வீட்டுப் 'போர்ஷனி'ல் அவன் குடி வந்தபோது அதிர்ஷ்டமும் அவனுடன் கூடவே குடிவந்தது. காதல் தேவ னின் கடைக்கண் பார்வையும் அவன்மீது படர்ந்தது. பருவத்தின் விளிம் பில் பட்டாம்பூச்சியாகச் சிறகடித்துப் பறந்துகொண்டிருந்த அனுலா வின் அழகும் இளமையும் அவனைச் சிறைப்பிடித்துச் சிப்பிலியாட்டின. அனுலா-வீட்டுக்காரச் சிங்களவரின் ஒரே மகள்.

அவர்களுக்குத் தமிழ் தெரியவில்லை. அவனுக்குச் சிங்களம் புரி யவில்லை. பரத நாட்டியத்தின் பாலபாடத்தில் இருவரும் பயணித்துப் புரியாதனவற்றைப் புரிந்துகொண்ட காலத்தில் கொஞ்சம் கொஞ்சமா கச் சிங்களமும் வேகவேகமாகக் காதல் பாடமும் பாலாவின் மனதிலும் இதயத்திலும் இடம்பிடித்துக்கொண்டன. அனுலாவின் நாவில் மழலை யாகத் தவழ்ந்த தமிழ்ச் சொற்கள் அவர்களின் நெருக்கத்தின் அளவு கோலாகத் திகழ்ந்தன. சிரமமில்லாமல் செலவில்லாமல் சிங்களம் கற்கும் எளிய பொறிமுறையை அறிய விரும்புவோர் பாலாவிடம் கேட் டுத் தெரிந்துகொள்ளலாம்!

ஊரிலிருந்தபோது இலங்கை வானொலியில் ஒலிபரப்பான நாட கங்களைக் கேட்டு ரஸிக்கும் போதெல்லாம், தானும் ஒருநாள் எப்படி யாவது வானொலி நடிகனாகிவிட வேண்டும் என்ற தணியாத தாகம் பாலாவைப் பிடர் பிடித்து உந்திக் கொண்டிருந்தது. கொழும்பு வாழ் க்கை நிரந்தரமான ஒரு வருடத்தின் பின் அவன் கனவு பலிதமானது.

வானொலி நடிகர்களாக விரும்புபவர்களை விண்ணப்பிக்கக் கோரி வானொலியில் ஒரு விளம்பரம் ஒலிபரப்பானது. அதைக்கூட ஊரிலிருந்து அவனது அக்கா எழுதிய ஒரு கடிதம் மூலம்தான் அவன் தெரிந்து கொண்டான். (அனுலா வீட்டு வானொலிக்கும் தமிழ் தெரியாது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் சிங்களத்திலேயேதான் பாடும்; பேசும் என்பது நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு கொசுறுத் தகவல்!)

கொழும்பில் நிரந்தரமாக வதிபவர்களுக்கு மட்டுமே கிடைக்கக் கூடிய வாய்ப்பு அது. நேர்முகக் குரல் தேர்வுக்கு அவன் சமூகமளித்த போது அவனோடு திணைக்களத்தில் கடமையாற்றும் வேறு சிலரை யும்கூட அங்கு காணமுடிந்தது. இத்தகைய விடயங்களை வெளியில் விட்டுவிடாமல் கமுக்கமாகத் தமக்குள் வைத்திருந்து காரியம் பார்ப் பதிலும் யாழ்ப்பாணிகள் கெட்டிக்காரர். அது அவர்களுக்கேயுரிய தனிப்பண்புகளில் ஒன்று என்றும் சொல்லலாம்.

குரல் தேர்வில் தேறி ஒரு வானொலி நடிகனாக எடுபட்டபோது வானமே வசப்பட்டுவிட்டதுபோல மகிழ்ச்சிக் கடலில் மிதந்தான் பாலா. அவ்வப்போது நாடகங்களில் குரல் கொடுக்கவென வந்துபோய்க் கொண்டு இருந்தவனுக்கு ராகுலனின் அறிமுகம் கிடைத்ததும் அங்கு தான். கிடைத்தமட்டில் போதும் எனத் திருப்திப்பட்டுவிடும் இயல்பினன் அல்ல பாலா. ராகுலன் நீட்டிய நட்புக்கரத்தை இறுகப் பற்றிக்கொண்டு அவனது வெற்றிப் பயணம் தொடர்ந்தது.

பாராளுமன்றத்தில் பிரதம உரை பெயர்ப்பாளராக இருந்த எஸ்.வி.ஆரை ராகுலனுக்குத் தெரிந்திருந்தது. ஆங்கில மொழியில் பாலாவுக்கு நல்ல அறிவும் தேர்ச்சியும் இருந்தது. பாராளுமன்ற உரை பெயர்ப்பாளனாக பாலா உயர்வு பெற அவை அடிப்படையாயின.

வானொலி நிலையத்தில் வரவேற்பாளினியாக இருந்த ராதாவும் அவனுடைய ஊர்க்காரிதான். சின்ன வயதில் பாலா படித்த அதே பாட சாலையில் படித்தவள்தான். ஆனால் பாலாவுக்கு அவளை நினைவில் இல்லை. ராதாவுக்கோ பாலாவையன்றி வேறு நினைவேயில்லை. ஊரில் படித்த காலத்திலேயே பாலாவின் அழகும் ஆண்மையும் ஆற்ற லும் அவளை வசீகரித்திருந்தன. ஆனால் சாதி பேதம் பேசும் சமுகத்தில் அதெல்லாம் சரிவராதென்று தனது ஒரு தலைக்காதலை மனதுக்குள் ளேயே புதைத்துக்கொண்டுவிட்டவள் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதாவுக்குப் படிப்பு சுத்தமாக ஏறவில்லை. கலைகளில் நாட்ட மிருந்தது. அழகுக்கலையிலும் தேறியிருந்தாள் வீட்டில் சும்மா இருப்ப தற்கு கௌரவமான ஏதாவது தொழில் பார்த்தால் பரவாயில்லை என்று அலங்காரத்தேராக வானொலி நிலையத்துக்கு வந்து போய்க் கொண்டி ருந்தாள்.

தேடிப்போன மூலிகை காலிற்பட்டது போல மீண்டும் பாலாவை வானொலி நிலையத்தில் கண்டபோது புதைக்கப்பட்ட அவள் காதலும் மீண்டும் துளிர்விட ஆரம்பித்தது. வலியச்சென்று அவள் ஒட்டி உறவா டியபோதிலும் பட்டும்படாமல் பாலா எட்டியே நின்றது அவள் இதயத் தைக் காயப்படுத்த, தனது அழகு பற்றிய அவளது கர்வமும் பங்கப் பட்டது.

அவள் அழகில் அடிமைப்பட்டுப் போன கிருஷ்ணாவும் அதே வானொலி நிலையத்தில்தான் கடமையாற்றினான். சொந்த முயற்சி யாலோ அல்லது அறிந்தவர்கள் எவரதும் செல்வாக்காலோ தெரியாது அவனும் ஓர் அறிவிப்பாளனாக அங்கு எடுபட்டிருந்தான். இந்தக் கிருஷ்ணா வேறுயாருமல்ல. பாலாவால் பேச்சுப் போட்டியில் தோற் கடிக்கப்பட்டு மனம் நொந்து குமுறிக் கொண்டிருந்தானே ஒருவன். அவனேதான். இத்தனை ஆண்டுகள் கடந்தும் அவனால் அத்தோல் வியை மறக்க முடியவில்லை.

பாலாவின் தந்தையையும் கிருஷ்ணாவால் மன்னிக்கமுடிய வில்லை. தனது சொந்தக்கார வெள்ளாம் பெடியன் ஒருவனின் முறைப் பாட்டைக் கேட்டு எவ்வித விசாரணையும் இல்லாமல் புளிய மிளாறால் அவர் தன்னை அடித்துத் துவைத்த அந்த வன்கொடுமை- சாதிக்கு முன் நீதி சரணாகதியாகிவிட்ட அந்த நீசத்தனம்- அவனால் மறக்கவோ மன் னிக்கவோபட முடியாத ஒன்று. செய்யாத குற்றத்திற்காக அவன் அனுப வித்த தண்டனை மனதில் ஏற்படுத்திய வலி இன்னும் ஆறவில்லை. உடலில் ஏற்பட்ட காயங்கள் ஆறிய போதிலும் அது ஏற்படுத்திய வடு இன்னும் மாறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மணந்தால் ராதாதேவி; இல்லையேல் மரணதேவி' என வீர(ப்பா) வசனம் பேசிப் பிதற்றிக்கொண்டு திரிந்தவனுக்குத் தனது காதலியுடன் இனிக்க இனிக்கப் பேசிக்கொண்டிருந்தவனை இனங்கண்டபோது புண்ணில் புளிப்பத்தியதுபோல ஆயிற்று. ஒரே ஊரான் என்ற உரிமையுடன் பாலாவை கிருஷ்ணாவுக்கு ராதா அறிமுகம் செய்துவைத்த போதும் பாலாவால் அவனை ஞாபகம் கொள்ள முடியவில்லை. ஒப்புக்குச் சிரித்து, கைலாகு கொடுத்த கிருஷ்ணா உள்ளுக்குள் கறுவிக் கொண்டான்.

கொஞ்சம் கொஞ்சமாக வானலைகளை வசப்படுத்திக் கொண்டுவிட்ட பாலா ஓரிரு ஆண்டுகளிலேயே மிகப்பிரபலமான வானொலி நடிகனாகிவிட்டான். கோபுரத்தில் ஏறியவனைக் குப்புறத் தள்ளி வேடிக்கை பார்க்கும் விதியின் விளையாட்டை யார்தான் அறிவார்? இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் தமிழர் வாழ்வைத் தறிகெட்டு ஓட வைத்தன. **83** இல் ஏற்படுத்தப்பட்ட ஆடிக்கலவரம் எத்தனை பேர் வாழ்க்கையைப் பந்தாடிவிட்டது.! இயக்கங்கள் பல தோன்றி இயல்பு வாழ்வைச் சீர் குலைத்துக் குளிர் காயலாயின. நாடுகாண் படலம் ஈழத்தமிழர் வாழ்வின் தொடர்கதையானது. திரைகடலோடித் திரவியம் தேடிய தமிழன் புகலிடம் தேடி எழுகடலோடும் இரவலனானான்.

ஆடிக் காற்றில் அம்மியே பறக்கும்போது இலவம் பஞ்சின் கதி எப்படியோ அது போலானது பாலாவின் நிலைமை. வாடகை வீட்டில் இருந்தும், அனுலாவின் மனமாளிகையில் இருந்தும் ஒரேயடியாகத் துரத்தியடிக்கப்பட்டான் பாலா. பைத்தியக்காரனைப் போல சித்தம் தடுமாறித் திரிந்தவனுக்கு அவசர அவசரமாகச் சொந்தத்தில் மணம் பேசிச் செய்து வைத்துவிட்டனர் வீட்டுக்காரர்.

நாட்டு நிலைமை சீர்படுமட்டும், ஆறேழு மாதங்கள் ஊரோடு போய் முடங்கிக் கிடந்தபோதிலும் நல்ல வேளையாக வேலைக்குப் பழுது வரவில்லை. கிராமத்து வாசனையுடன் அவனைக் கரம்பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாமா நல்லவள்; நேசமுள்ளவள். நகரத்தின் சூதுவாதுகளை அறியா தவள்

அவளது அண்மையும் அரவணைப்பும் ஆறுதலளித்த போதிலும் பாலாவால் முன்னைப்போல் இயங்க முடியவில்லை. இழப்புகளின் வேதனையை விழுங்கிக்கொண்டு ஓட்டியும் ஓட்டாமல் ஏனோதானோ வென அவனது கொழும்பு வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது.

மாற்று இயக்கமொன்றின் கை கொழும்பில் ஓங்கியிருந்த அந் நாட்களில்தான் புலிகளுக்கெதிரான பிரசாரத்துக்காக அரச வானொ லியில் ஒரு தொடர் நாடக நிகழ்ச்சியை அவர்கள் நடாத்த ஆரம்பித் தனர். அந்நிகழ்ச்சித் தயாரிப்பாளன் கிருஷ்ணாவும் அவ்வியக்க ஆதர வாளனே.

கிருஷ்ணாவின் காட்டில் அடை மழை கொட்டிக்கொண்டிருந்த காலமது. எண்ணியதெல்லாம் நிறைவேறி மனதுக்கிசைந்தவளை மணவாட்டியாக்கிக் கொண்டு, அந்த இறுமாப்புடன், மாமனாரின் செல் வாக்கால் மேல்தட்டை நோக்கி அவன் முன்னேறிக்கொண்டிந்த வேளை. புலிகளுக்கு எதிரான அம்மாற்று இயக்கத்தில் ஒரு முக்கிய புள்ளியான ராதாவின் தந்தைக்கு தனது சாதிக்காரனான கிருஷ்ணாவை மருமக னாக்கிக் கொண்டதில் இரட்டிப்பு மகிழ்ச்சியே.

கிருஷ்ணாவின் நீடித்த வன்மத்துக்கு கடைசியில் ஒரு வடிகால் கிடைத்தது. அது நாடகவடிவில் அவனைத் தேடி வந்தது. நையாண்டி யாக எழுதப்பட்ட அந்நாடகத் தொடரில் புலிகளின் தலைவனாக நடிக்க வைத்து பாலாவைப் பலிக்கடாவாக்கத் திட்டமிட்டான் கிருஷ்ணா.

அரசியலில் எந்தவித அக்கறையோ ஈடுபாடோ சார்போ இல்லாத பாலாவுக்கு அது ஒரு தர்மசங்கடமான நிலைமை. மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது. பிரபலமான நடிகன் எனப்பெயரெடுத்ததால் வந்த வினை. அதன் பின்னால் இருந்த ஆபத்து அச்சமூட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெல்லாம் எட்டக்கூடிய ஒரே வானொலி அதுதான். தறுதலைத் தலைவனாக நடித்துவிட்டுப் பின் ஊரில் தலைகாட்ட முடியாது. தலைகாட்டினால் தலை தப்பாது! நினைக்கவே ஈரக்குலை நடுங்கியது. கொழும்பிலும் ஓடி ஒளிக்க முடி யாது. வில்லங்கத்தை விலை கொடுத்து வாங்குவானேன்?

ஏதேதோ சாக்குப்போக்குச் சொல்லி, நாலு நாட்கள் ஆஸ்பத்திரி யில் போய்க்கிடந்து தொண்டைக் கட்டு நெஞ்சு நோ என்று நாடகமு மாடி நாட்களைக் கடத்திப்பார்த்தான். நான்காம் நாள் ஆஸ்பத்திரியால் அவன் வீடு திரும்ப, வாசலில் வெள்ளைவான் வந்து நின்றது.

என்ன செய்வது ஏது செய்வது என்று தெரியாமல் பாமா பரிதவித் துப் போனாள். அறியாத ஊர்; தெரியாத மொழி. எவரையோ எல்லாம் பிடித்து எத்தனை கெஞ்சியும் எதுவும் நடக்கவில்லை. கொழும்பில் பாராளுமன்றத்தில் பெரிய வேலை என இறுமாந்ததெல்லாம் அர்த்தமற் றுப்போனது. காணாமல் போனவனைக் கண்டுபிடிக்க எவராலும் கூட வில்லை சொந்தமும் சுற்றமும் வந்து எட்டிப் பார்க்கவே அஞ்சியது.

இன்னார் யார் இனியார் யார் என்ற பேதமின்றி யார் யாருடைய காலில் எல்லாமோ போய் விழுந்தெழும்பினாள். ஊர்க்காரன் கிருஷ்ணாவுக்கு அரசில் நல்ல செல்வாக்காம் என்று யாரோ கூறக் கேட்டு, இக்கபட நாடக சூத்திரதாரி அவன்தான் என்பதை உணராது, அவன் வீடு தேடியும் வீணாக அலைந்து சலித்தாள்.

"இப்பதான் எங்களைத் தெரியுதோ...? ஊரில பெரிய சாதி பாப் பியள். உங்கிட ஆக்கள்தானே புலியில பெரிய கையளா இருக்கினம். அவயளிட்டப் போகவேண்டியதுதானே?" என்ற, வெந்த புண்ணிலே வேலைப்பாய்ச்சிய கிருஷ்ணாவின் எகத்தாளமான பேச்சையும் ஏச்சை யும் கேட்டதுதான் மிச்சம்.

யாருக்கு நாம் தீங்கு செய்தோம்? எவர்குடியை எப்போது கெடுத் தோம்? எமக்கேன் இந்தப்பாடு? என எதுவும் புரியாது அங்கலாய்த் தாள் பாமா. பாவப் பட்ட தமிழர்களாக இந்த நாட்டில் வந்து பிறந்ததால் ஏதிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகிவிட்ட - இளம் விதவைகளாகிவிட்ட- அபலைப்பெண்களது அவலக் குரல் எட்டாத தொலைவில் இறைவனும் போய் ஒளிந்து கொண்டு விட்டானா?

'வெள்ளைவானும் வரவில்லை; பாலா என்ற பெயரில் யாரும் கைது செய்யப்படவுமில்லை. கள்ளத்தனமாகப் புருஷனை வெளி நாட்டுக்கு அனுப்பி விட்டு நிவாரணப் பணம் பறிக்க நீலிக்கண்ணீர் வடிக்கிறாள்' என வாய் கூசாமல் பொய்யுரைத்து அபாண்டமாகப் பழி சுமத்துபவர்களை யார்தான் என்ன செய்வது?

யாரை நொந்து என்ன பயன்? நான் வாங்கி வந்த வரம் இப்படித்தான் என ஓய்ந்து இருந்துவிட முடியுமா? ஓடிக்களைத்து ஓடாகித் துரும்பாகி வாடி வதங்கிப் போனாள் பாமா. சொல்லாமல் கொள்ளாமல் திடீரென- ஏழரை ஆண்டுகள் கழிந்தபின்- அவனைப் பிடித்தாட்டிய சனி விட்டு விலக, எவருடைய புண்ணியத்தாலோ விடுதலையாகி வெளியில் வந்து சேர்ந்தான் பாலா.

'நான்தான் பாலா' என்று அவனாகச் சொல்லித்தான் பாலாவை மற்றவர்கள் அடையாளம்காண வேண்டியதாயிருந்தது. அவ்வளவுக்கு உருக்குலைந்து போயிருந்தான். உடலளவில் நொந்துபோயிருந்தாலும் மனதளவில் பாலா மாய்ந்து போய்விடவில்லை. வாழ்ந்து காட்டவேண்டும் என்ற வைராக்கியம் அவனுக்குள்ளிருந்தது. சின்னாபின்னமாகிவிட்ட வாழ்வைச் செப்பனிட்டுச் சீராக்கிவிடலாம் என்ற நம்பிக்கை அவனுள் வேர் கொண்டிருந்தது.

இழப்பதற்கு இனி ஏதுமில்லை என்ற நிலைமையே அவன் நம்பிக்கைக்கு உரமூட்டியது. சிறை வாழ்க்கை அவன் சிந்தனையைக் கூர்மைப்படுத்தியிருந்தது. இலக்கு இதுதான் என்ற தீர்மானத்துடன், நிதானமாகவும் மிகுந்த அவதானத்துடனும் காய்நகர்த்திக் காரியம் பார்க்கலானான் பாலா.

'அடாது மழை பெய்தாலும் விடாது தொடருவோம்' என நாடகம் போட்டுக் கொண்டிருந்த நண்பனின் நாடகக் குழுவில் மீண்டும் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து கொண்டான். அதிர்ஷ்டவசமாக அந்தக் குழுவினருக்கு லண்டனில் இருந்து அழைப்பு வந்தது. சந்தர்ப்பத்தைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டு, தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண் டான் பாலா.

லண்டனில் கால்பதித்ததும் தேம்ஸ் நதியில் கரைத்த புளி போல அந்த லண்டன் மா நகரச் சனத்திரளில் கரைந்து போய்விட்டான் பாலா. பாலாவைத் தொலைத்துவிட்டு, நாடகக் குழுவினர் தோல்விக்கு இலக் கணம் வகுத்த ஈழத்தமிழ் வேந்தன் இராவணனைப்போல வெறுங்கை யோடு இலங்கை புக்கார். (=புகுந்தார்)

பாலா இலங்கைச் சிறையில் கழிக்க நேர்ந்த காலமும் அதனால் ஏற்பட்ட வடுக்களும் சாட்சிகளாகத் துணை செய்ய, சிறையில் கற்ற பாடங்களும் படித்த சட்ட நுணுக்கங்களும் சாதுர்யமாகப் பதில் சொல்ல உதவ நிரந்தர வதிவுரிமை நேராகவே கிடைத்துவிட்டது. ஒரு வாறாக மனைவி பிள்ளைகளையும் கூடவே அழைப்பித்துக் கொண்டு விட, அவன் வாழ்வில் மீண்டும் வசந்தம் வீச ஆரம்பித்தது.

ஏற்றமுண்டானால் இறக்கமும் வரத்தானே செய்யும். கிருஷ்ணா வின் வாழ்விலும் சரிவு ஏற்படத்தான் செய்தது. புலி புலியென மற்றவர் களைக் கிலிப்படுத்தியவன் கதையில் நிஜப்புலியே வந்த மாதிரி, காட் டிக் கொடுக்கும் எட்டப்பர்களைக் கருவறுக்கும் இயக்கத்தின் உளவுப் பிரிவு கிருஷ்ணாவைக் குறிவைத்து மோப்பம் பிடிக்க ஆரம்பித்தது.

தலை தப்பினால் போதும் என்ற நிலை கிருஷ்ணாவுக்கு. உடுத்த துணியோடு எடுத்த ஓட்டம் பாலா காலடி பதித்த அதே 'ஹீதுறூ' விமான நிலையத்தில் போய்த்தான் ஓய்ந்தது. பாவம் ராதாவும் அவன் கூடவே இழுபட்டு வந்திருந்தாள்.

தடுப்பு முகாமில் சிறைப்பட்டிருந்தபோது என்ன என்ன பொய் களை எப்படி எப்படிச் சொல்லி வெள்ளையனை ஏமாற்றலாம் என ஒத்திகை பார்த்ததுடன் ராதாவையும் உருப்போட வைத்தான். தான றிந்த அரை குறை ஆங்கிலம் உதவப்போவதில்லை என்பது அவனுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும். அதனால் மொழி பெயர்ப்பாளனின் உதவி தேவை என அவன் கோரியிருந்தான்.

ஆனால் விசாரணையின்போது மொழி பெயர்ப்பாளனாக பாலா வரக்கூடும் என அவன் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை. பாலா வைக் கண்டதும் அவனுக்கிருந்த அற்ப சொற்ப நம்பிக்கையும் தகர்ந்து தரை மட்டமானது. 'மீண்டும் இலங்கை திரும்புவதா? அதை விட இங் கேயே உயிரை மாய்த்துக்கொண்டு விடலாமே', என்று மனம் குமைந் தான். கை விலங்குடன் காராகிரகத்தில் கூனிப்போயிருந்த பாலாவின் தோற்றம் மனக் கண்ணில் நிழலாடியது. தான் அவனுக்கிழைத்த அநி யாயத்தின் பரிமாணம் பூதாகாரமாகி அவன் நெஞ்சைப் பிளந்தது

'நிச்சயமாக அவன் இதையெல்லாம் மறந்திருக்கமாட்டான். எப்படி முடியும்? தேடிவந்து பழி வாங்கத்தான் போகிறான். எண்ணெய்ச் சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் தவறி விழுந்தவனைப்போல் எனது நிலைமை ஆகிவிட்டதே' எனக் கிருஷ்ணா அங்கலாய்க்கலானான்.

கிருஷ்ணாவைத் தெரிந்ததாக பாலா காட்டிக்கொள்ளவே யில்லை. யாரோ ஒரு அந்நியனுடன் உரையாடுவது போலவே அவனது முக பாவம் இருந்தது. கேள்விகள் திக்குமுக்காட வைத்தன. தலை சுற்றி யது; நாக்குழறியது. பதிலே வெளியே வரமாட்டேன் என்றது. ஏதோ உளறிக் கொட்டிக் கிளறி மூடினான். கண்ணீர்தான் முட்டிக்கொண்டு வந்தது. பிரயத்தனப்பட்டு அடக்கிக் கொண்டான்.

"ச்சா.. பிழை விட்டிட்டன். உவனை அங்கயே சரிக்கட்டி இருக்க வேணும். உள்ளுக்க போனவன் அங்கயே மண்டையப் போட்டிடுவான் எண்டு நினைச்சன்.. வீணாப் போனவன் இப்ப இஞ்ச வந்து எங்கிட கழுத்த அறுக்கிறான். ஆரை எவரைப் புடிச்சு இப்பிடி எழும்பினானோ தெரியேல்ல என்று தன் பாட்டில் புலம்பிக்கொண்டிருப்பவனைப் பார்க்க ராதாவுக்குப் பரிதாபம் ஏற்படவில்லை. பற்றிக்கொண்டுதான் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணாவுக்கு வாழ்க்கையே நரகமாகிப்போனது. பாலா பற்றிய நினைப்பே நாளும் அவனைச் சுட்டுப் பொசுக்கியது. தன்னைக் குத்திக்கொல்ல அவன் கத்தியோடு வருவதாகக் கனவு கண்டு அலறி யடித்துக் கொண்டு இரவில் எழுந்திருந்து அரற்றுவது வழமையாகிப் போனது.

**Home Office** கடிதம் வந்தபோது அதை ராதாதான் முதலில் பிரித்துப் பார்த்தாள். ராதாவின் கண்களிலிருந்து கண்ணீர் கரகர வெனப் பெருக்கெடுக்க என்ன காரணம்? நினைக்க நினைக்க அவ ளுக்கு அழுகைதான் வந்தது. அவமானத்தால் கூசிக் குறுகிப்போனாள். இப்படிக் கூட ஒருவனால் பழி வாங்க முடியுமா? கத்தியை எடுத்து வந்து செருகியிருந்தால்கூட நியாயம்தான் எனச் சமாதானப்பட்டிருப்பாள். இப்படிச் செய்துவிட்டானே?

கத்தியைச் செருக வேண்டிய இடத்தில் கருணையைச் சொரிய அந்தப் புத்தனால்தான் முடியும். ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தைக் காட்ட அந்த யேசுவால்தான் இயலும். புத்தனும் யேசுவும் மறு அவதாரம் எடுத்துவிட்டார்களா பாலாவின் வடிவத் தில்?

தனது காதலை நிர்தாட்சண்யமாக நிராகரித்தவனை எப்படிப்பழி வாங்கலாம் எனப் புழுங்கித்துடித்தவள்தான் ராதா. தனது தந்தையின தும் கணவனாகப் பின்னாளில் ஆனவனதும் சூழ்ச்சியால் அவன் சிறை செல்ல நேர்ந்தபோது உள்ளூர மகிழ்ந்தவள்தான் அவளும். அன்று அவள் நினைத்திருந்தால் பாலாவை எப்படியாவது காப்பாற்றியிருக்கலாம். அந்த மனப்பக்குவம் அப்போது அவளுக்கு இருக்கவில்லை.

அவள் வளர்ந்த விஷச் சூழல் அவளை அப்படி மாற்றியிருந்தது. சுயநலத்துக்காகச் சொந்தச் சகோதரரையும் காட்டிக்கொடுக்கும் கல் மனம் கொண்டவர்களின் சேர்க்கை, அவளையும் மலம் உண்ணும் பவ்வி போல உருமாற்றியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது நினைத்தால் வெட்கமாகவும் வேதனையாகவும் அவமானமாகவும் இருக்கிறது. ஒரு சிறு புழுவைப் போல சிறுமைப்பட்டுப் போய் வட்டதான கழிவிரக்கத்தில் மனம் குன்றிப்போகிறது.

'ஒரு நாசகாரத் தந்தைக்கு மகளாக ஏன் வந்து பிறந்தேன்? நச்சரவம் எனத் தெரிந்தும் நயவஞ்சகன் ஒருவனுக்கு ஏன் வாழ்க்கைப்பட்டேன்? பிறர்க்கு நல்லது செய்யாதுவிட்டாலும் தீமையாவது செய்யாமல்விட்டேனா?' மனச் சாட்சியின் உறுத்தலை ராதாவால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை.



'பாலாவைத் தேடிக் கண்டுபிடித்து அவன் காலில் விழுந்து கதறி அழவேண்டும். செய்த பாவங்களைச் சொல்லி, மனம் கசிந்துருகிப் பிராயச்சித்தம் தேடவேண்டும்'. தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்தாள் ராதா.

'விறுக்'கெனப் புறப்பட்டுச் செல்லும் ராதாவை வினோதமாகப் பார்த்துக் கொண்டிருந்த கிருஷ்ணாவின் கையில் **Home Office** இல் இருந்து வந்த கடிதம் படபடத்துக் கொண்டிருந்தது. அதைப் பார்ப்பதும் படிப்பதும் மடிப்பதும் விரிப்பதுமாக இருந்த கிருஷ்ணாவால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அதில் எழுதப்பட்டிருந்ததன் சாராம்சம் இவ்வளவுதான் - **'உங்கள் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நீங்கள் இந்நாட்டில் தொழில் புரிய உரித்துடையவர் ஆகக் கருதப் படுகிறீர்கள்...'**

*[பன்னாட்டுப் புலம்பெயர் எழுத்தாளர் ஒன்றியம் நடாத்திய 'திருவள்ளுவர் விழா 2016 சிறுகதைப் போட்டியில் ஆறுதற் பரிசு பெற்ற சிறுகதை.[*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லேரியா

**ம**லேரியா எண்டால் தெரியும். சிலவேளை மலேரியாக் காய்ச்ச லில் விழுந்து குயினைன் குளிசைகளை நாலு மூண்டு ரெண்டு எண்டு விழுங்கி ஒரு மாதிரிச் சுகப்பட்டு எழும்பினவராயும் நீங்கள் இருக்க லாம்.

லவேரியா ?

கருப்பட்டியும் தேங்காப் பூவும் சேர்த்திடித்து இடியாப்பத்துக் குள் பொதிந்து வேகவைத்தத 'பற்றிஸ்' மாதிரியான வடிவத்தில் அமை ந்த ஓர் இனிப்புப் பலகாரம். சிங்களவரின் கொழுக்கட்டை! கொழும் புப் பக்கம் இருந்திருந்தால் வாயூறி ஊறிச் சாப்பிட்டு இருப்பீர்கள்.

லெமூரியா?

முள்ளி வாய்க்காலுக்க காணாமல்போன தமிழ்ச் சனங்கள் போல எப்பவோ இருந்து பிறகு காணாமல் போய்விட்டதாகச் சொல்லப் படும் ஏதோ ஒரு கண்டம். இந்து நாகரிகம் படிச்சிருந்தால் சிலவே ளை கேள்விப்பட்டிருப்பியள். நான் இ.நா. படிச்சதில்லை. ஆனால் கேள் விப்பட்டிருக்கிறேன்!]

மஞ்சூரியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மப்'பில தேடினால் [தமிழ் மப்பில்லை. English 'மப்'] ஆப்பிரிக் காப் பக்கம் இப்பவும் தட்டுப்படக்கூடும். சிலவேளை பெயர் மாத்துப் பட்டிட்டுதோ தெரியாது. [நான் ' மப்' பாத்துக் கனகாலம்; அடிச்சுக் கொஞ்சக் காலம்தான்.]

மலேரியா, லவேரியா, லெமூரியா, மஞ்சூரியா.. எண்டுகொண்டு ஏனிந்த எடுபாடாக்கும் எண்டு நீங்கள் காத்திரமா யோசிக்கலாம். யோசியாதையுங்கோ. 'அது' வர முந்தி நான் விஷயத்துக்கு வாறன்.

முல்லேரியா -

தெரியுமோ? தெரிஞ்சால் உங்களுக்கு என்னைப் போல ஆக்களோட சங்காத்தம் இருக்கெண்டு கருத்து. தெரியாட்டில் இண் டைக்கெண்டாலும் தெரிஞ்சுகொள்ளுங்கோ. பின்னடிக்கு அது பிரி யோசனப்படக் கூடும்.

'அங்கொடை' - தெரியும்தானே? அது போலத்தான் முல்லேரியா வும். அங்கொடைக்குக் கிட்டத்திலதான் அமைவிடம். முழு லூசுக ளுக்கு அங்கொடை எண்டால் அரை லூசுகளுக்கு முல்லேரியா. மூண்டு தரமெண்டாலும் அங்க நான் போய்வந்திருப்பன். இப்ப உங்களுக்குச் சாடையா விளங்கியிருக்கும் என்னைப்பற்றி. விசர் ஆஸ்பத்திரிக்கு வேற ஆர் போவினம்? ஒண்டில் இடாக்குத்தர். அல்லது....?

நான் அந்த அல்லதில் அடக்கம். ஓம். நான் ஒரு பைத்தியம். எப்ப வும் இல்லை. அப்ப அப்ப. ஆர்தான் பைத்தியம் இல்லை? எல்லாருக் குள்ளையும் ஒரு பைத்தியக்காரன் இருக்கிறானாம் எண்டு ஆரோ சொன்னானாம். சொன்ன ஆளும் கொஞ்சம் பைத்தியமாத்தான் இருந் திருக்கும்.

உப்புப் போடாத [பெறாத] விஷயங்களுக்காக எல்லாம் பெண் சாதிமாரைப் போட்டுக் கும்மிற புருசன்மாரில இருந்து, - காசுக் காக, காதலுக்காக, புகழுக்காக ,பதவிக்காக எண்டு ஒவ்வொருத்தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுற பைத்தியக்காரக் கூத்துகளைப் பார்க்கும் போது அது உண்மை தான் எண்டு விளங்கும்.

ஆனாலும் எங்களைப்போல ஆக்களைப் பைத்தியம் எண்டு சொல்லக் கூடாதாம். 'மன நோயாளி' எண்டு மரியாதையாத்தான் சொல்ல வேணுமாம்.

ஆரும் உங்கிட காலை அடிச்சு முறிச்சுப்போட்டால் நொண்டித் தானே நீங்கள் நடப்பியள். ஆனால் அவையள் உங்களை நொண்டி எண்டாயினம். கால் ஊனமுற்றவர் அல்லது மாற்றுத்திறனாளி எண்டு கனிவாச் சொல்லுவினம். அப்ப உங்கிட மனசு குளிர்ந்து போயிடுமாம்.

மன நிலை சரியில்லாத ஆள் எண்டதாலதான் நான் இப்பிடி அலம்பிறன் எண்டு நீங்கள் நினைப்பியள். எண்டால் அதிலையும் பிழையில்லை. என்னைப்போல எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலை ஞர்கள் எண்டு சொல்லிக் கொள்றவை எல்லாருமே மறை கழண்ட கேசுகள்தான்.

நாடு, இனம், மதம், மொழி எண்டு ஏதோ ஒண்டைக்கட்டிப் புடிச் சுக்கொண்டு, அதுகளுக்காகச் சண்டை பிடிச்சு மண்டைய உடைச்சு க்கொள்றவ எல்லாரும் எங்களைவிட மோசமான மனோ வியாதிக்கா ரர்.

அப்படிப் பாத்தால் ஒட்டுமொத்தமா எல்லாரையும் அங் கொடை யிலயோ முல்லேரியாவிலேயோதான் கொண்டந்துபோட வேண்டிக் கிடக்கு. இடப் பிரச்சினையால விட்டு வச்சிருக்கினம் போல.

நான் முதன் முதலாக முல்லேரியாவின் முற்றத்தில் காலடி பதித் தது பதினெட்டு வயதில். அந்த வயதில் அது வரக்கூடாத வருத்தம் தான். ஆடிப்பாடி ஓடித் திரிந்து அனுபவிக்க வேண்டிய வயது.

நானும் ஆடிப்பாடிக் கொண்டுதான் இருந்தன். ஆனால் எனது ஆட்டம் ஒரு தள்ளாட்டமாக, எனது பாட்டு ஒரு அபஸ்வர சங்கீதமாக மற்றவர்களுக்குத் தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் அங்க இங்க எண்டு ஓடித்திரிஞ்சு கொண்டுதான் இருந் தன். ஆனால் அதுகூட ஒரு நிதானமில்லாத, ஒரே இடத்தில இருக்க முடி யாததால் ஓடுப்பட்டுத் திரிவதாகத்தான் தெரிந்தது.

எல்லோரும் என்னையே பார்ப்பதுபோல, கண்காணிப்பது போல ஓர் உள்ளுணர்வு. உண்மையும் அதுதான். அம்மா அப்பா அண்ணன் தம்பி என்று எல்லோரும் என்னையே உற்று உற்றுப் பார்த்தார்கள்; மறைந்திருந்து அவதானித்தார்கள். உள்ளூர ஒரு பயத்துடன்தான் என் னோடு பழகினார்கள்.

எனது நடத்தை அவர்களைக் கலவரப்படுத்தியது. அவர்களின் நடத்தை எனக்கு எரிச்சல் மூட்டியது. எனது உறவுகளை ஒரு கோபப் பார்வையுடனும் சந்தேகப் பார்வையுடனுமே என்னால் அணுக முடிந் தது. என்னுள் நிகழ்ந்துவிட்ட ஒரு மாற்றத்தை, என்னுடன் தொற்றிக் கொண்டுவிட்ட ஒரு பரபரப்பை என்னால் உணர முடிந்தது. என்னுள்ளி ருந்து ஒரு வன்முறையாளன் வெளிக்கிளம்பத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தான். எதையும் எவரையும் அடித்துத் துவம்சம் செய்து விடக்கூடிய ஆற்றல் என்னுள் பிரவகிப்பதை என்னால் உணர முடிந்தது.

வீட்டில் நானிருக்கும் வேளைகளில் ஒரு கனத்த மௌனம் கோலோச்சியது. ஒருவரோடொருவர் நயன பாஷையில் தம்முள் பேசிக் கொண்டார்கள். நானில்லாத வேளையில் ரகசியமாகக் குசுகுசுத்துக் கொள்வார்கள். நான் பிரசன்னமானதும், எனது தலை தெரிந்ததும் 'கப் சிப்' பென்று பேச்சு அடங்கிவிடும். சொந்த வீட்டிலேயே நான் அந்நியன் ஆக்கப்பட்டேன். எனது அசாதாரண நடத்தைகளை என்னாலேயே கட் டுப்படுத்த இயலவில்லை. யாராலோ ஆட்டுவிக்கப்படும் ஒரு கைப் பாவை போல நான் இயங்கிக் கொண்டிருந்தேன்.

ஒரு வேளை மூர்க்கமாகவும் மறுவேளை ஆதரவைத்தேடும் ஒரு அனாதைச் சிறுவனைப்போல பாவமாகவும் ஏன் நடந்துகொள்கி றேன்? என்னாலேயே என்னைப் புரிந்துகொள்ள முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களுக்கு நான் ஒரு புதிராகிப் போனேன். புதிருக்கு விடை தேடி ஐயாவும் அம்மாவும் களைத்துப்போனார்கள். இன்று மாறிவிடும் நாளை திருந்திவிடும் என்ற அவர்களின் எதிர்பார்ப்புகள் கானல் நீரா கிப் போக, அம்மா சாத்திரியைத் தேடி எனது சாதகத்துடன் ஓடினா.

சாத்திரி முழுப் பழியையும் ராகு கேதுக்களின் தலையிலும் சனி யின் நீசப் பார்வையிலும் போட்டுவிட்டுத் தப்பிக்கொண்டார். அம்மா வின் பரம்பரையில் யாருக்கேனும் இப்படிச் சித்த சுவாதீனம் வந் ததோ எனும் ஆராய்ச்சியில் ஐயா இறங்கிவிட்டார்.

அண்ணன்தான் முல்லேரியாவுக்குக் கொண்டுபோகும் முடிவை எடுத்தார். முடிவெடுப்பது சுலபமாக இருந்தாலும் அதைச் செயல் படுத்துவது அவ்வளவு இலகுவாக அவருக்கு இருக்கவில்லை. "பைத்தி யக்கார ஆசுப்பத்திரிக்கு உன்னைக் கூட்டிக் கொண்டு போகப்போகி றோம் வா" என்று கூப்பிட்டவுடன் வாலையாட்டிக் கொண்டு பின்னால் போகும் நாயைப் போல போவதற்கு நானென்ன ஒன்றும் தெரியாத சின்ன 'பபா'வே?

கொழும்புக்குச் சற்றுத் தூரமாக இருக்கும் ஏதோ ஒரு ஊரில் இருக்கும் தூரத்து உறவினர் ஒருவரின் வீட்டுக்கு எல்லோருமாக ஒரு விஸிற் போவதாக ஒரு பொய்யைக் கூறித்தான் என்னை அவர்கள் காரில் ஏற வைத்தார்கள்.

காரின் பின்சீற்றில் என்னை நடுவில் இருத்தி அண்ணன் ஒரு புறமும் அண்ணனது சகலன் ஒரு மறுபுறமுமாக இருந்தபோதே விஷயம் ஏதோ பிழைக்கிறதென்று எனது மனதிலும் சாதுவாகப் பொறி தட்டி யது. என்றாலும் 'என்னதான் நடக்கிறது என்று பார்க்கலாமே' என்ப தான ஒரு விநோதப் பிரியமும் உள்ளூர உந்த, பேசாமல் வீதியைப் பராக்குப் பார்த்தபடி இருந்துவிட்டேன்.

ஆஸ்பத்திரி வாசலை மிதித்தும் விஷயம் வடிவாக விளங்கி விட் டது. நான் ஓடிவிடாமல் இரு புறமும் காபந்து பண்ணியபடி உள்ளே அழைத்துச் சென்றபோது வழி வழியே நின்ற 'பைத்தியங்கள்' எங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை வரவேற்று இளிக்க நானும் பெருமிதமாக அவர்களைப் பார்த் துப் புன்னகை புரிந்து வைத்தேன்.

டொக்ரரின் அறைக்குள் நுழைந்ததும் அவருக்கு முன்னால் இருந்த நாற்காலியில் நானாகப்போய் அமர்ந்து கொண்டேன். எடுத்த வாக்கிலேயே நான் கற்ற ஆங்கிலத்தில் செப்பமாகவும் சரளமாகவும் சளசள வென்று இளக்கிவிட ஆரம்பித்தேன். பாவம் டொக்டர். சிங்கள மீடியத்தில் ஆங்கிலம் படித்தவர் போலும். பேய்முழி முழித்த மனுச னுக்கு முதலில் யார் 'பேஷண்ற்' என்றே புரியவில்லை.

நான் அண்ணனைக் காட்டி அவருக்குத்தான் சாடையாகச் சுகமி ல்லை அவரை அனுமதிக்கத் தான் கூட்டி வந்திருக்கிறோம். எனப் 'பிளேட்'டைத் திருப்பிப் போடவும் அண்ணன் கலவரமாகிவிட்டார். ஏற் கெனவே அண்ணன் கொஞ்சம் 'நேர்வஸ் ரைப்' வாய் குழறிப் பேச்சுத் தடுமாறிப் பைத்தியம் தனக்கல்ல எனக்குத்தான் என்பதை விளங்கப்ப டுத்த அவர் செய்த அபிநயங்களும் எடுப்புச்சாய்ப்புகளும் 'பைத்தியம்' அவராகத்தான் இருக்கவேண்டும் எனும் சந்தேகத்தை டொக்டரிடத் தில் ஊர்ஜிதம் செய்யவைத்துவிட்டன.

டொக்டர் கண்ணால் சாடை செய்ய அருகில் நின்ற அட்டென்டன் மார் இருவர் அண்ணனை அமத்திப் பிடிக்க இரு புறமும் நெருங்கி விட்ட னர். இடையில் ஐயா குறுக்கிட்டு விஷயத்தை விளங்கப்படுத்த மினக் கெடவும் [ஐயா இதற்குள் எப்படி வந்தார் என்று உங்களுக்குக் குழப்ப மாக இருக்கிறதா? அவரும் புறுபுறுத்தபடி எங்களுடன் வந்ததை நான் தான் சொல்ல மறந்துபோனேன். Sorry!] குடும்பமே 'கழண்ட கேஸு கள்' தானோ என்று டொக்டர் குழம்பிப் போனார்.

இப்படியாக எதிர்பாராத ஒரு கூத்து அரங்கேறிக் கடைசியில் நான்தான் நோயாளி என்பது உறுதியானதும் டொக்டர் கடுப்பாகிவிட் டார். கொஞ்ச நேரம் புளுத்த ஆங்கிலத்தில் வெளுத்துவாங்கித் தன் னையே ஒருத்தன் முட்டாளாக ஆக்கி விட்டானே என்று நினைக்கப் புண்ணில் புளிப் பத்தினதுபோல ஆகிவிட்டது அவருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலீஸ் நிலைய 'ரிமாண்ட்' அறைகள் போல அங்கும் சில அறைகள் உள்ளன. கொஞ்சம் கடுமையான 'மென்ரல்'களை அதற்குள் அடைத்துவைத்து வழிக்குக் கொண்டு வருவார்களாம். ஜெயிலுக்கும் அதற்கும் அவ்வளவாக வித்தியாசம் இராது. வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு உள்ளிருப்போர் கைதிகள் போலத்தான். சூழ்நிலைக் கைதியாக நானும் கம்பி எண்ண நேரிட்டது அந்த முல்லேரியாவில்தான்.

அந்தக் காராக்கிரஹமும் ஒரு விதத்தில் எனக்குக் கருணை காட்டியது. ஆரியதாஸ என்ற மறக்க முடியாத ஒரு நண்பனை, உடன்பிறவாச் சகோதரனை நான் சந்தித்தது அங்குதான்.

சொல்லப்போனால் ஆரியதாஸ எல்லா விதத்திலுமே எனக்கு நேர் எதிரானவன். இனத்தால், மதத்தால், படிப்பால், வர்க்கத்தால் ஏன் இருப்பிட அமைவால் கூட நாமிருவரும் நேரெதிர்த் துருவங்கள்.

நான் தமிழன்- சிறுபான்மை இனத்தவன்; அவனோ சிங்களவன் – பெரும்பான்மைச் சமூகத்தவன். நான் பிறப்பால் இந்து. அவனோ புத்த சமயத்தவன். நானோ பல்கலைக்கழகம் கண்டு கலைமாணிப் பட்டத்துடன் வெளிவந்தவன்; அவனோ மழைக்குக்கூடப் பள்ளிக்கூடப் படியேறாது எட்டு மூலைப் பட்டம் விட்டுத் தேறியவன். நான் கல்லூரி விரிவுரையாளரான அரைப் பணக்காரரின் மகன்; அவனோ அன்றாடங்காச்சியான ஒரு கூலித் தொழிலாளியின் மகன். நான் பிறந்ததோ வடபுல உச்சியைத் தொட்டுக்கொண்டிருக்கும் பருத்தித்துறையில்; அவனோ தென்பகுதி மூலையில் குந்திக்கொண்டிருக்கும் - இலங்கை வரை படத்தில்கூடப் பெயர் வராத - ஒரு குக்கிராமத்தில். இவை அனைத்துக்கும் மேலாக அவன் பலசாலி; சண்டியன். நானோ நோஞ்சான்; சக்கட்டை.

இவ்வளவு வேற்றுமைகள் எமக்குள் இருந்தபோதிலும்கூட எம்மை ஒன்று சேர்த்து வைத்தது அந்த முல்லேரியாவின் இரகசியக் குகை! என்னைக் கண்டவுடன் ஏனோ அவனுக்குப் பிடித்துக் கொண்டுவிட்டது. வாத்ஸல்யத்துடன் என்னைத் தழுவிக்கொண்டான். 'யாளுவா' என உரிமையோடு என் தோள் மீது கைபோட்டுக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது நெருக்கம் முதலில் எனக்கு உவப்பானதாக இருக்க வில்லை. சிங்களவர்களைப் பற்றி எனது மனதில் உருவாக்கப்பட்டிருந்த படிமம் அவனை என்னிலிருந்து அந்நியப்படுத்தியது.

ஆனால் பாசாங்கில்லாத அவனது நேசம், அவன் கண்களில் தெரிந்த அந்தக் களங்கமில்லாத அன்பின் வெளிப்பாடு, கொஞ்சம் கொஞ்சமாக எனது இதயத்தில் ஊடுருவி முற்று முழுதாக அவனை அங்கீகரிக்கச் செய்துவிட்டது.

முல்லேரியா ஒரு சிங்களவர்களின் சரித்திரப் புகழ் வாய்ந்த ஸ்தலம். அதையிட்டுச் சிங்களவர்கள் பெருமைப்பட்டுக் கொண்டாலும் பிழை யில்லை. முழு நாட்டையுமே அப்படியாக ஆக்கிவிடத் துடிப்பவர்களுக்கு இதுவும் ஒரு அற்ப சந்தோஷமாக இருந்துவிட்டுப் போகட்டுமே!

தமிழர்களை மருந்துக்குக்கூட அங்கு [ஆமாம் ஆஸ்பத்திரியில் தான்] காண முடியாது. 'நமக்கெதற்கு வம்பு' என்று வட+கிழக்குத் தமிழர்கள் அந்தப் பக்கம் எட்டியும் பார்ப்பதில்லை. மலையகத் தமிழ் 'லூசுகள்' மட்டும் 'நட்' இறுக்கக் கொஞ்சம் எட்டிப்பார்ப்பதுண்டு. ஆனாலும் தமிழருக்கு எதிரான துவேஷம் எங்கும்போல அங்கும் இருக்கத்தான் செய்தது. கொழும்பில் இருந்ததால் எனக்கும் ஓரளவுக்குச் சிங்களம் கதைக்கத் தெரிந்திருந்தது. ஆனால் அதுவே வில்லங்கமாகவும் போய்விட்டது. என்னைச் சீண்டிப் பார்ப்பதற்காக ஒரு சில 'சகோதரங்கள்' என்னுடன் கதை கொடுத்து என் வாயைக் கிண்டிப் பார்ப்பர். அந்த வேளைகளில் ஆபத்பாந்தவனாக அங்கு வந்து நிற்பான் ஆரிய தாஸ. அவனை மீறி என்னுடன் யாரும் 'நொட்ட' முடியாது.

'சண்டியன்' என்றுதான் அவனுக்கு அங்கு பெயர். அவன் புஜபலத்துக்கு முன்னால் பணியாதவர் எவருமிலர். என்மீது ஒரு துரும்பு கூட விழாது என்னை அவன் பாதுகாத்தான். ஏதோ எனக்கு கடமைப்பட்டவன் போல எனக்காகத் தொண்டு செய்தான். அவனுக்காக நான் எதுவுமே செய்ததில்லை. ஆனாலும் என்னிடத்தில் எதையுமே எதிர்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராது, 'எங்கிருந்தோ வந்த' பாரதியின் கண்ணனைப் போல ஆரிய தாஸ எனக்கு ஆகிவிட்டான்.

எனக்காக அவன் பலருடனும் சண்டைபோட்டு அவர்களது பகை யையும் சம்பாதித்துக் கொண்டான். அவனது வன்முறைகள் காரணமா கப் பலதடவைகள் 'ஷொக் ட்ரீட்மென்ற்' கொடுக்கப்பட்டும் அவனி யல்பு மாறவில்லை.

Shock Treatment - அதிர்ச்சி வைத்தியம். ஓ! அதை நினைத்தாலே நெஞ்சு பதறி உடல் விதிர்க்கிறது; மூளை விறைக்கிறது. மின் கதி ரைப்பாய்ச்சி மரண தண்டனைக் கைதிகளை ஒரே நொடியில் சாக டித்துவிடுவார்களாம். ஆனால் இந்தப் பைத்தியக்கார வைத்தியர் களோ மின்னோட்டத்தை விட்டு விட்டுப் பாய்ச்சி அணுவணுவாகச் சித்திரவதை செய்து கொல்லாமல் கொல்கிறார்களே. என்ன கொடுமை யப்பா!

இது சிகிச்சையா அல்லது தண்டனையா? இதைக் கண்டு பிடித்த மேதாவி உயிரோடிருந்தால் அவன் மின்சாரம் தாக்கிச் சாகட் டும். அனுபவித்தவனுக்குத்தானையா தெரியும் அந்த வாதனையும் வேதனையும். பிரசவ வலி என்கிறார்களே அதைவிட இது ஒன்றும் குறைந்ததாக இருக்க முடியாது.

என்னைப்போன்ற ஒருவனால் இதையெல்லாம் தாங்கிக் கொள் ளவே முடியாது. ஆனால் ஆர்யாதாஸோ எத்தனை முறை என்றாலும் பூ என்று ஊதித் தள்ளிவிட்டு வெற்றி வீரனைப்போல வந்து நிற்பான். அவன் முன்னர் சிங்கள ஊர்காவல் படையில் இருந்தவனாம். நாட் டைக் காக்கப்போகிறேன் என்ற பூரிப்புடன் எடுபட்டுப் போனவன். உள்ளே போனபின் பெற்ற/கற்ற கசப்பான அனுபவங்கள்; சொந்தக் சகோதரர்கள் போன்றவர்களைக் கொன்றுகுவிக்க நேரிட்ட அவலம்; கண் முன்னே அவன் காண நேரிட்ட கோரச் சாவுகள் – அவனது இள கிய இதயத்தை ஈட்டிகொண்டு ஊடுருவ, 'போதுமடா சாமி' என்று சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாமல் கொள்ளாமல் ஓடி வந்தவன்தான் இப்போ இங்கு வந்து சேர்ந்திரு க்கிறான்.

உண்மையாகவே அவன் மனம் பேதலித்துப் போய் வந்தானா அல் லது ஆட்பற்றாக் குறையால் மீண்டும் இழுத்துக்கொண்டு போய்ப் படையில் சேர்த்துவிடுவார்களோ என்ற அச்சத்தினால் புத்தி சுவாதீன மற்றவனாக நடித்து இங்கு வந்து சேர்ந்தானோ தெரியவில்லை.

அப்பாவித் தமிழர்களுக்குத் தன்னையறியாமலே தானிழைத்து விட்ட அநீதிகளுக்குப் பிராயச்சித்தமாகத்தான் எனக்குத் தொண்டூழி யம் செய்து தனது மனப்பாரத்தைக் குறைத்துக் கொண்டானோ..? அது வும் தெரியவில்லை.

ஆனால் அவன் என்பால் காட்டிய அன்பில் எந்த உள் நோக்கமும் என்னால் காணமுடியவில்லை. அவன் தாய் ஒருமுறை அவனைக் காண கிரிபத்தும் 'காவ்ங்'கும் தொதோலும் கையுமாக வந்தபோது எத்தகைய அன்புடனும் ஆதுரத்துடனும் அதை அவன் என்னுடன் பகிர்ந்து கொண் டான். என்னைத் தனது உடன் பிறவாச்சகோதரன் எனத் தாயிடத்தில் அவன் அறிமுகப்படுத்தியபோது அந்தத் தாயும் அதை ஏற்றுக் கொண் டவள் போல என் கரம் பற்றி, 'புத்தா' என நிஜமான பிரியத்துடன் தடவிக் கொடுத்த அந்த வேளையில் நானும் அந்த அன்புச் சிறையில் அடைக்க லமாகிவிட்டேன்.

ஆரியதாஸவின் அருகாமை அங்கிருந்த மற்றவர்கள் சிலரது மனங்களையும் என்பால் ஈர்த்துவிட்டது. அதனால் எமது நட்பு வட்ட மும் விரிந்துகொண்டு போனது. சிகிச்சை முடிந்து சில மாதங்களின் பின் நான் வீடு திரும்பியபோது வீடு எனக்கு அந்நியமாகிப் போனது.

தொத்து வியாதிக்காரனிடத்தில் இருந்து விலகி இருப்பது போல என்னை விட்டு ஒவ்வொருவரும் எட்டியே இருந்துகொண்டார்கள். அதி கம் பேச்சுவார்த்தைகள் வைத்துக்கொள்ளாமல் சர்வஜாக்கிரதையா கவே என்னுடன் பழகினார்கள் போலிருந்தது. உறவினர் நண்பர்கள் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குப் புதிதாக வந்தவர்கள் என்னை எதிர் கொண்டபோது அவர்களின் கண்களில் ஒரு மிரட்சி தென்பட்டது.

இடைப்பட்ட ஒரு சில மாதங்களுள் எனது முகம் அவ்வளவு பயங்கரமானதாக மாறிவிட்டதா என்ன? கண்ணாடியின் முன் நின்று எனது முகத்தை நானே பார்த்துக் கொண்டேன். மழிக்கப்படாத மீசை தாடியில் ஓர் அரை ஞானி போலத் தோற்றம் கொண்டிருந்தேன். பார்க்கப் பயமொன்றும் வரவில்லை. சிரிப்புத்தான் வந்தது. உரக்கச் சிரித்துக் கொண்டேன். சிகரெட் கறை படிந்து பற்களின் அழகைப் பாழ்படுத்தி இருந்தது. அந்தப் பழக்கத்தை விட்டொழித்து விட வேண்டும் என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

திடீரென ஏதோ உள்ளுணர்வு உந்தத் திரும்பிப் பார்த்தேன். தூண் மறைவுகளில் இருந்து வெடுக்கெனச் சில தலைகள் உள்வாங்கப் பட்டன. வீட்டுக்குள்ளேயே நான் மற்றவர்களால் வேடிக்கை பார்க்கப் படும் ஒரு விலங்குபோல் ஆகிவிட்டேன். வெளியே புறப்பட்டுப்போனாலும் தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் முகங்களில் எல்லாம் அதே அச்சம் கலந்த விடுப்புப் பார்வை.

நான் நானாக இருக்க முடியாத இந்த வீட்டை, ஊரை, உலகத்தை எனக்குப் பிடிக்கவில்லை. இது எனக்கான உலகமில்லை. எனது உலகம் விரிந்து பரந்தது. அங்கு அன்புக்குத் தடையில்லை. அர்த்தமற்ற பேதங்கள் அங்கில்லை. என் சொர்க்க வாசல் எனக்காகத் திறந்திருக்கிறது. அதை நோக்கி நான் அடியெடுத்து வைக்கப்போகிறேன். ஆமாம். முல்லேரியா என்னை வரவேற்கத் காத்திருக்கிறது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி



**ச**த்தியமாக சாதியைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது - நான் ஏழாம் வகுப்பில் படிக்கும் வரை. யாழ் குடாநாட்டில் பிறந்து அங்கேயே வளர்ந்த ஒருவருக்கு நான் சொல்வது பச்சைப் பொய்யாகத் தெரியலாம். எனது சாதி எதென்று சொல்லாமல் மறைப்பதற்காக நானிப்படிச் சொல்லி வந்திருக்கலாம் எனவும் அவர்கள் நினைக்கலாம். ஆனால் உண்மையாகவே அது எனக்குத் தெரியாது என்பதற்கான காரணம் எனது வளர்ப்புச் சூழல்.

பிறந்தது யாழ்ப்பாணத்தில் என்றாலும் நான் வளர்ந்தது என்னவோ கொழும்பில்தான். ஐயாவும் அம்மாவும் ஆசிரியர்களாக - அதுவும் கொழும்பில் பிரபலமான ஒரு கல்லூரியில் - கடமையாற்றிய காரணத்தால் கொழும்பு எனது வாழ்விடமானது.

தமிழர்களுக்கு எதிராக முதன் முதலாகக் கொழும்பில் ஏற்பட்ட கலவரத்தின்போது பாதிக்கப்படாத தலைநகர் வாழ் தமிழர்களும் கொஞ்சம் ஆடித்தான் போய்விட்டார்கள். கொழும்பு, தங்களுக்குப் பாதுகாப்பான ஓர் இடமல்ல என்ற அச்ச உணர்வு அவர்களைத் தொற்றிக் கொண்டுவிட்டது. ஆனாலும் தொழில் நிமித்தம் அங்குதான் இருந்தாக வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களில் பலருக்கும். எனது தாய் தந்தையரும் அதற்கு விதிவிலக்கல்ல.

அச்சத்தின் மத்தியில் தாம் வாழ நேரிட்டாலும் பிள்ளைகளாவது பாதுகாப்பான இடங்களில் இருந்தால் போதுமே எனத் தமது மனதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாக்கிக் கொண்டு என்னைப் பிடித்து யாழ்ப்பாணத்துக்கும் என்னி லும் ஒரு வயது இளையவனான எனது தம்பியை மட்டக்களப்புக்கும் இரவு 'மெயில்' கோச்சியில் 'பார்சல்' பண்ணி அனுப்பிவிட்டார்கள்.

கலவரம் என்னைக் கரை சேர்த்த இடம் கரவெட்டி. பெரியய்யா வீட்டில் நான் அடைக்கலமானேன். சமய ரீதியாக நான் ஒரு வேதக்கா ரன். அதனால் அவ்விடத்தில் பிரபலமான வேதப்பள்ளிக்கூடத்தில் என க்கு இடம் கிடைத்தது. புதுப் பள்ளிக்கூடத்தில் எனது பாலபாடம் சாதி பற்றிய அறிமுகமானது.

தமிழர்களான நாம் எல்லோருமே கறுப்பர்கள்தாம் என்பது அந் நாளில் வெள்ளைக்காரனுக்குப் பக்கத்தில் போய்க் குந்தியிருந்து பார்த் தவனுக்கு மட்டுமே விளங்கும்.

கருப்புக்குள் வெள்ளையைத் தேடும் தமிழ்ச் சாதியில் பிறந்ததால் கொஞ்சம் துணிந்து சொல்கிறேன். நான் கொஞ்சம் நிறமாக இருப்பேன். நல்லெண்ணெய்க் கறுப்பாக இருந்த ஒரு பெடியன் வகுப்பில் எனது நெருங்கிய நண்பனானான். குமரப்பருவ இயல்புக்கேற்ப எம்முள் வீர விளையாட்டுகள் நடக்கும். ஒருபோது அவனது கை முஷ்டி எனது கண் ணுக்குக் கீழே பதம் பார்த்து அவ்விடம் வீங்கிப் போய்விட் டது.

பாவம் அவன். கலவரமாகிவிட்டான். விளையாட்டை விளையாட் டாக எடுத்துக் கொள்ளும் மனப்பான்மை எனக்கிருந்தது. நான் அதைப் பெரிதுபடுத்தவில்லை. அவனது நட்பு எனக்குப் பெரிதாக இருந்தது.

எமது பெரிஜயாவின் வீட்டுக்கு ஓரிரு வீடுகள் தள்ளியிருக்கும் ஒரு வீட்டில்தான் அல்பிரட் இருந்தான். அவன் எமக்குத் தூரத்துச் சொந்த மும் கூட. அவனும் என்னுடன் அதே வகுப்பில்தான் படித்தான். எனது புதிய நண்பன் என்னைக் காயப்படுத்தியது அல்பிரட்டுக்குப் பிடிக்க வில்லை.

"அவன் எப்படி உன்னை அடிக்கலாம்? அவன் யார் தெரியுமா?" என்று அல்பிரட் என்னைக் கேட்டான். அவனது கேள்வி எனக்குப் புரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. "அவன் ஒரு நளப்பயல்", அல்பிரட் இகழ்ச்சி தொனிக்கக் கூறினான். இப்போதும் அவன் கூறியது எனக்கு விளங்கவில்லை

"நளப்பயல் எண்டால்?" எனது கேள்வி அல்பிரட்டுக்கு வியப் பாக இருந்தது போலும். 'இதுகூடத் தெரியாத ஒருவன் இருப்பானா?' என் பது போல் என்னைப் பார்த்தான்.

"சாதி மச்சான். நளச் சாதி... போய் உம்மிட் பெரியப்பாவைக் கேளும். சொல்லுவேர்" ஏதோ பெரிய சிதம்பர ரகசியத்தைச் சொல்வது போலிருந்தது அவனது குரலும் பாவனையும்.

மொழி, மதம், தொழில், பால் என மக்களுக்கிடையே வேற்றுமை கள் இருப்பதை அறிவேன். சாதி என ஒன்றும் இருக்கிறதென அன்று தான் முதன்முதலாக நான் தெரிந்துகொண்டேன்.

சாதி பற்றி எனது ஐயாவோ அம்மாவோ மற்றெவருமோ கதைத்து நான் கேட்டதில்லை. எங்களுக்குத் தெரியாமல் தங்களுக்குள் கதைத் திருப்பார்களோ தெரியாது. சாதி பற்றிய அல்பிரெட்டின் பிரஸ்தாபம், அதை அவன் சொன்ன விதம் எனக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி இருந் தது. அந்த எனது நண்பன் வேறொரு சாதி என்றால் நான் என்ன சாதி யாக்கும்? இதை யாரிடம் கேட்டுத் தெளிவது என்றும் புரியவில்லை.

பள்ளிக்கூடத்தில் வேறு வேறு சாதியினர் ஒரே வகுப்பிலேயே படிக்கிறார்கள் என்பதும் வேதக்கோயிலிலும் தாழ்த்தப்பட்ட சாதியின ருக்கு என ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதும் காலப்போக்கில் நான் தெரிந்து கொண்ட விஷயங்கள்.

வயலில் இறங்கி வேலை செய்யாவிட்டாலும்கூட நானும் வெள்ளா ளர் எனும் சாதியில் பிறந்த ஒருவன் என்பதையும் அறிந்துகொண்டேன். அதையிட்டுப் பெருமைப்படவோ வெட்கப்படவோ எனக்கேதும் இருக் கவில்லை.

ஆசிரிய கலாசாலையில் நான் சேர்ந்தபோதும் 'கொழும்புத் தண்ணி' என்ற சிறப்புப் பெயருடன் ஏனையோருக்கு அந்நியமானவனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவே நான் கருத்தப்பட்டேன். ஒவ்வொருவரும் தங்களது சாதியையும் மற்றவர்களது சாதியையும் நன்கு தெரிந்து கொண்டவர்களாகவே இருந்தார்கள். ஆயினும் ஒருவரோடு ஒருவர் சாதி பாராட்டிப் பேசிய தாகவோ பழகியதாகவோ தெரியவில்லை.

பல சாதியையும் சேர்ந்தவர்கள் எனக்கு நண்பர்களாக இருந் தார்கள். அதிலும் பெரும்பாலானோர் வேறு சாதிக்காரர்களாகவே இருந் தார்கள். அதைக்கூடப் பின்னர் யாராவது கூறித்தான் தெரிந்துகொண் டேன்.

ஆயினும் எஸ்.பொ., கணேசலிங்கம், K.டானியேல், டொமினிக் ஜீவா போன்ற ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதைகளும் நாவல்க ளும் யாழ்ப்பாணத்துச் சாதி ஒடுக்கு முறை பற்றியும் தீண்டாமைக் கொடுமை பற்றியும் அதற்கெதிரான தாழ்த்தப்பட்ட மக்களின் போரா ட்டங்கள் பற்றியும் சரியான ஒரு புரிந்துணர்வையும் தெளிவையும் காலப்போக்கில் என்னிடத்தில் ஏற்படுத்தி இருந்தன.

வர்க்க முரண்பாடும் சாதியும் ஒன்றோடொன்று பின்னிப் பிணை ந்ததாகவே எனக்குள்ளும் ஒரு கருத்து உறுதிப் பட்டிருந்தது. எனது கரவெட்டி உறவுக்கார நண்பனின் பெயருடைய அதிபர் ஒருவரின் கீழ் நான் ஆசிரியனாகப் பணியாற்ற போகும் வரை எனது கருத்தில் எவ் வித மாற்றமும் ஏற்படவில்லை.

கொழும்பில் வேலை பார்த்துக்கொண்டிருந்த நான், மீண்டும் தலைநகரில் 1983 இல் தமிழர்களுக்கு எதிராகத் தலைவிரித்தாடிய வன் முறைகள் காரணமாகவிரும்பியோ விரும்பாமலோ யாழ்ப்பாணத்துக் குத் துரத்தப்பட்டேன்.

யாழ்ப்பாண நகரில் தாழ்த்தப்பட்ட வேதக்காரர் அதிகமாக வாழும் ஒரு பகுதியில் அவர்களின் பிள்ளைகளுக்கான ஓர் அரசினர் பாடசாலையில்தான் எனக்கு நியமனம் கிடைத்தது. மிகுந்த விருப் புடனேயே அப்பாடசாலையில் கடமையேற்க நான் காலடி வைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு அதிபராக இருந்தவரும் அதே சமூகத்தைச் சேர்ந்தவர் என்பது பின்னர் நான் தெரிந்துகொண்ட விஷயம்.

இடையில் அதிபரின் முன்கதைச் சுருக்கத்தைக் கொஞ்சம் பார்ப் போமா? Birds of the same feather என்பதற்கொப்ப அவரைப் போலவே கல் வித் துறையில் முன்னேறி உயர் பதவியில் இருந்த, அவரது சமூகத்தவ ரும் பின்னைய நாட்களில் அவரது உற்ற நண்பருமாக இருந்த பாலன், ஒரு சிறுகதை ஆசிரியராகப் பெயரெடுத்த காலத்தில் அவரை வைத்து ஒரு சிறுகதை எழுதினார். கொஞ்சம் உண்மையும் நிறையக் கற்பனையும் [புளுகும்] கலந்து அவரெழுதிய 'காலத்தால் சாகாதது' என்ற கதை பலராலும் [குறிப்பாக அவர் சார்ந்த அணியின ரால்] பாராட்டப்பட்டு இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த கதைகளுள் ஒன்றென முத்திரை குத்தப்பட்டு ஏதோ பரிசும் வென்றதாகக் கேள்வி.

கதை என்னவோ அரைத்தமாத்தான். புளித்துப்போனதால் கொஞ் சம் 'கள்ளு' வாடை தூக்கலாக அடித்தது. அமலன் - யாழ்ப்பாணத்தின் ஏதோ ஒரு மூலையில் உள்ள நாரந்தனை என்ற குக்கிராமத்தில் ஒரு குச்சு வீட்டில் பிறந்தான். அவன் தந்தை மரமேறுவதில்லை. ஆனாலும் சாதி அடிப்படையில் அவன் ஒரு மரமேறி. அன்றன்றாடம் கூலி வேலை செய்து பிழைத்துக் கொண்டிருந்த பஸ்ரியன் களைப்புத் தீரக் கொஞ் சம் கள்ளுக் குடிப்பான். அமலனுக்குக் குடிப்பவர்களைப் பிடிக்காது. அதனால் அவனுக்குத் தனது தந்தை பஸ்ரியனையும் பிடிக்காது.

சாதியத்தின் நீசக்கரங்கள் யாழ்ப்பாணச் சமூகத்தில் எப்படி யெல்லாம் வியாபித்துப் பரவி ஆக்ரமித்து இருந்ததோ அதற்குச் சற்றும் குறையாமல் நாரந்தனையிலும் தனது பிடியை இறுக்கியிருந்தது.

நில உடைமைக்கார வெள்ளாளர்களின் அடிமைகளாகத் தாழ்த் தப்பட்ட சமூகத்தினர் தண்ணீருக்கும் சோறுக்கும் அல்லாடி ஈனப் பிழைப்பு நடாத்திக் கொண்டிருந்த காலம் அது.

வேதத்துக்கு மதம் மாறினால் சாதியத்தின் கோரப் பிடியில் இருந்து விடுதலை பெறலாம் என்ற நப்பாசையில் குடும்பத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதக்காரர்களாக மாறியும் 'புதிய மொந்தையில் பழைய கள்ளாம்' என்ற கதைதான். கடைசியில் உறவுக்கார இந்துக்களின் பகையை யும் தேடித் கொண்டதுதான் கண்ட பலன்.

அமலானுக்கு வேதக்காரப் பள்ளிக்கூடத்தில் படிக்கக் கிடைத்தது மட்டும் என்னவோ எதிர்பாராத அதிர்ஷ்டம்தான். இத்தாலியரான பாத ருக்கு அமலனின் சாதி தெரியவில்லை. திறமைதான் தெரிந்தது

திறமையைத் தட்டிக்கொடுக்கவும் ஒரு பரந்த மனம் வேண்டும். அது பாதரிடம் இருந்தது. கிடைத்த வாய்ப்பைச் சிக்கெனைப் பற்றிக் கொண்டு படிப்பில், குறிப்பாகத் தமிழ் மொழியில், தனது ஆற்றலை வெளிப்படுத்தியபடி முன்னேறிய அமலன் பல்கலைக் கழகப் படிக்கட் டில் கால் பதிக்கும்வரை ஓயவே இல்லை.

எத்தனை உதாசீனங்கள்; எத்தனை தடைக்கற்கள்; எத்தனை முட் டுக்கட்டைகள். அத்தனையையும் தாண்டி ஒரு பட்டதாரியாகத் தலை நிமிர்ந்து வெளியில் வந்தபோது உலகையே ஜெயித்துவிட்டதான ஒரு கர்வம் அவனுக்குள் வியாபித்தது.

வறுமையிலும் செம்மையாக வாழப் பழகியிருந்த அமலன் இயல்பிலேயே நல்ல உழைப்பாளி. அவன் கற்ற கல்வியின் சிறப்பால் ஆசிரியப் பணி அவனைத் தேடி வந்தது.

சொந்த ஊரில் சென்று சேவை புரிய விரும்பினாலும் மீண்டும் சாதியத்தின் சில்லறைத்தனத்துக்கு அடிபணிய அவனது தன்மான உணர்வு இடம் கொடுக்கவில்லை.

தங்களைப் போலவே நாதியற்றுக் கிடக்கும் மலையகத் தமி ழர்களிடத்தில் சென்று விழிப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற உத்வே கம் அந்த வாலிப வயதில் அவனை உந்தித் தள்ளியது.

பரம்பரைச் சொத்தாக வந்த அவனது திடகாத்திரமான தேகமும் கற்பதைக் கசடறக் கற்றதால் பெற்ற ஞானமும் அவன் தோற்றத்தில் பிரதிபலித்து, அந்தப் பொலிவால் மாணவர்கள் மத்தியில் அமலன் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹீரோவாக மதிக்கப்பட்டான். மலையக மக்களின் எழுச்சிக்காக அவன் வெளியிட்ட 'குன்றின் குரல்' சஞ்சிகை, படித்த மலையக இளை ஞர்களிடையே அவனது பெயரைப் பிரபலமாக்கியது.

பட்டதாரி ஆசிரியராக இருந்த அவன் மிக விரைவிலேயே அதிப ராகவும் பதவி உயர்வு பெற்றுவிட்டான். ஆட்சியில் இருந்த இடதுசாரி கள் சார்பான அரசு வடக்குக் கிழக்கில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்க ளின் பால் காட்டிய கரிசனையும் அவனது உயர்வுக்குப் பின்புலமாக நின்று உதவியது.

முதலாளித்துவத்துக்கு எதிராகக் குரல் கொடுத்துக்கொண்டிருந்த அமலனும் காலப்போக்கில் ஒரு குட்டி முதலாளியாக மாறிக்கொண்டி ருந்தான். அவனையறியாமலே அவனுக்குள்ளும் அதற்கான மாற்றங் கள் நிகழலாயின.

நாரந்தனை விதானையார் தேவசகாயம் சாதித் திமிரில் ஊறிச் சன்னதமாடிக் கொண்டிருந்தவர். கால மாற்றம் அவரது மகன் துரை நாயகத்தைப் பயிற்றப்பட்ட ஆசிரியராக்கி அமலனின் கீழே வேலை செய்ய வைத்துவிட்டது.

தங்கள் வீட்டுக் கிணற்றை எட்டிப் பார்த்த குற்றத்திற்காக, ஆறு வயதுப் பிஞ்சுப் பாலகன் என்றும் பாராது விதானையார் துவரம் கம் பால் அடித்துத் துவைத்த வடுக்கள் மாறாது பதிந்து நின்று இன்றும் அம லனுக்கு அந்நாளையக் கசப்பான அனுபவங்களை ஞாபகமூட்டிக் கொண்டிருக்கின்றன.

அது நடந்தபோது துரைநாயகம் பிறக்கவே இல்லை. ஆனால் தேவ சகாயத்தாரின் சாங்கம் அவனில் இருந்தது. அவரது சாதித்தடிப்பின் எச்சசொச்சங்களும் சாடையாக அவனிடம் ஒட்டிக்கொண்டுதான் இருந் தன. போதாக்குறைக்குக் குடி கூத்து என்று சகல விதமான சீத்துவக் கேடுகளையும் குத்தகைக்கு எடுத்தவனாக, 'பொறுக்கி' என்ற சொல் லுக்கு இலக்கணம் வகுக்கும் சாமுத்திரிகா இலட்சணம் கொண்ட வனாகத் துரைநாயகம் விளங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரையை, ஒரு பொறுப்புள்ள - சமூக அக்கறையுள்ள, நல்ல குடி மகனாக மாற்றுவதற்காக அமலன் தலைகீழாக நின்று தண்ணீர் குடிக்க வேண்டியதாயிற்று. எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிப் பதில் சற்றும் பின்வாங்காத நவீன விக்ரமாதித்தனான அமலன், கொஞ் சம் கொஞ்சமாகத் துரையைத் தன் வழிக்குக் கொண்டுவந்து, மலைய கத்தில் ஒரு புதிய சமதர்ம சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முன்னி ன்று உழைக்கும் ஒரு தொழிற் சங்கத் தலைவனாக [ஆசிரியர் சங்கம் தான்] மாற்றிவிட்டான்.

வர்க்கங்களுக்கு எதிரான அமலனின் போராட்ட வரலாற்றை [?], கதைக்களனாகக் கொண்டு 'காலத்தால் சாகாத' இலக்கியம் படைத்த பாலன் ஈழத்துச் சிறுகதை உலகின் பிரம்மாவாக ஆகி/ஆக்கப்பட்டு விட்டார்.

பாலனின் கதையை அப்படியே முற்று முழுதான உண்மைக் கதை என நினைப்பீர்களாக இருந்தால், சிறுகதை இலக்கியத்தின் சூட்சுமம் பற்றி உங்களுக்கு அவ்வளவாகத் தெரியவில்லை என்றுதான் கூறு வேன். முன்பாதியில் ஓரளவுக்கு உண்மையை எழுதிக்கொண்டுவந்த பாலன் பிற்பகுதியில் சுவாரஸ்யம் கருதி நிறையவே பூச்சுற்றல் வேலை களை செய்து, வெள்ளாளத்துரைநாயகத்தைச் சகட்டுமேனிக்கு வில்ல னாக மாற்றியமைத்து அமலனை எம்ஜியார் லெவலுக்கு அதி உத்தம னாக அவதாரம் எடுக்கவைத்துவிட்டார். அந்த விதத்தில் அவர் கெட்டிக் கார எழுத்தாளரிதான்!

உண்மையில் துரைநாயகம் அப்படி ஒன்றும் மோசமான பேர்வழி யல்ல. சின்னச் சின்னச் சபலங்களுடன், மாணவிகளிடம் சில சில்மிஷங் களுடன் வாழ்க்கையைத் தன்பாட்டில் ஓட்டிக்கொண்டிருந்த ஒரு சரா சரி இளைஞன்தான் அவனும்.

பாலன் குறிப்பிட்ட மாதிரி அமலன் அவனைக் கரை சேர்க்கவென ஒரு துரும்பையும் எடுத்துக் போட்டவனல்ல. மாறாக அவனது இரகசிய நடவடிக்கைகளை மேலிடத்துக்கு அம்பலப்படுத்தி, முடிந்தால் அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைக் கம்பி எண்ண வைக்கலாம் எனக் காய் நகர்த்திக் கொண்டிருந்த வர் அவர்.

'ஐயா சாமி, ஆளை விட்டால் காணும்' எனக் கிடைத்த வேலையை யும் உதறித் தள்ளிவிட்டு, எப்படியோ வெளிநாட்டுக்கு ஓடித் தப்பிவிட் டான் துரைநாயகம். பதவியின் பலத்தால் ஒரே ஊர்க்கார வெள்ளாளன் ஒருவனைப் பழிவாங்கக் கிடைத்த சந்தர்ப்பம் கை நழுவிப்போன தில் அமலனுக்கு ஆதங்கம்தான்.

அமலனின் முகத்திரையைக் கிழித்து, அவனது உண்மையான முகத்தைக் காட்டத் திராணியற்ற, அல்லது காட்டப் பிரியப்படாத பாலன், முழுப் பூசணிக்காயைச் சோற்றுள் மறைப்பதைப் போல பொய் யைப் பூசி மெழுகித் தனது எழுத்துச் சாதுரியத்தால் அமலனை ஒரு வர்க்கப் போராட்ட வீரனாக, பகைவனுக்கருளும் நன்நெஞ்சினனாக மாற்றி, மனிதருள் மாணிக்கமாக உயர்த்திவிட்டார். கள்ளையும் பாலென நம்பவைத்துவிட்டார் பலே பாண்டியரான பாலன்.

இடையில் ஒரு குட்டி முதலாளியாக – பூர்ஷுவாவாக அமலன் ஆகி விட்ட போதிலும் கூட அவன் வறுமையில் உழன்று கொண்டிருந்ததாக வும் தனது சேமிப்புகளைத் தோட்டத் தொழிலாளர் நலனுக்காகத் தாரை வார்த்து விட்டதாகவும் வேறு புருடா விட்டிருந்தார்.

பாலனின் சிறுகதையில் உள்ள ஓட்டைகளைப் புட்டுக்காட்டப் புறப்பட்டால் பாவம் அவருக்குப் பரிசு கொடுக்கப் பரிந்துரைத்த புத்தி ஜீவிகள் முக்காடு போட்டுக்கொண்டு மூலையில் பதுங்கிவிட நேர லாம். அது எமது வேலையல்ல என்பதால் அதை ஒரு புறம் விட்டுவிட்டு இனி எமது சொந்தக் கதையைப் பார்ப்போம்.

நல்லாசிரியர் விருது பெற முண்டியடிக்காவிட்டாலும் கூட மாண வர்கள் மத்தியில் நான் ஒரு நல்லாசிரியனாகவே பெயரெடுத்திருந் தேன். மாணவர்களுடன் இயல்பாகப் பழகி அவர்களின் மனங்களில் இல குவாக இடம் பிடித்துவிடுவேன். ஆனாலும் பாடசாலை அதிபருடன் ஒத் துப்போவதில் மட்டும் எனக்குச் சில இடர்ப்பாடுகள் இருந்துவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மதம் என்பது மக்களை மயக்கும் அபின்' எனக் கூறிய கார்ல் மார்க்ஸ்சுடன் கொஞ்சம் நெருக்கமானதால் சமய பாடம் கற்பிப்பதில் எனக்கு உடன்பாடு இருந்ததில்லை. அதை முதற் சந்திப்பிலேயே எனது அதிபரிடம் நான் பட்டவர்த்தனமாகக் கூறிவிட்டேன். ஆனால் அது அவ ருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லைப் போலும். என்னை ஒரு கலகக் காரனாகக் கருதுவதற்கு அதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

தாழ்த்தப்பட்டவர்களை அரவணைப்பதன் மூலம், அவர்களுக் கான கல்வியறிவை வழங்கி வாய்ப்பளிப்பதன் மூலம், தன்னை வளர் த்துக் கொண்ட ஒரு சமயத்தின் பிரதிநிதியாக அவரும் இருந்தார். அத னால் கடவுள் மறுப்பென்பது கொஞ்சம் பாரதூரமான விடயமாக அவ ருக்குப் பட்டிருக்கலாம்.

கடவுளின் அவதாரமாகத் தன்னை அவர் வரித்துக் கொண்டாரோ என்னவோ பாடசாலையில் அவரது அதிகாரம் தூள் பரத்தியது. அதிபர் என்பவர் கடுமையானவராக இருப்பதில் தவறில்லைத்தான். ஆனால் அவரதோ எதேச்சாதிகாரமானதாக இருந்தது. ஒரு சர்வாதிகாரி போல அவர் நடந்துகொண்டார்.

கடந்தகாலங்களில் நிலச் சொந்தக்காரர்களான வெள்ளாளர்கள் தமது அடிமை குடிமைகளை நடாத்தியதுபோல தமது அதிகார பின் புலத்தில் ஆசிரியர்களை அடிமைகள்போல இருத்தி எழுப்புவதில் அவர் இன்பம் கண்டார். தமக்குள் முணுமுணுத்துக்கொண்டாலும் எதிர்ப்பேச் சுப்பேசாமல் அனைவருமே கட்டுப்பாட்டோடு அடங்கி நடந்து, நல்ல பிள்ளைப் பெயரெடுத்து, தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள நாட கமாடுவதைக் கண்டபோது பாரதியின் 'நடிப்புச் சுதேசிகள்' தாம் ஞாப கத்துக்கு வந்தார்கள்.

அநியாயத்துக்கோ அதிகாரத்துக்கோ பணிந்துபோய்ப் பழக்கப் படாதவன் நான். 'ஏனைய பாளையக் காரரெல்லாம் பணிந்துபோகி றார்கள்; பயனடைகிறார்கள்', எனப் பானர்மென் கட்டபொம்மனிடம் சொன்னதுபோல, 'ஏனைய வெள்ளாள வாத்திப் பயல்கள் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகட்டி வாய் புதைத்துச் சேவகம் செய்கிறார்கள்; நீ மட்டும் என்ன கொம்பனோ?' என்று கேட்காத குறையாக அதிபர் அமலனுக்கு நான் ஒரு சவாலாக மாறிப்போனேன். மற்றவர்களைப்போல் என்னையும் பணியவைத்துவிட வேண்டுமென அவர் பிரம்மப் பிரயத்தனப் பட்டார்.

காலுக்குப் பொருந்தாத செருப்பென்றால் அதைக் கழற்றி எறிந்துவிட்டுப் புதுச் செருப்பு வாங்கவேண்டியதுதானே? அப்படியாகத் தன்னோடு ஒத்துப்போகாத என்னை எங்காவது மாற்றித் தொலைத்துத் தலை முழுகிவிட அவருக்கு மனமில்லை. கூட வைத்திருந்து பாடம் படிப் பிக்க வேண்டும் என்ற அங்கலாய்ப்பு அவருக்கு.

எனது கற்பித்தலில் குறை கண்டுபிடிக்க முடியாத அவர் வேறு விதங்களில் முட்டுக்கட்டை போட்டு என்னை மடக்கலாம் என்று பார்த் தார். குறுக்கு வழியில் சில சில்லறைத்தனமான காரியங்கள் செய்து மறைமுகமாக என்னை மிரட்டிப் பார்த்தார். சாதியை ஆயுதமாக எடுத் துக்கொண்டு எனக்கெதிரான நிழல் யுத்தம் ஒன்றை ஆரம்பித்தார்.

ஒரு நாள் பாடசாலை வேளையில் பழைய மாணவர்கள் சிலர் என்னைத் தேடி வந்திருப்பதாகச் சொல்லி அனுப்பினார். சரி போய்ச் சந்திப்போம் என்று போனால் அடியாட்கள் போன்ற தோற்றம் கொண்ட ஐந்தாறு பேர் நின்று கொண்டிருந்தார்கள். 'விஷயம் பிழை' எனப் பார் த்த மாத்திரத்தில் தெரிந்துகொண்டுவிட்டேன். 'பாட நேரம். கதைக்க நேரமில்லை' எனக் கூறி அவர்களைத் தவிர்த்துவிட்டேன் . பாடசாலை நேரமாகையால் அவர்களாலும் எதுவும் செய்யமுடிய வில்லை.

'வந்தவர்களின் கைங்கரியதால் நான் மண்டையுடைந்து தொண்டை வறண்டு மூன்று மாதங்கள் பெரியாசுப்பத்திரியில் மூச் சைப் பிடித்துக்கொண்டு கிடக்க நேரிட்டது' - என நான் கொஞ்சம் கற் பனை கலந்து, வன்முறை தடவி எழுதிக் கதைக்குச் சுவை சேர்த்திருக் கலாம். அதனால் அனுதாப அலையும் என்பால் பரவியிருக்கக் கூடும். ஆனால் அவ்வாறு ஏதும் நடக்கவில்லை. வந்தவர்கள் பேசத் திராணியற் றவர் களாகவோ, அல்லது 'பூப்பறிக்கக் கோடரி எதற்கு?' எனும் சாத்வீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மை கொண்டவர்களாகவோ இருந்திருக்கலாம். 'சும்மா ஒரு வெருட்டல் காணும்' என அதிபரும் நினைத்திருக்கலாம். ஏனோ தெரிய வில்லை. வம்பு வாதம் ஏதும் செய்யாமல் தங்கள் பாட்டில் அவர்கள் திரும்பிப்போய் விட்டார்கள்

அடுத்த சில நாட்களின் பின் பாடசாலை முகவரிக்கு எனக்கு ஒரு கடிதம் வந்தது. அது ஒரு மொட்டைக் கடிதம். 'எமது சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக, எமது சமூகத்தைச் சேர்ந்த திறமையான ஓர் அதி பரை எமது நீண்ட காலப்போராட்டத்தின் பின் நாம் பெற்றுள்ளோம். அத்தகைய ஒரு அதிபருக்கு ஒத்துழையாமல், எமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்குக் குந்தகமாக இருந்தவரும் உம்மைப் போன்ற 'சாதித் தடிப்புள்ள' ஆசிரியர்களுக்கு நாம் தக்க பாடம் படிப்பிப்போம். எமது எச்சரிக்கையை மனதிற்கொண்டு உன்னைத் திருத்திக்கொள். அல்லாவிடின் ஏற்படப்போகும் பின் விளைவுகளுக்கு முகங்கொடுக்கத் தயாராகிக்கொள்!' என்பது போன்ற தொனியிலான எச்சரிக்கைக் கடித மது.

மாணவர்களிடத்திலோ ஏனைய ஆசிரியர்களிடத்திலோ அதிபரி டத்திலோ எனது சாதியை முன்னிலைப்படுத்தி நான் பேசியதோ நடந்து கொண்டதோ கிடையாது. சமூகத்தில் புரையோடி போய்விட்ட வெறுக் கத்தக்க அம்சமான இச்சாதியை மனத்தாலோ செயலாலோ நெருங்க விடாமல் அருவருத்து ஒதுக்கிவரும் என்னிடம் சாதி உணர்வைத் தூண்டிவிட வேண்டுமெனக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்பவர்கள் யார்? தமது ஆதாயத்துக்காகச் சாதியை விட்டுவிடாமல் கட்டிப் பிடித் துக் கொண்டிருப்பவர்கள் யார்?

முதலாளிகளுக்கு எதிராகத் தொழிலாளத் தோழர்கள் ஒன்று திரண்டு கெம்பி எழுவதை வர்க்கப் புரட்சியாக வரிந்து வரிந்து எழுதித் தள்ளும் எமது முற்போக்கு எழுத்தாளக் குஞ்சுகளின் கண்களில் என் னைப் போன்ற அப்பாவித் தொழிலாளிகளின் கதைகள் தட்டுப்படவில் லையா? நானும் கூட அரச அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய ஒரு சாமான் யத் தொழிலாளிதான்.

ஆனால் முரண் நகையான விடயம் என்னவென்றால், எனக்கு வாய்த்த முதலாளியோ தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர். அதன் பலத்தால், அது தந்த அனுசரணையால், உந்துதலால் அதிபராக உயர் ந்தவர்.

துரதிஷ்டவசமாக எனது சக ஆசிரியத் தொழிலாளர்கள் எனக்குப் பக்கபலமாக நின்று எனக்கு ஆதரவாகத் தோள் கொடுக்கவில்லை. அத னால் நான் தனித்துப் போராட நேரிட்டது. எனது போராட்டம் கவனயீர்ப்புப் பெறவில்லை. அது வெற்றியோ தோல்வியோ சாதி பற்றிய எனது பார்வை ஒரு புதுக்கோணத்தில் இப்போ திசை மாறிவிட்டது!

[சில பெயர்களும் சம்பவங்களும் தவிர யாவும் கற்பனையல்ல!]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு

புது வீடு கட்டுவதில் எனக்கென்றும் தீவிரமான ஈடுபாடு இருந்த தில்லை. மழை, வெய்யில் தாக்காது நிம்மதியாக உறங்கக் கூடியதான ஓர் இடம் இருந்தால் காணும் மற்றவர்களின் பிக்கல் பிடுங்கல் இல்லா மல் இருக்க அது சொந்தமானதாக இருந்தால் உத்தமம்.

வீடு என்று சொல்லத்தக்க அமைப்புடன் எனக்கும் ஒரு இடம் கிடைத்துத்தான் இருந்தது. யாழ்ப்பாண நகரத்தில் ஒன்றரைப் பரப்புக் காணியில் ஊமையின் கள்ளுக்கொட்டிலுக்குப் போகும் ஒழுங்கைக் குள் 'தகர கேற்' வைத்து, தெருவோரமாக அடக்கமாக அமைந்திருந்த அந்த வீடு அன்னத்தை நான் சடங்கு முடித்தபோது எனக்குச் சீதனமாக அது தரப்பட்டது.

வீடு வளவென்று சீதனம் வாங்கித் திருமணம் செய்வதில் எனக்கு உடன்பாடு இருந்ததில்லை. இருக்க ஒரு வீடு எனக்குக் கட்டாயம் தேவை என்பதும் தங்கள் மகளுக்கு அவர்களாகப் பிரியத்துடன் தருவதை ஏன் நான் ஏற்கக கூடாதென்பதும் எனது ஐயா அம்மாவின் வாதம். அதிலும் சாடையான உண்மை இருந்ததால் நான் மறுக்கவில்லை. அதனால் எனக்கும் சீதனமாக ஒரு வீடு வந்து சேர்ந்தது.

பார்த்தவுடன் மண் வீடென்று யாரும் அதைச் சொல்லிவிடமாட் டார்கள். நிலைகள், கதவுகள், யன்னல்கள் என்பன வைத்துப் பத்தடி உய ரத்தில் சிக்காராகக் கட்டப்பட்ட இரு அறைகள். முன்னால் ஒரு சின்ன விறாந்தை. அதில் ஒரு புறத்தில் ஒருவர் தாராளமாகப் படுக்கக்கூடிய மாதிரியான ஒரு நீண்ட திண்ணை. மேலே தகரக்கூரை. வெள்ளையடிக் கப்பட்டுப் 'பளிச்'சென்ற தோற்றத்தில் பிழை சொல்லமுடியாத ஒரு வீடு.

அன்னத்துக்கு ஏனோ அந்த வீட்டில் திருப்தியில்லை. பணக்கார நண்பிகளின், உறவினரின் வீடுகளுடன் ஒப்பிட்டு அந்த வீடு பற்றி அவ ளுக்கொரு தாழ்வு மனப்பான்மை. மற்றவர்கள் எல்லோரும் எங்கள் வீட்டை ஒரு கொட்டிலைப்போல இகழ்ச்சியாகப் பார்ப்பதாக ஓர் எண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணம். அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. 'கொட்டில் வீட்டில இருந்துகொண்டு அவையளுக்குப் பெரிய எண்ணம்தான்' என்று சொந் தக்காரர்களே அவளின் காதுக்கு எட்டுமாப்போல குத்தல் கதைகளும் பேசியதுண்டு.

எனக்கென்றால் அவ்வீட்டைப்பற்றி எவ்விதமான பிரச்சினையும் பெரிதாக இருந்ததில்லை. கொழும்பில் வாளிக் கக்கூசுக்குப் பழக்கப் பட்டிராத ஒரே காரணத்தால் வளவின் மூலையில் இருந்த அதை மட்டும் மாற்றிக்கட்ட வேண்டுமென்று விரும்பிக் கொஞ்ச நாளில் அதையும் செயற்படுத்தி முடித்தேன்.

நாங்களும் மற்றவர்களை போலக் கல்வீடு ஒன்று கட்டி 'மதிப்பாக' இருக்க வேண்டும் என்பது அன்னத்தின் நெடுநாளையக் கனவு. அதற் காக அடிக்கடி அவள் என்னை நச்சரிப்பதுண்டு. 'கடனில்லாக் கஞ்சி கால் வயிறு காணும்' என்ற மனப்பான்மையுடன் வாத்தியார் சம்பளத் தில் வாழ்க்கை வண்டியை ஓட்டிக்கொண்டிருந்த நான் அவவின் வீட்டுக் கனவுக்கு ஊக்கம் கொடுத்துப் பேசுவதில்லை.

ஆனால் அன்னம் சிங்கப்பூர் போனதும், தையல் கொம்பனி வேலையில் கொஞ்சம் கொஞ்சமாக மிச்சம் பிடித்து ஏதோ சேமித்ததும் அவள் கனவும் நனவாகலாம் என்ற நப்பாசையை மீண்டும் அவளிடத் தில் துளிர்விடச் செய்திருந்தன.

கொழும்பில் இருந்து ஆடிக் கலவரத்தால் அடித்துத் துரத்தப்பட்டு, நஷ்டமும் மனக்கஷ்டமும் பட்டு வெறுப்புற்று – யாழ்ப்பாணத்துக்கு மாற்றல் கேட்டு வந்தபின், புதிய பாடசாலை அதிபருடன் ஒத்துக் கொள் ளாமல் கொழுவிக்கொண்டு, 'மெடிக்கல்' லீவைப் போட்டுவிட்டு வீட்டில் சும்மா குந்திக்கொண்டிருந்த ஒரு நாளில்தான் எனக்கும் அந்த யோசனை வந்தது.

இருக்கிற வீட்டை இடிக்காமல், நெல்லி மரம் நிழல் கவித்து நின்ற அந்த முற்றத்தில் சின்னதாக ஒரு வீடு – ஒரு குசினியும் அறையும் – கட்டி னால் என்ன? எனக்கும் பொழுதுபோக வேண்டியிருந்தது. அன்னத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசும் கொஞ்சம் வங்கியில் கிடந்தது. ஒரு பத்தாயிரத்தில் முடிக்கலாம் எனச் சகலன் இக்கினேசியரும் தூண்டிவிட்டார். நாள் நட்சத்திரமோ திசைகோளோ எதுவும் பாராமல் இறங்கிவிட்டேன் – வீடு கட்டும் வேலையில் நான்.

அப்போது சீமெந்துக்குப் பெரும் தட்டுப்பாடு. சங்கக் கடையில போய்க் காத்துநின்று நாலைஞ்சு பக்கற்று எண்டுதான் வாங்கலாம். மணல் பறித்து, சல்லி பறித்து, கல்லரிய மேசன்காரனையும் கூலியாளையும் தேடிப்பிடித்து - பக்கற்றுக்கு அறுபது கல்லுக்கு மேல விழுகிறதா என்று கணக்குப் பார்த்து - அத்திபாரம் வெட்ட, கல்லெடுத்துக் கொடுக்க என்று உதவிக்கு நின்று, கொஞ்சம் கொஞ்சமாகச் சுவர் எழும்புவதைப் பார்த்துப் பூரித்து, சீமெந்துக் கல் இறுகவென்று காலையிலும் மாலையிலும் தண்ணீர் ஊற்றி – அதன் பின், கூரைக்கு மரம், நிலைக்கு மரம், கதவுக்கு மரம், யன்னலுக்கு மரம் என்று தச்சனுடன் கூட அலைந்து - வண்டில் பிடித்துக் கூலி பேசிக்கொண்டு வந்து சேர்த்து – நாட் கூலி எனப் பேசி வந்த தச்சன் நாளைக் கடத்துவதற்காக வாளைத் தீட்டித் தீட்டி மினக்கெடுவதைப்பார்த்து எரிச்சல் பட்டு ஏறி விழுந்து - இப்படி எத்தனை எத்தனை அனுபவங்கள்.

எதிர்பார்த்ததை விடக் கொஞ்சம் கூடுதலாகவே காசை ஏப்பம் விட்டுவிட்டு, கடைசியில் ஒரு மாதிரியாக நல்லபடி அறையும் குசினியும் உருப்படியாகி நிமிர்ந்து நின்றன.

மாதச் சம்பளக்காரன் என்பதால் வரவு செலவுக் கணக்குகளை நான் கொஞ்சம் வடிவாகவே பார்ப்பேன். கடனைக்கிடனைப் பட்டு வீடு கட்டுவதில் எனக்கு உடன்பாடில்லை. எதிர்பார்த்தது போல் - அல்லது வீட்டைக் கட்டி நட்டப்பட்டுப் போன சிலர் பயமுறுத்தியது போல- நான் கட்டிய வீடு என் கையைக் கடிக்கவில்லை.குசினிக் கூரைக்கு, கிடந்த தகரத்தைப் போட்டதுதான் அன்னத்துக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூரைத் தகரம் வேயும் வேலையில் கூலிக்கு நின்ற அப்பாவிப் பெடியன் கிரேஷியன் - 'வெய்யில் சுட்டால்தான் நல்லா வேலை செய்ய லாம்' என்று வெள்ளந்தியாகச் சொல்லி வெய்யிலில் காய்ந்து கறுத்துப் போன அந்தப் பெடியன் – பிறகொரு நாள் இயக்கத்தினரால் அநியாய மாகச் சூடுபட்டுச் செத்துப்போன அவலத்தை இன்று வரை மறக்க முடி வதில்லை.

பிறகு கொஞ்ச நாள் செல்ல, முன் பக்கத்தை இடித்து அறைகளும் ஹோலுமாகக் கட்டி முடிக்க வேண்டுமெனும் ஆசை பிறந்து விட்டது. அந்தப் பழைய மண் வீட்டை இடிக்கப்பட்ட பாடு! அலவாங்கு இடிக ளைத் தாங்கிக்கொண்டு கொஞ்சமும் அசைந்து கொடுக்காமல் பழை மையின் பிடிவாதத்துடன் இறுக்கமாக அது நிமிர்ந்து நின்ற நிலைதான் என்ன! ஒரு நாள் மாரி காலத்து அடைமழை விடாது பெய்து, கூரையில் லாத அந்த நெடுஞ் சுவர் அறைகளில்'குளம் கட்ட' நட்ட நடு இரவில் 'தடால்'என அது பாறி விழுந்து அண்டை அயல் சனங்களையும் திடுக் காட்டம் அடையவைத்துத் தனது சரித்திரத்தை முடித்துக்கொண்டது.

"அத்தார், இண்டைக்கு நானிதை விழுத்திக்காட்டுறன்" என ஒவ் வொரு நாளும் அலவாங்கும் கையுமாக மூசி மூசி அதனுடன் மல்லுக் கட்டின ஜோயை பிறகொரு நாளில் ஏதோ ஒரு இயக்கத்தினர் பிடித்துக் கொண்டு போய் அடியடி என்று அடித்து - ஒரு மாதத்தின் பின், ஜோய் வீட்டுக்காரர் ஆரையோ பிடித்து கெஞ்சிக்கூத்தாடி அவனை வெளியே எடுப்பித்ததும், இந்தப் 'பிள்ளை, பிரச்சினைகளில் இருந்து தப்புவதற் காக அவனைப் பிடித்து வெளிநாடு அனுப்ப, நிலவுக்கு ஒளித்துப் பர தேசம்போன கதையாக, சுவிஸ்ஸுக்குப்போன அவன் அங்கு நீரில் மூழ்கியோ மூழ்கடிக்கப்பட்டோ மூச்சுவிட மறந்ததும் நெஞ்சில் நீங் காது உறைந்துவிட்ட துயரச் சுவடுகள்.

கஷ்ட்டப்பட்டுக் கட்டிய வீட்டில் மகள் கவிதாவின் சாமத்தியச் சடங்கை யும் – 'வீடியோ'க்காரனைக் கலைத்துப் பிடித்து எடுப்பித்துச் - சிறப்பாகச் செய்து முடித்து, **Second Hand** ஆக வாங்கிய மோட்டச் சைக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளில் ஒரு கொஞ்சக் காலம் 'லைசென்சும்' இல்லாமல் சிட்டுக் குருவிக ளைப் போல பறந்து திரிந்து சந்தோஷப்பட்டு, அதனால் ஊராரின் கண் பட்டோ அல்லது பாழாய்ப்போன விதியின் விளையாட்டோ சில கால மாக மின்னி முழங்கிக் கொண்டிருந்த போர் மேகம் தடாலடியாக எங்க ளூரில் தரையிறங்கியது.

ஷெல்லடிகளும் பொம்பர் குண்டு வீச்சுகளும் எங்களைச் சின்னா பின்னமாகச் சிதறி ஓடவைத்தன. எங்களின் வசந்தகாலக் கனவுகளைக் கருவிலேயே கருகச்செய்துவிட்ட போர் அரக்கனின் பிடிக்குள் எம்மைத் தள்ளிவிட்ட விதியை நோவதா அல்லது அதற்கு காரணரான வேறெவ ரையும் நோவதா?

'இந்தியன் ஆமி' ஊரில் உள்ளிட்டபோது எங்கள் வீடுகளைப் பார்த்து மூக்கின் மேல் விரலை வைத்து வியந்தார்கள். 'இப்படியெல் லாம் வசதியாகச் சொந்த வீடுகள் வைத்துக் கொண்டிருக்கும் இவர்கள் எல்லாம் ஏன் சண்டைபிடிக்க இறங்கினார்கள்? இவர்களுக்கு என்ன குறை?' என்று உண்மையாகவே அவர்களுக்குப் புரியவில்லை. 'குறை யொன்றும் இல்லாததுதான் எங்கள் குறை' என்பது அவர்களுக்கு மட்டு மல்ல எங்களில் பலருக்கும் விளங்காத உண்மை. ஏன் எதைத் தேடி ஓடுகிறோம் என்பது இன்று வரை எமக்குத் தெரியவில்லை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கரிலும் அகதி முகாமிலும் என அங்குமிங்குமாக அல்லாடித் தள்ளாடி சகடக்கால் போல சுழன்று கொண்டிருந்த எங்களின் வாழ்க் கைச் சக்கரம் அதல பாதாளத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்க, பொம் பர் வீச்சில் நாம் பார்த்துப்பார்த்துக் கட்டிய எமது கனவு மாளிகை சரிந்து தரைமட்டமாகிவிட இருந்த ஒரு வீடும் இல்லாமல் போய் ஏதிலிக ளாக நாம் நடுத்தெருவுக்கு வந்துவிட்டோம். நானும் 'காதற்ற ஊசியும் வாராது காண் உன் கடை வழிக்கே' எனும் ஞானம் வரப்பெற்றுவிட்டேன்.

-----------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தலும் மணமகன் தேவையும்






**சா**வுகள்! எத்தனை வகையான சாவுகள்? மனிதர் எப்படி எப்படி யெல்லாம் சாகிறார்கள்! முன்பெல்லாம் சாவென்றவுடன் ஞாபகம் வருவன விபத்துகள்தாம். வீதியில் கார் விபத்தில் ஒருவர் அகப்பட்டுச் செத்துப்போனால் ஐயோ பாவமென்றிருக்கும்.

யாராவது யாரையாவது கொலை செய்துவிட்டதாகக் கேள்விப் பட்டால், மனதில் 'திக்'கென்றிருக்கும். 'இப்படியும் மனிதர்கள் இருப் பார்களா?' என்று மனம் அதிரும். லட்சுமிகாந்தன் என்பவனின் கொலை பற்றித்தான் நான் முதலில் கேள்விப்பட்டது. அதுவும் கொஞ்சம் அரசல் புரசலாக. எனது பெரியப்பா யாருடனோ கதைத்துக்கொண்டிருந்த போது காதில் விழுந்தது. அவருக்கு பாகவதருடன் அறிமுகம் இருந்தது. அப்போ எனக்கு பாகவதரையும் தெரியாது சின்னப்பாவையும் தெரியாது.

கோகிலாம்பாள் என்றொரு பிராமணக் குருக்களின் மனைவி கொலை செய்யப்பட்ட வழக்கு பரபரப்பாகப் பத்திரிகைகளில் வந்த போது, 'அட, நம்நாட்டில் அதுவும் எங்கள் யாழ்ப்பாணத்தில் அதுவும் ஒரு அய்யர் குடும்பத்தில் இப்படியும் நடக்குமா? எங்கள் தமிழ் ஆட்களுமா இப்படி?' எனத் திடுக்காட்டம் அடைந்த காலமும் ஒன்று.

அந்தக்காலத்தில் திரைப்படங்களிலோ கதைகளிலோ கூட கொலையையோ சாவையோ விஸ்தாரமாக விளக்கமாகக் காண்பித்த தாகவோ எழுதியதாகவோ ஞாபகமில்லை. அப்படி ஏதும் இருக்குமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் அது 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்று முத்திரை குத்தப்பட்டு வந்திருக்கலாம். 'மர்மயோகி' என்ற எம்ஜியார் நடித்த திரைப்படத்தில் ஆவி ரூபத்தில் ஒரு பாத்திரம் வந்துலாவியதால் சிறுவர்கள் பார்க்க உகந்ததல்ல என **A** சேட்டி பிக்கேற் கொடுத்த காலம்.

மேதாவியும் சிரஞ்சீவியும் தமிழ்வாணனும் அந்நாளைய மர்மக் கதை மன்னர்கள். பதின்ம வயதுகளின் துவக்கத்தில் அவர்கள் எழுதிய நாவல்களை கள்ளமா ஒளிச்சுவச்சு வாசிச்ச அனுபவத்தில கொலை காரர்களோடயும் கொலைகளோடயும் கொஞ்சம் பரிச்சயம் கொள்ள முடிஞ்சுது.

அப்பிடித்தான் மீசை அரும்பத் துவங்கின காலத்தில **A** சேட்டிபிக் கற் படமொண்டு பாக்கப்போனன். அதுவும் கள்ளமாத்தான். அது ஹிட்ச் கொக்கின்ர 'சைக்கோ'. தனியப் போகப்பயந்து துணைக்கு இன்னொரு கூட்டாளியையும் சேர்த்துக்கொண்டு போய்ப் பார்த்தது. 'திக்திக்' எண்ட நெஞ்சிடியோட (வீட்டுக்குப் போனாப்பிறகு பிடிபட்டிடுவமோ எண்ட பயம் ஒரு பக்கம்) விறுமசத்தி பிடிச்சவனாட்டம் குந்தி இருந்துபோட்டு கீழால சலம் போனதுகூடத் தெரியாமல் (அது நானில்லை-மற்றவர்) ஒரு மாதிரி வீடு வந்துசேர்ந்தது அது பெரிய கதை.

வீட்டில நாயைப் பூனையை ஆட்டை மாட்டை எவ்வளவு அன்பா வளக்கிறம். அதுகளுக்கு ஒண்டெண்டால்கூட எவ்வளவு துடிக்கிறம். தற் சேலா அதுகள் செத்துப்போனால் அவ்வளவுதான். வீடே செத்தவீடா மாறீடும். எங்கிட வீட்டு 'ஜிம்மி' (அதை நாய் எண்டாரும் சொல்லக் கூடாது; சொன்னால் கொலைவிழும்!) காறில அடிபட்டுச் செத்துப் போச் சுது. கார்க்காரனை எனக்குத்தெரிஞ்ச கெட்டவார்த்தையளை எல்லாம் சேர்த்து மனசுக்குள்ள திட்டினதும் சாப்பிடக்கூட மனமில்லாமல் அழுது கொண்டு திரிஞ்சதும் எல்லாமே இப்ப நடந்த மாத்திரித்தான் கிடக்கு. அதுக்குள்ள காலம் எவ்வளவோ மாறீட்டுது. நாங்களும் மாறிப்போனம்.

ஆர் செத்தால் என்ன? ஆர் எக்கேடு கெட்டால் என்ன? நாங்கள் எங் கிடபாடு. நாங்கள் நல்லாயிருந்தால் காணும். மற்றவைக்காக குத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறிஞ்சு பட்டது காணும். எல்லாரும் ஞானிகள் ஆயிட்டம். அடுத்தவனுக்காக இப்பன் எண்டாலும் மனம் இரங்காத, இதயம் துடிக்காத அரக்கர்களா நாங்கள் எப்ப மாறினம்? ஒரு துளிக் கண்ணீருக்கும் கணக்குப் பாக்கும் பிசினாறியளா எப்பிடியானம்? கருணை, காருண்யம் எண்ட சொல்லுகளை எல்லாம் எங்கிட அகராதியில இருந்து எப்ப துடைச்சழிச்சம்? சுயநலம் எங்கிட ரத்தத்திலேயே ஊறிக் கலந்திட்டுதா? அல்லது மன ஓட்டத்தைச் **channe**l மாத்த **remote** ஏதும் கண்டுபிடிச்சிட்டமா? ஒண்டுமா விளங்கேல்லை.

என்னைப் பொறுத்தமட்டில செத்தவீட்டுக்குப்போக நான் விரும்பிறதில்லை. (இப்ப ஆரும் செத்தாலும் முக நூலில **like** குடுக்கினம்- புண்ணியவான் போய்ச்சேர்ந்திட்டான் எண்டு விரும்புகினமோ!) இறப்பின் பின்னரான ஒருவனின் தோற்றம் ஒன்றும் நினைவுகூரப்பட வேண்டியதல்ல சாவீடொன்றும் சந்தோஷமான இடமுமல்ல. (என்ன இருந்தாப்போல தத்துவ மழையாப்பொழியிறன் எண்டு பாக்கிறியளே? மயானத்திலையும் மப்பிலயும் தத்துவம் தானா வரும் பாருங்கோ!)

தண்ணியடிச்சு காட்ஸ் அடிச்சுக் கதை பேசி, செத்த வீட்டையும் சந்தோசமான இடமா மாத்திறவையும் இருக்கினம்தான். அதிலையும் பிழையில்லை. நடிப்புச்சுதேசியளா இருக்கிறவையளை விட இவயள் பிழையில்லை. அழுமூஞ்சியளிட முகத்தில ஆதரவை/காதலைத் தேடிற இள வட்டங்களுக்கும் இதமளிக்கிற இடமாயும் செத்தவீடு இருக்கலாம்.

சாவையும் சாதாரணமா ஏற்றுக்கொள்ள ஒரு பக்குவம் வேணும். அந்தப்பக்குவம் எங்களுக்கு இப்ப வந்திட்டுது போலத்தான் கிடக்கு. சாவு மலிஞ்ச பிரதேசமா எங்கிட பகுதி மாறிக் கனகாலமாயிட்டுது. ஒவ்வொரு வீட்டுக் கதவையும் யமன் வந்து தட்டிப்பாத்திட்டான். சாவைக் கண்டு கிறுங்காத ஆக்களா - மனம் மரத்து இறுகிப்போன ஆக்களா - நாங்கள் மாறிப்போனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவை விலை குடுத்து வலிய வரவழைச்ச ஆக்கள் நாங்கள். மாமன் செத்தால் என்ன மச்சான் செத்தால் என்ன எங்கிட வீட்டுக் கதவை இறுக்கி மூடி வச்சிருந்தால் காணும் எங்களுக்கு.

சந்திரமதிக்காகவும் சாவித்திரிக்காகவும் மாலை மாலையாகக் கண்ணீர் சிந்தின நாங்கள் 'சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காத 'கல்நெஞ்சர்களா மாறிப்போனது காலக் கொடுமையாலா அல்லது கொழுப்பு முட்டிப் போனதாலா?

அடிப்படையில நாங்கள் எல்லாம் பயந்த பீச்சியள். எங்கிட வீர மெல்லாம் மனிசிமாரிட்டையும் வேலிக்கதிகாலிலையும்தான். எங்கிட பயத்தை மறைச்சு வீரவான்களா வெளீல காட்டிக் கொள்றதில நாங்கள் ஆளையாள் வெண்டனாங்கள்.

எம்ஜீயார் படங்களைப் பாத்துக் கைதட்டின விசிலடிச்சான் குஞ் சுகளான எங்கிட வீரத்துக்கு வடிகாலாக எம்ஜீயாரின்ர பிம்பத்தைப் போல ஒரு அசல் ஆள் தேவைப்பட்டுது. எம்ஜீயாரின்ர ஆசியோட அவர் குடுத்த ஆறு கோடி(?) அன்பளிப்போட தம்பியவை விளையாட்டைத் துவக்கிச்சினம். (நானும் எம்ஜீயாரின்ர அலிபாபாவப் பாத்திட்டு தம்பி யோட - இது சொந்தத் தம்பி – வாள்ச் சண்டை போட்டிருக்கிறன். வாளுக்குப் பதிலா, தும்புத் தடி. கூரையில தொங்கின பல்ப்புகளைப் உடைச்சுப் பறத்தி, புறத்தீல பிரம்பால ஐயாவிட்ட அடிவாங்கின தோட சரி - ஆட்டம் குளோஸ்! )

தம்பியவையிட காலம் வாள் போய்த் துவக்கு வந்த ஜேம்ஸ் பொண்ட் காலம். துவக்குச் சண்டைபோட அவயள் விரும்பிச்சினம். அதுக்கு ஒரு சாட்டுத் தேவைப்பட்டுது. தமிழைப் பிடிச்சுக் கொண்டிச் சினம். விளையாட்டுப் பிள்ளையள். ஏதோ விளையாடிப் பாக்கட்டும் எண்டு நாங்களும் பேசாமல் இருந்திட்டம். தட்டிக்கேட்க ஆக்கள் இல்லா ததால தம்பிமார் சண்டப்பிரசண்டரா மாறிப் போச்சினம். அவையள் துவக்கத் தூக்கிச்சினம். தியேட்டர் இருட்டுக்கை இருந்து கை தட்டிற வையைப் போல நாங்களும் கையைத் தட்டினம். (நாங்கள் எப்பவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டுக்கை தானே?) இது ஒண்டும் மூண்டு மணியில முடியிற சிறு கதையில்லை முப்பது வருசத்துக்கு மேல நீளப்போற தொடர்கதை எண்டு அப்ப தெரியாது.

சேர சோழ பாண்டியரின்ர வாரிசா மாறப்போறம் எண்டிச்சினம். 'கரிகாலனாயோ கட்டபொம்மனாயோ? எந்த நாயாவோ மாறித் துலை யட்டும் ; மேல விழுந்து பிடுங்காமல் போனால் சரி'. நாங்கள் ஆண்ட பரம்பரை எண்டிச்சினம் - 'அதுக்கென்ன?' மீண்டும் ஒரு முறை ஆள நினைச்சினம். 'சோக்கெல்லோ'. அதிலை என்ன பிழை எண்டிச்சினம். 'அது தானே?' சிறு பிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது எண்டு தெரிஞ்சும் நாங்கள் வாயை மூடிக்கொண்டிருந்திட்டம். அதுதான் நாங் கள் செய்த பெரும் பிழை. அப்பிடியும் சொல்லேலாது. வாயைக் குடுத் தவை நிரந்தரமா வாயை மூட வேண்டிவந்த கதை தெரிஞ்சதால நாங் கள் வாயைத் திறக்கேல்லை எண்டதுதான் உண்மை. எப்பவும் பார்வை யாளரா இருந்துதான் எங்களுக்குப் பழக்கம். பங்காளியளா ஆகுங்கோ எண்டு எங்களையும் உள்ள இழுத்து விடுவினம் எண்டு கனவிலையும் நாங்கள் நினைச்சிருக்கேல்லை. ஆழமறியாமல் காலை விட்டிட்டம். 'அகலக்கால் வையாதே' எண்டு சொல்லியிருக்கினம். வச்சிட்டம். வச்ச காலை எடுக்க ஏலுதில்லை. **What to do?** அனுபவிக்கிறம்.

சாவில துவங்கி, பெடியளப்போல நானும் உங்களைச் சண்டை க்க இழுத்து விட்டிட்டன். **Sorry.** அங்கயே வாறன். நல்ல சாவு அவலச் சாவு எண்டு சாவிலை ரெண்டு வகை சொல்லுவினம். வயசு போனாப் பிறகு கிடந்து உத்தரிக்காமல் செத்திட்டால் அது நல்ல சாவு. உது எப்ப மண் டையப் போடும் எண்டு மற்றவையள - உற்றார் உறவினரை ஏங்க வச்சு, இழுத்துப் பறிச்சுக் கொண்டு கிடந்து சீவன்போனால் அது ரெண்டாவது.

மாத்தேலாத நோய் நொடியெண்டு வந்து அஞ்சிலையோ அம்பதி லையோ 'பொட்'டெண்டு போனால் தாங்கிறது கொஞ்சம் கஷ்டம்தான் ஆனாலும் விதியில பழியைப் போட்டிட்டு ஒரு மாதிரித் தேற்றிக் கொள் ளலாம். ஆனால் எத்தனை அருமையான இளந்தாரிப் பெடியள், உவங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட மாய்மாலப் பேச்சில மயங்கி, எந்த ஒரு சுய நலமும் இல்லாமல், ஏதோ ஒரு இலட்சிய ஈர்ப்பில எடுபட்டுப்போய், இப்ப ஒண்டடி மண்ட டியாச் செத்துப் போனாங்களே! இருந்திருந்தால் நல்ல ஒரு அப்பாவா - வழி காட்டிற ஆசிரியனா- புதிய பாதை காட்டிற எழுத்தாளனா மாறி என்ன மாதிரி ஒரு இளைய சமுதாயத்தை உருவாக்கியிருப்பான்கள். எல்லாம் நாசமாப் போச்சுது.

இதையெல்லாம் நினைச்சு கவலைப்பட்டு என்னத்தை? நினையா மல் இருக்கிறதுதான் நல்லது. 'ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ?' எண்டு போட்டுப் பேசாமல் இருக்கிறதுதான் புத்தி. ஆனால் அப்பிடி இருக்க இந்த TV க்காறார் விடாயினமாம். பழசு களை எல்லாம் போட்டுக்காட்டி, 'அழுங்கோ அழுங்கோ' எண்டு எங் களை அழ வைக்க நிக்கினம். அது அவயளின்ர புத்தி. நாங்கள் அழு தால் அவயளுக்கு காசு!

மான ரோஷமுள்ள ஒரு மறத் தமிழனை இனித் தேடிப்பிடிக்கே லுமே? ஏன் தேடிப்பிடிப்பான்? அடுத்த சண்டைக்கு ஆயத்தப்படுத்தவே? கலை கலை எண்டு கலைச்சுப்பிடிச்சு 'கொலை கொலையா முந்தி ரிக்கா.' விளையாட்டு விளையாடினதெல்லாம் காணாதே? எனக்கு அறளை பேந்திட்டுதாம் எண்டு மனிசி சொல்லுவா. நீங்களே சொல் லுங்கோ- நான் சொன்னதுகளில ஏதும் இருக்கோ? எங்கள் தரவளி ஆக் களை நீங்கள் சுண்டிப்பாத்தாலும் இப்ப தேடிப்பிடிக்கேலாது எண்டா லும் தெண்டிச்சுப் பாருங்கோ. எங்கயெண்டாலும் அம்பிடும். கடை சியா இப்பத்தான் நான் ஒரு மாதிரி விசயத்துக்கு வந்திருக்கிறன். சுப் பற்ற கொல்லேக்க சுத்திச் சுத்தி வருமாப்போலதான் என்ர கதையும். எதையும் ஆலாபரணம் பண்ணாமல் சொல்லத் தெரியாதாம்.

வீட்டைக் கட்டிப்பார்; கல்யாணத்தைப் பண்ணிப்பார் எண்டு தெரியாமலே சொன்னவங்கள். அது விளங்காமல் அநியாயத்துக்கு நானும் ஒரு வீட்டைக் கட்டிப் பார்த்ததுதான். இந்திய ஆமி ஊருக்க உள் ளிட்ட புதுசில 'ஆ! இவ்வளவு வடிவான வீடுகளோ! வாசல்களோ! சொந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமோ? 'ஷோக்கெல்லோ!' எண்டு வாயூறிக் கண்ணைப்போட்டுவிட் டான். அவ்வளவுதான் எல்லாம் சரி.

கெட்டபோலால நாங்கள் 'லக்கு'ப் பாத்து மாங்கா விழுத்துமாப் போல மேல இருந்து 'பொம்பர்'காரனும் 'புக்காரா'காரனும் குண்டெ றிஞ்சு விளையாடக் குடுத்துவச்சது எங்கிட வீடுகள்தான். சும்மா சொல் லக்கூடாது, வழிச்சுத் துடைக்கிறதில வடக்கத்தியான் விண்ணன்தான்.

நாள் பாத்து நட்சத்திரம் பாத்து, கோள் பாத்து 'லோனுக்கு' ஆள் பாத்து, நிலம் பாத்து நிலத்து அடி நீர் பாத்து, நில அளவைச் 'சேர்' பாத்து அவர் போட்ட படம் பாத்து, வாகான இடம் பாத்து - அதக்குள்ள வாஸ்து சாஸ்திரமும் பாத்து, கல் பாத்து மணல் பாத்து (தட்டுப்பாட்டினால) காணாத சீமேந்து பாத்து, மேசனோட கூலியையும் முன்னூறு நாள் போய்ப்பாத்து பாத்து, கூலி விடுற விளையாட்டைக் கூடவே தினம் பாத்து - அவனைப் பாத்து இவனைப் பாத்து, இப்பிடி ஆராரை எல் லாமோ பாத்துப்பாத்துக் கண் பூத்து, கடைசியில கண் இடாக்குத்தரை யும் போய்ப் பார்த்துக் கட்டின வீட்டை- கண்டறியாத ஒரு கண்ணவிஞ்ச கபோதிப் பயல் மேல இருந்து 'லக்கு'ப் பாத்து இடிச்சுக் கொட்டினாப் பிறகு இனிக் கதைக்க ஒண்டுமில்லை; எனக்கிருக்க வீடுமில்லை. அது முடிஞ்ச கதையோட முன்கதைச் சுருக்கம்.

இப்ப நான் கலியாணத்தைக் கட்டிப்பாக்க வெளிக்கிட்டிருக் கிறன். எனக்கில்லை. என்ர மகளுக்குத்தான். அவவப் பற்றிச் சொல்ற தெண்டால், இங்கதான் பிள்ளை பிறந்து வளர்ந்தாலும் தமிழ்ப் பண் பாட்டிலதான் நாங்கள் வளத்திருக்கிறம். எங்கிட பண்பாட்டை பழக்க வழக்கங்களச் சொல்லிக் குடுத்திருக்கிறம். பரத நாட்டியமும் சரிகம எண்டு எங்கிட சங்கீதமும் கொஞ்சம் படிச்சிருக்கிறா. தமிழ் எழுத வாசிக்கத் தெரியாட்டிலும் விளங்கும். டிவில சில நேரங்களில தமிழ்ப் படமும் பாப்பா; சிரிப்பா. பாப்பா எதுக்குச் சிரிக்கிறா எண்டு சத்தி யமா எங்களுக்குத் தெரியாது. எண்டாலும் நாங்களும் சேர்ந்து சிரிப்பம். (சிரிப்பாச் சிரிக்கிற மாதிரித்தானே எங்கிடபாடு எப்பவும் இருக்குது.) IT



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பனி ஒண்டில வேலை பாக்கிறா. வேலை; வேலை முடிஞ்சால் வீடு. வெள்ளிக்கிழமையளில கோயில். இதுதான் அவவின்ர **Routine.**

இந்த ஊர்ச் சாப்பாட்டால ஊட்டம் கொஞ்சம் கூடி ஆள் கொஞ்சம் தொக்கையாப் போனா. தொக்கை எண்டால் பெரிய தொக்கை இல்லை. நமீதாவை விட ஒரு நாலிஞ்சு குறையத்தான் இருப்பா. (நமீதாவை நான் முதலில கண்ட நேரம் – நேரில இல்லை படத்தில தான்-பிள்ளைக்கு நமிதா எண்டு பேர் வைக்காமல் போய்ட்டமே எண்டு சாடையாக் கவலைப்பட்டனான். நாங்கள் கொஞ்சம் முந்தீட்டம். இப்ப நல்ல வேளையா அப்பிடி வைக்கேல்லை எண்டு ஒரு ஆறுதல்)


கொழுப்பைக் குறைக்கவெண்டு ஓடிற மெஷின் ஒண்டும் வாங்கிக் குடுத்துக் கிடக்கு. பிள்ளை அதில வடிவாத்தான் ஓடுது. எண்டாலும் ஒரு சின்னப் பயம். ஓட்டம் பிடிபட்டு நாளைக்கு ஆரும் வெள்ளை சள்ளையோட ஓடிப்போயிடுவாளோ, கறுப்பனோட கூடிக்கொண்டு பறிஞ்சிடுவாளோ, ( நாங்கள் கறுப்பில்லை – மாநிறம் கண்டியளோ!) ஊர் பேர் தெரியாத உதவாக்கரை ஆரோடையும் எடுபட்டுப் போயிடுவாளோ எண்ட பயம்தான். எங்கிட பிள்ளை அப்பிடிச் செய்யமாட்டாள். தெரியும்; நம்பிக்கை இருக்குது. ஆனாலும் வருமுன் காக்கிறது எதுக்கும் நல்லது தானே. காக்கமல் விட்டதால கண்ட பலன் உலகத்துக்கே தெரியும்.

அவளுக்குத்தான் இப்ப ஒரு நல்ல மாப்பிளையாத் தேடுறன். பெடியன், நல்ல குணமுள்ள, இயக்கங்களோட சங்காத்தம் இல்லாத ஆளா, எந்தவிதமான கெட்ட பழக்கமும் இல்லாத, தாய் தேப்பனுக்கு அடங்கின பிள்ளையா இருக்கவேணும். படிப்பை பற்றிக் கவலை இல்லை. இங்கிலிசில கதைச்சுப் பேசக்கூடியவரா இருந்தா நல்லம். இல்லாட்டிலும் பறவாயில்லை. பிள்ளை பேசிறதை விளங்கிக் கொண்டால் காணும். பாஷை தெரிஞ்சால் கனக்க நியாயம் கதைக்க வேண்டிவரும். தலையத் தலைய ஆட்டத் தெரிஞ்சால் காணும்தானே. அதுக்குப் பாஷை என்னத்துக்கு.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைக்கு சூரியாவையும் பிடிக்கும். சிவகார்த்திகேசனையும் பிடிக்குமாம். பெடியன் அவை தரவளி இருந்தால் உத்தமம். சிம்பு போல வேணாம். அவனைப் பிடிக்காது. வேற என்ன? நல்ல பெடியனாச் சந்திச் சால் சொல்லுங்கோ. ரெண்டாம் பேருக்குத் தெரியாமல் ரகசியமாக் காதோட சொல்லுங்கோ. போண் நம்பரத் தாறன். வேற ஆரும் அறிஞ் சால் கல்லுக்குத்திவிட்டுப்போட்டு நைசாக் கொத்திக் கொண்டு போயிடுவாங்கள். பேப்பர்ல '**Matrimonial** பாக்க வெளிக்கிட்டு மரண அறிவித்தல்களிலையும் மேயப்போனதால கண்டதையும் அலம்பீற்றன். **Drink** எடுத்தது காணுமெண்டு மனிசீட்ட இருந்து **order** றும் வந்திட்டுது. அப்ப மறக்காமல் தொடர்பு கொள்ளுங்கோ.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய போர்ப்பரணி -

**வரலாறுப் புனைவுச் சிறுகதை**



பொங்கும் இந்துமா ஆழி போலப் பிரபாகரனின் மனம் அலை மோதிக்கொண்டிருந்தது. அவனால் அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்திருக்க முடியவில்லை. வடமாநில ராஜ்ஜியத்தின் சர்வாதிகாரி யாகத் தனியரசோச்சிக் கொண்டிருந்தவன் இன்று ஒரு கொலைக் குற்றவாளியைப் போல் இந்த வன்னிக் காட்டுக்குள் முடங்கிப் பதுங்க வேண்டி வந்துவிட்டது.

எப்படி ஆனதிது? எங்கே தவறி விட்டோம்? அகில உலகத் தமிழி னத்தையே விழிவிரியப் பார்க்க வைத்த எனக்கா இவ்விழி நிலை? சிங் களனைக் கிடிகலங்கவைத்த நானா இப்படிக் கூனிக் குறுகிப்போய், உய்யும் வகை அறியாது செல்லும் திசை தெரியாது தடுமாறிப்போய் நிற்கிறேன்?

எனதிலட்சியப் பயணத்தில் எத்தனை எதிர்ப்புகள்? எத்தனை குத்து வெட்டுகள்? கூட இருந்தே குழி பறித்தவர்கள் எத்தனை பேர்? அவ ற்றை எல்லாம் வெற்றி கொண்டு வீரத்திருமகனாக, தமிழர்களின் தனிப்பெரும் தலைவனா கத் தலைநிமிர்ந்து தருக்கித்திருந்த எனக்கா இக்கதி?

எப்படிப்பார்த்தாலும் இனி மீள வழியில்லை. எதிரிகள் நாற்புற மும் சூழ்ந்துவிட்டார்கள். நண்பர்கள் என நம்பியவர்களில் ஓடி ஒளிந்து விட்டார்கள் சிலர்; தேடிச் சரணடைந்துவிட்டார்கள் பலர். இனி எனக் குள்ள ஒரே வழி தற்கொலை ஒன்றுதான். சே! கோழைகளைப்போல நானும் தற்கொலை செய்து கொள்வதா? மனம் ஒப்புவதாயில்லை.

தற்கொலையும்கூட வீரத்தின் பாற்பட்டதெனப் பன்னிப் பன்னிச் சொல்லி, மூளைச்சலவை செய்து எத்தனை இளம் குருத்துக்களைத் தற்கொலைக் குண்டுதாரிகளாக உருவாக்கி உருத்தெரியாமல் அவர் கள் தம் சாவைச் சந்திக்க வழி வகுத்திருப்பேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவும் தனக்கென்று வரும்போதுதான் அதன் தாற்பரியம் புரிகிறது. சாவை நெருங்கிவிட்ட வேளையில்தான் உயிரின் மதிப்பு எத்தகையது எனத் தெரியவருகிறது.

நீண்ட நெடுங்காலப் போர் என்னைத் தளரச் செய்துவிட்டது. என் மன உறுதியைக் குலைத்துவிட்டது. மாவீரனாகப் போர்முனையில் மரணிக்க வேண்டியவன் நான். எதிரியின் முன் மண்டியிடாத, தலை வணங்காத மறத்தமிழனெனச் சரித்திரத்தில் என் பெயர் பொறிக்கப் படவேண்டும். ஓடித்தப்புவதோ தேடிச் சரணடைவதோ வெற்றி வீரனுக் கழகல்ல.

மரணத்தின் தலை வாசலில் நின்று கொண்டு அந்தக் கடைசிக் கணப் பொழுதுகளில் தன கடந்த காலத்தை இரைமீட்டுப் பார்க்கிறான் பிரபா.

"இப்படியே நீ தறுதலையாக உன்னிச்சைப்படி திரிந்தாய் என்றால், உன்னைத் தட்டியடக்கத் தவறிவிட்ட தந்தை என நாளைய உலகம் என்னைத்தான் பழி கூறும் தம்பி"- பிரபாவின் தந்தை வேலுப்பிள்ளையார் கொஞ்சம் காட்டமாகத்தான் உரப்பிப்பார்த்தார்.

தோளுக்கு மேல் வளர்ந்துவிட்ட பிள்ளை. ரத்தம் சூடேறித் துடிக்கின்ற முறுக்கேறிய பருவம். நண்பர்களுடன் சேர்ந்து, வேண்டாத விடயங்களில் தலையை நுழைத்துக்கொண்டு கட்டாக்காலி போலச் சுற்றித் திரிகிறான். இனி அடித்துத் திருத்தமுடியாது. அன்பாக, ஆறுதலாகச் சொல்லித்தான் வழிக்குக் கொண்டுவர வேண்டும்.

"பழைய பஞ்சாங்கம் போல ஏனப்பா எப்போதும் புறுபுறுக்கிறீர்கள்? இப்படிக் குட்டிக்குட்டிக்குனிய வைத்துத்தான் எங்களையெல்லாம் கோழைகளாக மாற்றிவிட்டீர்கள். நாளைய சரித்திரத்தை நாங்கள் மாற்றிக்காட்டுவோம். தடை போடாது வழிவிடுங்கள் எங்களுக்கு".

"தம் வயிற்றுப்பாட்டுக்காக, ஊரை ஏமாற்றத் தலைவர்களாக வேடம் போட்டு, மேடையில் கொட்டி முழங்கும் வேலையற்ற வீணர்களின் வெட்டிப் பேச்சுக்கு எடுபட்டுப்போய் பொன்னான உன் வாழ்வை மண்ணாக்கத் துடிக்கின்றாய். என்வழி தனிவழி என்று நீ புறப்பட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் உருப்படாமல்தான் போவாய்" சாபம் கொடுத்திடும் ஒரு முனிவரைப்போல சீற்றமுடன் நின்றார் வேலுப்பிள்ளையார். அவரது பூச்சாண்டிக்கெல்லாம் அசருப்பவனாகப் பிள்ளை இல்லை. அவனோ தான் பிடித்த முயலுக்கு மூன்று காலென்று பிடிவாதமாக நின்றான்.

'எத்தனை காலமாக அந்நியர்கள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்டு வந்தார்கள். அப்போதும் நாம் வாய் பேசா மௌனிகளாக வாழாவிருந்தோம். இப்போ நம்மைச் சிங்களவர் ஆளுகிறார்கள். இன்றும் நாம் வாய் மூடி அடிமைகளாகவே இருக்கிறோம். நாமோ ஆண்ட பரம்பரையினர். நாமேன் மீண்டும் ஆளக்கூடாது?"

"நீ போகாத ஊருக்கு வழி தேடுகிறாய்.."

'இப்படிச் சொல்லிச் சொல்லியே சோம்பேறிகளாக, செயலூக்கமற்றவர்களாக எம்மை மாற்றிவிட்டீர்கள். நாளை நாமொரு படை அமைப்போம்; சிங்களவர் தம் தடையுடைப்போம்"

"துள்ளும் வயதுனக்கு. துடிக்கின்றாய் அறியாமல். சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது தம்பி"

"வயது போய்விட்டதுங்களுக்கு. பொறுப்பை எங்களிடம் விட்டு விட்டுப் பேசாமல் மூலையில் போய் முடங்கி இருங்கள் ஐயா "

"காவோலை விழ குருத்தோலை சிரிக்குமாம்"

"சட்டம்பிமாருக்குத் தெரிந்ததெல்லாம் வெறும் பழமொழிகள் மட்டும்தான். இந்தப் பழமொழிகளை எல்லாம் பொய்யாக்கப் புறப்படப்போகிறது எம் படை. நாளை மலரும் தமிழீழம் . அப்போது தெரியும் எம் தனி வீரம்."

"பட்டால் தெரியும் முட்டாளுக்கு" - பட்டென்று கதைக்கு முற்றுப் புள்ளி வைத்தார் வேலுப்பிள்ளை.

வேலுப்பிள்ளை நல்ல மனிதர். தானுண்டு தன் பாடுண்டு எனத் திருப்தியுடன் வாழும் சாதாரண யாழ்ப்பாணத்தவர். அடிதடிகள் வம்பு தும்பு என்று அலையாதவர். சமூகத்தில் அவருக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் இருந்தது. அவருக்கென்று வந்து இப்படி ஒருவன் எப்படி மகனாகப் பிறந்தானோ தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதில் பிரபாகரனும் அமைதியான அடக்கமான பைய னாக, படிப்பில் கெட்டிக்காரனாக, வகுப்பில் முதல் மாணவனாகத்தான் இருந்தான். வயது ஏற ஏற சகவாச தோஷம் அவனைச் சாக்கடைக்குள் இழுத்து விட்டுவிட்டது. சிங்களவர்களுக்கெதிரான பகைமை அவன் அடிமனதில் வேரூன்றிவிட்டது. சிங்கள அரசிடம் சலுகை பெறுபவர்க ளைத் தமிழ் இனத்துரோகிகளாக அவன் மனம் பதிவு செய்துகொண் டது.

அத்தகைய துரோகிகளைக் கருவறுப்பதைத் தன் முதற் கடமை யாகவே அவன் கங்கணம் கட்டிக்கொண்டான். மிக நம்பகமான ஒரு சில நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு ரகசியமாக அவனது இயக் கம் உருவானது. ஆரம்பத்தில் எல்லாமே சரியாகத்தான் போய்க் கொண்டிருந்தது. காவல் துறையினரின் கண்களில் மண்ணைத் தூவி விட்டுச் சில கொலைகள் அரங்கேறின.

தமிழகத்துத் திராவிடக் கட்சியினரின் ஊதுகுழல்களாக, அவர்கள் பாணியில் தமிழ் உணர்வை மூலதனமாக்கி மேடைகளில் முழங்கி, பாராளுமன்ற உறுப்பினர் ஆகிவிட்ட அரசியல் கட்சியினர் – இளைஞர் களை உசுப்பிவிட்டுத் தமது அரசியல் எதிரிகளைப் பழி வாங்கிக் கொண்டனர்.

தமிழ் இளைஞர்களின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகள், சிங்கள அரசுக்கும் தனது மக்களைத் தனது பக்கம் திசை திருப்பச் சாத கமான சாட்டுகளாக அமைந்துவிட்டன. அவர்களும் தங்கள் பாட்டுக்கு அப்பாவித் தமிழ் இளைஞர்களை வேட்டையாட ஆரம்பித்தார்கள். வேட் டைக்காரனிடம் இருந்து தப்ப விரும்பிய தமிழ் மக்களோ கொலைகாரர் களைத் தமது பாதுகாப்பாளர்களாக நம்பிச் சரணடைந்து புலிவாலைப் பிடித்த போக்கற்றவர்கள் போலானார்கள்.

தமது தலையில் தாமே மண்ணை வாரிப் போட்டுக்கொண்ட ஈழத்து தமிழ் மக்களின் துயருக்கும் - இழப்புக்கும் - வீழ்ச்சிக்கும் அப் போதுதான் கால்கோளிடப்பட்டது.எதிர்பாராத மக்களின் ஆதரவு இயக் கத்தவர்களுக்கு உற்சாக மளித்து அவர்களைப் பலப்படுத்த இயக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடுகிடுவென வளர்ந்து, தன்னை வளர்த்தவர்களையே கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கும் ஊனுண்ணி விருட்சமாக உரம்பெற்றது. இயக்கப் போராளிகளை வக்கற்ற தமிழ் மக்கள் நாயகர்களாக ஆராதித்து வழிபட ஆரம்பித்தனர். ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்டு நலிந்து போயிருந்தவர்கள் கூட இயக்கத்தில் இணைந்து கொண்டதால் மேன்மை பெற்று மதிக்கப்பட்டார்கள்.

போராளிகள் என்போர் பெருமைக்குரியவர்களாக ஆராதிக்கப் பட்டதாலும், தமிழ் ஈழம் என்ற மாயையை உண்மை என நம்பியதாலும் படித்த – பண்பாடான குடும்பத்தைச் சேர்ந்த – எத்தனையோ இளைஞர்கள் ஈர்க்கப்பட்டு இயக்கத்தில் இணைந்துகொண்டார்கள். பிரபாகரனின் புகழ் வானளாவ உயர்ந்தது. அந்த புகழ் தந்த மயக்கத்தில் இருந்து விடுபடவோ, எட்டிவிட்ட உயரத்தில் இருந்து இறங்கி வரவோ, நிதர்சன உலகத்தைப் புரிந்துகொண்டு தரிசிக்கவோ பிரபாகரனால் முடியவில்லை. அவரைத் தம் இலட்சிய நாயகனாக வரித்துக்கொண்டுவிட்ட தமிழீழ ஆதரவாளர்களாலும் அவரை அந்த ஸ்தானத்தில் இருந்து இறக்கி வைக்க இயலவில்லை.

மூன்று பத்து ஆண்டுகளின் பின் தந்தை மைந்தன் சந்திப்பு - தமிழகத்தின் எங்கோ ஒரு மூலையில் ரகசியமாக நிகழ்ந்தது. தளபதிகள் புடை சூழ ஒரு குறுநில மன்னன் போல மதர்ப்புடன் வந்து நின்ற பிரபாவை ஏறெடுத்தும் பார்க்கவில்லை வேலுப்பிள்ளையார்.

உலகமே அங்கீகரித்துவிட்ட தங்கள் தானைத் தலைவனை உதாசீனஞ் செய்யும் இந்த மொட்டைக் கிழவனைக் கொன்றொழித்துவிட ஒரு கணம் போதும். பிரபாவின் கண் ஜாடை மட்டும் கிடைத்து விட்டால் காணும். அவர்கள் கொன்று குவித்தோர் பட்டியலில் வேலுப்பிள்ளையார் பெயரும் வேறுபாடின்றிச் சேர்ந்து விடும்.

"இன்னும் எத்தனை காலம்தான் நீயிந்த நாடகத்தை நடத்தித் தொலைக்கப் போகிறாய்? உன்னொருவன் புகழுக்காக, ஆட்சி நடத்த வேண்டும் எனும் உன் வேணவாவுக்காக இன்னும் எத்தனை பேரைப் பலி வாங்கப் போகிறாய்? நூறு - ஆயிரம் இலட்சம் என உயர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு போகும் எண்ணிக்கையைக் கண்டும் உன் மனம் இளகவில் லையா? உன் தாகம் அடங்கவில்லையா? ஏனிந்தக் கொலைவெறி? எதற்காக இந்த உயிர்ப்பலிகள்? போதும் நிறுத்திவிடு. இலட்சக் கணக் கான விதவைப் பெண்களின் கண்ணீர் வெள்ளத்தில் நீ உல்லாசப் பட கோட்டியது காணும்." - புலம்பித் தீர்த்துவிட்டார் வேலுப்பிள்ளையார்.

"அன்றும் இப்படித்தான். இன்றும் இப்படித்தான். என்றுமே நீங்கள் மாறமாட்டீர்கள். பொன்றாப் புகழுடன் நான் வாழும் வாழ்க்கை உங்க ளுக்குத் தெரியவில்லை. குன்றின் மேலிட்ட விளக்காக என் புகழ்க் கொடி பட்டொளி வீசிப்பறப்பது உங்கள் ஊனக் கண்களுக்குத் தெரிய வில்லை. எனக்காகவா நான் இந்தப் போரை நடத்துகிறேன்? என் தமிழ் மக்களுக்காக. அவர்கள் மானமுடன் உயிர் வாழ்வதற்காக."

"எத்தனை காலம்தான் இதே பொய்யை நீயும் சொல்லிக் கொண் டிருக்கப்போகிறாய்? மானத்தோடு வாழ்ந்த நம் தமிழ்ப் பெண்கள் இன்று ஈனத்தனமாகச் சிங்களக் காடையர்களால மானபங்கப்படுத்தப் படக் காரணம் யார்? உனது அற்பப் பிடிவாதத்தால், அர்த்தமற்ற தமிழ் வெறியால் நம் பரம்பரைத் தமிழ்ப் பிரதேசங்கள் சூறையாடப்பட்டுச் சின்னா பின்னமாகப்போவது தெரியவில்லையா? வெல்ல முடியாத போர் இதென்று இன்னுமா நீ உணரவில்லை?"

"போர்க்களத்தில் நின்றவனுக்குத்தானப்பா தெரியும் ரத்தத்தின் ருசி. பகைவனைக் கொன்றொழிக்காமல் இடை நடுவில் நான் பின் வாங்கினேன் என்றால் கோழை என்றென்னை நாளைய உலகம் தூற் றாதா?"

"நாளைய வரலாற்றில் உன் பெயரைப் பொறிப்பதற்காக இத் தனை அவலங்களையும் அரங்கேற்றுகிறாய். உன் அற்பத்தனமான ஆசையைத் தமிழுணர்வென்றும் தமிழன் வீரம் என்றும் திரையிட்டு மறைக்கிறாய். தமிழை வாழ வைப்பதற்காக நீ போர் நடத்தவில்லை. தமிழர்களைக் கொன்றொழித்து மீதமுள்ளவர்களை அகதிகளாகத் துரத்தியடித்து, தமிழை மறக்கடிக்கச் செய்வதற்குத்தான் இது வழி வகுக்கப்போகிறது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்று அகதிகளாகத் தமிழர்கள் அலைவதற்கும், ஆதரவற்றவர் களாகச் சொந்த நாட்டிலேயே அவர்கள் அல்லல் படுவதற்கும் நானா காரணம்? தமிழருக்கெதிராகப் போர் தொடுத்த சிங்கள அரசின் அரா ஜகம் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா? சிங்களத்தின் அடி வருடிகளைப் போல அவர்களுக்காக வக்காலத்து வாங்கி, எனக்கெதி ராகச் சுட்டு விரலை நீட்டும் உங்களை என் தளபதிகள் விட்டு வைத்தி ருக்கிறார்கள் என்றால் அதற்கு ஒரே காரணம் நீங்கள் என் தந்தையாக இருப்பதுதான்."

"வெட்கப்படுகிறேன்; வேதனைப்படுகிறேன் - உன் தந்தையாக இருப்பதற்கு. உன்னை என் மகனாகப் பெற்றேனே என மனம் வெதும் புகிறேன். இன்று சிங்கள அரசை நீ குற்றம் சாட்டுகிறாய். அவன் எமக் குச் செய்த அநியாயங்களை அட்டூழியங்களை நான் மறுக்கவில்லை. அதை நான் நியாயப்படுத்த வில்லை. ஆனால் அதற்கெல்லாம் மூலகார ணம் யார்? உறங்கிக் கிடந்த சிங்கத்தைத் தட்டி எழுப்பியவர் யார்? சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்தவர் யார்? எல்லாவற்றிற்கும் சிங் கள அரசின் மீது பழியைப் போட்டுவிட்டு இலகுவாகத் தப்பிக்கலாம் என்று நினைக்கிறாயா?"

"காலாகாலமாக அஞ்சியஞ்சி வாழ்ந்த அடிமை மனப் பான் மையை அகலவில்லை உங்களை விட்டு. பழைமைவாதத்தின் பிரதி நிதியாக நின்று பேசுகிறீர்கள் நீங்கள். உயிருக்கஞ்சி அடிமைகளாகவே நாம் வாழ்ந்து மடியவேண் டும் என்கிறீர்களா? நமக்கென்றொரு ஆட்சி நமக்கென்றொரு நாடு வேண்டாமா?'

"தெலுங்கர், கன்னடர், மலையாளிகள் என்று எத்தனை கோடிப் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் மொழிப்பற்றில்லையா? அவர்களையும் கூட வட புல ஆரியன் ஒடுக்கித்தான் வைத்திருக்கிறான். ஏன் தமிழகத்தில் கூட எட்டுக் கோடித் தமிழர்கள் அவனுக்குக் கீழ் பெட் டிப் பாம்பாக அடங்கி மடங்கித்தானே வாழ்கிறார்கள். அவர்களும்கூட ஒரு காலத்தில் ஆண்ட பரம்பரையினர்தாம். அவர்களுக்கெல்லாம் இல் லாத தனி உணர்வு உனக்கு மட்டும் எங்கிருந்து வந்தது?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்களைப்போல் அவர்கள் எல்லாம் அடக்கப்படவில்லை. அவர்களின் பிரதேசத்துக்குள் அவர்களும் சுதந்திரமாகத்தான் வாழ்கிறார்கள்.'"

'நாங்களும் ஒரு காலத்தில் அப்படித்தான் இருந்தோம். அவர்களை விட வசதியாக, கல்வியில், செல்வாக்கில் அவர்களை விட உயர்ந்தவர்களாக இருந்தோம். பாலும் தேனும் பெருகி ஓடாவிட்டாலும் கூட எங்கள் வாழ்வில் குறை இருக்கவில்லை. வீடு வளவு, கன்று காலியென வளமாகத்தான் இருந்தோம். ஒரு சிறு பான்மையினர் எமக்குள் ஒடுக்கப்பட்டு இருந்ததென்னவோ உண்மைதான். அது எங்களுக்குள் தீர்க்கப்பட்டிருக்கவேண்டிய பிரச்சினை. அவர்களுக்காகக் குரல் கொடுத்திருக்க வேண்டிய நீ அதை மூடி மறைத்து விட்டு மொழியைக் கையில் எடுத்துக் கொண்டாய். அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்த அரசின் அடாவடிகளை ஊதிப் பெருப்பித்துப் போரை உன் வீட்டு வாசலுக்குக் கொண்டு வந்தவன் நீ. தேரை இழுத்துத் தெருவில் விட்டுவிட்டு, தேரிழுக்க வாருங்கள் என மக்களை பங்காளிகளாக்கிச் சும்மா இருந்தவர்களைச் சோற்றுக்கு அலையவிட்டு, வீட்டுக்குள் இருந்தவர்களைத் தெருவில் ஓடவிட்டு வேடிக்கை பார்த்தவன் நீ."

"என்னைக் குற்றம் சொல்லுவதே உங்களுக்கு வேலையாகப் போய்விட்டது. எங்கள் தமிழ்ப்பற்றை, எங்கள் மக்களின் தியாகங்களை உங்களால் உணரமுடியவில்லை. தட்டிக் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. எங்களை மட்டம்தட்டிப் பேசாமலாவது இருப்பது உங்களுக்கு நல்லது."

"ஆமாம். உன்னை விமர்சிக்க எவருக்கும் என்றுமே நீ இடம் தந்ததில்லையே. உன் குறைகளைச் சுட்டிக்காட்டியவர்களை நீ உயிரோடு விட்டு வைத்ததில்லை. கூண்டோடு கைலாசம் அனுப்பி வைத்து விடுவாய். சமத்துவம், சகிப்பு எனும் சொற்களுக்கெல்லாம் உனது அகராதியில் இடமேயில்லை. சிறுபான்மைத் தமிழர்களை சிங்கள அரசு ஒதுக்குகிறது எனக்கூறி ஆயுதம் ஏந்தினாயே, அவர்களுக்கு நீ மட்டும் சளைத்தவனா? சிறுபான்மை முஸ்லிம்களை ஒட்டுமொத்தமாக ஒட்டிக் கலைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயே. எந்த நியாயத்தில்? உன்னுடன் கூடி வாழ்ந்தவர்களை, ஓடிப் பிடித்து விளையாடியவர்களை ஒரே நாளில் மறந்துபோக அவர்கள் செய்த பிழையென்ன? நீ பேசிய தமிழைத்தானே அவர்களும் பேசினார்கள். அவர்கள் ஒன்றும் சிங்களவர்களாக மாறிவிடவில்லையே?

"காட்டிக்கொடுக்கும் கயவர்கள் சிலர் அவர்களுக்கிடையே ஊடுருவிவிட்டார்களே!"

"காட்டிக்கொடுப்பவர்கள் எங்குதான் இல்லை? தமிழர்களில் இல்லையா? உன்னைச் சுற்றி இருப்பவர்களில் இல்லையா? உன் தவறான அணுகுமுறையால் ஒரு சமூகத்தையே எதிரிகளாக்கிக் கொண்டுவிட்டாயே. அப்பாவிகளாக இருந்த அவர்கள் நாளை ஆயுதம் ஏந்துபவர்களாக மாறினால் அதற்கும் நீதான் காரணன் ஆகப்போகிறாய்."

"எல்லாப் பழியையும் என்மீதே சுமத்துங்கள். இன்று நடப்பதற்கும் இனி நடக்கப்போவதற்கும் எல்லாவற்றிற்கும் நானே காரணம் என்று சொல்லிவிடுங்கள்."

"துரதிர்ஷ்டவசமாக எங்கள் வரலாற்றை எழுதும் பொறுப்பை உன்னிடமே விட்டு வைத்திருக்கிறான் அந்த இறைவன். அது நல்லதோ கெட்டதோ பொறுப்பு உன்னுடையதுதான். தினை விதைத்தவன் தினை அறுப்பான். நீயோ வினை விதைத்தாய். இனி அதை அறுக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை."

"தமிழ் மக்களைத் தன்மானமுள்ளவர்களாகத் தலை நிமிர்ந்து வாழச் செய்திருக்கிறேன் நான். இன்று அந்நிய தேசங்களில் சுபீட்ஷமாக வாழும் நம் தமிழர்கள் எல்லாம் எனது நாமத்தைத்தான் புகழ்ந்து துதிக்கிறார்கள். அது தெரியுமா உங்களுக்கு?"

"கேவலம். பிச்சை எடுத்துச் சீவியம் நடத்துபவர்களைப்பற்றிப் பெருமையாக வேறு பேசுகிறாய். அவர்கள் அங்கெல்லாம் போய்ச் சேருவதற்கு முன் எத்தனை இடர்ப்பட்டார்கள் என்று தெரியுமா உனக்கு? செல்லும் வழியில் இன்னுயிர் துறந்தவர்கள் எத்தனையோ பேர் சாகும்போதும் உன்னைத்தான் நினைத்திருப்பார்கள். உன் பெயரைச் சொல்லி மக்களிடம் இங்கு பணம் கறந்து சொகுசு வாழ்க்கை வாழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் அங்கு போயும் அதே சுரண்டலைச் செய்து கொழுத்துப் போயிருக்கிறார்கள். அவர்கள் கட்டாயம் உன் புகழ் பாடத்தான் செய்வார்கள். நாளை நீ இறந்து போனாலும்கூட உன்னை சாகாவரம் பெற்றவனாக்கி உன் பேரை வைத்துப் பிழைப்பு நடத்தத்தான் போகிறார்கள். மக்களை அகதிகளாக்கி ஓடவைக்க வேண்டியது. பின் அவர்களைக் காக்கும் இரட்சகர்கள் நாம்தானென நடிக்கவேண்டியது. நல்ல நாடகம் தான்.

"என்னைக் குற்றக்கூண்டில் நிறுத்திக் கற்பனையான குற்றச் சாட்டுகளை எல்லாம் சுமத்தி என் மன நிம்மதியைக் குலைக்கப் பார்க்கிறீர்கள். நீங்கள் பேசுவதைப் பார்த்தால் சிங்கள அரசோடு சேர்ந்து எனக்கெதிராகச் சதி பண்ணும் புல்லுருவிகளிடம் விலை போய்விட்டீர்களோ என ஐயுறத் தோன்றுகிறது."

"காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாம். தமிழீழம் என்று சொல்லிக் கொண்டுதானே வேறு சில இயக்கங்களும் உதயமாயின. அவர்களையேனும் விட்டுவைத்தீர்களா? வேரோடு கல்லி எறிந்துவிட்டீர்களே. உங்களின் சகோதரப் படுகொலைகளை நியாயப் படுத்த என்னவெல்லாம் சொன்னீர்கள்? தமிழீழம்தான் உங்கள் இலக்கென்றால் உங்கள் ரத்தத்தின் ரத்தங்களையே கொன்று குளிர்காய்வது மட்டும் எந்த வகையில் நியாயமாகும்?

திசைமாறிப் போய்விட்டது உங்கள் போராட்டம். ரத்த ருசி பார்க்கும் காட்டேரிகளாக உங்களை மாற்றிவிட்டது உங்கள் இலட்சியம். நண்பர்கள் யார் பகைவர்கள் யார் என்று உங்களுக்கே தெரியவில்லை. நண்பர்களை பகைவர்களாக்கி உங்களுக்கே நீங்கள் குழி தோண்டிக் கொண்டுவிட்டீர்கள். எந்தப் பக்கமிருந்து எவன் தாக்குவான் என்ற பயம், எவரையுமே நம்பாத சந்தேகம் உங்களைப் பிடித்தாட்ட நீங்கள் நிம்மதியைத் தொலைத்து விட்டீர்கள். இனிச் சாவொன்றில் தான் உங்களுக்கு நிம்மதி. எழுதி வைத்துக்கொள். இதோ உன்னை வழிபட்டுக் கொண்டு, உன்னைக் காபந்து பண்ணுவது போல் பாசாங்கு செய்துகொண்டு, உன் செல்வாக்கைப் பயன்படுத்தி மக்களை வருத்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கித் தின்று கொண்டிருக்கிறார்களே, இவர்களில் ஒருவன்தான் உன்னைக் காட்டிக்கொடுக்கப் போகிறான். அவனால்தான் உனக்குச் சாவு வரப்போகிறது."

"எல்லா வழிகளிலும் முயன்று தோற்றுப்போய் இப்போ எனக்கு நம்பகமானவர்களை எனக்கெதிராகத் திருப்பிவிடலாமென்று பார்க்கிறீர்களாக்கும். அது ஒருக்காலும் நடக்காது. கூட இருந்தே குழி பறித்தவர்களை எல்லாம் இனங்கண்டு அவர்களின் கதையையும் முடித்தாயிற்று. இப்போதென் உடனிருப்பவர்கள் மாசுமறுவற்ற தங்கம் போலானவர்கள்."

ஆமாம். தங்கங்கள் அபகரித்துத் தந்தவர்களைத் தரக்குறைவாகப் பேசினால் நீ தாங்கமாட்டாய்தான். தொண்டர்களாக வேடமிட்ட அடியாட்களைக் கொண்டு அடுத்தவேளை உணவுக்கே அல்லாடிய ஏழை எளியவரின் தொண்டைக் குழியில் பிடித்துலுக்கித் தங்கத்தையும் வைரத்தையும் வாரிக்கொணர்ந்து தந்தார்களே. அவர்களை நீ விட்டுக்கொடுக்கமாட்டாய்தான். அந்தத் தங்கங்களை உருக்கி உன்னைப் போல் ஒரு தங்கச் சிலை செய்து அழகு பார்க்கலாம் என்று மனப்பால் குடிக்கிறாயா? முட்டாளே, நாளையே உன் நிலை தலைகீழாக மாறலாம். சிங்களத்து அரச படை அவற்றைச் சூறையாடலாம். அவர்கள் வீட்டுப் பெண்களின் கழுத்துகளை, காதுகளை அவை அலங்கரிக்கலாம். இப்படித் தமிழனிடம் பிடுங்கியதைச் சிங்களவனிடம் இழக்க நேர்ந்தால் பிறகென்ன சமாதானம் சொல்லப்போகிறாய்?

பொன்னையும் பொருளையும் விட நம் மண்ணல்லவா பெரிதென்று மாய்மால வசனம் பேசி மயக்கப் போகிறாயா? அந்த மண்ணைக்கூட அவர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டவன் நீ. அவர்கள் காணாத பிரதேசங்களுக்கு எல்லாம் அவர்களை இழுத்து வந்து காணச் செய்தவன் நீ."

"போதும் நிறுத்துங்கள் உங்கள் புலம்பலை. கேட்டுக்கேட்டுக் காதே புளித்துப் போய்விட்டது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்ளதைச் சொன்னால் அதைக் கேட்கும் மனப்பக்குவம் இல்லை உனக்கு.

புரிந்துவிட்ட தவறுகளைத் திரும்பிப் பார்க்கும் திராணியில்லை உனக்கு. இடையில் சிலகாலம் பெற்றுவிட்ட வெற்றிக் களிப்பில் கிறங் கிப்போய் உன்னை மறந்து ஆட்டம் போடலாம் நீ. கண்ணிருந்தும் உண்மையின் தரிசனத்தைக் காண முடியாது மாயை மறைக்கிறது உன் பார்வையை. நாளை உனக்கொரு நாடு கிடைத்தாலும் அது சுடு காடாகத்தான் இருக்கும். அங்கு நிச்சயமாக மன நல மருத்துவமனை களுக்குக் குறைவிருக்காது. உனக்கும் உன் சகாக்களும் கட்டாயம் அவை தேவைப்படும். ஊருக்கு ஊர் அநாதை விடுதிகளும் விதவைக ளின் மறுவாழ்வு மையங்களும் ஊனமுற்றோர் உடல் நலக் காப்பகங் களை பெருகிப் போயிருக்கும். மலருகின்ற தமிழீழத்தில் இரத்தம் தோய்ந்த உன் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறக்காது. சொட்டுச் சொட் டாக இரத்தத்துளி வடித்தபடிதான் நிற்கும்,"

-சொல்லுவதை எல்லாம் சொல்லி முடித்துவிட்ட வேலுப்பிள்ளை யாரால் தொடர்ந்து பேச முடியவில்லை. சொல்லாமல் கொள்ளாமல் அவர் ஆவி அடங்கிவிட்டது. பிரபாவின் மெய்க்காப்பாளருக்கு ஒரு தோட்டா மிச்சமானது.

கடைசிக் கந்தாயத்தில் நின்று கொண்டு பழையதை நினைத்துப் பார்த்த பிரபாகரனுக்குத் தான்விட்ட மாபெரும் தவறுகள் கொஞ்சம் நிதர்சனமாயின. தன்னால் தமிழ் மக்களுக்கும் நாட்டுக்கும் இழைக் கப்பட்ட அநீதிகளுக்குத் தண்டனையாக ஒன்றல்ல நூறல்ல ஓராயிர முமல்ல இலட்சோப இலட்சம் முறை தூக்கிலிடப்படவேண்டிய குற்ற வாளி தான் என்கிற ஞானோதயம் வரப்பெற்றவனாய்க் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த நச்சுக் குப்பியில் தனது முன்னிரு சோடிப் பற் களையும் அவன் ஆழப் பதித்தான்.

**உண்மை வரலாற்றை ஆதாரமாகக் கொண்ட கற்பனை.**

**[இது சமகால வரலாற்றுக் கதை என்பதால் உரையாடல்களை பேச் சுத் தமிழில் எழுதாது, முன்னைய வரலாற்றுப் புனைவாசிரியர்கள் எழுதியவாறு 'நல்ல'தமிழில் எழுதியிருக்கிறேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடறல்



பாதர் பீட்டர் திடுக்கிட்டு விழித்தெழும்பி னார். மிக அருகில் எங்கோ கேட்ட துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களால் அவர் தூக்கம் கலைந் திருந்தது. மறுநாள் பிரசாங்கத்துக்கான உரையை ஆயத்தப்படுத்திவிட்டு அவர் படுக் கைக்குச் சென்று அதிக நேரமாகி இருக்காது. ரோச் லைட்டை அடித்து நேரத்தைப் பார்த்தார் – **11:30**

மாறிமாறிச் சூட்டுச் சத்தங்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. திரு கோணமலைப் பேராலய பங்குத்தந்தையாக அவர் பொறுப்பேற்று வந்தபின், இந்த நாலைந்து ஆண்டுகளில் அடிக்கடி இப்படியான சத்தங் களைக் கேட்கத்தான் செய்கிறார்.

துப்பாக்கிகளின் வேட்டுச் சத்தங்கள் அவருக்கு என்றும் உவப்பா னதாக இருப்பதில்லை. அன்பினால்தான் உலகாளப்பட வேண்டும் என் பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த அவருக்கு, இந்த வேட்டுச் சத்தங்கள் வேதனையைத்தான் கொடுத்தன.

'கடவுளே, இந்த மக்களின் அறியாமை அகல ஒரு நல் வழி காட்ட மாட்டீரா? தங்களுக்குள் போரிட்டு மடியும் இந்த மக்கள் வாழ்வில் விடிவு பிறக்க ஒரு வழி காட்டமாட்டீரா?' - இதுதான் அவரின் அன்றாடப் பிரார்த்தனை.

அருகிலுள்ள தெருவூடாக யாரோ ஓடும் காலடி ஓசைகள் துல்லிய மாகக்கேட்டன. அதைத் தொடர்ந்து அருகாமையிலேயே வேட்டுச் சத் தங்கள் செவிப்பறையை வந்து சாடின.

பொலீஸ் 'குவாட்டர்ஸு'ம் அதனோடொட்டிய ஜெயிலும் அருகில் கால் மைல் தூரத்துக்குள்தான் இருக்கின்றன. 'அங்குதான் ஏதும் அசம் பாவிதம் நிகழ்ந்துவிட்டதோ?' தனது ஊகத்தை அவரால் இப்போதைக்கு ஊர்ஜிதம் செய்து கொள்ள முடியாது. இந்த வேளையில் வெளியே தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவது ஆபத்தானது. காலையில்தான் எதுவும் தெரிய வரும். பாவம் எத்தனை உயிர்கள் பலியாகினவோ!

'துப்பாக்கிச் சனியனைக் கண்டு பிடித்த அந்தப் பாவி இப்போது நரகத்தில்தான் கிடந்து உழலுவான்'- மனதுக்குள் அவனைச் சபித்துக் கொண்டார். ஏதோ அரவம் மிகச் சமீபமாக, கதவுக்கு வெளியே கேட் பதுபோல- பிரமையாக இருக்குமோ? இல்லை. யாரோ மூச்சிரைப்பை அடக்கப் பிரயத்தனப்பட்டு முடியாமல் திணறுவது தெளிவாகவே கேட் டது.

இப்போது என்ன செய்வது? கதவைத் திறப்பதா வேண்டாமா? பாதர் பீட்டர் சங்கடமாக உணர்ந்தார். வெளியில் நிற்பவன் அல்லது நிற்பவள் கையில் ஏதும் ஆயுதத்தோடு நின்று தன்னைத் தாக்கிவிட் டால்?

'கடவுளே, இது என்ன சோதனை?' அவன் கதவை ஒட்டியபடி சாய் ந்து நின்றிருக்க வேண்டும். கதவு திறந்ததும் தன்னைச் சுதாகரித்துக் கொள்ளமுடியாது விழப்போனான். பாதர் பீட்டர் மிக அருகில் நின்றதால் அவர் மீது சரிய, அவர் அவனைத் தாங்கிப் பிடித்துக்கொண்டார்.

உள்ளேயும் வெளியேயும் கப்பியிருந்த இருளில் அவன் முகத் தைப் பார்க்க முடியவில்லை. தன்னிச்சையாக பாதர் கையில் இருந்த 'ரோச் லைட்'டின் ஆளியை அழுத்த இருளை விழுங்கிய ஒளி அவனைச் சுற்றிப்படர்ந்தது.

உள்ளே நுழைந்ததும் மூச்சிரைத்தபடி அவசரமாகத் பின்னங் காலால் கதவைத் தள்ளிச்சாத்தினான். பாதரின் முகத்தில் சந்தேக ரேகைகள் கோடிட்டன. உச்சி முதல் உள்ளங்கால் வரை அவனை நோட் டமிட்டார்.

அவன் நடுங்கிக்கொண்டிருந்தான்; அவன் உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன. அப்போதுதான் அவன் மீசையரும்பும் பருவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தான். ஆகக்கூடினால் அவனுக்குப் பதினைந்து வயதுதானிருக்கும்.

அவன் தோள் பட்டையில் இருந்து இரத்தம் வழிந்துகொண்டிருப்பதை அப்போதுதான் அவர் அவதானித்தார். அது தந்த வலியினாலும், ஓடிய களைப்பினாலும் பயத்தினாலும் கண்கள் செருக, துவண்டு விழுபவன் போல அவன் நின்று கொண்டிருந்தான்.

அவன் மயங்கி விழு முன் அவனுக்கு அவசரமாக ஏதாவது முதலுதவி செய்தாகவேண்டும். அறை 'லைட் சுவிச்'சைப் போடக் கையுன்னியவர் பின் தன்னை நிதானப்படுத்திக் கொண்டார்.

கதிரையொன்றில் அவனைச் சாய்ந்திருக்கச் செய்து விட்டு மெழுகுவத்தி ஒன்றைப் பற்ற வைத்து மேசையில் ஊன்றினார். அவசரசிகிச்சைப் பெட்டியில் 'பாண்டேஜ்' துணி, பஞ்சு, அயடீன், கத்தரிக்கோல் எனத் தேடி எடுத்து வந்து அவனருகில் அமர்ந்து கொண்டார்.

நல்ல வேளை, அவர் பயந்த அளவுக்கு காயம் பெரிதாக இருக்கவில்லை. ஓடி வரும்போது எங்கோ முட்கம்பி கீறியிருக்க வேண்டும். கண்களில் நன்றியுணர்வு மின்ன, அவர் மருந்திட்டுக் கட்டுவதை அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

இப்போது அவன் இளைப்பு அடங்கிக் கொஞ்சம் ஆசுவாசமாக உணர்ந்தான். பாதர் கேட்பதற்கு முன்னதாகவே அவன் தன்னைப் பற்றிக் கூறத்தொடங்கினான். அன்பளிபுரத்தைச் சேர்ந்த அவன் பெயர் முருகதாஸ், சுருக்கமாக முருகன். வன்செயலால் பாதிக்கப்பட்டுச் சிதறுண்டுபோன அவன் குடும்பத்தில் இப்போது எஞ்சியிருப்போர் அவனும் அவனது தமக்கை ஆனந்தியும் மட்டுமே.

தமிழகத்துக்கு ஓடி அகதிகளாகிப் பின் **92** இல் மீண்டு வந்து, வாழ்க்கையே போராட்டமாகி விட்ட நிலையில், வறுமையோடு துவந்தயுத்தம் நடத்த, ஒரு மேசனுக்கு எடுபிடியாகக் கூலி வேலை செய்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியோ வயிற்றைக் கழுவி வாழ்ந்து வந்த அவர்கள் வாழ்வில் வீசிய புயலோ ஓயவில்லை.

ஊர்க்காவல் படை வீரன் ஒருவன் அவர்கள் வீட்டுக்கு அருகாமை யில் யாராலோ சுடப்பட்டு இறக்க, பலிக்கடாவாக அவன் பிடிபட்டு அடைக்கப்பட்டான்.

தனிமரமாகிவிட்ட தமக்கை யாரிடம் ஓடுவாள்? யாரை என்று கெஞ்சு வாள்? செல்வாக்கில்லாத சாதாரணப் பெண் அவள். ஆனந்தம் அவள் பெயரில் மட்டும் தான். மற்றப்படி அவள் வாழ்வில் கண்டது எல் லாமே அவலம்தான். ஆறேழு மாதங்களின் பின் அதிர்ஷ்டவசமாக அவன் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு, அவன் மீதான குற்றச் சாட்டுகள் ஆதாரமற்றவை என்றும் நிரூபணமாகிவிட்டது.

ஆனாலும் அவன் விடுதலைக்கான நாளோ இன்னும் வந்த பாடில்லை. இந்த இடைக்காலத்துள் அவன் பட்ட அடிகளும் சித்திரவதை களும் இளகியிருந்த அவன் மனதை இரும்பாக இறுக வைத்துவிட்டன.

எந்த ஒரு காரணமுமின்றி ஒரு பயங்கரவாதியாக முத்திரை குத்தப்பட்டுவிட்ட அவன் எப்போ விடுதலையாகி வெளியே போவோ மென நாட்களை எண்ணிக் கொண்டிருந்தான் - ஒரு போராளி இயக் கக் குழுவில் போய் இணைந்து கொள்வதற்காக!

சிறையில் உறவான இயக்கக்காரர்கள் சிலரின் அறிமுகம் அவன் வாழ்வுத்தடத்தை மாற்றக் காலயிருந்தது. சிறையில் அவனோடு அடை பட்டிருந்த அந்த இயக்கக்காரர்கள் தப்பி ஓடுவதற்குத் தருணம் பார்த் துக் காத்திருந்தார்கள். அன்று அவர்களுக்குச் சாதகமாகச் சந்தர்ப்பம் அமைந்தது.

மது போதை மயக்கத்துடன் தொலைக்காட்சியின் காமக் களி யாட்டத்தில் ஒன்றிப்போயிருந்த சிறைக்காவலர்களை மடக்குவது அவர்களுக்குச் சிரமமாக இருக்கவில்லை. அவர்களை மடக்கி, அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடமிருந்த துப்பாக்கிகளாலேயே அவர்களைச் சுட்டுவிட்டுத் தப்பி ஓடிவிட்டார்கள்.

ஓடும்போது இவனையும் கொஞ்சத் தூரம் தம்மோடு இழுத்துக் கொண்டுதான் ஓடிவந்தார்கள். எதிலோ தடக்கித்தடுமாறி விழுந்த இவன் எழுவதற்கு முன்பாக அவர்கள் எங்கோ ஓடி மறைந்து விட்டார் கள்.

இருட்டில் தட்டுத்தடுமாறி எழுந்தவன் பின்னால் வேட்டோசை கேட்கவும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு கால்போன திசையில் ஓடி இங்கு வந்திருக்கிறான்.

பறங்கி [**Burger**] இனத்தைச்சேர்ந்த பாதர் பீட்டருக்கு இந்தச் சிறு வனைப் பார்க்கும்போது தனது தங்கையின் மகனது ஞாபகம் தான் வந்தது. பாதர் பீட்டரின் கடைசித் தங்கை ஒரு சிங்கள இளைஞனைக் காதலித்து மணமுடித்திருந்தாள். பாலையூற்றில் தங்கியிருந்த அவர்க ளும்கூட கடந்த கலவரத்தின் போது ஊராருடன் சேர்ந்து ஓடி ஒளியத் தான் வேண்டியிருந்தது.

'பூட்ஸ்' காலடி ஓசைகள் வெளியே அண்மித்து வருவது போல் கேட் கவும் சிறுவனின் முகத்தில் மிரட்சி தோன்றவாரம்பித்தது. 'இப்போது நான் என்ன செய்வது? இந்தச் சிறுவனைக் காட்டிக் கொடுப்பதா? கொலை செய்துவிட்டுப் பாவசங்கீர்தனம் செய்ய வருபவனையே மன் னித்து அவன் கூறும் இரகசியத்தை வெளியில் எவரிடமும் கூறாது பாது காக்கவேண்டிய கடப்பாடுடைய - அவ்வாறு காப்பேன் எனச் சர்வேஸ் வரனிடத்து வாக்குத்தத்தம் செய்து - வெள்ளுடை பூண்டுள்ள - ஓர் உத் தம குருவானவன் நான்.

இந்தச் சிறுவன் என்னிடம் பாவசங்கீர்தனம் செய்யவரவில்லைத் தான். அவ்வாறு செய்வதற்கான குற்றமெதையும் அவன் செய்யவு மில்லை. இவனைக் காட்டிக்கொடுப்பதால் நான் எதைச் சாதிக்கப் போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் தப்பி வந்த ஒரு கைதி என அறிந்தும் இவனை நான் மறைத்து வைப்பது இந்நாட்டுச் சட்டப்படி குற்றம் தான். ஆனால் கடவுளின் சந்நிதானத்தில்....? 'உன்னைப்போல் உன் பிறனையும் நேசி' எனப் போதித்த. பகைவனுக்கும் அருளும் உள்ளம் வேண்டும் என வாழ்ந்து காட்டிய அந்த இரக்கத்தின் தேவனின் முன்னிலையில் எனது மனிதாபிமானம் தவறாகுமா? அந்த நேச குமாரனைக் காட்டிக்கொடுத்த யூதாஸைப் போல நானும் பழி சுமக்க வேண்டுமா? இல்லை.. இல்லவே இல்லை..'

பயத்துடன், எங்கே ஒளியலாம் எனத் தேடுவன போல் அவன் விழிகள் அங்குமிங்கும் அலைபாய்ந்தன. 'டப்..டப்...டப்..' கதவில் யாரோ பலமாகத் தட்டினார்கள். அவசர அவசரமாக அவனை இழுத்துச் சென்று கட்டிலில் தள்ளாத குறையாகப் படுக்கவைத்துப் போர்வையால் இழுத்து மூடித் திரும்ப மீண்டும் கதவில் தட்டப்படும் ஓசை வலுத்தது.

மெழுகுவர்த்தியை ஊதி அணைத்துவிட்டு, வெளிப்புற லைற் சுவிச்சைப் போட்டபடி கதவுப் பிடியை முறுக்கினார் பாதர்.

வெளியே சீருடையில் மூன்று இராணுவ வீரர்கள் முகத்தில் கடுகடுப்புடன் 'கதவைத் திறப்பதற்கு ஏன் இவ்வளவு நேரம்?' என்ற மாதிரி உறுத்துப் பார்த்தபடி நின்றார்கள். அவர்களில் ஒருவன் கொச்சைத் தமிழில் அவரிடம், ''டிரஸ்ரவாதி அங்க ஜெயில் பிரேக் பண்ணி இன்த பக்கங் ஓடிவன்தாங்... ...நாங் உள்ள.. பாக்கிராங்...'' என்றபடி அவரை ஒதுக்கிவிட்டு உள் நுழைந்தவர்களின் வாயிலிருந்து புறப்பட்டுக் 'கப்' பென நாசியைத் தாக்கிய மதுவின் வாடை அவருக்குக் குமட்டலை ஏற்படுத்தியது. அவர்கள் பார்வை அறை முற்றும் துழாவி நோட்டமிட்டது.

'கட்டிலில் படுத்திருப்பவனைப் பற்றி என்ன கேட்பார்களோ? புரைதீர்ந்த நன்மை பயக்குமெனில் பொய் சொல்லலாம்தான். என்ன பொய் சொல்லி அவனைக் காப்பாற்றுவது? அவனை எனது மருமகன் எனக் கூறினால் நம்பு வார்களா? இவ்வளவு காலமும் சிறையில் அடைபட்டிருந்த ஒருவனை அடையாளம் காண்பதில் அவர்களுக்குச் சிரமம் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிராது. அவனுக்காக அவர்களிடம் பரிந்து பேசுவதைத் தவிர வேறு வழி யில்லை.

பிடிபட்டால் அவனை அவர்கள் சும்மா விடப்போவதில்லை. பாவம் இந்த இளம் வயதில் அவன் வாழ்க்கை கருகிப்போகப்போகி றது'. கசப்பான அந்த உண்மையை ஜீரணிக்க அவருக்குக் கஷ்டமாக இருந்தது.

தான் கட்டில் பக்கம் திரும்பிப் பார்ப்பது அவர்களுக்குச் சந்தேக த்தை ஏற்படுத்தும் என்பதால் அதுவரை அதைத் தவிர்த்த அவர் எதேச் சையாகப் பார்ப்பது போலத் திரும்பிப் பார்த்தார். அங்கே - கட்டில் காலியாகக் கிடந்தது. அவன் சாமர்த்தியமாக உருண்டு விழுந்து கட்டி லுக்கும் சுவருக்குமிடையில தன்னைமறைத்துக் கொண்டிருக்க வேண் டும்.

சந்தேகத்துக்குரிய மற்றைய இடங்களில் தேடிப்பார்க்க வேண் டிய அவசரம் அவர்களுக்கு. மேலதிகாரி போல இருந்தவன் சம்பிரதா யமாக, தொந்தரவு செய்தமைக்காக ஒரு 'சொறி'யை உதிர்த்து விட்டு "அப்பி என்னங்" என்றவாறு மற்றிருவருக்கும் ஏதோ ஆணையிட, அவநம்பிக்கை தொற்றிய முகங்களுடன் அவர்களும் அவனுடன் விரை ந்து வெளியேறினர்.

சந்தேகம் ஏற்படாதவாறு கதவை மெதுவாகத் தாழிட்ட போது அவரின் வாய் கடவுளுக்கு நன்றி கூறி ஸ்தோத்தரித்தது. மூலையோடு சுருண்டு கிடந்த முருகனை ஆதரவாக அணைத்து எழுப்பினார். கூப்பிய கரங்களும், நடுங்கிய உதடுகளும், மருண்ட பார்வையுமாக அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. பாயொன்றில் அவனைப் படுக்க வைத்து விட்டுக் கட்டிலில் பாதர் பீட்டர் சாய்ந்தபோது நேரம் பன்னி ரெண்டைத் தாண்டியிருந்தது.

'நாளை விடிந்ததும் என்ன செய்வது?' என்ற மனப் போராட்டத்தில் மூழ்காமல் - 'எல்லாம் அவர் சித்தப்படி ஆகட்டும்' என்று பாரத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளிடத்தில் சுமத்தி விட்டு அவர் நிம்மதியான உறக்கத்தில் ஆழ்ந்து போனார்..

காலையில் கண் விழித்து எழுந்தபோது முருகனைக் காண வில்லை. வாசற்கதவு சாடையாகத் திறந்திருந்தது. அவர் அவசர தேவைக்கென வைத்திருந்த சைக்கிள் - அதையும் காணவில்லை! பையன் தப்பிவிட்டான்! பரவாயில்லை. அவர் முகத்தில் நிம்மதிப் புன் முறுவல் விகசித்தது. அன்று காலை ஆராதனையை நாட்டு மக்களின் சமாதானத்திற்கான பிராத்தனையுடன் நிறைவு செய்து அவர் வெளி யேற, அவருக்காகக் காத்திருந்த இராணு வத்தினர் அவரைக் கைது செய்தார்கள்.


-----



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கொலைகாரனின் வாக்குமூலம்

[சிறுவர்களுக்கு உகந்ததல்ல]



ஹலோ...! உங்களைத்தாங்க.. உங்ககிட்ட நான் ஒரு ரகசியத்தை சொல்லப்போறேன்... உங்ககிட்ட மட்டும்தான்... ஆனா நான் சொல்றதக் கேக்க முன்னாடி உங்களைக் கொஞ்சம் தைரியப் படுத்திக்குங்க ..நீங்க ஒரு 'ஹாட்' வீக்கான ஆளா இருந்து அப்புறம் நான் சொல்றதக் கேட்டு அதிர்ச்சியில நீங்க 'பொட்'டின்னு போயிட்டா என்னைத்தான் எல்லா ரும் குறை சொல்லுவாங்க...... மத்தவங்க **Feelings** க்கும் நாம மதிப்புக் கொடுக்கணும் இல்லியா ..? நான் அப்படித்தாங்க.

முதலில என்னைப்பத்தி ஒரு சின்ன அறிமுகம். அதுக்கப்புறம் **Matter**ற - விஷயத்த சொல்றேன். அதுக்கு முன்னாடி அவசரமா உங்க ளுக்கு ஏதாச்சும் வேலை இருந்தா செஞ்சுமுடிச்சிட்டு வந்துடுங்க. நானும் இந்தக் காஸெட்டைப் போட்டு ஒரு பாட்டை அதுக்குள்ள ரசி ச்சு முடிச்சிருறேங்க.

'கண்ணாளனே..'ன்னு சித்ராவோட குரல் எப்படிக் கொழையுது பாத்தீங்களா? கேக்கறப்போ எங்கேயோ கொண்டிட்டுப் போயிடு துங்க. பிரிவுத்துயரை அப்படியே புழிஞ்சு கொடுக்குதில்லீங்களா? 'ரெத் தம் கொதி கொதிக்கும் - உலை கொதிச்சிடும் நீர்த்துளி போல'ன்னு ரொம்ப ரச்சிங்கா' எழுதியிருக்காருங்க கவிஞர். வைரமுத்துவோட கவி தைங்கன்னா எனக்கு ரொம்பப் பிடிக்குங்க... இந்தப் புதுக் கவிதைன்னு இப்பல்லாம் பேப்பர்ல வருதுங்களே - நமக்கு அதுக எதுவுமே சுத்தமாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியறதில்லீங்க. சரி விடுங்க. வாழ்க்கையில எல்லாமே எல்லாருக்குமே புரிஞ்சுதான் போயிடுதா? ஏன் என்னையே எடுத்துக்குங்களேன். ரொம்பப் பேருக்கு நானும் ஒரு புரியாத புதிர் தானுங்க.

இப்பதான் நான் ஒரு கொலையை செஞ்சிட்டு வந்து உக்காந்துட்டிருக்கேன். என்னங்க நான் சொல்றத உங்களால நம்ப முடியல்லியா? 'என்னடா இவன் ஒரு கொலையை முழுசா செஞ்சிட்டு இப்பதான் 'காப்பி' சாப்பிட்டேன்னு சொல்ற மாதிரி, 'ஹாயா' உக்காந்து பாட்டு வேற கேட்டுகிட்டு ரொம்ப சிம்பிளா சொல்றானேன்னு நெனைக்கிறீங்களா? நெஜமாத்தாங்க. என்னை நீங்க புரிஞ்சுக்கிட்டீங்கன்னா நான் சொல்லுறதும் உண்மைதான்னு நம்புவீங்க.

நீங்க இப்ப என்ன நெனைக்கிறீங்கன்னு எனக்கு நல்லா புரியுதுங்க. என்னைத்தான் மத்தவங்க புரிஞ்சுக்கல்லன்னாலும், மத்தவங்களோட உணர்ச்சிகளை, இயல்புகளை நான் ரொம்ப நல்லாவே புரிஞ்சுக்குவேங்க. சின்ன வயசில இருந்தே நான் ரொம்ப **Sensitive** ஆன ஆளுங்க. **Soft Nature** ம்பாங்க யாராச்சும் எதுக்காச்சும் என்னை ஏசினா உடனே அழுதுடுவேங்க.

நாங்க ரொம்ப **High Class family** ங்க. எங்கப்பா - **Dad - famous** ஆன ஒரு **Doctor**. அம்மா **University Lecturer** .நான்தான் அவங்களுக்கு ஒரே பையன். அதனால வீட்டில நான் செல்லப்பிள்ளைங்க. நான் எது கேட்டாலும் இல்லேங்காம வாங்கித்தந்துடுவாங்க. வீட்டுல எனக்கின்னு தனியா **TV, Phone, Audio Player, Video Deck** எல்லாமே இருக்குங்க. என் ரூமை வந்து பாத்தீங்கன்னா மலைச்சுப் போயிடுவீங்க.

சினிமால தாங்க அந்த மாதிரி ரூமை நீங்க பாத்திருப்பீங்க. கையில ஒரு ஆயிரம் ரூபா இல்லாம நான் **College**க்குப் போகவே மாட்டேங்க. சொந்தக் காரு. அவசரம்னா **Motor Bike** எல்லாமே இருக்குங்க. கையில காசிருந்த கேட்கணுமா? என்னைச் சுத்தி எப்பவுமே கூட்டாளிங்க பட்டாளம் தாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனி ஞாயிறுன்னா **Friends** கூட ஜாலியா **Trip** அடிக்கப் போயிடு வேங்க. அப்படிப் போறப்பதான் ஒரு தடவை ஒரு சேரிப் பையன காரால அடிச்சுட்டேங்க. பாவிப்பய காருக்கு குறுக்க வந்து விழுந்திட் டான். **Sixty Miles Speed**ல வந்து கிட்டிருந்தமா – **Control** பண்ண முடியில் லீங்க. தண்ணி வேற போட்டிருந்தமா தடுமாறிப் போயிட்டம்ங்க. நின்னு மினக்கெட்டாப் பிரச்சினை பெரிசாயிடும்னு **escape** ஆகி வந்து சேர்ந்துட்டமுங்க. மத்த நாத்துப் பேப்பர்ல அதப் பத்தி நியூஸ் எல்லாம் வந்துச்சுங்க. ஆனா நல்ல வேளை நம்மள யாரும் **Trace** பண்ணி வரல் லீங்க. நம்ம **Friends**ங்க ரொமப் ஒத்துமையான பசங்க. யாரும் அதப் பத்தி மூச்சு விடல்லீங்க. ஆனா நம்மைப் பொறுத்த மட்டில அது ஒண் ணும் கொலை இல்லீங்க. ஒரு **Accident** நாட்டு ஜனத்தொகையில் ஒண்ணு கொறைஞ்சிடுச்சு. அவ்வளவு தாங்க.

இந்த AC ரூமில இருந்தும்கூட எனக்கிப்படி வியர்க்குதுன்னா பாருங்களேன். கை வேற கொஞ்சம் நடுங்குது. கொஞ்சம் தாங்க. பயத் திலன்னு சொல்லப் போறீங்க. அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க. இந்த **Powder** அடிக்க ஆரம்பிச்சாப்பொறவுதான் இப்படி. பவுடர்ன்னா என்ன துன்னு உங்களுக்கு சிலநேரம் புரியாம இருக்கலாம். இந்த 'குடு'ன்னு சொல்லுவாங்களே, அதைத்தாங்க சொல்றேன். பாவிப் பயலுக-பழக் கிப்புட்டாங்க. அதில்லாம இப்பல்லாம் இருக்கவே முடியுது இல்லீங்க.

விஸ்கியில இல்லன்னா பிராந்தியில கொஞ்சம் ஊத்திக்கிட்டு ஒரு பாட்டைப் போட்டுக் கேட்டாக்க சும்மா அப்படியே தூக்கிடுங்க. அந்த சொர்க்கத்தில மெதக்கறாப்பல இருக்குங்க. இப்பெல்லாம் 'பெத்தட்டின்' **Injection** ஒண்ணு போட்டாத்தான் சரிப்படுதுங்க.

நான் ஒரு ஊசி போட்டுக்கற வரைக்கும் கொஞ்சம் **Wait** பண்றீங் களா? ஒரு நல்ல பாட்டா போட்டு விடுறேன். கேட்டுகிட்டு இருங்க.

இந்த ஒரு பாட்டுக்காகவே 'காதல் தேசம்' படத்தை பத்து முறை பாத் திருப்பேங்க. இந்தப் பாட்டைக் கேக்கிறப்ப எல்லாம் எனக்கு எப்ப வும் அவ ஞாபகம்தாங்க வரும். என் மனநிலையைப் புரிஞ்சுகிட்டு எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகவே கவிஞர் இந்தப் பாட்டை எழுதின மாதிரி இருக்குங்க. அவ ஒரு பார்வை பாத்தான்னா காணுங்க. தீக்குச்சி இல்லாமலே என் உடம்பு கத கதன்னு நெருப்புப் பிடிச்சாப்பல ஆயிடுங்க. ஆமா, அவ அவங்கறனே யாரு அவன்னு கேக்கறீங்களா? அவதாங்க - நான் ஒரு கொலை செஞ் சேன்னு சொன்னேன்ல – அவளைத் தாங்க கொன்னுட்டேன்.

என் காதலிங்க. என் மனசில இடம் பிடிச்ச, நான் உண்மையாவே காதலிச்ச ஒரே பொண்ணு அவதாங்க. அவ பேரு.... எதுக்குங்க இப்ப அதெல்லாம்? செத்தாப் பொறவு பேரு என்னங்க பேரு? பொணம் தானுங்களே. வேணும்னா நாளைக்கு பேப்பர புரட்டிப் பாருங்க. விலா வாரியா எல்லாம் போட்டிருப்பான். பாட்டில வந்தாப்பல 'உன்னைக் காணவில்லையே நேற்றோடு. உயிர் ஓடிப்போனதோ காற்றோடு' ன்னு யாரெல்லாம் புலம்பப் போறாங்களோ தெரியல்ல.

அவ அழகுக்கு அடிமைப்பட்டு அவ பின்னாடி சுத்தினவங்க ரொம்ப பேருங்க. அவளுக்காக உசிரைக் கொடுக்கவும் ரெடியா இருந்த பயலுங்க நம்ம **Set** லேயே இருக்காங்க. அவளை ஒரு முறை பாத்தீங் கன்னா அப்புறம் நீங்க தியேட்டர் பக்கமே தலை வச்சுப் படுக்கமாட் டீங்க. இந்த சினிமாவில வர்ற நடிகைங்க எல்லாம் அவ முன்னாடி **Nowhere** ங்க.

அவ அழகை வர்ணிக்கணும்னா அதுக்கு ஆறு கட்டு **Note Book** கும் காணாதுங்க. அதைவிடுங்க. செத்துப் போனவளை இனி வர்ணிச்சு என்னங்க ஆகப் போகுது? **Parts Parts** ஸா வர்ணிச்சு ரசிக்கவேண்டிய அவளை இப்ப நான் பார்ட்ஸ் பார்ட்ஸாக் கூறு போட்டுக்கிட்டிருக் கேன். இதுவும் ஒரு கலை தாங்க. **Medical College** ல தவளையையும் எலியையும் தாங்க வெட்ட விடுவாங்க, அதில ஒரு **Thrill** இல்லீங்க. நெஜமான ஒரு ஆளோட உடம்ப வெட்டிறப்ப - அதுவும் இளசான ஒரு பொண்ணோட **Body** ய வெட்டிறப்ப - அந்த அனுபவமே வேறதாங்க.

சில ஆளுங்களுக்கு கோழியக்கூட சரியா வெட்டத் தெரியாதுங்க. நம்ம கூட்டாளிப்பய ஒருத்தன் இருக்கான் ரெத்தத்தைப் பாத்தாப் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ங்க. தலைய சுத்தி தரையில விழுந்திடுவான். நாம எல்லாம் அப்படி இல் லீங்க. சின்னதுல இருந்தே இந்த மாதிரி பாத்து பாத்து பழகிடிச்சுங்க. ஷாம்பெயினைப் போல இந்த ரத்தத்தோடு **Red Colour** பாக்க எவ்வளவு **Bright** ரா இருக்குதுங்க. இதையெல்லாம் ரசிக்கத் தெரியாத பயலுக தான் சும்மா பயந்து பயந்து சாவாங்க.

எதுக்கும் ஒரு துணிச்சல் 'தில்' வேணுங்க. கொலை செய்யறதுக்கு அது கொஞ்சம் ஜாஸ்தி தேவை. அவ்வளவுதாங்க. கோழியக் கொல்றதுக் குக் கூட **Art** இருக்குங்க. இந்த கயித்தில கட்டித் தொங்கவிட்டு, அது றெக்கைய அடிச்சு, காலை உதறி, வவுத்தால கழிஞ்சு... சேச்சேச் சே ...அதெல்லாம் கண்ராவிங்க.

நம்ம கையில தந்து பாருங்க. நைஸாக் கழுத்தைப் பிடிச்சு டக்கு ன்னு ஒரு **Twist**. அவ்வளவு தாங்க. ஆட்டம் குளோஸ். என்ன இம்மட்டு ஈஸியா சொல்லுறானேன்னு பாக்கிறீங்களா? எல்லாமே **Experience** தாங்க.

அணில், வவ்வாலு, புறா, முசலு ஆமை, உடும்பு, உள்ளான்னு எல் லாத்தையுமே ஒரு கை பாத்திருக்கேங்க. ஆமை ரொம்ப ஈஸிங்க. கவுத் துப் போட்டுட்டு கிறு கிறுன்னு வெட்ட வேண்டியதுதான். வெட்ட வெட் டப் **Parts** எல்லாம் துடிச்சுக்கிட்டே இருக்கும். அந்த **Movements** பார்க்க ஜோரா இருக்குங்க.

முசலு இறைச்சி ரொம்ப **Soft** ங்க. மான் அவ்வளவா கிடைக்க மாட்டுதுங்களாம். ரெண்டு மூணு தடவைதான் சாப்பிட்டிருக்கேன். நல்ல **Taste** ங்க. **By the By** சமையல் கலையிலையும் நான் நல்ல **Expert** ங்க. எனக்குப் பிரியமானதுகளை வகை வகையா சமைச்சு சாப்பிடு வேங்க. சாப்பாடு நல்ல இருந்தா ரெண்டு பிளேட் வெட்டுவேனுங்க. என்னை நீங்க ஒரு 'சாப்பாட்டு ராமன்'னு நெனைக்கலாம். பரவாயில் லீங்க. நாம வாழுறதே இந்த ஒரு ஜாண் வயத்துக்குத் தானுங்களே?

சாப்பாட்டைப் பத்திப் பேசறப்ப என்னடா நம்ம வயிறு கபக பங்கு தேன்னு பாத்தேன். வேற ஒண்ணும் இல்லீங்க. காலைல இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எதுவும் சாப்பிடவே இல்லேங்கிறது இப்பதான் ஞாபகம் வருது பிரிட்ஜில இறைச்சி ஏதாச்சும் இருக்கும். எடுத்து **Fry** பண்ணினா **Bread** டோட கொஞ்சம் சாப்பிடலாங்க. இந்த சாப்பாட்டைப் பத்தி நெனச்ச தும் அந்த 'பிஸ்தா' படத்தில வர்ற பாட்டுத்தாங்க எனக்கு ஞாபகத்து க்கு வருது. அந்த **Scene** னை இப்ப நெனச்சாலும் சிரிப்புத்தான் பொத்து கிட்டு வருதுங்க.

என்னங்க நீங்களும் 'பிஸ்தா' பின்னாடியே போய்ட்டீங்களா? பசி வந் தாப் பாத்ததும் பறந்து போயிடும்னு சொல்லுவாங்க. அது சரியாத் தான் இருக்கு. நாம ஆரம்பிச்ச வேலைய முடிக்காம நானும் எங்கேயோ போயிட்டேன் பாத்தீங்களா?

கொலையை செஞ்சா மட்டும் காணுங்களா? மத்தவங்க யாரும் சந்தேகப்படாத வகையில **Body** ய **Dispose** பண்ணனும். **Evidence** எதுவும் விட்டு வைக்காம காரியத்தை கச்சிதமா முடிக்க வேணும். அதுதாங்க முக்கியம். விஷயம் தெரியாதவங்கதான் முட்டாள்தனமா மாட்டிக்கு வாங்க.

ம்..முதலில இந்த பார்ட்ஸ்ஸ எல்லாம் **Pack** பண்ணி முடிச்சிட ணும். அப்பறம் ரூமை சுத்தமா **Clean** பண்ணிடணும். துண்டு துணுக்கு எதுவும் விட்டு வைக்கப்படாது. எல்லாத்தயும் எரிச்சு **Toilet Commode** டில போட்டு தண்ணி அடிச்சு **Flush** பண்ணிடணும். அப்பறம் இந்த தோடு, காப்பு, சங்கிலி சமாச்சாரங்க. எல்லாமே **Gold** டு தான். ஆனா தங்கம் கறதுக்காக அதுகளை மறைச்சு வச்சு மாட்டிக்கக்கூடாது. அதுங்களை யும் எங்கயாச்சும் தூரமா கொண்டு போய் கடாசிடணும். தங்கத்துக்கு ஆசைப்படுறவன் யாரும் எடுத்து வச்சிருந்து மாட்டிக்குவான். மாட்டிக் கட்டும். இந்த வேலை எல்லாம் **Complete** டா செஞ்சு முடிக்க ஒரு**Three Hours** ஆச்சும் தேவைப்படும் போல இருக்கு.

ம்..நான் தனியாவேதான் இதெல்லாத்தையும் செஞ்சு தொலைக்க வேண்டியிருக்கு. என்னங்க செய்யிறது? கூட்டாளிங்க எத்தனையோ பேரு இருக்காங்கதான். ஒரு **Phone** போட்டுக் கூப்பிட்டா அடுத்த 'நிமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்டே' 'என்ன உதவிவேணும்'னு கேட்டு கிட்டு வந்து நிப்பாங்க. ஆனா இந்த விஷயத்தில அப்படி யாரையும் கூட்டு சேர்த்துக்கிட்டா நமக்குத் தாங்க ஆபத்து. எப்படியாச்சும் விஷயம் வெளியில **Leak** ஆயிடும். இல்லேன்னா இதை வச்சு நம்மளையே **Black Mail** பண்ண ஆரம்பிச்சிடு வாங்க. எமகாதகப் பயலுக.

இதெல்லாம் தனியா செய்யிறது கொஞ்சம் **Strain** ஆகத்தாங்க இருக்கு. என்ன செய்யிறது? எப்படியாச்சும் முடிச்சுத்தானே ஆகணும். ஒழுங்காப் படிக்கலேன்னா கசாப்புக் கடையிலதான் நீ வேலை செய்ய வேண்டிவரும்னு நம்ம டாடி அடிக்கடி சொல்லுவாரு. இப்ப நான் படிச் சுப்பிட்டும் அந்த வேலையத் தாங்க செய்யவேண்டி வந்திருக்கு. நல்ல வேளை போன மாச நியூஸ் பேப்பர் எல்லாம் எடைக்குப் போடாம வீட்டி லேயே தங்கிடிச்சு. இல்லேன்னா இதுகளை **Pack** பண்ண பேப்பர் இல் லாம நான் தவிச்சுப் போயிருப்பேன்.

'ஆமா காதலிச்சேன்கிறே, அப்புறம் அவளை ஏன் நீ கொலை செஞ்சே' ன்னு நீங்க கேக்க நினைக்கறீங்க. இல்லியா**? Reason** இருக்கு துங்க. காரணம் இல்லாம நான் ஒரு எறும்பைக்கூட கொல்ல மாட் டேங்க. புத்தரோட தத்துவமெல்லாம் எனக்கும் அத்துப்படிங்க.

அவ எனக்குத் துரோகம் பண்ணிட்டாங்க. என்னை அவ **Love** பண் ணலன்னாலும் பரவாயில்லீங்க. என்கூடப் படிக்கற பனாதைப் பய - என் ஒண்ணாம் நம்பர் **Enemy** - அவனைப் போய் அவ லவ் பண்ணிட் டாங்க. செய்யலங்களா? அதுதாங்க எனக்குப் பொறுக்கல்ல. எனக்கு கிடைக்காத அவ இந்த உலகத்தில இருந்தென்ன? இல்ல செத்துத் தொலைஞ்சால்தான் என்ன? அதுதாங்க கொன்னுட்டேன்.

இந்த ரூமில வச்சுத்தாங்க அவளைக் **Close** பண்ணினேன். அவ எப்படி என் ரூமுக்கு வந்திருப்பான்னு யோசிக்கிறீங்க இல்லியா? அங்கதாங்க என்னோட அதிர்ஷ்டம் வேல செஞ்சிருக்கு. கடவுள் எப்ப வும் நம்மைப் போல ஆளுங்களுக்குத் தாங்க **Support** பண்ணுவாரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெண்டு நாளுக்கு முன்னாடி தாங்க ஒரு **Letter** எழுதி போட்டேன். அவ வீட்டு **Address** க்கு. அவங்க ரெண்டு பேரையும் பத்தி நாக்கைத் புடிங்கிக்கற மாதிரி, பச்சை பச்சையா எழுதி அனுப்பிவச்சேங்க. அந்த மொட்டைக் கடிதம் இவ்வளவு தூரம் வேலை செய்யுமின்னு நான் நினைக்கவே இல்லீங்க. பட்சி தானாவே வந்து நம்ம வலையில மாட்டிக் கிச்சுங்க.

கையில காயிதத்தையும் தூக்கிகிட்டு பத்ரகாளி கணக்கா நம்ம வீடு தேடி வந்திச்சிங்க. அப்பகூட அவ அழகு ஒரு மாத்துகூடக் கொறை யல்லீங்க. நல்லவேளையா அந்தக் கடிதம் அவங்கப்பன் கையில கெடைக்கல்லியாம். ஏன் இப்படியெல்லாம் **Cheap** பா **Behave** பண்றீங்க ன்னு கேட்டு தையத் தக்கான்னு குதிச்சா. எனக்கு கோபமே வரல்லீங்க. அவ அழகை ரசிச்சுகிட்டே அவ மேல எனக்கிருந்த காதலை உடைச்சு சொன்னேங்க. அப்ப எனக்கு அழுகையே வந்துட்டுதுங்க..

அதுக்கு அவ என்ன சொன்னா தெரியுங்களா? என்னை அவளுக் குப் புடிக்கல்லியாம். என்னைப் பாத்தாலே அருவருப்பா இருக்குதாம். நான் ஒரு குடிகாரனாம். **Drug Addict**ராம். என்னென்னமோ எல்லாம் சொல்லித் திட்டினா. என்னால தாங்க முடியல்லீங்க. என்னை ஒரு ஆம் பளையாக்கூட அவ மதிக்கல்லீங்க. என் உணர்ச்சிகளை அவ புரிஞ் சிக்கவே நெனைக்கல்லீங்க. நான் எப்ப கத்தியக் கையில எடுத்தேன், எப்படி அவளைக் குத்தினேன்னு கூட எனக்குத் தெரியாதுங்க. செத்துப் போய்ட்டாங்க. ஒரே குத்துத் தாங்க. 'பொசுக்'கின்னு சரிஞ்சிட்டாங்க. இப்படி ஆவும்னு சத்தியமா நான் நெனைக்கல்லீங்க. பாவம்க அவ. இந்த சின்ன வயசில அவளுக்கு சாவு வந்திடுச்சு. நெனைச்சா அழுகை அழுகையா வருதுங்க.

நல்ல வேளையா உங்க கிட்ட பேசிக்கிட்டே வேலை செஞ்சதில களைப்புத் தெரியல்லீங்க. வெட்டின துண்டுக எல்லாத்தையும் கடதாசி யில சுத்தி நீற்றா **Pack** பண்ணி **Suit Case** லயும் வச்சு மூடிட்டேங்க. அம்மாடி... பொண கனம் கனக்குதுங்க. நான் ஒரு மடையன். நெஜ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவே இப்ப அது பொணம் தானுங்களே. 50 கிலோ தங்கச் சிலை இப்ப இந்த **Suit Case**க்க அடக்கம். இதை கடத்துறது தான் இனி அடுத்த வேலை.

இதைக் கொண்டிட்டுப்போய் நைஸா கடல்ல கவுத்துப்புட்டா அம்புட்டுத் தாங்க. நம்ம பாரம் கொறைஞ்சிடும். மீனுகளுக்கு ஒரு வேளை தீனியாயிடும். ம்..பொழுதும் சாஞ்சிடிச்சு.. இன்னும் கொஞ்ச நேரம் இருட்டு மட்டும் காத்திருக்கணும். **Wait until dark**. இன்னும் ஒரு ரெண்டு மணி நேரம் கடந்திடிச்சின்னா ஊரும் உறங்கிடும். நம்ம வேலையும் ஈஸியா முடிஞ்சிடும்.

அவ நம்மைத் தேடி வந்த விஷயம் யாருக்கும் தெரியப்போற தில்லை. அவளை நான் கொலை செஞ்ச விஷயமும் தெரியப்போற தில்லை. எந்தத் தடயமும் வைக்காமலே கச்சிதமாக் காரியத்தை முடிச் சிட்டேங்க. நல்ல வேளையா நான் எழுதின மொட்டைக் கடிதத்தைக் கூட அவ கையோட கொண்ணாந்திருந்தா. அதுவும் கூட இப்ப சாம்ப லாப் போயிடிச்சு.

தப்பு ஏதும் வந்திடாம ரொம்ப அவதானமா காரியம் நடத்தணும். வீட்டு வாசல் பக்கமா போகக்கூடாது. பின் வழி தான் **Safe**. ஆட்டோ வில் எல்லாம் போகப்படாது. அப்புறம் ஆட்டோ ட்ரைவரப் போட்டு உருட்டி மெரட்டினா கதை கந்தலாயிடும். தனியா செய்ய ஆரம்பிச் சாப்பல தனியாவே தான் செஞ்சு முடிக்கணும். நம்ம **Motor Bike** ல பின்னாடி வச்சு டக்குன்னு போயிடலாம். கொஞ்சம் பொறுங்க பின் கதவைத் தொறந்து வச்சிட்டு வந்துடறேன்

அப்பாடா எல்லாம் ஓக்கே. இப்பதான் நிம்மதியாயிருக்கு. ம்.. வெளிய யாரோ ஓடுற மாதிரி சத்தம் கேட்குதே.. உங்களுக்கு கேக்கல் லியா? எனக்கு கேட்டுதுங்க. கதவில வேற யாரோ தட்டுறாங்க. யாராயி ருக்கும்? ஆ... இன்ஸ்பெக்டர்!

என் நெஞ்சுத்துடிப்பு ஒரு கணம் நின்னு போயிடிச்சுங்க. திக்கினு ஆகிப்போச்சுங்க. வேற ஒண்ணும் இல்லீங்க. விஷயம் என்னான்னா யாரோ ஒரு கொலைகாரபய ரிமாண்டிலே இருந்து தப்பி ஓடியாந்திட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டானாம். அவனைத் தேடித்தான் வந்திருக்காரு. அதுதானே பாத்தேன். நாம கொலை செஞ்சது ஒரு குருவிக்கு கூட தெரியாதே. கொஞ்ச நேரம் ஆடிப்போய்ட்டேங்க. "**Sorry for the disturbance**"ன்னு ரொம்ப மரியாதையா சொல்லிட்டு அவர் புறப்பட்டாப்புறம்தான் என் நெஞ்சுக்க தண்ணியே வந்திச்சு.

வாசல் வரைக்கும் போனவர் ஏன் திரும்பிப் பாக்குறாரு.. நானும் இப்பத்தாங்க கவனிச்சேன். எங்க இருந்து எப்ப வந்திச்சோ தெரியல்ல ஒரு கறுத்தப் பூனை. மியாவ் மியாவ்ன்னு கிட்டு, நாக்கை வேற சுழட்டி கிட்டு, நம்ம சூட்கேசையே சுத்தி சுத்தி வந்து நக்கிகிட்டு நிக்குது.. சனியன். எனக்கு வந்த ஆத்திரத்தில.. கத்திதான் கையில அம்பிட்டுது. பூனையத் தொரத்துறதுக்கு நான் கத்திய எடுத்துகிட்ட மாதிரில தான் தப்பு பண்ணீட்டேன் போல.

போகப்புறப்பட்ட இன்ஸ்பெக்ட்டர் திரும்பி வந்தாரு. சந்தேகத்தோட அவர் பார்வை சூட் கேசில் பதிஞ்சுது. அப்பவே எனக்குப் புரிஞ்சு போச்சுங்க - வசமா நான் மாட்டிகிட்டேன்னு. பூனை ஒண்ணு குறுக்க பூந்து காட்டிக்குடுத்து எல்லாத்தையும் கவிட்டிருச்சு பாத்தீங்களா? ம்.. நான் போட்ட கணக்கு தப்பாத்தான் போயிடிச்சிங்க. இனித் தப்ப முடியாதுங்க. தூக்கு கயிறு நிச்சயம். அதில சந்தேகம் இல்லீங்க. குத்தம் செஞ்சவன் எப்படியாச்சும் பிடிபட்டுத்தானே ஆகணும், உப்பைத் தின்னவன் தண்ணி குடிச்சுத்தானுங்களே ஆகணும்.

[*'இசையும் கதையும்' நிகழ்ச்சிக்காக எழுதப்பட்டு இலங்கை வானொலி, 'வானம்பாடி' சேவையில் ஒலிபரப்பானது.*]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்மதனுக்கு அம்னீஷியா!



மன்மதன் அவன் உடலைக் குத்தகைக்கு எடுத்திருந்தான். கல்யாணம் கட்டி ஆறேழு வருடங்கள் கழிந்துவிட்ட இந்த வயதிலும் அவன் மட்டும் ஜெமினிகணேசனைப்போல [கமலைப்போல/சூர்யாவைப் போல என உங்கள் வயதுக்கேற்ப உவமையை மாற்றிக்கொள்ளுங்கள்] கன்னியரைக் கவர்ந்திழுக்கும் வசீகரத்துடன் இன்னும் இளமையாகவே இருக்கிறான்.

அவன் மனைவியோ காற்றடித்த பலூன்போல தொக்கையாக, கண்ணராவியாக மாறிவிட்டாள். அவனுக்குச் சலிப்புத்தட்டிவிட்டது. திரும்பத்திரும்பப்பார்க்கிற ஒரே முகங்கள், தெருக்கள், மனைவி, பிள்ளைகள். சுற்றிச்சுற்றி ஒரே வட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கும் வாழ்க்கை. ஏதாவது மாற்றம் தேவை. உள்ளூரில் உழாத மாடுதான் அவன். ஆனாலும் வெளிநாடுபோய் என்றாலும் வெட்டிப் பிளக்கப் போகிறேன் என்ற வாய்ச் சவடாலுடன் கொழும்புக்கு வந்து சேர்ந்துவிட்டான்.

இந்தியாவைக் கண்டுபிடிக்கப் புறப்பட்ட கொலம்பஸைப் போல கொழும்பு நகர வீதிகளின் நெரிசலுக்குள்ளே தடுமாறி, மலங்க மலங்க விழித்துக்கொண்டு நின்றவனின் வழியில் வழுக்கி வந்த அவளின் கார், அவனை மட்டுமல்லாது அவன் வாழ்க்கையையும் புரட்டிப் போட்டுவிட்டது.

ஆஸ்பத்திரிக் கட்டிலில் அனாதரவாகப் படுத்திருந்த அவன் கண் விழித்துப் பார்த்தான். சொர்க்கம் பக்கத்தில் உரையாடிக்கொண்டு நின்றது - ஒரு டாக்டருடன். அந்த அழகுக் குவியலை தன் கண்களால் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளிப் பருகிக் கொண்டிருக்கும் இந்த **Gap**பில் அவளைக் கொஞ்சம் வர்ணித்துவிடலாம். [ஆனால் எதை வெட்டலாம் என்று கத்தரிக் கோலைத் தீட்டி வைத்துக்கொண்டு 'இருக்கிற[ம்]' கொம்பனிக்கு 'வாசி' யாகப் போய்விடும் என்ற காரணத்தால் நாமே சென்சார் பண்ணி வர் ணிப்பை விட்டுவிடுவோம்]

ஆனாலும் இந்த இடத்திலாவது அந்தக் காதல் மன்னனுக்கும் அந் தக் காதலிக்கும் ஏதாவது பெயர் வைத்துத் தொலைத்தால்தான் சரி. வசதி கருதி அவனுக்கு ஜெமினி என்றே வைத்துவிடுவோம். அவளுக்கு சரோஜாதேவி, தேவிகா, ராஜஸ்ரீ, பத்மினி, வைஜயந்திமாலா வகைய றாக்களின் ஏதாவதொன்றைச் சீட்டுக்கு குலுக்கி எடுத்ததில் தேறியவர் வைஜயந்திமாலாதான். அந்த 'ஓஹோ எந்தன் பேபி'யைக் கற்பனை செய்துகொண்டால் வர்ணிக்கிற 'பஞ்சி' இல்லை!

வைஜயந்திமாலா நல்லவேளையாக டாக்டருடன் தமிழில்தான் கதைத்துக்கொண்டிருந்தாள். எங்கள் காதல் மன்னனுக்குச் சுட்டுப் போட்டாலும் (யாரை?) ஆங்கிலம் வராது. சிங்களமோ சொல்லத் தேவை யில்லை – சிதம்பர சக்கரம்.

"**24** மணி நேரத்துக்குப் பிறகுதான் சொல்லலாம்"

"சிலநேரம் நினைவு திரும்பாமலும் போகலாம்"

"அம்னீஷியாவா?"

சில வார்த்தைகளும் சொற்களும் ஒன்று பாதியாகக் காதில் வந்து விழுந்தன.

'அம்னீஷியா!' எத்தனை படங்களில் பார்த்திருக்கிறான். எத்தனை கதைகளில் வாசித்திருக்கிறான். எதிர்பாராத திருப்பம். ஆகா! என்ன ஒரு வாய்ப்பு! அந்தக் கணமே அவன் தீர்மானித்துவிட்டான். தான் செல்லவேண்டிய பாதை எதுவென்று. அந்த அழகு ரதத்தைச் சொந்த மாக்கி அவளுடன் ஆனந்த ஊர்வலம் வரும் காட்சி அவன் மனக் கண் ணில் விரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமாம். நீங்கள் நினைப்பதுபோல மாலா பணக்கார வீட்டுப் பெண்தான். அவள் ஓட்டி வந்த காரில்தான் இந்த ஜெமினி அடிபட்டு இப்போ ஹாஸ்பிட்டலில் கிடக்கிறான் என்பதையும் நீங்கள் ஊகித்தி ருப்பீர்கள். நீங்களும் எத்தனை தமிழ்ப் படங்கள் பார்த்திருப்பீர்கள். உங் கள் கற்பனை மட்டும் என்ன சாமான்யமானதா?]

எனக்கு என்ன நடந்திச்சு? நான் எங்கே இருக்கேன்? நான் யாரு? என் பேர் என்ன ? ஐயோ! எனக்கு எல்லாமே மறந்திடுச்சே" – யாழ்ப்பா ணத் தமிழைத் தவிர்த்து மாலா பேசிய தமிழிலேயே புகுந்து விளையா டினான் ஜெமினி. அவன் கல்லூரி மேடையில் பெற்ற 'மிமிக்ரி' அனுப வம் அவனுக்குக் கை கொடுத்தது **Sorry** வாய் கொடுத்தது.

அவனே எழுதி அவனே நடித்த நாடகத்தில் அவன் எதிர்பார்த்தது போலவே அந்தத் திருப்பமும் ஏற்பட்டது. மாலாவின் அனுதாபம் காலப் போக்கில் காதலாகக் கசிந்து, கனிந்து மாலாவும் அவளது தந்தையின் திரண்ட சொத்தும் [மொத்தமாக எவ்வளவு என்று இன்னும் சரியாகக் கணக்குப்பார்க்கப்படவில்லையாம்.] அவனுக்குச் சொந்தமாகப் போகி ன்றன. இனிப் பாலைக் குடித்துப் பழத்தை முழுங்க வேண்டியதுதான் பாக்கி.

ராஜபக்ஷவின் புண்ணியத்தில் நல்லவேளையாக[?]த் திறந்திருந்த **A-9** பாதை மீண்டும் மூடப்பட்டுவிட்டது. அவனது வேடம் இப் போதைக் குக் கலையப்போவதில்லை. வாழ்க ராஜபக்ஷ! அங்கு யாழ்ப்பாணத் தில் வழி மேல் விழி வைத்துக் காத்திருக்கும் அவன் மனைவி சாவித்திரி [பெயர் சரிதானே?] எந்த எமனிடம் போய் ஜெமினியை மீட்க மனுக் கொடுப்பது என்று தெரியாது முழிசிக்கொண்டிருக்கும் சங்கதி ஜெமினி க்கோ இந்தக் கதைக்கோ தேவையில்லாதது.

மண நாளும் குறித்து, மண்டபமும் ஒழுங்கு பண்ணி, அழைப்பித ழும் அடித்துக்கொடுத்து, கோட் சூட்டும் ஆர்டர் பண்ணித் தைப்பித்து எல்லாம் 'ரெடி'. நாளை விடிந்தால் அவன் புது மாப்பிளை. அலுமாரி யின் உள்ளிருந்து கண் சிமிட்டும் வெளிநாட்டு 'விஸ்கி'யில் ஒரு 'பெக்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[வெறும் **30 ml** தாங்க] அடித்து விட்டுக் குதியாட்டம் போடத் துடிக்கும் மனக்குரங்கைக் கஷ்டப்பட்டு அடக்கிவிட்டுக் காத்திருக்கிறான் ஜெமினி.

**Facial** செய்கிறேன் பேர்வழி என்று 'பியூட்டிப் பார்லர்'க்குக் காரை எடுத்துக் கொண்டுபோன மாலாவைத்தான் இன்னும் காணோம். 'டிக் டிக் டிக்' கடிகார முள்ளைப்போல அவன் நெஞ்சமும் துடிக்க ஆரம்பித்து விட்டது. 'கிர்ரீங்...' டெலிபோன் அலறியது. ஓடிச்சென்று அதை எடுத்துக் காதில் ஒற்றிக்கொண்ட மாலாவின் தந்தை கலவரமானார். அடுத்த அரைமணி நேரத்தில் உறவினர் படை ஆஸ்பத்திரியை முற்றுகையிட்டது. அதே ஆஸ்பத்திரி; அதே கட்டில். என்ன ஒரு ஒற்றுமை! நல்ல வேளையாக மாலாவுக்கு அடியொன்றும் பலமாகப்படவில்லை. ஆனாலும் மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்த மாலாவின் இயல்பில் ஏதோ ஒன்று ; மிஸ்ஸிங்' !

'மாலா' என்று உரிமையுடன் அவள் கையைப் பற்றப்போனான் ஜெமினி. அவன் சற்றும் எதிர்பாராத மாதிரி அவனுடைய கையை உதறித் தள்ளிய மாலா மிரட்சியுடன் கேட்ட ஒரே கேள்வி....

யார் நீங்கள்?"!

*['இருக்கிறம்' - 15.05.2010 இல் பிரசுரமானது]*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டுக்குப் பூட்டு !

**[MGR ரசிகர்களுக்கு மட்டும்!]**



இந்தக் கதையின் நாயகன் ரபீக்கைப் பற்றிப் பெரிதாகச் சொல் வதற்கு ஒன்று மில்லை. அதனால் சின்னதாக அவனைப் பற்றிய ஓர் அறி முகம்.

கொழும்பு, கிராண்ட்பாஸ் ரோட்டில் '**MGR** ஓடியோ வீடியோ மியூ சிக் கோணர்' என்ற போர்டைத் தாங்கியபடி மூலையில் நசுங்கிப்போன மாதிரி இருக்கும் ஒரு கடையைச் சில வேளைகளில் நீங்கள் கண்டிருக் கலாம். அந்தக் 'கோணரின்' ஓணர்தான் எங்கள் ரபீக்.




முகமட் கயூம் ரபீக் என்றதன் சுருக்கம் தான் அந்த **MGR**. ஆனாலும் ரபீக்கும் ஒரு எம்ஜியார் அபிமானியேதான். அதனால் எம்ஜி யாரின் பெயரை வைத்துப் பிழைப்பு நடத்தும் பல்லாயிரக் கணக்கான பேர்வழிகளில் ஒரு வனாக ரபீக்கும் தனது ஓடியோ வீடியோக் கடையில் எம்ஜியார் நடித்த படப் பாடல்க ளையே காலையில் திருக் கதவம் திறப்பது முதல் மாலையில் மூடும் வரை அலறவிட்டுத் தனக்கெனச் சில வாடிக்கையாளர்களை வசப் படுத்தி இருந்தான்.

அன்று காலை எல்லோருக்கும் வழமை போலத்தான் விடிந்தது. ஆனால் ரபீக்குக்கு மட்டும் அது நரி முகத்தில் விடிந்தது. கலைமகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரில் தரிசனம் தந்தாற்போல தன் கடை தேடிவந்த தங்கச் சிலையைக் கண்டு வார்த்தைகள் வெளியே வராமல் தடுமாறி நின்றான் ரபீக்.

'நினைத்தேன் வந்தாய் நூறு வயது' என்று வேளையறிந்து வர வேற்புப் பாடியது வாயில்லாத அந்த நன்றியுள்ள 'கஸெட் செற்'.

ரபீக்கின் பார்வை மேனியில் மெல்லப் படர்ந்து வருட, கலைமகள் - ஆமாம் அவள் பெயரே அதுதான் - கொஞ்சம் அவஸ்தையாகவும் கொஞ்சம் விவஸ்தையற்ற விருப்பமாகவும் உணர்ந்து சங்கடப்பட்டாள்.

'வழியிறதுகின்னே சிலதுக பொறந்திருக்கு போல' அழகின் கர் வம் தனக்குள் அரற்றியது.

'அந்தப்பாட்டைக் கொஞ்சம் **stop** பண்றீங்களா? காதைக் கொடை யுது' கர்வம் ஆணையிட்டது.

எம்ஜியாருக்குப் பொறுக்கவில்லை. [இது அவரல்ல. நம்ம ரபீக்!] ''ஏன் மிஸ் நம்மட எம்ஜியார் படப் பாட்டு. ஜாதி படமில்லியா? நம்ம கிட்ட வீடியோ கொப்பி ஈக்கு. ....ஹி..ஹி. காவல்காரன்..." பூச்சிப்பல் தெரிய இளித்தான் ரபீக்.

"நீங்க இந்தக்கடை ஓனரில்லையா ? ..வாச்மனா ?"

"நோ..நோ.. நான் தான் காவல்காரன். **Sorry Sorry**.. .ஓனர்.. சேல்ஸ் மன் டெக்னீஷியன் ஓல் இன் வண்...ஹி..ஹி... இந்த.. ஓடியோ செட் கண க்கா எல்லாம் நான் தான்..." உளறிக்கொட்டிக் கிளறி மூடி அசடு வழிந் தான் ரபீக்.

வாழைத்தண்டென வழு வழுத்த அவளது தோளில் வௌவால் எனத் தொங்கிய **Hand bag** ஐ அவளது வளைக் கரம் மெல்லெனத் திறந் தது. அது அலிபாபாக் குகை போல ஆவென விரிந்தது. உள்ளிருந்து ஓர் அழகு சாதன சாம் ராஜ்யமே எட்டிப் பார்த்தது.பிரமிப்பில் ரபீக் வாய் பிளந்தான். தருணம் பார்த்திருந்த மாட்டிலையான் ஒன்று அவசரமாக அவன் வாயுட் புகுந்து சுற்றுலா ஒன்று நடத்தி மீண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Bag** ஐக் குடைந்து உள்ளிருந்து முதலில் ஒரு கைக்குட்டையை எடுத்து வெளியே வைத்தாள். 'சென்ற்' வாசம் கமகமத்து மூக்கைக் கவ்வியது. அடுத்து ஒரு குட்டிப் **Purse** முயற்குட்டி போலத் துள்ளி விழுந்தது. மர்மப் படம் பார்ப்பது போல் ரபீக் ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான். **Purse** ஐத் திறந்து அவள் எடுத்தது - ஒரு சின்னஞ் சிறிய துண்டுக் காகிதம். பக்குவமாக அதை அவனிடம் நீட்டினாள்.

"இந்த லிஸ்டில் இருக்கிற பாட்டுக உங்ககிட்ட இருக்கா?" சவால் விடுவது போலிருந்தது அவள் கேட்ட தோரணை.

"எங்ககிட்ட இரிக்காம போவுமா?" நம்பிக்கையுடன் ரபீக்கின் விழிகள் துண்டை மேய்ந்தன. 'பூமியில் மானிட ஜென்மமடைந்துமென்...', 'தீன கருணா கரனே நடராஜா....', 'காதல் கனிரசமே...' ரசமும் சாம்பாறும்.. என்னடா இது.. இந்த எம்ஜியாருக்கு வந்த சோதனை?' தனக்குள் புலம்பிக் கொண்ட ரபீக்கின் முகம் **Dust** பட்ட **Tape** போல சவண்டு போனது.

"என்ன இதெல்லாம் உங்ககிட்ட இல்லியா..?" எகத்தாளமான அவள் கேள்வி அவனை உலுக்கியது. "உன்னழகைக் காண இரு கண்கள் போதாதே..." ரபீக் முணுமுணுத்தான்.

கலைமகளின் கண்கள் கோபத்தில் கனலைக் கக்கின. "ராதே உனக்கு கோபம் ஆகாதடி.." அப்பாவியாக ரபீக்கின் வாய் பாடலை அசை போட்டது.

"என்ன மிஸ்டர், வாய் மிச்சம் நீளுது?" கண்ணகியாகச் சீறினாள் கலைமகள்.

"பாட்டு வேணுமா உனக்கொரு பாட்டு வேணுமா?" – அவள் கொடுத்த லிஸ்ட்டோடு ஒன்றித்துப் போயிருந்த ரபீக் அவளின் கோபக் குறிப்பை உணராதவனாக ராகமிழுத்தபடியிருந்தான்.

"பூட்டுத்தான் வேணுமிப்ப... உம்ம வாயப் போட்டுப்பூட்ட.." எனப் படபடவென அவள் பொரியத்தான் யதார்த்த உலகுக்கு மீண்டான் ரபீக்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாகத் தன்னை சுதாகரித்துக்கொண்டு "மிஸ்... **You misunderstood me** ....'பாட்டு வேணுமா' செல்லியும் ஒரு பாட்டுக்கேட்டு எழுதியிரிக்கி இதில.." என அவள் தந்த லிஸ்ட்டை நீட்டியபடி ஏறிட்டு அவள் அழகை மீண்டும் ஒரு முறை மாந்தி மகிழ்ந்த வேளை ரபீக்கின் செவிகளை அவளின் வார்த்தைகள் குளிப்பாட்டின.

"Oh, yes...I am sorry.."

"Oh, don't worry...by the by.. மிஸ்...இந்த டச்சுக் காலப் பாட்டெல் லாம் எங்க ஈந்து தேடி பொறக்கிட்டு வந்தீங்க?" அசட்டுத் துணிச்ச லுடன் துடிப்பாகவே கேட்டுவிட்டான் ரபீக்.

"டச்சுக்காரப் பாட்டா? Mind your words mister. Old is gold. Don't you know that? "

கொண்வென்ற ஆங்கிலம் சரளமாகச் சதிராட மேல் நாட்டு மருமகளாகக் கலைமகள் சாடினாள். பெட்டிப் பாம்பாகிவிட்டான் ரபீக்.

"அப்படீன்னா, இந்தப் பாட்டெல்லாம் உங்ககிட்ட இல்லியா?" சலிப்புடன் உதட்டைப் பிதுக்கினாள் அந்த ஊதாப்பூ உதட்டழகி.

"ரேடியோ சிலோனில தேடினாக் கூட இதெல்லாம் அம்பிடாது மிஸ்... எங்க சரி பழைய தோசைக்கடேலதான்...." வார்த்தைகளை அவன் முடிக்கு முன் இடைவெட்டினாள் அவள் "Oh, stop your nonsense..."

"சொறி மிஸ்.. இந்தக் கடைய நான் தொறந்த சீருக்கு நீங்க ஒராளுதான் இப்படியான பாட்டு கேட்டு வந்திருக்கீங்க.. எனக் கொரு டவுட்டு மிஸ்...

"Doubt...? Come out ...What's it?"

ஒங்களுக்கிந்த போன பொறவி ஞாபகம் கீபகம் எதுசரி வர் றதா? ஐ மீன் நீங்க மறு பொறப்பு பொறந்து வந்தீக்கிற தேவதை யான்னு செல்லி ...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரபீக் வார்த்தைகளை முடிக்கு முன்பாக வெண் பற்கள் பளீரிட அவள் முகம் புன்னகையால் விகசித்தது.

'இந்தப் புன்னகை என்ன விலை?' என்ற எம்ஜியார் காலப் பாட் டைத் தட்டிவிட மனம் உந்தினாலும் தனது மனத்துக்குக் கடிவாள மிட்டுக் கொண்டான் ரபீக்.

"நோ..நோ.. இதெல்லாம் எங்க கிராண்ட் பாக்கு.." மிரளும் மான் விழியாள் மருள் நீக்கினாள்.

ஒங்க கிராண்டபாவும் இந்த கிராண்ட்பாசிலதான் ஈக்காரா? அதுதானே பாத்தேன்.... நான் ஒரு லடுக்கா.. நீ ஒரு லடுக்கி...."

"என்ன துடுக்கா...?" முறைத்தாள் அவள்.

"ஒரு முறை உந்தன் நெஞ்சை எந்தன் காதில் வைத்துக் கேள டியோ..."

"நான் ஒன்னும் டொக்ட்டர் இல்ல ஐஸே..."

"சின்னச் சின்னக் காதல்.. கண்ணுக்குள்ள காதல்...."

"கத்திரிக்கா..."

"நோ.. நோ... வெள்ளரிக்கா பிஞ்சு வெள்ளரிக்கா..."

"முறையா யாருகிட்டயாச்சும் வாங்கத்தான் போகுது ஆள்..." முணுமுணுத்தாள் அவள் தனக்குள்.

"குமுதம் போல வந்த கொளவியே... சொறி... குமரியே..."

" This is too much Mr....."

"இந்த மாதிரிப் பாட்டுகளைத்தானே இப்ப எல்லாம் தேடி வர் றாங்க.. நீங்கதான் கொஞ்சம் வேற மாதிரி..." அவன் சொல்லி முடிக்கு முன் கத்தரித்தாள் அவள்.

"சரி சரி.. லிஸ்டத்தாங்க.. நான் வேற எங்க யாச்சும் ட்ரை பண் ணிப்பாக்கறேன்.." பறித்தெடுக்காத குறையாகத் துண்டை வாங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு போனவளின் நடையின் பின்னாலே மனம் விடைபெறத் துடித்தது. எதேச்சையாக விரல் tape recorder பட்டனைத் தட்ட "பெண் போனால் இந்தப் , பெண் போனால்.. அவள் பின்னாலே என் கண் போகும்..." பொருத்தமாக அதுவும் பாட்டிசைத்து.

தோன்றி மறைந்த மின்னலைப்போல, சென்று மறைந்து விட்ட சுந் தரியாளைச் சுற்றியே எண்ணப்பறவை சிறகடித்து வட்டமிட, சிற கொடிந்த பறவை போல, தொப்பியை மறந்த எம்ஜியார் போல தளர்ந்து போனான் ரபீக்!

கூட்டமேயில்லாத தியேட்டரில் ஈயோட்டிக் கொண்டிருப்பவ னைப் போல ரபீக்கின் வாழ் நாளில் இரண்டு வாரங்கள் வெறுமனே ஓடிக் கழிந்தன.

பட்டுக்கோட்டையாரின் 'தூங்காதே தம்பி தூங்காதே' பாடல் அவனது சொந்தக் கடையிலேயே தற்செயலாக ஒலித்து அவனைத் தட்டி எழுப்பியபோதுதான் அவன் மீண்டும் புத்துயிர் பெற்றுச் சுறு சுறுப்பானான்.

மீண்டும் ஒரு காலை விடிந்தது. காலஞ்சென்ற சாண்டோ சின் னப்பா தேவரை உருக்கி வார்த்தாற் போல – அவரின் மறுபிறவி போல ஒரு தனிப் பிறவி கண்ணாடிக் கதவைத் தள்ளித் திறந்தபடி உள்ளே நுழையவும், 'என்னதான் நடக்கும் நடக்கட்டுமே' என்று TMS முழங்க ஆரம்பிக்கவும் சரியாக இருந்தது.

அவரது ஆகிருதியைப் பார்த்துக் கொஞ்சம் ஆடிப்போய்விட்ட ரபீக்குக்கு 'வாத்தியார்' தான் மானஸீகத் துணையானார். இப்படி எத் தனை சாண்டோக்களைப் பந்தாடியவர் அவர். "வாங்க.. வாங்க.." என்று சுரத்தில்லாமல் வரவேற்றவனின் மன ஓட்டமோ தறிகெட்டு ஓடி யது.

'ஆளைப்பாத்தா சாண்டோ கணக்கா ஈக்காரு. மேலயும் கீழயும் உத்து உத்துப் பாக்காரு. என்ன பலாயோ..' என அது சங்கடப்பட்டாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் வழமைபோல வடை சுட ஆரம்பித்தது. " என்ன பாக்கீங்க? 'நாட் டாமை' ஓணுமா?.. இல்ல 'நண்டு' ஓணும்னாலும் புதுசா வந்தீக்கி.." என்று மென்று விழுங்கிய ரபீக்கையே முழுதாக மென்று முழுங்கி விடு வதைப்போலப் பார்த்தார் சி.தே. [ஆள் யாரென்று தெரியாததால் தற் போதைக்கு சி.தே. என்று - அதாவது சின்னப்ப தேவரின் சுருக்கம் – நாமும் வைத்துக்கொள்வோம்.]

"நாட்டாமையும் கடலாமையும்.... இது என்ன கறிக்கடையா நான் ஆமை வாங்கறதுக்கு?" உறப்பியது சி.தே.

"ஹி..ஹி.. நான் அந்த ஆமையை செல்லேல்ல வாப்பா. . நாட் டாமை படக் கொப்பி ஓணுமான்னுதான் கேட்டேன்... நண்டு செல்லியும் படம் தான்.. .ஒரிஜினல்...ஹி..ஹி..." ஏஸி அறைக்குள்ளும் வியர்த்து வழிய துடைத்தபடி அசடு வழிந்தான் ரபீக்.

"நீ தான் முதலாளியா?" முழங்கியது சி.தே.

"தாரு நடிச்சது.... ராஜசேகரா இல்ல நம்ம சரத்குமாரா? அப்படி ஒரு படம் ரிலீசான மாதிரி தெரியில்லியே.. 'எவனா இருந்தா எனக் கென்ன?', 'நான் தாண்டா போலீஸ்', 'இது தாண்டா சாட்சி'"

"தம்பி, கொஞ்சம் மருவாதையாப் பேசுங்க.."

"ஐயையோ, நீங்க Misunderstand பண்ணிட்டீங்க...அதெல்லாம் நம்ம தமிழ்ப் படப் பேருங்க..."

"படமும் பப்படமும்...." பொரிந்து தள்ளிய சி.தே. பாக்கட்டினுள் கையைவிட்டு வெளியே எடுத்தது - நல்லவேளை துப்பாக்கியல்ல. **Cassette** தான். " இது இங்க பதிச்சது தானே?"

அவர் நீட்டிய **cassette** டில் ரபீக்கின் விழிகள் பதிந்து மீண்டன.

"**MGR Audio Video Corner** செல்லி லேபிள் ஒட்டி ஈக்கில்லியா..? அது சுட்டி நம்மட தான்.." பெருமையுடன் பறைசாற்றிக் கொண்டான் ரபீக்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதில என்ன பாட்டெல்லாம் அடிச்சிடிருக்கேன்னு தெரியுமா?"

"பாட்டு எதுசரி அசடா ஈக்கா? ஈக்காதே...... நம்மட வேலைல மிஷ்டேக் ஈக்கின்னு தாரும் சென்னது இல்லியே.."

'நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்...'என்று கால நேரம் தெரியாமல் கதறிக் கொண்டிருந்தது ஸ்பீக்கர்.

"அந்த எழவுப் பாட்ட நிறுத்திப்புட்டு இதை ஒருக்கா போட்டுப் பாரு தெரியும்.." சவால் விடுவது போலிருந்தது சி.தேயின் குரல்.

டேப் ரெக்கோடரில் அவர் தந்த காஸெட்டைப் போட்டு **play button** ஐ அழுத்த அது 'ஏமாறாதே ஏமார்றதே...' என்று அலறியது.

"பாட்டு நல்லாத்தானே வந்தீக்கு..!' அடிமைப்பெண்ணை மனதில் அசை போட்டபடி ரபீக் இழுக்க.. இடை மறித்தார் சி.தே. " பாட்டு நல்லாத்தான் வந்திருக்கு.. ஆனா இந்தப் பாட்டுகளால என் மகளோட வாழ்க்கையில்ல பாழாயிடிச்சு... அது தெரியுமா உனக்கு?" புதிர் போட்டார் சி.தே.

"மிச்சம் சூடா வந்தீக்கீங்க போல.. கூலா சோடா எது சரி குடிக்கீங்களா? முன்னால ஈக்கிறது நம்மட நானாட கடைதான். வேங்கி தாறதா? நம்மட கடை பிரிட்ஜ் ரிப்பேரா போயிடிச்சு..ஹி..ஹி.."

"பிரிட்ஜ் மட்டும்தான் ரிப்பேரா? நீயுமிப்ப ரிப்பேராத்தான் போயிருக்கே.. நான் ஒருக்கா கை வச்சா எல்லாம் சரியா வரும்.."

"அட, நீங்க இந்த டீவி, பிரிட்ஜ் மெக்கானிக்கா? வாசி இல்லியா..!"

"வாசியா இல்ல சிவாசியான்னு கொஞ்ச நேரத்தில காட்றேன் ஒனக்கு.."

"தங்கப் பதக்கம் சிவாஜி கணக்கா ஜம்முனு இரிக்கீங்க.. மிச்சம் பீல் ஆவாம உங்கட ஸ்டோரிய கொஞ்சம் செல்லுங்களேன் வாப்பா.."

"நான் என்னோட கதையை சொல்றதுக்கு இங்க என்ன படமா எடுக்கறீங்க? பிளான் பண்ணிப் பாட்டெல்லாம் பதிச்சுக் குடுத்து. என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மவளோட வாழ்க்கையை நாசம் பண்ணிப்புட்டியேடா பாவி.." சிவாஜியைப் போல உணர்ச்சி வசப்பட்டார் சி.தே.

'ஏமாறாதே ஏமாற்றாதே..' முடிந்து 'தைரியமாகச் சொல் நீ மனிதன்தானா.?' என்று சி.நீ. கொடுத்த காஸெட் இப்போ கேள்வி கேட்கத் தொடங்கியிருந்தது.

'பாத்தியா, என்னமாதிரி எழவுப் பாட்டெல்லாம் அடிச்சிருக்கேன்னு.. பிசினஸில இருக்கவங்க கொஞ்சம் அப்படி இப்படித்தான் இருப்பாங்க.. அதுக்காக அவங்களை போய் நோண்டிற மாதிரி பாட்டுப் போட்டா கோவம் வருமா இல்லியா?' 101 டிகிரியில் கொதித்தார் சி.தே.

தலையும் புரியாமல் வாலும் புரியாமல் முழி பிதுங்கி நின்ற ரபீக் ஆடு திருடிய கள்வனைப் போலத் தலையைத் தலையை ஆட்டினான்.

"நம்ம சின்ன மாப்பிளை, சிவாசியோட பரம ரசிகர்.. நீ என்னடான்னா போயும் போயும் அந்தாளு பாட்டா அடிச்சு வச்சிருக்கியே..?"

"போயும் போயும் மனிதனுக்கிந்த புத்தியைக்கொடுத்தானே..." என்று சமய சந்தர்ப்பம் தெரியாமல் அடுத்த பாட்டுக்குத் தாவியது பாழாய்ப்போன அந்த காஸெட்!

"தாரு சரி லிஸ்டில் எழுதிக் குடுக்கிற பாட்டத்தான் நாம அடிச்சுக் குடுப்பம்.." சுரத்தில்லாமல் முணுமுணுத்தான் ரபீக்.

"குடுத்தே பெரிசா...கெடுத்துட்டியேடா பாவி. என் மக வாழ்க்கைய இந்தா பாரு அவ குடுத்த லிஸ்ட்டை..."

தேய்ந்துபோன ரெக்கோடாக சி.தே. ஒரே பாட்டையே பாடிக் கொண்டிருந்தார். " இந்தா பாரு அவ குடுத்த லிஸ்ட்டை.." அவர் நீட்டிய மஞ்சள் துண்டில் குங்குமம் ஆங்காங்கே சிதறிக் கோலம் போட்டிருந்தது. அவசரமாக அதில் தனது கண்களை மேய விட்டான் ரபீக்.

'பாலும் பழமும் கைகளில் ஏந்தி...'

'இரவும் நிலவும் மலரட்டுமே...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மடி மீது தலை வைத்து...'

'ஒரு ராஜா ராணியிடம்...' என்று அனைத்துமே சிவாஜியின் சிருங் காரப் பாடல்களாக, தெரிந்தெடுத்த சிற்றின்ப கானங்களாக நீண்டது பட்டியல். ரபீக்குக்குத் தலையைச் சுற்றியது. இப்படியாக எம்ஜியார் தனது காலை வாரிவிடக்கூடும் என்று அவன் கனவிலும் நினைத்தி ருக்கவில்லை.. 'எங்கோ பிழை நடந்திருக்கிறது... எங்கே?'

பாத்தியா நம்ம பாட்டுகளை...? 'பாலும் பழமும் கைகளில் ஏந்தி .. என்று தன் கர்ண கடூரக் குரலில் அவர் பாடி வேறு காட்டவும் பயந்து போன ரபீக் வாசற் கதவை நோக்கிப் பார்வையைப் பாய்ச்சினான். நல்லவேளையாக அது தானாகவே மூடிப்போயிருந்தது.

'ரென்சன் ஆவாம கொஞ்சம் ஒக்காந்து இருங்கோ வாப்பா... நம்மட பொஸ் தவத்தில வாறது போறது எல்லா பலாயும் குறிச்சி வச்சீக் கேன்தானே.... ஆ.. இந்தா ஈக்கு.... உங்களோட மவளோட பேரு....?''

''கல்யாணி....''

''கனகசபை,,, கதிரேசு.. கரீமா.. .களவாணி.. ஆ இந்தா ஈக்கு.. கள வாணி''

''களவாணி இல்லை ஐஸே... கல்யாணி...

''அது தானே நானும் சென்னது... ஊட்டு நம்பர் 15.. சரிதானே?... ஒண்ணாம் குறுக்குத் தெரு...''

''மூணாம் குறுக்குத் தெரு தம்பி...''

''அப்ப ஒண்ணாம் குறுக்குத் தெருவில பதினஞ்சாம் நம்பர் ஊட் டில இன்னொரு களவாணி ஈக்காங்களா?''

''என்னைக் கேட்டா? நா என்ன போஸ்ட்டுமானா ? **I am a retired OIC**

'' ஓ..... ஐ... ஸீ.. நெனச்சேன்.. அங்கதான் மிஷ்டேக் ஆயிடிச்சு...''

'''எங்க ஒய்.. போலீஸ் ஸ்டேஷன்லயா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நோ..நோ.. நம்ம கடேல வேல செய்யிற பய ஒருத்தன் ஈக்கான். அவன்தான் அந்தக் களவாணிகிட்ட உங்கட மவளோட காஸெட்டை மாத்திக் குடுத்திரிக்கான்.."

பக்கத்துக்கு கடையில் பரோட்டா வெட்ட, அதாவது புசிக்க, **that means** சாப்பிட, தான் செல்லுகிற நேரத்திலே, கடையில் இருத்தி வைக்கும் 'கடன்கார காசிமை' மனதிற்குள் திட்டியபடி, தான் சந்திக்கத் துடித்த அந்தப் பைங்கிளி கலைவாணியைத் தானில்லாத நேரம் பார்த்து வந்துபோக வைத்த விதியை வாயுக்குள் சபித்தபடி, சி.தே.யைப் பரிதாபமாக ஏறிட்டான் ரபீக்.

'நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்..' என வீறாப்பாக வீறிட்டது வீணாப்போன அந்த டேப்.

"இப்ப இதுக்கு என்ன சொல்றே?" உரப்பினார் சி.தே. நல்ல வேளையாக அவர் கையில் சாட்டை அதாவது சவுக்கு இருக்கவில்லை.


"மை டியர் மார்த்தாண்டன்.. மன்னிக்க வேண்டுகிறன்... படப் பெயர் நான் செல்லேல்ல.. நெசமா செல்றேன்.. நம்மட மிஷ்டேக்தான்.. பைமிஷ்டேக்கா பேத்திடிச்சு..." அழாக் குறையாகச் சரணடைந்தான் ரபீக்.

"என் மகளோட வாழ்க்கை கேள்விக்குறி ஆயிடுச்சே... அதுக்கிப்ப என்ன சொல்லப் போறே?" சர்ப்பமாகச் சீறினார் சீனா தேனா.

"தாலி புதுசு ஈக்கு.. தாரதா?"

"'தும்புத்தடி' இருக்குதாடா?"

"தாரு நடிச்சது? அஜித்தா இல்ல விஜய்யா?"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கொப்பன்..! கடைய ஒழுங்கா நடத்த தெரியல்லேன்னா இழுத்து மூடிப்பிட்டு எங்கயாச்சும் ஓடித்தொலை..... அடிச்சு நொறுக்கப் போறேன் எல்லாத்தையும்.."

"ஐயையோ, வேட்டிய மடிச்சுக் கெட்டுறாரே பாக்யராஜ் கணக்கா..." கலவரமானான் ரபீக்.

"இனி முதல் மரியாதை காட்டவேண்டியதுதான்..." சி.தே. சித்தமானார்.

"அது வெளீல போயிடிச்சே வாப்பா.. வேணும்னா 'ஞானப்பழம்' ஈக்கு..பு ழிஞ்சு தாரதா?.. **sorry**.. போட்டுக் காட்றதா?"


"நான் நடத்திக்காட்றேன் தம்பி உன் கடைக்கு வெற்றி விழா.. இல்ல மூடு விழா.."

ஓடி ஒளியவும் வழியில்லாமல் அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு, சுண்டெலி போல மூலையில் பதுங்கி நின்ற ரபீக்கின் காதில் வந்து மோதியது 'கொடுத்ததெல்லாம் கொடுத்தான்.. அவன் யாருக்காகக் கொடுத்தான்..?' என்ற எம்ஜியாரின் கேள்வி! பதில் சொல்ல முடியாத நிலையில் மயக்கத்தின் மடியில் முயங்கிக் கொண்டிருந்தான் ரபீக்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் TV நடிகனான கதை



நானும் ஒரு டிவி நடிகனாகத் தலை காட்டின 'சோகக்' கதைய உங்களிட்ட சொல்லித்தான் ஆகவேணும். அதைத் தெரிஞ்சுகொள்ளட்டால் உங்களுக்கு ஒண்டும் ஆகப்போறேல்லை. ஆனால் அதைச் சொல்லாட்டில் எனக்குத்தான் தலை வெடிச்சுப் போயிரும்.

கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கு, அதிலும் குறிப்பாக எங்கிட யாழ்ப்பாணியளுக்கு ஒரு நல்ல குணம் - ஆரையும் லேசில் நம்பாயினம். சந்தேகக் கண்ணோடதான் எல்லாரையும் பாம்பினம். எந்தப் புத்தில எந்தப் பாம்பிருக்குமோ ஆருக்குத் தெரியும்? அதால இலகுவா ஆரிட்டையும் பிடிகுடுத்துப் பேசாயினம். கழுவிய மீனில் நழுவிற மீனா ஓடித்தப்பி, வாழ்க்கைப் போராட்டத்தில வெற்றிக்கொடி நாட்டிற சூட்சுமம் தெரிஞ்சவை. இந்த நாச மறுப்புகள் ஒண்டும் தெரியாத ஒரு மொக்கு வாத்தி நான்.

இத்துப்போன பழைய 'ஐஸீ 'யைப் பக்குவமாப் பொக்கற்றுக்க பொதிஞ்சு கொண்டு, பத்திரமா இருக்குதோ எண்டு அடிக்கடி தடவிப் பாத்துத் திருப்திப்பட்டுக்கொண்டு, எந்தச் 'செக்' பொயின்ற்றில எந்தப் படுபாவியிட்டயாவது மாட்டப்பட்டுவிடுவமோ எண்டு முழிசிக் கொண்டு, கொழும்பு நகர வீதியளில வலு அவதானமாக வலம் வந்து, குடியிருக்கிற வாடகைப் பொந்தில பெரும் பாலான நேரமும் ஒளிஞ்சு கொண்டு, வாழ்க்கையை ஓட்டுற சாதாரண 'ஜந்து'க்களில நானும் அடக்கம்.

அப்பப்ப வானொலிகளில போடுற சில நாடகங்களில நடிச்சுப் போட்டு வந்து, மனிசியின்ர 'பேர்மிஷன்' னோட கொஞ்சம் தண்ணியடிச்சுப்போட்டு, பெரிய 'சிவாசி' கணேசன் ஆகீற்றதான நினைப்பில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலம்பிறதை விடப் பெரிய பிழை ஒண்டும் செய்யாத அப்பிராணியான ஆள் நான்.

அப்படியாக அலுப்புத் தீரக் கொஞ்சம் 'அடிச்சுப்' போட்டிருந்த ஒரு நல்ல[?] நாளில, எங்கிட TV யில வந்த ஒரு விளம்பரம் என்ர கண்ணில டபிளாப் [**Double** ] பட்டுத் துலைச்சுது!

பிரபலமான தமிழக நடிகர்களுடன் நடிக்க நமது நாட்டு நகைச் சுவை நடிகர் களுக்கு அரிய வாய்ப்பு ஒன்று கிடைத்திருக்கிறதாக அது விளம்பிச்சுது. சிவாஜி கணேசனா என்னைப்பற்றி நினைச்சிருந்த நான் சந்திரபாபுவா மாத்திக் கொண்டிட்டன்.

''பென்சன்' எடுத்தாப் பிறகு பேசாம ஈஸிசேரில [அப்பிடி ஒண்டு வீட்டில இல்லாட்டிலும்] சாஞ்சிருக்கிறத விட்டிட்டு வெளிக்கிட்டிட்டேர்' - எண்ட மனிசி யின்ர நக்கலையும் புறந்தள்ளிப்போட்டு, வானொலி – மேடை நாடக அனுபவங்கள் எண்டு கொட்டடப்பெட்டீக்க கொட்டிக் கிட ந்த எல்லாத்தையும் தூசு தட்டி, 'ரச்சிங்'கா ஒரு சுயபுராணத்தை அவிட்டு விட்டு அனுப்பி வச்ச விண்ணப்பத்தை அறுவான்கள் ஏற்றுக்கொண்டு 'நேர்முகத் தேர்வுக்கு வந்து துலை' எண்டு அழைச்சது உலக மகா அதிச யம்தான்!

சொன்ன நாளில சொன்ன நேரத்துக்குக் கொஞ்சம் முன்னா லையே போய்ச்சேந்திட்டன். [வாத்தியா இருந்த அனுபவத்துல வெள் ளைக்காரன்ர அந்தப் **Punctuality** கொஞ்சம் படிஞ்சு போயிருந்துது.] பத்திருபது வரிசங்களுக்கு முன்னால தமிழ்த் திரையுலகில பிரபலமா யிருந்த, மூவேந்தரில ஒருவரின்ர பேரை வச்சிருந்த] ஒரு நகைச்சுவை நடிகர் தேர்வு செய்ய வந்திருந்தேர். அவரைக் 'காபந்து' பண்ணுவதாக 'பாவ்லா' பண்ணிற 'எங்கிட ஊர்க்காரரின் 'காக்கா' பிடிப்புகள் ஒரு பக்கம். கொஞ்சக் காலமா' அது'வின்ர வாலைப் பிடிச்சுத் தொங்கிக் கொண்டு திரிஞ்ச ஒருத்தர் மற்றப் பக்கம். [ துரை எப்பிடித் தப்பி இஞ்ச திரும்பவும் வந்து சேந்தேர் எண்டு ஆச்சரியப்பட்டன்.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவை நடிகர் தன்ர முழிக்கண்ணை மறைக்கவோ என்னவோ கூலிங் கிளாஸ்' ஒண்டைப் போட்டுக்கொண்டு நேர்முகத் தேர்வை நடத்தினேர். கட்டபொம்மன் வசனத்தில அவிட்டு விடுறதோ, மனோகரனா மாறுறதோ அல்லது சொந்தக் சரக்கில தாளிச்சுக் கொட்டுறதோ எண்டு எனக்குள்ள ஒரு குழப்பம்.

போன கையோட நடிகர் என்ர வயசைக் கேட்டேர். நான் சொன்னன். ஆள் ஆடிப்போனேர். [உண்ணாணை நான் தலைக்கு 'டை' ஒண்டும் அடிக்கிறேல்லை!] என்ரை வயசோட ஒப்பிட்டால் ஆள் சின்னப் பெடியன். அதால என்னை நடியும் எண்டு சொல்லிப் பார்க்க அவருக்குக் கொஞ்சம் சங்கடமாய்போட்டுது.

நடிச்சுக் காட்டத் தேவையில்லை எண்டு அவர் சொல்லியும் நான் விட இல்லை.'பாரப்பா பழனியப்பா. என்ரை நடிப்பைப் பாரப்பா' எண்டு அவரைப் பயப்பிடுத்தி 'போதும் போதும்' எண்டு அவர் சொல்லுற அளவுக்கு 'கலரை'க் காட்டிக் கலக்கீற்றன்.

என்ன சொல்லி என்ன [துர்] அதிர்ஷ்டவசமா அந்தத் தொலைக் காட்சி நாடகத்தில் நடிக்க என்னையும் 'செலெக்ட்' பண்ணிப் போட்டினம்.

புளுகமெண்டால் புளுகம். அப்பிடியொரு புளுகம் எனக்கு பிறகென்ன நூற்றுக் கணக்கான நம் நாட்டுக் கலைஞர்களுக்கு கிடைக்காத வாய்ப்பு எனக்குக் கிடைச்சிருக்கெண்டால் சும்மாவே! [நேர்முகத் தேர்வுக்கு வரச் சொல்லி வந்தவை எண்ணி அம்பதுக்க எண்ட விசயத்த நான் சொல்லக் கூடாது. அது பரிசுகேடு.]

நாடக டிறெக்டரும் [நெறியாளர் எண்டு நல்ல தமிழிலை சொன்னால் அது கன பேருக்கு விளங்காது.] தமிழ் நாட்டில இருந்து வந்திருந்த நடிக நடிகையரும் வெள்ளவத்தையில் ஒரு ஹோட்டல்ல தான் தங்கினவை. 'ஷூட்டிங் 'க்கு முதல் நாள் தன்னை வந்து சந்திக்கச் சொல்லி டிறெக்ட்டர் கோல் எடுத்துச் சொன்னேர். நானும் போனன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைக் கண்டு கதைச்சுக் கொண்டிருக்கேக்கைதான் அவையள் எண்ணெயில்லாமல் பணியாரம் சுட வெளிக்கிட்டிருக்கிற விஷயம் எனக்கு விளங்கிச்சுது. அதென்னெண்டால், மற்ற நாள் ஷூட்டிங்க்குத் தோதான வீடொண்டும் அவயளுக்கு இன்னும் அகப்படேல்லையாம். தேடிக்கொண்டிருக்கினமாம்.

ஏதோ தேடுகினம். தேடிக்கொள்ளட்டும் எண்டு என்ரை வாயை வச்சுக்கொண்டு நானும் சும்மா இருந்திருக்கலாம். கூடப் பிறந்த புளுகுக் குணம் இருக்கவிட்டால் எல்லே.

"நான் வாடகைக்கு குடியிருக்கிற வீடு புதுசாக் கட்டினது. பெரிசெண்டு சொல்ல ஏலாது. எண்டாலும் சில நேரம் உங்களுக்குத் சரிப்பட்டாலும் சரிப்படலாம். எதுக்கும் வீட்டு 'ஓனரை'க் கேட்டுச் சொல்லிறனே" எண்டு சொல்லித் துலைச்சுப்போட்டன்.

தேடிப்போன மூலிகை காலிலபட்டால் விட்டிட்டு ஓட அவரொண்டும் மண்டையில மசாலா இல்லாத வானா மூனா இல்லையே. 'கப்' பெண்டு பிடிச்சுக் கொண்டிட்டேர். பிறகென்ன? வந்தார்; கண்டார்; வென்றார் எண்ட சீசரின்ர கதைதான். வீட்டுக்காரருக்கு தங்கிட வீடு டிவியில வரப்போகு தெண்டதில புளுகம்தான். தாங்கள் தலையைக் காட்டாட்டிக்கும் தங்கிட வீடாவது தலையை மாத்திரமில்லை முழு உடம்பையும் சுத்திச் சுத்திக் காட்டப் போகுதே எண்ட சந்தோசம் அவையளுக்கு.

சூட்டிங்குக்கு வீட்டை விட்டால் என்ன பாடுபட வேண்டிவரும் எண்ட அனுபவம் அவையளுக்கு அப்ப இருக்கேல்லை. ஏன் எனக்கும் தான்.

எங்கிட வீட்டிலையே சூட்டிங் எண்டவுடன மனிசி தங்கச்சி பிள்ளையளுக் கெல்லாம் நிலத்தில கால் படேல்லை. அறிஞ்சவை தெரிஞ்சதை எல்லா ருக்கும் 'கோல்' எடுத்தே களைச்சுப் போச்சினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் சூட்டிங் துவங்கிச்சுது. விடிய விடிய லொறி ஒண்டிலை 'ஜெனறேற்றர்' வந்திறங்கிச்சுது. ரோட்டில, அண்டை அயல்ல இருந்த சிங்களச் சனமெல்லாம் கூடீற்றுது. என்ன விஷயம் ஏது விஷயம் எண்டு விளங்காமல் இது 'வேற ஏதோ விஷயம்' ஆக்குமெண்டு ஊகிச்சு **Police** 'க்கு அறிவிக்க வேணும்' எண்டு கசமுசப்படத் துவங்கீற்றுது. வேற ஒண்டுமில்லை. எங்கிட வீட்டுக்காரரர் யாழ்ப்பாணத்து ஆள். கிட்டடீல தான் அந்த வீட்டை வாங்கியிருந்தவர்.

கொஞ்ச நேரத்தால [முருகனின்ர பேரைக் கொண்ட] பிரபல நகைச்சுவை நடிகரும் ஆச்சி நடிகையும் காரில வந்து இறங்கிச்சினம். அவையளைக் கண்டோடனதான் 'சீனா'ப்புள்ளியளுக்கு விஷயம் வெளிச்சுது. நல்ல வேளையா டிவியில அதுகள் தமிழ்ப் படங்களையும் பாத்திருக்குதுகள். வாழ்க **TV**! இல்லையெண்டால் போலீஸ் வந்து எங்களையெல்லாம் அள்ளிக்கொண்டு போனாலும் போயிருக்குமெல்லே?

அதுக்குப் பிறகு கொஞ்ச நாளைக்கு எங்கிட வீடு **World Trade Centre** மாதிரித்தான். அவ்வளவு 'பேமஸ்'. 'இந்தியாக்காரரை ஹோட்டல்ல கொண்டுபோய் விட்டதோட எங்கிட வேலை சரி', எண்டிருந்த ரீவீக்காரர் இருந்தாப்போல வந்திறங்கிச்சினம். வீட்டுப் பூசையறையில பூசையைத் துவக்கித் தங்கிட முகம் விழுமாப் போல **TV** கமெராவால படம் எல்லாம் எடுத்தாப்பிறகு 'ரற்ரா ' காட்டீற்று 'துரை'மார் கழண்டிட்டினம்.

போகப்போகத்தான் விளங்கிச்சுது - சூட்டிங்குக்கு வீட்டை விட்டால் என்ன ஆகுமெண்டு. காலுக்கையும் கையுக்கையும் பாம்புகள் போல வயர் ஓட. **Focus Light** றுகளை அங்கயும் இங்கயுமா தூக்கிக் கொண்டு நாலைஞ்சு பேர் அலைய, ஊசாடவழியில்லாமல் வீட்டுக்காரரர் எல்லாரும் மூலைக்க பதுங்க வேண்டியதாப் போச்சுது.

சூட்டிங் தொடங்கினதும் வேற என்ன ஆச்சுதெண்டு தெரிய வேணுமெண்டால் வாருங்கோ. நீங்களும் ஆரும் விழுந்த கதையெண்டால் விடாமல் வாசிப்பியள். எங்கிட வீட்டில சூட்டிங் துவங்கினாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகுதான் தெரிஞ்சுது நாடகத்தில இங்கத்தே ஆக்கள் நாங்கள் நாலு பேர்தான் எண்டது. சிங்கள ரெலி டிராமாக்களில நடிச்ச முகவெட்டான தமிழ்ப் பிள்ளை ஒண்டு, கொஞ்சம் சத்துக்குறைஞ்ச திருகோணம லைப் பிள்ளை ஒண்டு, சண்டைப்பட அடியாள் தரவழிப் பெடியன் ஒண்டு, மற்றது நான். என்ரை முகலட்சணத்தை நானே சொல்லி **Gas** எழுப்பக் கூடாதெண்டதால அதை விட்டிடுவம்.

நாடகக் கதைப்படி ஆச்சி யாழ்ப்பாணத்துப் பொம்பிளையாம். அவ நல்ல நடிகைதான். எத்தனையோ படங்களில திறமா நடிச்சு 'பொம் பிளை சிவாஜி' எண்டு சொல்லுற அளவுக்குப் பேரெடுத்தவதான்.

ஆனால் அவவுக்கு யாழ்ப்பாணத் தமிழ் வரமாட்டன் எண்டிட்டுது. யாழ்ப்பாணத்தவையளோட கதைச்சுப்புழங்கி ஊசாடித் திரிஞ்சவைக் குத்தான் அது வரும். எந்தப் பிரதேசத் தமிழும் அப்பிடித்தான். எடுத்த உடன வந்திடாது. பழக்கத்திலதான் வரவேணும்.

யாழ்ப்பாணத் தமிழை அவவுக்குச் சொல்லிக் குடுக்கச்சொல்லி டிறெக்டர் என்னிட்டத்தான் ஸ்கிரிப்ட்டைத் தந்தவர். வாத்தியாரா இருந் ததால என்னாலயும் அது ஏலுமெண்டு நினைச்சன். ஆனால் நான் நினைச்ச மாதிரி அது லேசான வேலையா இருக்கேல்ல. ராகம் போடு மாப்போல கொஞ்சம் இழுத்துக் கதைச்சால், அது யாழ்ப்பாணத் தமி ழாகிவிடும் எண்டு நினைச்சுக்கொண்டு, அந்த மாதிரியே கதைச்சு ஆச்சி யாழ்ப்பாணத் தமிழை ஒரு வழி பண்ணுறன் எண்டு நிண்டா. உது சரிப்படாதெண்டு நான் அந்த வேலையைக் கைவிட்டிட்டன்.

திருகோணமலைப் பிள்ளைக்கு எப்பிடியாவது இதுக்குள்ள தலையை ஓட்டட வேணுமெண்டொரு தலை புழுத்த தவனம். நான் கைவிட்ட பிரதியை அப்பி எடுத்துக்கொண்டு வாசிச்சுக்காட்டிற வேலைய தானாத் தன்ர தலையில போட்டுக் கொண்டிட்டுது. அதால ஒரு மாதிரி 'உதவி டைரக்டர்' எண்ட பேரையும் எடுத்திட்டுது. நல்ல வேளை நான் தப்பினன். 'லைட்'வெக்கை யுக்க, **Camera** கோணத்துக்க விழாத மாதிரி எங்கயேனும் மூலையுக்க குந்தி இருந்துகொண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டைத் தண்ணி வத்தக் கத்திறதெண்டால் முற்பிறப்பில தவக் கையாத்தான் பிறந்திருக்க வேணும்.

வீட்டுக்கையே தேவையான சாமான் சக்கட்டுகள் எல்லாம் இருந்ததால **Production Manager** க்கு வேலை மிச்சம். [அப்பிடி ஓராள் இருந்த மாதிரியும் தெரியேல்லை.] சீனுக்குத் தேவையான பால்,பழம், ரீ, பலகாரம் பட்சணங்கள் எண்டாலும் சரி, தங்கிட தாகத்துக்குத் தண்ணி வென்னி வேணுமெண்டாலும் சரி எல்லாத்தையும் வீட்டுக்கார ரிட்டைத்தான் கேட்டபடி. வீட்டுக்கு வந்த விருந்தாளியளைக் கவனிக்கு மாப் போல, வீட்டுக்காறரிட மகள் நிருவும் பாவம் ஓடியோடி அவையள் கேட்டதெல்லாம் குடுத்தபடி. இந்தக் கூத்துக்குள்ள வீட்டுக் காரர் தங்கிட சமையலையும் கவனிக்கிறதெண்டால் அது பெரும்பாடுதான்.

நீங்கள் ஒண்டும் சமைக்கத் தேவையில்லை உங்களுக்கும் சேர்த்து நாங் களே சாப்பாட்டை 'ஓடர்' பண்ணி எடுத்துத் தருவோம்'' எண்டு டிரெக்டர் முதல் நாள் சொன்னேர். அந்தப் பெருந்தன்மையைக் கண்டு நானும் புல்லரிச்சுப் போனன்.

சொன்ன மாதிரி முதல் நாள் வீட்டுக்காரருக்கும் சேர்த்துக் கடைச் சாப்பாடு வந்ததுதான். ஆனால் அண்டைக்கு அது கனக்க மிஞ்சிப் போச் சுதாம் எண்டு சாட்டுச் சொல்லி அடுத்தடுத்த நாட்களில கணக்கைக் குறைச்சு மிச்சம் பிடிக்கத் துவங்கீற்றினம்.

அந்த மிச்சப் பிடிப்பு வீட்டுக்காரற்ற தலையில தான் விடிஞ்சுது. 'யூனிற்' காறர் உள்வீட்டுக்காறரா மாறி மீன்கறி, மரக்கறி எண்டு வீட்டுக் காரற்ற சமையலையும் உரிமையோட கேட்டு வாங்கிச் சாப்பிடத் துவங்கீற்றினம். எண்டாலும் வீட்டுக்காறர் அதைப்பற்றிப் 'பறுவா' பண்ணேல்லை. கடைசி நாள் எல்லாருக்கும் விருந்தும் வச்சு எங்கிட ஊர்க்காறரின்ர விருந்தோம்பல் பண்பையும் அவையள் காட்டாமல் விடேல்லை.

வீட்டுக்காறர் ஏதோ வீட்டுத் திருத்தவேலைக்காக எண்டு முத்தத் தில கொஞ்சம் சல்லி குவிச்சு வச்சிருந்தவர். வீட்டைப் பாக்க எண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாள் வந்த டிரெக்டர் அதைக் கொஞ்சம் அப்புறப்படுத்தினால் நல்லதெண்டு சொல்லிப் போட்டேர். பின்ன வீட்டுக்காரரும் ராராவா ஆளைப் புடிச்சு அதுக்கெண்டு தன்ர கையால கொஞ்சம் சிலவழிச்சேர்.

வீட்டுக்காறர் தங்கிட வீட்டு **Gate** க்கு ஒரு பெரிய ஆமைப் பூட்டுப் போட்டிருந்தவர். 'யூனிற்'காரற்ற வான் வரப்போக எண்டு அதை மூடா மல் திறந்தபடி விட்டுவைக்க, ஷூட்டிங் பாக்க எண்ட சாட்டிலை வந்து போன 'குடுக்காரன்' ஆரோ அதை 'அடிச்சுக்க கொண்டு' போட்டான். அதின்ர விலை ஒரு ஆயிரம் ரூபா மட்டில வரும் எண்டு நினைக்கிறன். அதைவிட வேற என்னென்ன துலைஞ்சுதோ தெரியாது.

நடிக்கிறவையளின்ர பாத்திரம் என்ன மாதிரி இருந்தாலும் எல்லா ரும் கசங்கல் பிசங்கல் இல்லாத புத்தம் புது உடுப்பாத்தான் போடுவி னம். அவையளின்ர உடுப்புகளை அப்பப்ப **Iron** பண்ணிக் குடுக்க வெண்டு ஒரு பெட்டை. - அதுக்கு நாளுக்கு 500/- சம்பளமாம். அது பாவம் பெட்டை. சிக்குன்குனியாவோட வந்து நிக்குது - நாள் முழுக்க **Iron** பண்ணினபடி. அதுக்காகப் பரிதாபப்படுறதா? பயப்பிடுறதா? ஓடிற கரண்ட் மீற்றரப் பாத்துக் கதி கலங்கிறதா? ஒண்டுமா விளங் கேல்லை!

போட்டோ ஸ்டுடியோவில ஒரு லைற்ரப் போட்டாலே வேத்துக் கொட்டும். **Indoor Shooting** எண்டால் சொல்ல வேணுமே? அந்த லைற் வெக்கேக்க காத்தில்லாமல் இருக்கேலுமே? வீட்டு **Fans** மூண்டு நாலு ஓயாமல் சுழண்டபடி. அதுக்கான கரண்ட் காசு அது இதெண்டு பாத் தால் பில் எந்தளவு ஏறியிருக்கும் எண்டு விளங்கும்தானே?

ஒரு எபிசோட்டுக்கு 75000/- மட்டில செலவழிக்கிறதாப் புளுகி னவை கடைசியில போகேக்க 3500 /- ரூபாக் காசை வீட்டுக்காறரின்ர கையில பக்குவமாக் குடுத்துத் தங்கிட தாராள மனப்பான்மையைக் காட்டிப்போட்டு மெதுவாக் கழண்டிட்டினம். பச்சைத்தண்ணீல பல காரம் சுடுறது எப்பிடி எண்டு தெரியாதவை அவேட்டக் கேட்டுத் தெரி ஞ்சு கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கார மனிசன் பாவம். **Town** ஆக்களின்ர சுத்து மாத்துக் கள் தெரியாத ஒரு வெங்கிளாந்தி. வீட்டை நாள் வாடகைக்கு விடுற வையே ஐயாயிரம் பத்தாயிரம் எண்டு வாங்கேக்க அஞ்சு நாள் சூட்டிங் குக்கு எவ்வளவு கறந்திருக்கலாம். மனிசன் இப்பிடியெல்லாம் கவ லைப்பட்டதாத் தெரியேல்லை. நான்தான் மனம் பொறுக்காமல் ஆரி ட்டையெண்டாலும் சொல்லி அழ வேணுமெண்டிட்டு உங்களிட்டப் பொரிஞ்சு தள்ளிறன்.

எங்கயோ தொடக்கி வேற என்னமோ எல்லாம் ஆலாபரணம் பண் ணிக்கொண்டு எங்கயோ போய்ட்டன். மனுசனுக்கு அறளை பேந்திட்டு தாக்குமெண்டு சொல்லிக் கோவியாதையுங்கோ. இந்தா வாறன் விட்ட இடத்துக்கு. நாடகத்தில எனக்கு நகைச்சுவை நடிகரின்ர யாழ்ப்பா ணத்து நண்பராத்தான் வேஷம். பின்ன, கசங்கல் பிசங்கல் தெரியக் கூடாதெண்டு சேட்டு, வேட்டியெல்லாம் வடிவா 'அயர்ன்' பண்ணிப் போட்டுக்கொண்டு போய் நடிச்சன். ரெண்டு நாள்தான் எனக்கு சூட்டிங்! மற்றவையளுக்கும் - எங்கிட நாட்டு நடிகையர் திலகங்களுக்கும் அப் பிடித்தான். கனக்க இல்லை.

எங்களுக்கெல்லாம் தலை தெரிஞ்சால் காணும்தானே? உந்த ளவு கிடைச்சதே பெரிய விஷயம் எண்டுவியள் ஓமோம். ஆனால் கிடை க்காத சின்ன விஷயம் ஒண்டு. நான் நடிச்சுக் குடுத்ததுக்காக சன் மானமோ சம்பளமோ எண்டு ஒரு சதம் தன்னும் கண்ணில காட் டேல்லை. அதை நானும் கேக்கேல்லை; அவயளும் தரேல்லை. Tittle லில என்ர பேருக்கு முன்னால கௌரவ நடிகர் எண்டாவது போட்டிருக்க லாம். கவுரவமா இருந்திருக்கும். ஆனால் அப்பிடிப் போட்டதாயும் தெரியேல்லை.

இதில பெரிய சோகம் என்னவெண்டால் நான் பேசின வசனங் களை எல்லாம் வேற ஒரு தமிழ் நாட்டுக்காரரைக் கொண்டு 'டப்பிங்' பேச வச்சதுதான். 'அதில என்ன, பெரியபெரிய நடிகர்களுக்கே அங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'டப்பிங்' குரல் தானே?' எண்டுறியளே. ஓம் பாருங்கோ. அதெண்டால் உண்மைதான். ஆனால் நான் பேசினது 'எங்கிட' யாழ்ப்பாணத் தமிழில!

நல்லவேளை நான் அதுகளைப் பாக்கக் குடுத்துவைக்கேல்லை. எங்க மேல போய் அங்கையிருந்து கதைக்கிறானோ எண்டு சமுசயப் படாதீங்கோ. "நல்ல வேளை உன்ர தமிழை நீ ரீவீல கேட்டுத் துலைக் கேல்லை. கேட்டிருந்தால் சொல்லாமல் கொள்ளாமல் மேல போயிருப் பாய்" எண்டு கூட்டாளி ஒருத்தன் பொழிப்பான விமரிசனம் சொன்ன வன். நான் கொஞ்ச நாள் UK க்குக் கழண்டதால தப்பினன்.

இதைப்பற்றி வெளீல தெரியாத ரகசியம் ஒண்டை இப்ப நான் சொல்லப் போறன். நீங்களும் ஆருக்கும் சொல்லிப் போடாதையுங்கோ. மீடியாக்காரர் அறிஞ்சால் சவட்டினாலும் சவட்டிப் போடுவான்கள். இந்தியாவில இருந்து வாற இந்த மாதிரித் தொடர் நாடகங்களுக் கெல்லாம் ஒரு நாளைக்கு 90 ஆயிரம் மட்டில **Tax** கட்ட வேணுமாம் எண்டு கிட்டடீல ஒரு சட்டம் வந்திருக்காம். ஆனால் இஞ்ச எடுக்கிறதுக ளுக்கு அப்பிடி இல்லையாம். அதாலதான் உப்புக்குச் சப்பாணியா எங்க ளைப்போல 'நம் நாட்டுக் கலைஞர்களை'யும் கலந்துபோட்டு இருத்தி எழுப்பிறதாம்.

ஒரு கல்லில ரெண்டு மாங்காய் அடிக்கிறதெண்டது உதைத்தான். யாவாரத்துக்கு யாவாரம்; லாபத்துக்கு லாபம். பெருமைக்குப் பெருமை. எப்பிடி எங்கிட ஆக்களின்ர விளையாட்டு? சரியப்பா. பேய்க் காட்டி றவை எல்லாம் வடிவாப் பேய்க்காட்டட்டும். உருவேறினவை வடிவா நிண்டாடட்டும். ஆனால் எங்களையும் ஏன் இதுக்குள்ள இழுக்கின மாம்? நாங்கள் தானே அம்பிட்டம்? ஈழத்துக் கலைஞர்களுக்கு அரிய வாய்ப்பு! எவ்வளவு பிரகாசமான எதிர்காலம்! பாத்தியளே?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






உங்களுக்கு எப்பேண்டாலும் அடக்கேலாமல் 'அது' வந்திருக்கோ? வராமல் இருந்திராது. ஆனாலும் வெளியில சொல்லியிருக்கமாட்டியள்– கிரிசைகேட்டை. ஆனால் நான் சொல்லப்போறன். ஏனெண்டால் என்னால அடக்கேலாமல் கிடக்கு - ஆத்திரத்தை!

வயசான ஆக்களாயிருந்தால் சில நேரம் 'அது' வாறதும் தெரியாது. போறதும் தெரியாது எண்டுவினம். இன்னும் அந்த **Stage** க்கு நான் வரேல்லை. ஆனாலும் எங்கிட டொக்டர் முருகானந்தம் போலவை புத்தகங்களில எழுதுற வைத்தியக் குறிப்புகளை மேஞ்சு போட்டு, அவயள் சொல்லுமாப்போல லேசான ஏதாவது 'எக்சசைஸ்' ஐச் செய்து 'பிரஷர்' ஐக் 'கொன்றோல்'லில வச்சிருக்கவேணுமெண்டு மினக்கெடுற ஆக்களின்ர வயசுதான் எனக்கும்.

'இருக்கிறம்' எண்டொரு பொல்லாத புத்தகத்தை இந்த வயசில 'ஓசி'யில வாசிச்சதுதான் பிழையாப் போட்டுது. வேற ஒண்டுமில்லை அதிலை ஒருத்தர் காலமை எழும்பின கையோடை முப்பது நாளுக்கு மூண்டு நாலு கிளாஸ் தண்ணி குடிச்சு வந்தால் மூட்டுப் பிடிப்புக்குத் தண்ணி காட்டலாமாம் எண்டு எழுதித்தாளிச்சிருந்தேர். நானும் மோட்டுத்தனமா அதை நம்பியெல்லோ மாட்டுப்பட்டிட்டன்.

எழுதினவரில பிழையில்லை. இப்பிடி ஒரு வில்லங்கமும் வரக்கூடும் எண்டு கண்டுபிடிக்க அவரென்ன திரிகாலமும் உணர்ந்த ஞானியே? விஷயம் என்னெண்டால், இப்பிடித்தான் அவர் சொன்ன மாதிரி நாலுக்கு அஞ்சு கிளாஸா தண்ணியை மண்டிப்போட்டு [கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டால் இன்னும் கூடக் கொள்ளும் - அந்த வயசில] வயிறு 'களாங் புளாங் ' எண்டு சங்கீதம் பாட, வழமை போல ஒரு சின்ன நடை போட லாமெண்டு வெளிக்கிட்டன். [**Body** யை **Maintain** பண்ண 'பொடி நடை சொல்லப்பட்ட 'எக்சசைஸ்' சாம் எண்டும் சொல்றவை.

கொழும்பில காலியள் நடமாடுற, காலி வீதியில காலாற நடக்க வெளிக்கிட்டுக் கொஞ்சத்தூரம்தான் பொயிருப்பன். கொஞ்ச நேரம் தான் போயிருக்கும். வில்லங்கம் வந்து வாசல் கதவைத் தட்டத் துவங் கீற்றுது. வேற என்ன? 'அது' வந்து முடுக்கத் துவங்கீற்றுது ஐஸே!

ஊர்ல எண்டால் அங்கால இங்கால பாத்துப்போட்டு ஆக்கள் வாற சிலமன் இல்லாட்டில் ஆற்றயும் வேலிக் கதியாலுக்கு பிரீயா யூரியாப் பசளை சப்ளை பண்ணலாம். அதுகளும் வஞ்சகமில்லாமல் செழிப்பா வளர்ந்து போற வாற நேரங்களில வாலில்லாட்டிக்கும் தலையை எண் டாலும் நன்றியோட ஆட்டும்.

'கொங்கிறீத்துக் காடாப் போன கொழும்புப் பட்டணத்தில அது நடக்குமோ? [அல்லாட்டில் ஒடுமோ?] இஞ்ச நாயளுக்கு மட்டும்தான் கண்ட இடத்திலயும் காலைத் தூக்கப் **'Permission'** இருக்குது. இஞ்ச நாய ளுக்கிருக்கிற சுதந்திரம் மனுஷருக்கு இல்லை எண்டது தெரிஞ்ச விஷ யம்தானே!

கதையோட கதை **Pampers** எண்டொரு பணியாரத்தை வெள் ளைக்காரன் கண்டு பிடிச்சு வச்சிருக்கிறான். சொல்லப்போனால் அது எங்கிட கோவணத்தின்ர **Modification**தான். நாங்கள்தான் கோவணத் தோடேயே நிக்கிறம்/ நிண்டிட்டம். எங்கிடதான் எண்டு உரிமை [**Patent**] கொண்டாடவும் இனி வழியில்லை. [உரிமையோ? என்ன உதை கேக் குதோ?]

சின்னப் பிள்ளையளுக்கெண்டு கண்டுபிடிச்சதை இப்ப பெரி யாக்களுக்கும் அவன் **Expand** பண்ணீற்றான். கொஞ்சம் சிலவுதான். ஆனாலும் அதையெண்டாலும் வாங்கிக் கட்டிக்கொண்டு வந்திருக்க லாம். வரேல்ல. **Miss** பண்ணீற்றன். அடுத்தமுறை **Try** பண்ணுவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திரத்தை அடக்கினாலும் அதை மட்டும் அடக்கேலா எண்டு வினம். அனுபவிச் சவைக்குத்தான் அது விளங்கும். அல்லது அந்தக் காலத்தில [1968 இல] வந்த **The Party** எண்ட **English** படத்தில **Peter Sellers** எண்ட நடிகர் ஓடித்திரிஞ்சு படுற அந்தரத்தைப் பார்த்தவைக்கு விளங் கும்; மறந்திராயினம்.

காசைக் கீசைக் குடுத்தெண்டாலும் கறுமத்தை இறக்கி விடுவம் எண்டு பாத்தாலும் வெள்ளவத்தையில அப்பிடிக்கொத்த இடமேதும் இருக்குமாப் போலவும் தெரியேல்லை. 'பொறுத்தது போதும் பொங்கி எழு' எண்டு கலைஞரின்ர [எங்கிட உலகத்தமிழ்க் காவலர்தான்] வசனத் தைக் கேட்டு மனோகரன் கெம்பி எழும்பின மாதிரி எப்ப வெளியில பாயலாமெண்டு 'அது' அவதிப் படுத்துது.

முக்கித் தக்கிக் கொண்டு மூளையைப் போட்டுப் பினைஞ்சதில மணியான இடமொண்டு ஞாபகத்துக்கு வந்துது. 'சோக்கெல்லோ'! ஓமோம். சோக்கெல்லோவோட சேர்ந்து நாடகம் போட்ட நேரம் போய் வந்த இடம் தமிழ்ச்சங்கம். சில நேரங்களில இப்பிடித்தான் மூளைக்கு ஒழுங்கா சிக்னல்' கிடைச்சிடுது. பிற கென்ன. பொடி நடையில போய்ச் சேர்ந்தன்.

உள்ளபோய் அதை **Pass** பண்ணினாப் பிறகு - ஆகா! சொர்க்கத் துக்குப் போய் வந்த மாதிரி ஒரு நிம்மதி. சொர்க்கத்துக்குப் பக்கத்தில தான் நரகமும் இருக்கெண்டது பிறகுதான் விளங்கிச்சுது.

வில்லங்கம் வழீல காத்துக் கொண்டிருந்துது - கடுவன் பூனை மாதிரி ஒராளின்ர உருவில. சங்கத்து **Office** ஐத் தாண்டித்தான் நான் உள்ள உள்ளிட்டனான். நான் உள்ளை போகேக்கை ரெண்டு மூண்டு பேர் அங்க கதைச்சுக்கொண்டிருந்தவை. அவையளை நான் கணக் கெடுக்கேல்லை. [வழக்கமாகவே நான் கொஞ்சம் அப்பிடித்தான், மற்ற வையளை **Mind** பண்ணாத ஒரு 'கிறக்' எண்டு சொல்லுறவை .]

காரியம் முடிஞ்சு திரும்பி வந்த என்னை ஒருத்தர் நிப்பாட்டினேர். அப்புக்காத்துக்குப் படிச்சுப் பாஸ் பண்ண ஏலாமல் போனவரோ தெரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேல்லை. அவர் என்னைக் கேட்ட கேள்வியள் அப்பிடி. அதுக்கு நான் சொல்ல 'நினைச்ச' பதில்கள் இப்பிடி.

"என்ன மிஸ்டர், கேட்டுக் கேள்வியில்லாமல் உள்ளை போய் என்ன செய்திட்டு வாறீர்?" [என்ன இது கேள்வியே பிழையாக் கிடக்கே.. என்ன செய்தனான் எண்டதை இங்கயே செய்து காட்டச் சொல்லப்போறீரே?']

"யூரின் பண்ணீற்று வாறீர் என்ன?" [யூரின் பண்றது என்ன சாவான பாவமே? அதுக்கேனிப்ப நீர் ஏறுப்படுறீர்?]

"நாங்கள் எல்லாம் இஞ்ச இருக்கிறது தெரியேல்லையே? [அடடா, நீங்கள் அதுக்கே பாத்துக்கொண்டிருக்கிறியள்? தெரியாமல் போட்டுது. அடுத்தமுறை மறக்காமல் பிடிச்சுக் கொண்டுவந்து தாறன்.]

அது இங்கத்தைய **Staff** க்கெண்டிருக்கிறது. [ரத்தம் ஒரே நிறம் எண்ட மாதிரி அதுவும் எல்லாருக்கும் ஒரே மாதிரித்தானே?]

"மற்றவையளுக்கு முன்னால ஒண்டிருக்குது தெரியாதே?" [சத்தியமாத் தெரியாது. முசுடுகளுக்கு மட்டும் எண்டு உள்ளுக்கிருக்கிறதில ஒரு **Board** எழுதி போட்டியள் எண்டால் நல்லம்']

"திறந்த வீட்டில ஏதோ பூருமாப்போல உம்மிட பாட்டிலை போய் ற்று வாறீர். நீர் ஆரெண்டே தெரியாதாம்.". ['ரஜனி ஸ்டைலில் - மனிசன்... கண்ணாடியப் போட்டு வடிவாப் பாரும் தெரியும்.]

"நீர்.. ஏதும் குண்டைக் கிண்டை வைக்கிற ஆளாயிருந்தால்? எங்களுக்கு எப்பிடித்தெரியும்?" [ஓகோ உமக்கு அதுதான் பயமே? நான் குண்டு கிண்டு வைக்கிற ஆளாயிருந்திருந்தால் இப்பிடிக் குந்திக் கொண்டிருப்பீரே? குண்டி பிடரியில அடிபட நீர் ஓடி ஒளிஞ்சிருப்பீரே?]

இது நடந்தது மா.மு, வில. அதாவது மாவிலாறுக்கு முந்தி எண்டதை **Note** பண்ணிக்கொள்ளுங்கோ. இப்பிடியே கரிபுரியெண்டு மனிசன் ஒரு கண்ட சீருக்குப் பொரிஞ்சு தள்ளிக்கொண்டு நிண்டுது. பாவம். மனிசன் நல்லாப் பயந்து போச்சுது போலக் கிடக்கு. காலம் அப்பிடி. அவரை வெண்ட சுடுதண்ணியா நானும் ஒரு காலத்தில இருந்தனான்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனாலும் இப்ப வயசு போட்டுது. என்ர காலம் இப்பிடி. அதால அணிலேற விட்ட நாய் மாதிரி முகத்தைப் பரிதாபமா வச்சுக்கொண்டு வாய் திறக்காமல் நிண்டுட்டன்.

வயசப் பாக்கிற மாதிரியோ நியாயத்தைக் கேக்கிற மாதிரியோ ஆன ஆளா அவரைத் தெரியேல்லை. அவற்ற தாய் தேப்பன் எண்டு ஆரும் உசுரோட இருந்தால் அதுகள் பாவம். நாய் குலைக்குதெண்டு போட்டு நாங்களும் திருப்பிக் குலைக்கேலுமே? அதால நான் குலைக்கேல்ல. எப்பெண்டாலும் முறையான ஆக்களிட்ட வாங்கிக் கட்டேக்க விளங்கும் அவருக்கு.



எனக்கிப்ப நாரிப் பிடிப்புக் கொஞ்சம் சுகம். அதால மூண்டு கிளாசைப் போத்தில் காரனிட்டைப் போட்டிட்டன்!!!

------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வீ**டே அல்லோலகல்லோலப்பட்டுது. 'சுவீப்' விழுந்த மாதிரி, பதினெட்டு லட்சம் சுளையா வரப்போகுது. சொத்தைப் பல்லெண்டு பல்லு டாக்குத்தர் தோண்டி எடுத்த மூண்டு பல்லு நீங்கலா [நீக்கலா எண்டும் வச்சுக் கொள்ளலாம்.] மிச்சப்பல்லெல்லாம் தெரிய, கன நாளுக்குப் பிறகு தங்கச்சி அமலாவின்ர முகத்தில சிரிப்பு 'டிஸ்கோ' ஆடுது.

விஷயம் வேறொண்டுமில்லை. அறுவான், அழிஞ்சு போவான், கழிசடை, காவாலி, குரங்கன். குழுமாடு, தறுதலை, தடிமாடு, நட்டாமுட்டி, நாசமறுப்பான் பறப்பான், பாழ்படுவான், பரதேசி, மூதேசி எண்டின்ன பிற அகராதி காணாத பட்டப் பெயர்களை - ஊர்ப்பெரிசுகளின், பெண் புரசுகளின் வாயிலாகத் தனதாக்கிக் கொண்ட 'சுழி' எண்ட காரணப் பெயர் கொண்ட - தங்கச்சி அமலாவின்ர குலக் கொழுந்து, குடும்ப விலக்கு [லகர, ளகரப் பிழையில்லை விலக்குத்தான்!] சீமந்த புத்திரன் ஒரு பெரிய சாதனை செய்துபோட்டான்.

இந்த இடத்தில எங்கிட 'சுழி'யைப் பற்றிக் கொஞ்சம் பொழிப்பாச் சொல்லக் கிடக்கு. பின்னால பிறந்த இரண்டு தங்கச்சிமாரையும் குட்டி இருத்திக் கிடி கலங்கவைக்கவெண்டு முன்னாலையே முள் முருக்கங் கண்டுபோல [தங்கச்சீட பாஷையில - கருவேப்பிலைக் கண்டுபோல] பிறந்த தலைச்சன் பிசாசுதான் 'சுழி'; வீட்டுக்கு ஒரே பொடி!

தேப்பனில்லாப் பெடியளைத் தாய்மார் செல்லம் குடுத்துச் சீரழிக்குமாப் போல களவு, பொய், குடி, சூது எண்டு ஆய கலையள் அறுபத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலையும் சுழி கற்றுத்தேறிப் பக்குவமடையக் காரணமாயிருந்தவ எண்ட பெருமை தங்கச்சி அமலாவைத்தான் சாரும்.

செய்யாத அட்டா துட்டியெல்லாம் செய்து நாளுக்கொரு வம்பும் ஆளுக்கொரு வழக்குமா தாயைப் படாதபாடுபடுத்தி, அவளைப் பாயும் படுக்கையுமாக் கிடத்தின பெருமை சுழியைச் சாரும்.

கடுக்கண்டாப் பிறகு உள்ள கள்ளுக் கொட்டில்களை எல்லாம் கல க்கியடிச்சு, வீட்டிலையும் பீங்கான் கோப்பையளைப் பறக்கடிச்சு அட்ட காசம் பண்ணி ஒரு ஆம்பிளை இல்லாத குறையைத் தீர்த்து வச்ச தீரன் 'சுழி'. 'நான் வெளிநாடு போறதுக்கு காணிய அடகு வச்சு இப்ப காசைக் கையில வை. அல்லாட்டில் நஞ்சுக் குளிசையைப் போட்டு இந்தா நான் சாகப்போறது மெய்.'' எண்டு விற்ற மின் குளிசையைக் காட்டி வெருட்டி, நாண்டு கொண்டு நிண்டு தாயைச் 'சரண்டர்' ஆகவச்ச சூரன் 'சுழி'!

இப்பிடியே எமனைப் பச்சடி போடுற ஏசண்டுக்காரரிட்டையும் ஏமாறாமல் எயார்போர்ட்காரனுக்கும் 'பெப்பே' காட்டிப்போட்டு பொடி பிரான்சுக்குப் போய்ப் பறிஞ்சது ஆறு மாசத்துக்கு முந்தி நடந்த கதை. ஆறு மாசமா நசுக்கிடாமல் இருந்திட்டு இப்ப முள்ளங்கிப் பத்தையப் போல முழுசா பதினெட்டு லட்சமும் சொச்சமுமா 'பொறுக்கி' அனுப்பி வச்சிருக்கிறான் எண்டால் நம்பத்தான் ஏலுதில்லை. எந்தப் புத்தில எந் தப் பாம்போ? ஆற்ற **ATM** காட்ட வறுகிச்சுத்தினதோ?

அண்ணன்எண்டிருந்தாலும் எனக்கும் ஆயிரத்தெட்டு அல்லை தொல்லையள். வீட்டுக்கு வீடு வாசல்படிதானே? என்ர வீட்டிலையும் ஒரு தேவாங்கு ரியூட்டரி வழிய போய் பெஞ்சுகளைச் சூடாக்கியண்டு என்ர சூட்டைக் கிளப்பிறதுக்கெண்டு வந்து பிறந்திருக்கு.

உள்ளூரில உழாத மாடு வெளியூரில போய் என்னத்தை வெட்டி முறிக்கப் போகுதாம்' எண்டுதான் நானும் நினைச்சுக் கொண்டிருந்தன். ஆனால் இப்ப விஷயம் வேற மாதிரி ஆகியிருக்குது. போனவன் என்னத் தையோ வெட்டிப் புடுங்கீற்றான். "அவரும் இல்லாத வீட்டிலை தனிச்சுப் போன எங்களுக்கு உன்னை விட்டால் வேற ஆர் அண்ணை இருக்கினம்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு 'செென்ரிமென்ர' 'ரச்' பண்ணிற மாதிரிப் பேசிக் கண்ணைக் கசக் கிக்கொண்டு  தங்கச்சி வந்து நிக்கேக்கை 'பாசமலர்' ரேஞ்சுக்குப் பாயாட்டிக்கும் கொஞ்சமெண்டாலும் ரத்தம் துடிச்சு சதை ஆடத்தானே செய்யும்.

பெடி வெளிநாடு போனாப் பிறகு கொழும்போட வந்திருந்து 8000/- ரூபா வாடகை குடுத்து ஒரு எலிப்பொந்தில கட்டுமட்டாச் சீவிக்கிற தங் கச்சிக்குப் பதினெட்டு லட்சம் வருகுதெண்டவுடன **Stroke** வராத குறை. [கேட்டிருந்தால் பெடி அதையும் தேடி அனுப்பி வச்சிருக்கும்!] ரா முழுக் கத் தானும் நித்திரை கொள்ளாமல், என்னையும் கொள்ளவிடாமல் ஒரே அலட்டல்தான். வாற காசில காணியை அடவு மீட்கப் பத்து லட்சம் தேவையாம். மிச்சம் எட்டு லட்சத்தையும் என்ன செய்யிறதாம் எண்டது தான் அவவின்ர கவலை. [இங்க கோடிக் கணக்கில சுருட்டிறவங்களுக் கெல்லாம் இப்பிடிக் கவலை வாறதாத் தெரியேல்லை.]

இனி அடுத்தது **Bank** கில இருந்து காசை எடுத்து எப்பிடி வீட்டை கொண்டுவாறதெண்ட கவலை. பதினெட்டு லட்சமெண்டால் பருமட் டாப் பாத்தாலும் **Briefcase**ஸில அடக்கேலாது. எப்பிடியும் **Suitcase** ஒண்டு தான் தேவைப்படும். நல்லதாக்கிடந்த ஒண்டையும் நாசமறுப்பான் கிளப்பிக்கொண்டுபோய்ற்றான். ஊரியான், கொம்படி, கிளாலி எண்டு போன கந்தாயத்தில இழுபட்டுக் கந்தறுந்து போய்ச் சீவன் போன பழங் கிடையன் ஒண்டுதான் தங்கச்சி வீட்டில மிச்சமாக் கிடக்கிற ஆதனம். இனிப் புதுசாத்தான் ஒண்டு வாங்கவேணும். ஆனால் அதுக்கொரு அஞ் சாயிரம் எண்டாலும் தேவை. காசைப் பாத்தால் வேலைக்காகாது.  பதி னெட்டு லட்சம் வரப்போகுதாம். இதில அஞ்சாயிரம் ஒரு காசே? மனிசி சீட்டுப்பிடிச்சுச் சேர்த்துவச்சிருந்ததில [சாரி சல்வாரோ தோடு தொங் கட்டானோ வாங்க எண்டு] அஞ்சாயிரத்தை இறாஞ்சிக் கொண்டுபோய் புறக்கோட்டையில விசுக்கி எறிஞ்சு சூட்கேஸோட வெற்றிவீரனா வீட்டை வந்து சேந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் காலம்பற எழும்பி, ராகு காலம் கழிய விட்டு, ரோட்டில ஆமிக்காரன், போலீஸ்காரன் எண்டாரும் குறுக்க வாறானோ எண்டு சகுனம் பாத்து, பாதுகாப்புக்கெண்டு என்ர மூத்த சோத்து மாட்டையும் மனிசியின்ர ஒண்டுவிட்ட வெருளிக் கட்டையையும் கூட்டிய்ண்டு **Bank** க்கு வெளிக்கிட்டம். **Bank** வாசலில வெள்ளை வான் ஒண்டு வெறுமன நிண்டு கொண்டிருந்துது. நெஞ்சில 'திக்'கெண்டிருந்தாலும் முகத்தில ஒண்டையும் நான் காட்டிக் கொள்ளேல்லை. பாவம் தங்கச்சி. அவள் ஒரு அப்பிராணி. வெள்ளை வானையும் வெள்ளைச் சிரிப்போட பாத்து மினக்கெட்டுது. வாசலில நிண்ட செக்குறுட்டி சூட்கேசின்ர அளவைப்பாத்துக் கொஞ்சம் வெருண்ட மாதிரிக் கிடந்துது. கையில வச்சிருந்த **Metal detector** தடியால அவன் சூட்கேசைச் சுத்தி ஆலாத்தி எடுத்ததுதான் எடுத்தான். அது 'கீக் கீக் கீக்' கெண்டு குழறத் துவங்கீற்றுது.

கிட்ட நிண்டவை எல்லாரும் பயத்தோட எட்ட விலகிச்சினம். இதென்னடா நாசமறுப்பு. எனக்குத் தெரியாமல் எவனாவது குண்டைக் கிண்டைக் கொண்டாந்து உள்ளை வச்சிட்டானோ? எண்டு நினச்சு எனக்கு மண்டை கலங்கிப் போச்சுது. செக்கூரிட்டி சம்சயத்தோட எங்களைப் பாக்க, நான் சங்கடத்தோட பேய்முழி முழிக்க, 'டிக்கு டிக்'கெண்டு நெஞ்சிடிக்குமாப் போல உள்ளையிருந்து ஏதோ சனியன் சத்தம் போடுது. செக்கூரிட்டி வேற **Bag** கைக் கெதீல திறக்கச் சொல்லி அந்தரப்படுத்திறான். நடுக்கக் கையோட நானும் 'சிப்'பப் பிடிச்சிழுத்தால் அது வேற சிக்குப்பட்டு, எங்கிட பாதுகாப்பு அமைச்சரைப் போல சண்டித்தனம் பண்ணுது. கடைசீல ஒரு மாதிரி கந்தறுந்த சூட்கேஸ் ஆவெண்டு வாயைப் பிளந்துது. துறந்த கையோட 'கிரீங்' எண்டு மணியடிக்க எனக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப் போச்சுது.




இனிச் சொல்ல வேணுமோ? செக்கூரிட்டி முழியைப் பிரட்டியெண்டு துவக்கத் தூக்க, வந்தவ நிண்டவ எல்லாம் ஓடிப் பதுங்க, நான் முத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரை குத்தப்பட்ட 'ட்ரஸ்ரவாதியா முழிச்சாட்டத்தோட சூட்கேசுக்க பார்வையை ஓட்ட, உள்ளை பாத்தால் ஒரு **Alarm** மணிக்கூடு. அது மணி யடிச்சு முடிஞ்சு பழையபடி முக்கத் துவங்க, மோசமா ஒண்டும் நடக் கேல்லை எண்டு விளங்கி ஆசுவாசப்பட்டு எல்லாரும் பழையபடி மூச்சு விட'ரெடி' யான பிறகுதான் எனக்கும் போன உசிர் திரும்பி வந்துது

மூளையைக் கொஞ்சம் கசக்கிப் பிசக்கி ஓடவிட்டுப் பாக்க விஷ யம் வெளிச்சுது. காலமை அஞ்சரை மணிக்கு எலார்ம் வைக்கச் சொல் லிக்குடுத்த மணிக்கூட்டைத் தலைகீழாப் பிடிச்சு பதினொரு மணிக்கு **set** பண்ணிப் பக்குவமா பெட்டீக்க கொண்டுபோய்ப் பொதிஞ்சு வச்சி ருக்கு என்ர மனிசியின்ர ஒண்டுவிட்ட அலுகோசு. பின்ன 'உறுலோசை' ஏன் **Bank** க்கு கொண் டாந்தனி? எண்டு செக்கூரிட்டி என்னைப் போட்டு உருட்ட, தெரிஞ்ச சிங்களத்தில நான் முக்கித்தக்கி சப்பித் துப்ப, நல்ல வேளை அவனுக்கது விளங்காமல்போன புண்ணியத்தில ஒரு மாதிரி நான் தப்பினன். [உறுலோசுக்கு ஒரு மணிநேர தனிக்காவல் தண்டனை கிடைச்சுது!].

இனிக்காசெடுத்த கூத்தைக் கழலுறன் [உது நல்ல தமிழ் பாரு ங்கோ] கேளுங்கோ. **Fast Cash** எண்டேதோ பணியாரத்திலதான் பெடி காசை அனுப்பியிருந்தான். **Fast Cash** எண்டால் என்ன ஏதென்று ஒரு கோதாரியும் தெரியா தெனக்கு. வெளீல சொன்னால் வெக்கக் கேடெ ண்டுபோட்டு எல்லாம் தெரிஞ்சமாதிரித் தலையாட்டிப் போட்டன். நம்ப ரையும் **Amount** ஐயும் **SMS** பண்ணிவிடுறன். Bankகில போய்க்கேட்டால் காசைத் தருவான்கள் எண்டு **Short and Sweet** ற்றா கதையை முடிச்சிட் டான் கசவாரப் பெடி. ஒரு மாதிரி மனேஜரைக் கண்டு பல்லைக் காட்டி தெரிஞ்ச இங்கலீசில இளக்கிவிட்டன். அவருக்கும் இங்கிலீஸ் அரை குறைதான் எண்டதால 'குறை விளங்காமல் பேரையும் நம்பரையும் மாத்திரம் எழுதிக்குடுங்கோ காணும்', எண்டார். வசதியாய் போச்சுது.

கவுண்டரில் இருந்த கண்ணாடிக்காரத் தம்பி கண்ணாடிக்கால சூட்கேசையும் என்னையும் ஒரு மாத்ரிப் பாத்தேர். 'பதினெட்டு லட்சத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும் வைக்க உது காணாதெண்டு நினைக்கிறேரோ? தலை காணிக்கை பஞ்சடையிற மாதிரி எண்டாலும் அடைஞ்சுபோட மாட்டனே' எண்டு அனுபவப்பட்ட உள் மனம் கேள்வியும் கேட்டுப் பதிலை யும் சொல்லிப்போட்டுது.

ஆயிரம் ரூபாத்தாள் பதினெட்டு நூறு ரூபாத் தாள் அஞ்சு, பத்து ரூபாத்தாள் மூண்டு எண்டு கிடுகிடெண்டு எண்ணி ஆள் மேசையில வச்சேர். மிச்சக்காசைக் கட்டுக்களாத் தரப்போறேர் ஆக்குமெண்டு நான் எட்டிப்பாத்து ஏமாந்து போனதுதான் மிச்சம். மொத்தமா அவ்வளவுதான்! ஒப்பம் வைக்கவெண்டு நீட்டின தூண்டிலை இருந்த தொகை **- Rs. 18,532.00** பஸ் கொண் டக்டர்மாரைப் போல 2 ரூவாவை அமுக்கீராமல் அந்த நாணயத்தையும் எடுத்து மேல வச்சிட்டேர். நாணயமான மனிசன்.


பெடி SMS ஸ்சில போட்டிருந்த தொகை 18,53200 எண்டது சரிதான். ஆனால் கழிசடை விட்ட பிழை, தேவையான இடத்தில குத்துப் போட மறந்ததுதான். [பெடியன் அப்ப முன்னால நிண்டிருந்தால் போட்டுக் காட்டியிருப்பன் குத்தை வடிவா] நான் விட்ட பிழை; உடன் பிறப்பின்ர ஊத்தைவாளியைப் பற்றி ஆதியோடந்தமா அறிஞ்சிருந்தும் ஆராய்ஞ்சு பாக்காமல் 'அடிச்சான் பிறைஸ்' எண்டு நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அவளுக்குப் பின்னால இழுபட்டு வந்ததுதான்.

புண்ணிலை புளிப்பத்தினவேன்ர திருமுகம் எப்பிடி இருக்குமெண்டு தெரியாதவை எட்டி ஒருக்கா என்னை வந்து பாருங்கோ விளங்கும்!

*['இருக்கிறம்' - 01. 07. 2010 இல் பிரசுரமானது]*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோச்சி வரும் கவனம்!

என்ன செய்தாலும் ஒரு சில தொத்து வியாதியள தடுக்கேலாது. எல்லாருக்கும் ஒரு வயசில வாற மாதிரி வெளிநாட்டு விசர் ஒண்டு தொத்தீற்றுது - என்ர செல்ல மகளுக்கும். திருகோணமலையில் இருந்து கொழும்புக்குப் போய் பாஸ்போட்டையும் எடுத்து விக்கினமில்லாமல் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கக் கூடிய ஏஜென்சிக்காரன் ஆரையும் கையோட கண்டு, அழுது துலைச்சிட்டு வருவமெண்டு பயணத்துக்கு அடுக்குப் பண்ணினம்.

கொழும்பில அறிஞ்சவ தெரிஞ்சவ வீட்டில போய்த்தங்கி மினக் கெடுறதெண்டது இந்தக் காலத்தில ரெண்டு பக்கத்தாருக்கும் பிரச்சி னையான சங்கதி. ஒரு நாள் வேலைக்காக பதிவு கிதிவெண்டு போலீஸ் ஸ்ரேசன் வழிய போய்த் தொங்கிக்கொண்டு நிண்டு இழுபறிப் படுற தும் உசிதப்படாது. போனமா வந்தமா எண்டு வேலைய முடிச்சுக் கொண்டு போன சுறுக்கில மூச்சுக் காட்டாமல் திரும்பி வாறதுதான் புத்தி. அதுக்கு ராக் கோச்சிதான் தோது.

எஞ்சினோட தொடுத்து ரெண்டாம் வகுப்புப் பெட்டி ரெண்டு, அது க்கு அங்கால மூண்டாம் வகுப்புப் பெட்டியள மறைச்சாப் போல **Buffet** எண்டுற சாப்பாட்டுப் பெட்டியோட ரெயின் வந்து நிண்டுது. அடிச்சுப் பிடிச்சு அள்ளுப்பட்டு தெரிஞ்ச சேக்கஸ் எல்லாம் காட்டி ஒரு மாதிரிக் **Corner Seat** பிடிச்சுக் குதூகலப்பட றெயினும் வெளிக்கிட்டுது.

றெயிலில பஸ்ஸில எண்டு பயணம் போகேக்கதான் மனிசி என் னோடமனம் விட்டுப் பேசிறவ. மனம் விட்டெண்டால், சொந்தக் காற ரின்ர சோகக் கதையையும் பக்கத்தது வீட்டாக்களின்ர பரிசு கேடுக ளையும் வண்ணமா, வடிவா, விளப்பமா அவிட்டு விடுறதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு மணி தாண்ட மனிசியும் விடுப்புக் கதை பறைஞ்சு வாயுளைஞ்சு கண்ணயரத் துவங்கீற்றா. சாடையாக் கண்ணை மூடிச் சாய்வம் எண்டு நானும் நினைக்க, திடுதிடெண்டு உள்ளிட்டாங்கள் அஞ்சாறு விறுமத் தடியன்கள்.

ஆமி, பொலிஸ்காரரை அடிக்கடி பாக்கிற பாக்கியம் பெற்ற எங்கிட ஆக்களுக்கு அவையளின்ர சாங்கங்களைப் பற்றிச் சாங்கோ பாங்கமாச் சொல்லத் தேவையில்லை. வந்தவங்கட கையில வாளுக ளும் பொல்லுகளும். எஞ்சின் பக்கமா அணைஞ்சபடியிருந்த சீட்டில இருந்து பாத்துக்கொண்டிருந்த எனக்கு என்ன நடக்குது ஏது நடக்குது எண்டு முதலில ஒண்டுமா விளங்கேல்லை. விளங்கினாப் பிறகு மூளை வேலை செய்யமாட்டன் எண்டு **Strike** பண்ணீற்றுது.

பெரும்பாலும் என்னைப் போல **Warrant** இல பயணம் செய்யி றவை. மற்றவையளைவிடக் கொஞ்சம் வசதியான **Middle Class** ஆக்கள் தான் செக்கண்ட் கிளாசில போறவை. பொதுவாக அவையள் மற்ற வையளோட அடிதடியெண்டு இறங்காத சாதுவான அப்பிராணி ஆக் கள். எங்கிட நடப்பும் நாட்டாமையும் வழக்கமா வீட்டுக்கதானே. அறமி ஞ்சிப்போனால் ஒரு 'அரை'யைப் போட்டிட்டு அடுத்த வளவுக்கார னோட வாயால சண்டித்தனம் பண்ணிறதோட சரி.

கேட்டுக் கேள்வியில்லாமல் முறையா எல்லாம் நடக்குது. ஏதோ தந்து வச்சதைத் திருப்பி வாங்குமாப்போல உரிமையோட நகை நட்டு களை உருவிக் கழட்டி அடுக்கிறான்கள். நடக்கிறதெல்லாம் கனவா நினைவா எண்டு விளங்காமல் நித்திரை மயக்கத்தில கிடந்த சனமெல் லாம், கோழிக் குஞ்சுகளை பருந்திட்ட இறாஞ்சக் குடுத்த தாய்க் கோழி யளைப் போல மலாரடிச்சுப் போய் மசுங்கிக் கொண்டிருக்கினம்.

பிச்சைக்காரனுக்கு அம்பது சதம் குடுக்கிறதெண்டாலும் அறுவது தரம் யோசிச்சு மூளையைப் பினையிற ஈயாப் பிசினியளான எங்க ளுக்கு உது தேவைதான். எண்டாலும் 83 டில தொட்டு, முறைக்கு முறை விரும்பியோ விரும்பாமலோ குடுத்துச் சிவந்த கை எங்கிட கை எண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால கர்ணன்ர பரம்பரையில் வந்த எங்களுக்கு இதொண்டும் புதுசில்லைத் தானே?

காசைக் குடுக்கக் கஞ்சப்பட்டினமோ என்னமோ ஒண்டு ரெண்டு பேருக்கு முறையாச் சாத்துப்படியும் நடந்துது. பாத்துக் கொண்டிருந்த எனக்கு வயித்தைக் கலக்குமாப்போல கிடந்துது. எழும்பி **Toilet** க்குப் போவமெண்டாலும் நடக்காது. நாசமறுப்பான்கள் நாலு பேர் நட்டுவக்காலி போல நடு வழியில எல்லே மறிச்சுப் புடிச்சுக்கொண்டு நிக்கிறான்கள். கொஞ்சம் அசங்கினாலும் கையில வச்சிருக்கிறதால தீட்டிப் போடுவான்கள். எல்லாத்தையும் அடக்கிக்கொண்டு இருக்க வேண்டியதுதான்.

கலியாணம் முடிச்ச புதுசில பாத்தாப் பிறகு என்ர மனிசிய உள்ள படி உருப்படியா நான் பாத்தது அண்டைக்குத்தான். தாலி, தொங்கட்டான் தோடு எண்டு உள்ள நகை நட்டெல்லாத்தையும் அம்மனுக்குச் சாத்துமாப்போல சாத்தியண்டு அலங்கார பூசிதையா என்ர சகதர்மிணி எழுந்தருளி வந்திருந்த அந்தத் திருக்கோலத்தைக் காணக் கண்ணராவி[யாப்]ப் போச்சுது.

மகளையும் ஒண்டும் குறை சொல்லுமாப் போல விடேல்லை. காப்பு, சங்கிலி, கழுத்து மாலை கைச்சங்கிலி எண்டு நவீன டிசைனில பாத்துப்பாத்துச் செய்த பணியாரங்களை எல்லாம் போட்டு மினுக்கித் தங்கப் பவுணான பிள்ளை எண்டு சொல்லுமாப்போல சிங்காரமாத்தான் சோடிச்சிருந்தா.

பிரிஞ்சிப்பலுக்கு முன்னால தன்னும் முதுகு வளையாத நான், பவ்வியமா எழும்பி என்னால ஆனமட்டும் குனிஞ்சு வளைஞ்சு நிண்டன். ஆனாலும் நாரிப்பிடிப்பு 55 பாகைக்கு மேல வளைய விடமாட்டன் எண்டிட்டுது. [வயசுக்கும் வளைவுக்கும் ஏதாவது **Connection** இருக்குமோ?] அந்த வீணாப்போனவனுக்கு அது விளங்கினால் எல்லே? விட்டான் ஒரு நெவிள் அடி செவிட்டைப் பொத்தி. காதில விண் கூவிச்சுது. அரைப் போத்திலை **Raw**வா அடிச்ச மாதிரி தலை கிறுகிறுத்துது. அதுக்குப் பிறகு நடந்ததெல்லாம் மங்கலாத்தான் ஞாபகமிருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக் போயின்றில ஆமிக்காரன் செக் பண்றதை விட வலு திறமா மேலை இருந்து கால் வரைக்கும் தடவி பாலைப் பழம் போல பொதிஞ்சு, அந்த ஏசன்சிக் கள்ளனுக்குக் குடுக்கவெண்டு வச்சிருந்த காசையும் [பாவம் ஏசன்சிக்காரனுக்குத்தான் லக்கில்லாமல் போயிட்டுது.] மிச்ச சொச்சங்களையும் அவன் வழிச்சுத் துடைச்செடுத்த விருத்தாந்தத்தை சொல்லித்தான் தெரிய வேணுமே?

என்னோட படிப்பிக்கற சமய பாட ரீச்சர் மனிசி ஒண்டும் அதே ரெயிலில புருஷன் காரனோட வந்தவ. எங்களைப் போல இல்லாட்டிக் கும் குறையில்லாமல் தான் போட்டு வந்த நகை நட்டெல்லாத்தையும் மனிசி தாரை வாத்துக் குடுத்துப் போட்டும் கிணுங்காமல் செந்த ளிப்பா முகத்தை வச்சுக்கொண்டிருந்தது எனக்குப் பெரிய ஆச்சரியமா இருந்துது.

சமயத்தில நல்லா ஊறினதால மண்ணையும் பொன்னையும் சமமா மதிக்கிற அளவுக்கு மனிசி பக்குவப்பட்டிட்டுதாக்கும் எண்டு நினைச்சன். மண்டைக் குடைச்சல் தாங்கேலாமல் பிறகொரு நாள் பள் ளிக்கூடத்தில வச்சு மனிசியின்ர வாயைப் போய்க் கிண்டினன். அப்ப தான் விஷயம் வெளிச்சுது. மனிசி போட்டுக் கொண்டு வந்ததெல்லாம் கிலிற்று நகையளாம். மனிசனுக்குக் கூட உந்த விஷயம் தெரியாதாம். அம்மட்டு நாளும் கிலிற்றுப் போட்டு ஏமாத்தின விஷயம் எப்ப தெரிய வந்து என்னாகப் போகுதோ எண்டு பயந்து கொண்டிருந்த மனிசிக்கு உது நல்ல வாய்ப்பாப் போட்டுது. 'உனக்கும் பெப்பே உன்ர அப்பனுக் கும் பெப்பே' எண்ட கணக்கா, புருஷனையும் பேய்க்காட்டி, வந்த வெங் கணாந்தியளையும் ஏமாத்தி ஒரே கல்லில ரெண்டு மாங்காய் அடிச்சால் முகத்தில செந்தளிப்புத் தாண்டவமாடாமல் வேற என்ன ஆடும்?

அடுத்தடுத்த நாள் பேப்பர்ல மூலேல அந்த நியூஸ் வந்துது. சில நேரம் பாத்திருப்பியள். நாங்கள் போன ரெயிலிலதான் அது நடந்த தெண்டு சொந்தக்காரருக்கோ அண்டை அயலில இருக்கிறவைக்கோ ஒரு சொட்டும் தெரியாது. நாங்களும் அதைப்பற்றி மூச்சுக் காட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேல்லை. பொறாமை பிடிச்ச சனங்கள். தெரிஞ்சா வீணா சந்தோசப் பட்டிடுங்கள்.

ஏதாவது ஒண்டை இழந்துதான் ஒண்டைப் பெற வேணுமெண்டு வினம். அதுவும் சரிதான். நகை நட்டுப் போனதோடு மனிசீட உடம்பில மாற்றம் வந்திருக்கு. நகை நட்டைக் குடுத்துப் பிரஷரை வாங்கி வச்சிருக்கிறா. தங்கத்தின்ர விலை ஏறுதெண்டு பேப்பர் வழிய வாசிக்கேக்க எனக்குமிப்ப ப்ரெஷர் ஏறுறது.

*['இருக்கிறம்' - **15. 06. 20010** இல் பிரசுரமானது]*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநல Me

அந்தக் கவிதையை அவன் பத்தாவது தடவையாகப் படித்துவிட்டான். இன்னும் அவனுக்குச் சலிக்கவில்லை. மீண்டும் ஒரு முறை -

*சுயநலமி நீ என்று*

*சுட்டு விரல முன்*

*நீட்டும் போதுன்*

*கட்டை விரல்*

*காட்டுவது*

*முட்டாளே*

*உன்புறமே தான்!*



சொற்கட்டும் கவிச் சிறப்பும் கருத்தாழமும் படிக்கப்படிக்க அவனை மெய் சிலிர்க்கச் செய்கின்றன. கவிதை என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்.

பிரபல சஞ்சிகையில் பிரபலமாகப் போகும், கவிஞர் 'வாத்துக் குஞ்சு' வரதராஜனின் கவிதை. எத்தனை பேர் கண்களில் படப் போகிறது! எத்தனை பாராட்டுக் கடிதங்கள் வந்து குவியப் போகின்றன!! யாரிந்த வா.வ.? என்று எத்தனை வண்ணத்துப் பூச்சிகள் [அதாவது கல்லூரிக் கன்னியர்] விழியுயர்த்தப் போகின்றன!!!

அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. எப்படியாவது இந்தக் கவிதையை அந்த எதிர் வீட்டு அகிலாவின் கண்ணிற்படச் செய்துவிட வேண்டும். அதன் பின் அவளது ஏளனப் பார்வை குளிர்ந்த தென்றலாக மாறி....

வாசற் கதவு தட்டப்படும் ஒலியில் அவனது கற்பனை தடைப்பட எரிச்சலுடன் கதவைத் திறந்தவன் விழிகளில் **100 Watts** பல்ப். அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கவேயில்லை. எதிர் வீட்டு ஏந்திழையின் ஒரே தம்பி அவன் வீட்டுப் படியேறி உள்ளே வந்தான்.

"இந்த வாரக் 'கர்ப்பூரம்' மகஸினை அக்கா வாங்கிட்டு வரச் சொல் லிச்சு"

இன்பத் தேன் ஒரு லிட்டர் அவன் காதில் வந்து பாய்ந்தது.

ஆஹா! என் கவிதை இதில் வெளியான சேதி எப்படியோ அவள் காதுக்கும் எட்டிவிட்டது. தூது விட்டிருக்கிறாள் தம்பியை. இனியெ ன்ன? கவிஞனல்லவா - அவன் கற்பனை சிறகடித்துப் பறக்கலாயிற்று.

"கடையில அக்கா கேட்டுச்சாம். எல்லாப் பொஸ்தகமும் தீர்ந்தி டுச்சாம்"

மேலதிகத் தகவல் தந்தான் தங்கத்தம்பி. ஆகா! எத்தனை இனிப் பான சேதி! அவன் கவிதை வெளியான இதழ் யாவுமே விற்றுப்போய் விட்டனவாம்.

தனது இதயத்தையே எடுத்துக் கொடுப்பது போல அந்த இதழைப் பக்குவமாக எடுத்து அவளது தம்பியின் கையில் திணித்தான்.

"கவனம்!"

போகிற போக்கில் அவள் தம்பி சொன்ன வார்த்தைகள் தேனைத் தேளின் விஷமாக மாற்றும் மாயத்தைச் செய்துவிட்டன.

"அக்கா எழுதின கதை ஒண்ணு இந்த இஸ்யூல வந்திருக்காம்"

அவன் புரட்டிப் பார்க்காத பக்கங் களுள் 'அகல்யா' எழுதிய 'கிணற்றுத்தவளை' யும் ஒளிந்திருந்ததை பாவம், வாத்துக் குஞ்சு வரதராஜன் அறிந்திருக்கவில்லை!

*['இருக்கிறம்' - **15. 03. 2010** இல் பிரசுரமானது]*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன தான் முடிவு ?

பரீட்சை முடிவு தெரியவில்லை. வினோத்துக்கு ஒரே டென்ஷனாக இருந்தது. பரீட்சை எழுதியபோதிருந்த நம்பிக்கை இப்போ கொஞ்சம் கொஞ்சமாகத் தளர ஆரம்பித்திருந்தது. 'விடைத்தாளில் சுட்டெண்ணைச் சரியாக எழுதினோமா?'' என்று வேறு சந்தேகம் முளைத்து மனதை அரித்தது.

ஒரே தவிப்பு. எதிலும் கவனம் செலுத்தமுடியாத நிலை. ஆசிரியர்களின் பாழாய்ப்போன வேலை நிறுத்தத்தால் அன்று வெளிவர வேண்டிய பரீட்சை முடிவு தள்ளிப் போய்விட்டது. இனி ஒவ்வொரு நாளும் இதே நினைப்பால் தூக்கமும் கெடப்போகிறது.

நத்தையாக ஊரும் நேரத்தை எப்படிக் கொல்வது? அக்காவின் பழைய புத்தகப் பெட்டியைக் குடைந்தவன் விரல்களை வழுவழுப்பான அட்டை வருட, கையில் கத்தியுடன் முறுக்கு மீசை ஆசாமி ஒருவன் ஒரு புறமும் கழுத்தில் இருந்து இரத்தம் சொட்டச்சொட்ட கவர்ச்சிப் போஸில் கன்னி ஒருத்தி மறுபுறமுமாக ஒரு மர்ம நாவல் - 'என்னதான் முடிவு?'

முன்பெல்லாம் சுஜாதாவையும் ராஜேஸ்குமாரையும் ஸ்டெல்லா புரூஸையும் விழுந்து விழுந்து படித்தவன்தான் அவன். இப்போ படிப்பு படிப்பென்று அதற்கெல்லாம் நேரமே இல்லாமல் போய்விட்டது.

கதை ஆரம்பமே விறுவிறுப்பாக இருந்தது. உலகத்தையே மறந்து வினோத் அதில் மூழ்கிப்போனான். நாடக நடிகை கல்பனா, மேடையில் நாடகம் நடைபெறும்போது கொலை செய்யப்பட்டுவிடுகிறாள். வில்லனாக நடித்த விக்ரமின் கையில்தான் துப்பாக்கி இருந்தது. விக்ரமோ நிஜ வாழ்வில் அவள் கணவன். தனது கையில் இருந்தது வெற்றுத் துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாக்கி. அதில் ரவைகள் ஏதும் இருக்கவில்லை என்று விக்ரம் விக்கி விக்கி அழுதபடி கூறுகிறான்.

கதாநாயகனாக நடித்த கார்த்திக்கிற்கும் கல்பனாவுக்குமிடை யில் 'கசமுசா' ஏதோ இருந்ததாகவும் அதன் காரணமாக விக்ரம் கல்ப னாவைக் கொன்று இருக்கலாம் என்றும் துப்பறிவாளர் துக்காராம் சந் தேகப்படுகிறார்.

அந்த நாடக குறூப்பில் புதிதாகச் சேர்ந்த புதுமுகம் புவனாவின் காதல் வலையில் விழுந்துவிட்ட கார்த்திக்தான் கல்பனாவின் கொலை க்குக் காரணமானவன் என்பது நகைச்சுவை நடிகன் நடராஜின் ஊகம்.

ஆனால் நடராஜ் கல்பனாவுக்கு எழுதிய காதல் கடிதமொன்றும் துப்பறிவாளர் கையில் சிக்குகிறது. தான் விளையாட்டாக எழுதிய கடி தம் வினையாகிவிட்டதாக நடராஜ் புலம்புகிறான்.

நாடக டைரக்டர் டாமோதிரனுக்கும் [எண் ஜோதிடப்படி மாற்றிய மைக்கப்பட்ட பெயர்] கல்பனாவுக்குமிடையில் பணக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக ஏதோ பிணக்கு இருந்து வந்ததாகவும் ஒரு 'கிசு கிசு' மெல்லக் கசிகிறது.



'யார் கொலையாளி?' வினோத்தால் ஊகிக்க முடியவில்லை. என்னதான் முடிவு என்பதை அறியப் பக்கங்களை அவசர அவசரமாக மேய்ந்து தள்ளினான். கடைசிப்பக்கத்தின் கடைசி வரியை யும் வாசித்து முடித்துவிட்டான், ஆனாலும் முடிவு தெரியவில்லை. ஓ, இன்னும் இரண்டு பக்கங்கள் பாக்கியிருக்கவேண்டும்.
ஆனால் அவற்றைக் காணவே காணோம்.



ஒரே எரிச்சலாக இருந்தது. கையில் இருந்த புத்த கத்தை மூலையில் விட்டெறிந்தான். முடிவு தெரியாத தவிப்பு இப்போ இருமடங்காகியிருந்தது.

*['இருக்கிறம்'* - 20. 03. 2008 இல் பிரசுரமானது]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆளவந்தான் ஒரு பிரபல்யமான புள்ளி. அவரை இன்று எவரும் அசைக்க முடியாது. அரசியல் செல்வாக்கும் ஆள் பலமும் பணபலமும் சேர்ந்து அவரை ஒரு அடாவடியாக மாற்றியிருந்தன. கடத்தல் சாம்ராஜ் யத்தில் அவர் ஒரு சக்கரவர்த்தி. கமிஷனரின் கண்களைக் கூடக் கட்டிப் போடும் வல்லமை படைத்தது அவரிடமிருந்த கறுப்புப் பணம்.

அவரது ஒரே செல்ல மகன்தான் மன்மதன். அவன் கண்ணில் பட்ட கன்னிப் பெண்கள் கதி அதோகதிதான். கற்பழிப்பு அவனது பிரதான பொழுதுபோக்கு!

ஆரம்பகாலத்தில் விலைமாதாகச் சோரம் போய்ப் பின்னர் ஆள வந்தாரின் படுக்கையறைப் பாவையான சஞ்சலாதான் அவன் தாய். தாயைப்போல பிள்ளை.

ஆளவந்தானுக்குப் பக்கபலமாக வக்கீல் வரதனும் அடியாள் வடி வேலுவும் இருக்கும்வரை அவர்கள் கொட்டத்தை யாரால்தான் அடக்க முடியும்? அவரது ஆட்டங்களுக்கெல்லாம் பக்கப்பாட்டுப் பாடியவள் தான் அவரது சிறிய தாய் தனலட்சுமி.

இந்தச் சமூக விரோதிகளை வாழ விடக்கூடாது. துடிக்கத் துடிக்கக் கொன்று குழி தோண்டிப் புதைக்க வேண்டும். ஒருவரையும் விட்டு வைக்கக்கூடாது. இப்புல்லுருவிகளின் சாவு புதிய சமுதாயத்திற்கு ஒரு பாடமாக அமையவேண்டும். எழுத்தாளர் பரந்தாமன் புத்தியைத் தீட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னார். அந்த ஏழு பேரையும் கொல்வதற்குப் பொருத்தமான ஒரு ஆளைத் தேடினார். பேட்டை ரவுடி ரங்கன். அவன்தான் பிடிபடாமல் கெட்டிக்கா ரத்தனமாகக் கொலை செய்யக்கூடியவன்.

ரங்கன் பாவம் நல்லவன். காலக் கோளாறால் ரௌடியாகிவிட் டான். அவனுக்கொரு அன்புத் தாயும் அழகிய காதலியும் வேறு இருக்கி றார்கள். கொலை அவனுக்குத் தொழிலல்ல. ஆனால் சமூகத்தைத் திருத் துவதற்காக அவன் இந்த விஷப் பரீட்சையில் இறங்கப் போகிறான்.

கமிஷனருக்கு கத்திக் குத்து! வக்கீலுக்கு விஷ ஊசி! அடியாளுக்கு டைம் பாம்! மன்மதனுக்கு மர்ம அம்பு! சஞ்சலாவுக்குச் சுருக்குக் கயிறு! தனலக்ஷ்மிக்கு எலக்ரிக் ஷாக்! ஆளவந்தானுக்குத் துப்பாக்கிக் குண்டு!

ஆளுக்காள் வித்தியாசமான உத்தியில் மரண தண்டனை. பரந் தாமன் வரிசைப்படுத்திக் கொண்டார். அவரது திட்டப்படி காரியங்க ளைக் கச்சிதமாகச் செய்து முடித்த ரங்கன் ஏழாவதாக ஆளவந்தா னைக் காலிபண்ணும்போது அகப்பட்டுக் கொண்டான். சட்டத்தின் ஓட் டைகளைச் சாதகமாக்கித் தனது வக்கீலின் வாதத் திறமையால் ரங்க னைச் சாமர்த்தியமாகத் தப்பவைத்து விட்டார் பரந்தாமன்.



கருணையில்லாமல் வன்முறைக்கு வழிவகுக்கும் ஏழு கொலைகளைச் செய்த காரணகர்த்தாவும் சிருஷ் டிகர்த்தாவுமான பரந்தாமனுக்காகக் காலம் நீண்ட போது காத்திருக்கவில்லை.

'அந்த ஏழு பேர்' என்று ஏழெழுத்தில் அவர் வைத்த தனித் தமிழ் தலைப்பும் கைகொடுக்காமல் - கதை, வசனம், பாடல், இசை, நடிப்பு, டைரக்ஷன், தயாரிப்பு என்று ஏழு பெரும் பொறுப்புகளையும் தனது தலையில் தூக்கிப் போட்டுக்கொண்ட அவரை, ஏழு நாட்கள் தன் னும் ஓடாது பெட்டியில் சுருண்டு படுத்துக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதன் மூலம் பழி வாங்கிவிட்டது – அவரெடுத்த அந்தக் கொலைப்படம்!

[ '*இருக்கிறம்*' - **15 . 10. 2007** இல் பிரசுரமானது.]

---------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதோ ஒரு சிறுகதை!



சிறுகதை எழுதுவது எப்படி? எடுத்த வாக்கிலேயே இப்பிடி எழுதி னால் உருப்பட்டமாதிரித்தான். மேற்படி தலைப்பில நானும் ஏதோ கட்டுரை எழுதப் போறனாக்கு மெண்டு நினச்சு உதை வாசிச்சு மண்டை காயிறதுக்குள்ள மற்றப்பக்கத்துக்குப் பாய **Ready** ஆகியிருப்பியள் எண்டு விளங்குது. ஓமோம். இப்ப எல்லாம் **Remote** காலம். பிடிக்காட்டில் அடுத்த **Channel** தானே?

சிறுகதை உலகில பழம் திண்டு கொட்டை போட்ட பல சாம்ப வான்கள் அந்தத் தலைப்பில எழுதிக் குப்பை கொட்டீட்டினம். அதுக் குள்ள தலையக் குடுக்கிற அளவுக்கு எனக்கு அனுபவமுமில்லை; விருப் பமுமில்லை. அப் பிடி நானேதும் எழுதிக் கிழிச்சாலும் அதை வாசிச்சுத் தானாக வேணும் எண்ட அளவுக்கு நீங்களும் உரிச்சு வெங்காயங்களு மில்லை.

இடையில ஒரு சின்ன விளக்கம். சாம்பவான்கள் எண்டொரு சொல் வந்துதெல்லே? அதாரவன்கள் எண்டு நீங்கள் மண்டையப் போட் டுப் பினைஞ்சு அகராதியாளப் போட்டுப் பிறாண்டத் தேவையில்லை. ஜாம்பவானைத் தான் நான் அப்பிடி நல்ல தமிழில எழுதினானான். சில ஆக்களுக்குத் தனித் தமிழில எழுதினால்த்தான் பிடிக்கும். இல்லை யெண்டால் சனிப்பிடிக்கும். வட எழுத்தைக் கலந்து எழுதினால் 'கான்' கொச்சிக்காயைக் கடிச்சவ மாதிரிச் சுள்ளிட்டுப் போயிடுவினம். ஆன படியால் எழுதத் துவங்கமுந்தி உந்தத் தமிழைத் சரிப்பண்ணீர வேணும்.

எந்தத் தமிழில எழுதிறதெண்டே முடிவு செய்ய ஏலுதில்லையாம். அதுக்குள்ள.... பொறுங்கோ. நீங்கள் என்ன சொல்ல வாறியள் எண்டு விளங்குது. ஒரு காலத்தில தனித் தமிழில எழுதினால்த்தான் மதிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதராசனார், தமிழ்வாணன், மணிவண்ணன் எண்டு எல்லாரும் அப் பிடித்தான் கதை எழுதிக் கண்ணைக் கட்டிச்சினம். யாழ்ப்பாணத் தமி ழிலை எழுதினால் எங்களுக்கு விளங்குதில்லை எண்டு வில்லங்கம் பண்ணிச்சினம். அந்தப் பகீரதன்கள் எல்லாமிப்ப எங்கயோ போய்ச் சேந்திட்டினம். இப்பயிப்ப எங்களுக்கே விளங்காத மாதிரி அங்கயே எத்தினையோ பேர் எழுதித் தள்ளுகினம். அதுக்காக விளங்குதில்லை, அடிக்குறிப்புப் போடுங்கோ எண்டு நாங்கள் கச்சால் [கலவரம்] செய் யேலுமே? செய்தாலும் ஆர் கேக்கப் போயினும்? Minorityயிட கதையள **Majority** கேட்டதாச் சரித்திரம் இல்லைத் தானே?

சரித்திரம் பூமிசாத்திரம் எண்டு இப்ப ஏனிந்த மனிசன் அலட்டுது எண்டு நீங்கள் புறுபுறுக்கிறது என்ர ஞானக்கண்ணுக்குத் தெரியுது. எழுத்தாளன் எண்டால் ஞானக்கண்ணும் இருக்கத்தானே வேணும்? 'அது சரி. ஆரை நீர் இப்ப எழுத்தாளன் எண்டுறீர்?' எண்டு நீங்கள் கெம் பிக்கொண்டு கேக்க வெளிக்கிடுறதும் எனக்கு விளங்குது. அதைத் தான் ஆறாம் அறிவு எண்டுவினம். இப்ப விளங்குதே ஆர் எழுத்தாளன் எண்டு. அடியேன்தான். 'அடி செருப்பால' எண்டு அடிக்கச் செருப்பைத் தேடாதீங்கோ. நாய் இருந்தால் கொண்டு போயிருக்கும். **sorry**. ' இருந் தால்' [கொண்டு] போயிராது. இல்லாட்டில் தான் போயிருக்கும். [**I *mean*** நாய் **as well as** செருப்பு]

என்னில இருக்கிற பிழை இதுதான். எதையும் வெட்டொண்டு துண் டிரண்டு எண்டு போட்டுடைக்கத் தெரியிறதில்லை. சுப்பற்ற கொல்லை யைச் சுத்திச் சுத்தி வருமாப்போல ஆலாபரணம் பண்ணாமல் விஷயத் துக்கு வரத்தெரியாது. கதை எங்கயோ தொட்டு வேற எங்கயோ போய் நிக்கும். அதனால தான் 'மனம் ஒரு குரங்கெண்டு டார்வினும் சொன்ன வர். ['அதைச் சொன்னது டார்வினில்லை ஐஸே – Cho' சரி சோவோ பேணாட்ஷோவோ ஆர் சொன்னால் என்ன? குரங்குச் சேட்டைவிட்டது காணும். விஷயத் துக்கு வாரும் ஓய்!]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயம் என்னெண்டால் சிறுகதை ஒண்டு எழுதவேணுமெண்டு கொஞ்ச நாளா எனக்கு மனசுக்குள்ள ஒரு அரிப்பு. [அரிப்பெடுத்தால் சொறி. சொறிய வேண்டியதுதானே?] அதைச் சொறியச் சொறியக் கடி இன்னும் கூடுது. [ அதாலதான் எங்களப் போட்டுக் கடிக்கிறீரே? சொறிச் சேட்டை கூடிப் போச்சுது]. Sorry. [இது மற்றச் சொறி; இங்கிலீஸ் சொறி]. உங்களுக்குச் சொறியாத மட்டில சந்தோசப்பட்டுக் கொள்ளுங் கோவன்.

எதிலையும் சந்தோசப்படுற மன நிலைய நாங்கள் வளர்த்துக் கொள்ள வேணும். அப்பதான் **Positive Energy** கூடும். பாத்தியளே வேதாளம் பழையபடி முருக்கமரம் ஏறீற்றுது. பொறுங்கோ இறக்கிக் கொண்டு வாறன். ஹி.... ஹி கள்ளை இல்லை; வேதாளத்தை!

இந்தச் சிறுகதை எழுதத் துவங்க முதல் கனக்க முஸ்தீபுகள் செய்யவேண்டிக் கிடக்கு. [முஸ்தீபுகள் பிடிக்காதவை எடுபாடுகள் எண்டு போட்டுக் கொள்ளுங்கோவன்.] கதை எழுதிறதுக்கான சூழலை முதலில உருவாக்க வேணும்.

பிள்ளையள் ஒரு பக்கம் காச்சு மூச்செண்டு கத்திக்கொண்டு ஒளிச்சுப் பிடிச்சு விளையாட, [சிலவேளை, காட்டிக் கொடுத்துவிடும் கயமைத் தனம் இல்லாதவர் என்ற நம்பிக்கையில் எழுத்தாளரின்ர கவ ட்டுக்க பதுங்கியிருக்கவும் கூடும்]. TV யில ஒரு பக்கம் ஹன்சிகாவும் பன்சிலாலும் [ஆரோ ஒரு புதுமுகமாம்] பல்லை பல்லைக் காட்ட, குசினி யில் இருந்து வரும் 'குஞ்சாங்கோ குசுப்பியாங்கோ' எண்ட பரீட்சார்த் தப் பலகாரத்தின்ர மணம் நாசியைச் சுற்றி நர்த்தனமாட, ஐம்புலன்க ளையும் வென்ற ஞானியைப்போல அத்தனை பரிமாணங்களையும் உள்ளடக்கியதான ஒரு படைப்பை உருவாக்கும் எழுத்தாளனாக அவதா ரம் எடுக்க முடிந்தால்தான் நாளைய வாசகர் உலகம் ஆகா ஓகோ என்று ஏற்றிப் போற்றும். [சிலநேரம் உச்சாணிக் கொப்பில் ஏற்றிவிட்டு அப்ப டியே 'அம்போ' எண்டு விட்டாலும் விட்டுப்போடும்.] பிறகென்ன 'சுப்பா'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்! புகழ் எண்ட போதை மயக்கத்தில கஞ்சா அடிச்சவனைப் போல உளறிக் கொட்டிக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

அண்ணாதுரை [விரும்பினவ அறிஞரையும் கூடச் சேர்த்துக் கொள்ளுங்கோ] ஒரே இரவில நித்திரை கொள்ளாமல் முழிச்சிருந்து 'ஓர் இரவு' படக்கதை வசனத்தை எழுதி முடிச்சவராம். அதுக்காக 'ஓர் இரவு' எழுத்தாளர் எண்டு அவரைச் சொன்னால் நல்லாவே இருக்கும்? மர்மக் கதை எழுதுற எழுத்தாளருக்கு வேணுமெண்டால் அது பொருந் தக்கூடும். ராவில எழுதிறது அவையளுக்கு வசதியாயும் இருக்கக் கூடும். 'கூகையின் அலறலும் கோட்டானின் ஊட்டியும் எங்கோ திறந்து மூடும் யன்னல் கதவின் 'கிரீச்'சொலியும் பின்னால **Sound Effect** குடுத் துக்கொண்டிருக்கும்.

எந்த நேரத்தில எப்பிடியான சூழலிலே எப்பிடி எழுதிறதெண்ட தைப் பிறகு பாப்பம். இப்ப என்னத்தை எழுதிறதெண்டு முதலில தீர்மா னிக்க வேணும். ஆருக்காக எழுத்திறம் எண்டதைப் பொறுத்துத் தான் எதை எழுதுறது எண்டு முடிவெடுக்கலாம்.

மனிசர் [அக்ரஹாரத் தமிழில - மனுஷாள்] 'வாசிக்கத்தானே எழு திறம்' எண்டு குதர்க்கமாக் கதைக்கக் கூடாது. எல்லா மனிசரும் ஒரே மாதிரியில்லை. ஒவ்வொரு தராதரம் இருக்கு. எந்தப் பேயன் இதைப் போய் வாசிப்பான் [Sorry, உங்களைச் சொல்லேல்லை] எண்டதை முத லில தெளிவுபடுத்திக்கொள்ள வேணும். நேர மினக்கேட்டுக்காக, ஒரு பொழுது போக்குக்காக வாசிக்கிறவைதான் கூட. அதிலயும் முக்கால் வாசி பெண் புரசைகள். அவையளிலையும் விடலைப் பருவ, **Teen Age** பெட்டையள்தான் **Majority.**

கட்டில்ல படுத்துக் கொட்டாவி விட்டுக்கொண்டு, முந்த நாள் சந் திச்ச அரை லூசை நினைச்சுக்கொண்டு, கச்சானைக் கொறிச்சுக் கொண்டு உளைவெடுக்கிற தரவளியள். அவயளுக்கு எழுதேக்க நுள்ளா மல் நோகாமல் நைஸா தடவிக் குடுக்குமாப்போல [அவையளை இல்லை] காதல் ரஸம் சொட்டச் சொட்ட எழுத வேணும். அமர காதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதர்ஸக் காதல் எண்டு தேவதாஸ் Rangeற்கு புருடா விடவேணும். கண்ணில தண்ணி வாற வரைக்கும் உருகி உருகி எழுத வேணும். அது நமக்குச் சரிப்படாது.. இந்த TV சனியன் வேற வந்து அதுகளையும் வளைச்சுப்போட்டு எங்கிட 'மாப்பசான்'களின்ர பிழைப்பில மண்ணைப் போட்டிட்டுது.

அடுத்தபடியா Retire பண்ணிப்போட்டு சாய்மனையில சாஞ்சிருந்துகொண்டு ஆறுதலா மேஞ்சுபோட்டு [புத்தகத்தைத்தான்] சங்கத்துல வந்திருந்து சொட்டை சொல்லி அலுப்புத் தீர்க்கிற Nineties. பெரிய எழுத்து ராமாயணத்தை நவீனப்படுத்துமாப்போல, பக்தியையும் பரவசத்தையும் கலந்து, கற்பையும் காமத்தையும் குழப்பி, குடும்பம் பாசம் பணியாரம் பாரம்பரியம் எண்டு கதை பண்ணத் தெரிஞ்சால் அவையளத் தாக்காட்டலாம். போற இடத்துக்குப் புண்ணியமும் தேடித் கொள்ளலாம். [கடவுளைக் கைவிட்டே கனகாலமாப் போயிட்டுது. இதில புண்ணியத்தத் தேடி எந்த **Bank** இல **Deposit** பண்ணப்போறன்? அதால அதிலையும் வேலையில்லை.]

மூண்டாவது இடத்தில இருக்கிறவை கொஞ்சம் கெடுபிடியான முறட்டுத்தனமான ஆக்கள். முதலாளியளின்ர முகத்திரையைக் கிழிக்கிறம் தொழிலாளத் தோழர்களைத் தூக்கிறம் எண்டு 50-60 வருசமாக் கொடி பிடிச்சுக்கொண்டு திரியிறவ. தொழிலாளியளுக்கு முதலாளிமார் எப்பிடியோ அப்பிடித்தான் இவையளும் எழுத்தாளர்களுக்கு. இவையள் சொல்லுமாப் போலத்தான் எழுத வேணும். இவையள் வச்சதுதான் சட்டம். மீறினால் கருங்காலிப் பட்டம் Confirm .

இவையளப் பொறுத்தமட்டில முதலாளி – தொழிலாளி பிரச்சினைதான் ஒரே பிரச்சினை. அதை வச்சு எழுதிறவன்தான் எழுத்தாளன். மற்ற எழுத்தாளர்கள் எல்லாரும் முதலாளித்துவத்தின் அடிவருடிகள்.

தமிழ் சினிமாவில ரஜனி செய்த வேடத்தில 20 வரிசத்துக்குப் பிறகு தனுஷ் நடிப்பேர். சிவகுமார் செய்ததைச் சூரியாவும் செய்வேர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கள்தான் மாறுவினம். கதை அப்பிடியேதான் இருக்கும். அது போலத்தான் இவையளின்ர கதையளில விதானையாரும் சம்மாட்டியும் கடை முதலாளியும் கட்டடக் கொந்துராத்துக் காறரும் தோட்டத் துரையும் அரசியல்வாதியும் எம்பியும் தோட்டத் துரையும் தங்களுக்கு கீழ உள்ளவைய வதைச்சு வயிறு வளர்க்கிற சுரண்டல்காறரா வருவினம். கதைக்கு கதை ஆக்கள் மாறுவினம். அதிகாரம், அடக்குமுறை, அராஜகம் எண்டு அவையளிட குண இயல்புகள் மாறாது. சம்பவங்களும் மாறாது. புதிய மொந்தையில பழைய கள்ளை வாத்து வாத்துத் தருவினம். நல்லாக் குடிச்சுப்போட்டு அந்த மயக்கத்தில தொழிலாளியளோட சேர்ந்து எல்லாருமா 'ஒழிக' கோஷம் எழுப்பினால் எல்லாம் சரி. 'ஒக்கம ஹறி'. முதலாளித்துவம் மறைஞ்சு சமத்துவ சமுதாயம் உதயமாகி விடும்.

இப்பிடி அரைச்சமாவையே அலுக்காமல் சலிக்காமல் அரைச்சுத் தள்ளுவினம். [சே, உதாரணத்துக்குக்கூட இந்த 'இத்துப்போன' அரைச்சமாத்தான் வருகுது.] ஒரு மாறுதலுக்கு, 'சிரைச்ச தாடியையே எத்தினை நாளுக்குச் சிரைப்பினமாம்?' எண்டு புதுசாச் சொல்ல வெளிக்கிட்டால், 'சாதிய இழுத்துக் கதைக்கிறான்' எண்டு சண்டிக் கட்டோட முண்டிக்கொண்டு வந்திடுவினம். ஏன் வீணா வில்லங்கத்துக்க தலையைக் குடுப்பான்?

நாலாவது '**Category** யில இருக்கிறவ கொஞ்சம் கெடுபிடியான ஆக்கள். நக்கீர பரம்பரையினர். அவையளத் திருப்திப்படுத்திறது வலு கட்டம். [கஷ்டம்] அது நொட்டை இது நொள்ளை எண்டு பிச்சுப்பிடுங்கி ஒரு வழி பண்ணிப் போடக்கூடிய ஆக்கள். ஆனால் அவையளுக்குப் பிடிச்சால்த்தான் கதைக்கு இலக்கிய அந்தஸ்த்துக் கிடைக்கும்.

காஞ்சமாடு கம்பில விழுந்தமாதிரி கதையள மேஞ்சு தள்ளிற கலைமாணியளும் புத்திசீவியளும் 'சாகா வரம் பெற்ற சிறுகதை' எண்டு புளகாங்கிதப்பட்டுச் 'சேட்டிபிக்கேற்' தந்தால்தான் நீங்களும் எழுத்தாளன் எண்டு சொல்லிக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், வரி விலக்குப்பெற்ற கலைப் படைப்புகளைப் பார்த்து [பாராமல்] ஓடி ஒளியிற கலா ரசிகர்களைப்போல வாசிக்கிறவனையும் வாசியாமல் பண்ணிற வில்லங்கமும் அதில கொஞ்சம் தொக்கி நிக்குது.

அடுத்த **Point**, எழுதினத எழுதக்கூடாது. ஆரும் எழுதாததா எழுத வேணும். உதாரணமா கக்கூஸில போயிருந்து முக்கினதையும் அதுக்குப் பிறகு நடந்த முக்கியச் செய்திகளையும் முக்கி முக்கிச் சொல்லலாம் பிழையில்லை.

இடம் விட்டு விட்டு எழுதினால் மு... க்... கி.... ற... து... வடிவா விளங்கும். ஒரேமாதிரி எழுதக்கூடாது. தலைகீழா எழுதவேணும். [ தலைகீழா நிண்டுகொண்டு எழுத முடிஞ்சால் உத்தமம்.] கடைசி வசனத்தைக் கொண்டந்து முன்னுக்குப்போடவேணும். முதல் வசனத்தைக் கொண்டு போய் நடுவில திணிக்க வேணும். எழுத்துப் பிழையள் ஏதும் வந்தால் திருத்தக்கூடாது. திருத்த மினக்கெட்டால் நனவோட்டம் உடைபட்டுப் போயிடும்.

கதைய தட்டச்சில் பதிவு செய்யிறவரெண்டால் உங்கிட மடிக்கணனியை நம்புங்கோ. கைவிடாது. உங்கிட எழுத்து நடை அதுக்கு வடிவாத் தெரியும். அது அடிக்கிறத அதுபாட்டில விட்டிடுங்கோ. நினச்சுப் பாக்கமுடியாத கற்பனையோட, எழுத்துக்களை மாத்திப்போட்டுக் கதைக்கு புதுப்புது அர்த்தம் எல்லாம் சேர்க்கும்.

உதாரணமாக 'நாயகியிடத்தில் நாயகன் வித்தை காட்டி மயக்கி விட்டான்'. எண்டு அடிச்சால் அது 'விதை காட்டி மயக்கி விட்டான்', எண்டு அடிச்சு, பச்சையாக உண்மையைப் போட்டு உடைச்சு விட்டிடும். முடிஞ்சமட்டில ஆருக்கும் விளங்காமல் நவீன நாடகக்காறரைப் போல பூடகமா எழுதவேணும். வாசிக்கிறவன் என்ன சொல்ல வாறீர் எண்டு விளங்காமல் குழம்ப வேணும். குழப்பம்தான் நல்ல படைப்பின்ர 'குவாலிபிகேஷன்'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதி முடிச்சாப் பிறகு என்ன எழுதினம் எண்டு உங்களுக்கே விளங்கேல்லையோ? அப்ப வெற்றிதான். உங்களுக்கு விளங்காதது விள ங்கவேண்டியது எல்லாத்தையும் விளக்கமா விளங்க வைச்சிடுவினம் அவையள். அவையள் எண்டால் எவையள் எண்டு கேளாதீங்கோ. கேட் டால் உங்கிட விளங்காத் தன்மையை வெளிச்சம் போட்டுக் காட்டுமாப் போல ஆயிடும். ஆனபடியால் தெரியாட்டிக்கும் எல்லாம் தெரிஞ்ச மாதி ரித் தலையாட்டிப் போட்டிருந்தியள் எண்டால் நீங்களும் அவையளைப் போல அறிவு சீவியளா ஆகீருவியள். ஆனாலும் அப்பிடியான ஆக்களை அப்ப அப்ப கவனிச்சுக்கொள்ள வேணும். சந்தர்ப்பம் கிடைக்கேக்க எல் லாம் புகழ்ந்து தள்ள வேணும்.

இப்பிடிக் கொஞ்சம் சீரியஸா யோசிச்சால் சிறுகதை எழுதிறதில சிக்கல்கள் கனக்கக் கிடக்கெண்டது விளங்கும். எங்கிட முதுகையே சொறிய ஏலுதில்லையாம். மற்றவையளின்ர முதுகைப் போய்ச் சொறி ஞ்சு பேரெடுக்க வேணுமே? இவையளைப் போய்ச் சொறிஞ்சால் அவை யளுக்குப் பிடிக்காது. அவையளைப் போய்ச் சொறிஞ்சால்...

'ஆரையுமேன் சொறிஞ்சு மினக்கெடுவான்? என்வழி தனிவழி' எண்டு தனிச்சுப் போகலாம் எண்டு பாத்தால், அதுவும் சரிப்படாது. வாசிக்க ஆளில்லாட்டில் எதுக்கு எழுது வான்? பைத்தியக்காற ஆஸ்பத் திரீல தன் பாட்டில் புலம்பிக்கொண்டிருக்கிற ஒரு பைத்தியக்காறனுக் கும் [அதாவது மன நோயாளிக்கும்] எனக்கும் என்ன வித்தியாசம்?

சொல்லப்போனால் பெரிசா ஒரு வித்தியாசமும் இல்லைத்தான். பெரும்பாலான கலைஞர்கள் ஓரளவுக்கு மறை கழண்ட கேசுகள்தான். ஆனபடியால், 'போற்றுவார் போற்றட்டும்; புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும்', எண்டு போட்டு எழுதிப் பாக்கவேண்டியதுதான்

எங்கோ ஒரு மூலையில எங்கோ ஒரு வாசகன் எனது படைப்பை வாசித்துச் சிலாகிக்கப் பிறந்துதான் இருப்பான். அல்லது பிறந்து கொண்டிருப்பான். அல்லது பிறக்கப்போகிறான். அப்படியான வாசக னுக்கு எனது கதையைச் சமர்ப்பணமாக்கி எழுதத் துவங்குவம். எழுதிற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் வரி Catchyயா அதாவது, வள்ளுவர் சொன்ன மாதிரி 'கேட்டார்ப் பிணிப்பதாக கேளாரும் வேட்ப மொழிவதாக' இருக்கவேணுமாம். எப்பிடித்துவங்கலாம்?

சொல்ல மறந்து போனன். கதைக்குத் தலைப்பு முக்கியம். ஆள் பாதி ஆடை பாதி எண்ட மாதிரி வாசகனை இழுத்துப் பிடிக்குமாப் போல தலைப்பு இருக்கவேணும். அதுக்காக 'பிடிச்சிராவி' - 'குறடு' - 'இடுக்கி'- எண்டெல்லாம் வைக்கேலுமே? [வைக்கலாம்; பிழையில்லை- சிவப்புச் சட்டைக் காறரைக் கொஞ்சம் இழுக்கக்கூடும். [ஒரு காலத்தில ஜெய]'காந்தம்' கவர்ந்து இழுத்த மாதிரி.]

தலைப்பு, கதையின்ர மூலக்கருவை அதாவது Plot ஐப் பூடகமாச் சொல்றமாதிரி இருக்க வேணும். ஆனால் சொல்லக்கூடாது. [கதையில கரு எண்டு ஒண்டு இல்லாட்டில் ? - கருக்கலைப்பு எண்டு வச்சுத் துலைக்க வேண்டியதுதான்.]

அந்தக் காலத்தில - அதாவது புதுமைப்பித்தன்ர காலத்தில [அதுகளையும் நான் வாசிச்சிருக்கிறன் எண்டதை வேற எங்க போய்ச் சொல்றதாம்?] ரெண்டு தலைப்பு வைப்பினம். பெரும்பாலும் நாவல்களுக்கு. பிடிச்ச தலைப்பைப் பிடிச்சுக்கொள்ள வேண்டியது தான். 'பொரிச்ச மீன் அல்லது பாதை தவறிய மீனா' எண்ட மாதிரி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு 'குருவிக்கூடு' 'கூண்டுக்கிளி' 'குப்பைத்தொட்டி' எண்ட மாதிரி குறியீடா வச்சுப் பாத்திச்சினம். சில ஆக்கள் கவித்துவமா, 'கரையைத் தொடாத அலைகள்' 'கோடுகளைத் தாண்டாத கோலங்கள்' எண்டெல்லாம் ஜில்மால் பண்ணித் தலைப்பில தொங்கிக்கொண்டு நிண்டிச்சினம். நான் அப்பிடியெல்லாம் மண்டையப் போட்டு உறுட்ட மாட்டன். சின்னப் பிள்ளைக்கும் விளங்கிற மாதிரித்தான் வைப்பன். எப்பிடியெண்டால்- மேல பாருங்கோ. - முகட்டையில்ல ; தலைப்பை.

-------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு ராஜாவின் கதை

**வா**ழ்க்கை விசித்திரமானது. ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரி. எல்லாரும் ஒரே மாதிரி இருந்தால் வாழ்க்கேல ருசியிராது. உப்புச் சப் பில்லாமல் போயிரும். அஞ்சு விரலும் ஒரே மாதிரியே?

எங்கிட குடும்பத்திலையும் அஞ்சு பேர்தான். நான்தான் நடுவி லாள். எனக்குப் பின்னாலை ஒரு தம்பியும் ஒரு தங்கச்சியும். மத்தளத் துக்கு ரெண்டு பக்கமும் இடி எண்ட மாதிரித்தான் என்ர பாடு. சரி என்ர கதைய விடுவம்

நான் சொல்ல வெளிக்கிட்டது தம்பி தர்மராஜிட கதையை. எங் கள் எல்லாருக்கும் அவன் ராஜா. பேரிலதான் ராஜா. வாழ்க்கையில அவன் ஒரு கூஜா. எல்லாருக்கும் எடுபிடி அவன்தான்.

தம்பி ராசனை இப்ப நினைச்சாலும் அழுகைதான் வருகுது. உத்தி யோகமும் பிழையில்லை; செல்வாக்கிலையும் குறையில்லை. ஆனால் உள்ள குறை என்னெண்டால் ஓட்டைக் கையன். காசைச் சேமிக்கத் தெரியாத ஒரு செலவாளி. மச்சாள் எண்டு வந்து சேந்தவ அவனுக்கும் மேல. ஊதாரித் தனத்துக்கு உருப்படியான உதாரணமா அவவத்தான் சொல்லவேணும். வரவு எட்டணா எண்டால், செலவு பத்தணா.

அதனாலதான் கடைசிக் காலத்தில உத்தரிக்க வேண்டியதாப் போச்சுது. பாயும் படுக்கையுமா இழுபறிப்பட்டுக்கொண்டு கிடக்கிற அவன்ர கோலத்தை நினைக்க வயிறு பத்தி எரியுது.

குடி, கூத்தி சூது வாதெண்டு இருந்தவங்களுக்குக்கூட, கடைசிக் காலத்தில நல்ல நேரம் வந்திடுது. அப்பிடியான கெட்ட பழக்கங்கள் ஒண்டுமில்லாத பெடிக்கு ஏன் இந்தக் கதி வந்துதெண்டு கேட்டால் அவன் வாங்கி வந்த வரம் அந்த மாதிரி எண்டுதான் சொல்ல வேணும்..

குடும்பம் எண்டது கோவிலா இருக்க வேணும். அது குப்பைக் கூடையா இருந்தால்? அவனுக்கு வந்த முடிவுதான் எல்லாருக்கும். வெற்றி பெற்ற ஒவ்வொரு மனிசனுக்குப் பின்னாலையும் ஒரு பொம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளை இருப்பா எண்டு சொல்லுவினம். ஆனால் எங்கிட தம்பிக்குப் பின்னால ஒரு குட்டிச் சாத்தான் எல்லோ இருந்திருக்கு.

அந்தக் குட்டிச் சாத்தானைத் தேடிப் பிடிச்சதும் அவர்தான். அதில வேற யாரையும் பிழை சொல்ல ஏலாது. ஆனால் தம்பி அவவுக்குப் பின்னால போனதுக்கு எங்கிட அய்யாவும் ஒரு காரணம்.

எங்கிட வீட்டில எப்பவும் 'ஆமி கவுண்மென்ற்' தான். அய்யா வச்சதுதான் சட்டம். ''அடி உதவுமாய் போல அண்ணன் தம்பி உதவாயினம்' எண்ட பழங்கால நம்பிக்கையில வீட்டிலையும் பிரம்பும் கையுமா குடும்பம் நடத்தினவர்தான் எங்கிட அய்யா. போதாக குறைக்கு அவர் ஒரு பள்ளிக்கூட வாத்தியார் வேற. சொல்ல வேணுமே? பிள்ளயளப் பெத்த வேன்ர சாபம் எல்லாம் எங்களிலதான்.

ஏழு வயசில தேப்பனைத் திண்டிட்டு, சுவாமிமாரின்ர கருணையால கஷ்டப்பட்டுப் படிச்சு முன்னேறித் தமிழ்ச் சட்டம்பியாகி, அங்க இங்க எண்டிருக்கிற வேதப்பள்ளிக்கூடங்களில படிப்பிச்சு, கடைசியாக் கொழும்போட மாற்றலாகி வந்து பெரிய கொலிச்சில தமிழ்ப் பகுதிக்குப் பொறுப்பா இருந்த ஆளவர்.

பெரிய படிப்புப் படிச்சிருந்தாலும் உலக ஞானம் எண்டது மருந்துக்குக்கூட இல்லாத மனிசன். வீட்டிலையும் பிள்ளையளப் 'படி படி' எண்டு இருத்தி எழுப்பினதால ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு போக்கில வளர்ந்ததுதான் கண்ட பலன்.

அம்மா பாவம். சாப்பாட்டில மயிர் கிடந்திட்டுதெண்டு சாப்பாட்டுப் பீங்கானைத் தூக்கிக் கடாசின மனுசனுக்கு முன்னால வாயைத் திறக்கேலுமே? எதோ நடக்கிறது நடக்கட்டும். தன்ர தலையெழுத்து அப்பிடியாக்குமெண்டு விதியில பாரத்தைப் போட்டிட்டு, 'ஏசுவே இரட்சியும்' எண்டு கடவுளிட்ட மண்டாடிக் கொண்டு, வாயிருந்தும் வாய் பேசாத உம்மாண்டி போல இருக்கப் பழகீற்ரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெடியள் எண்டால் துடியாட்டம் இருக்கும்தானே? வீட்டில குழப்படிக்குக் குறைவில்லை. அதுவும் ரெட்டைச் சுழியங்கள் எண்டாலே வீடு ரெண்டுபட்டிடும். தம்பிக்கு மூண்டு சுழி. அதால மற்றவைக்கு ஒரு அடி விழுந்தால் அவனுக்கு **Trible** லா நடக்கும்.



ஐயாவின்ர கட்டுப்பாடும் கெடுபிடியும் ஆளை ஒரு சாடையான சண்டியனா மாத்தீற்றுது. சண்டியன் எண்டால் கையால காலாலைதான் காட்ட வேணுமெண்டில்லையே. எச்சில்தான் அவன்ர ஆயுதம். துப்பலுக்குப் பயந்தே சண்டைபோட வாறவை எல்லாம் தூர விலகி ஓடுருவினம்.

படிப்பிக்கிற 'மாஸ்டர்'மார் ஒவ்வொருத்தரும் நாளுக்கொரு முறைப்பாட்டோட வருவினம். தாய் தேப்பன்மார் படிப்பிக்கிற பள்ளிக் கூடங்களில படிக்கிற பிள்ளையளுக்கு இதுதான் பெரிய வில்லங்கம். தோலை உரிக்கச் சொல்லி அவையளுக்கு அய்யாவும் 'பேர்மிஷன்' குடுத்திடுவேர். பிறகென்ன? வீட்டிலையும் பூசை நடக்கும்; பள்ளிக்கூடத்திலையும் அதுக்குப் பஞ்சமிராது.



நோஞ்சான் உடம்பு. தாங்காதுதான். ஆனாலும் தாங்கியிருக்குது. பத்து வயசுப் பெடியனுக்கு மனசளவில அது எந்தளவு பாதிப்பை ஏற்படுத்தி இருக்குமெண்டு ஒருத்தரும் யோசிச்சதாத் தெரியேல்லை.

அய்யாவுக்குப் பயந்து, அம்மாவும் ஆறுதல் சொல்லி அரவணைக்கக்கொள்ள வரமாட்டா. வாழ்க்கையில போதுமான வசதி இருந்துது. படிக்கக் கொள்ளத் தேவையானது எல்லாம் இருந்துது. ஆனாலும் அன்பு செய்ய ஒரு ஆளில்லாத வாழ்க்கையில என்ன இருந்தென்ன?

பள்ளிக்கூடத்திலையும் மாஸ்டர் முதற்கொண்டு எல்லாருமே **Torture** தந்தபடிதான். தீண்டத்தகாத வியாதிக்காரனைத் தள்ளி வைக்குமாப் போல பிறிம்பு காட்டி அவனுக்குத் தனி மேசை கதிரை போட்டு இருத்திவச்சாப் பிறகென்ன? அவனைப் பாத்து நக்கலாச் சிரிக்கிறதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம் தெளிச்சுப் பகிடி பண்றதும், ஏத்தி விட்டுக் கூத்துப் பாக்கிறதும், பதிலுக்கு அவன் சொண் டைக் கடிச்சு பல்லை நெறுமி முழிசிப் பாக்கிற தைப் பாத்துக் கெக்கெட்டமிட்டுச் சிரிச்சுக் கூக்காட்டிறதும் மற்றப் பெடியளுக்கு ஒரு முசுப்பாத்தி.

அவன்ர ஆற்றாமையின்ர வெளிப்பாடு கையில இருக்கிற பென் சில்லதான் வந்து விடியும். மேசையில பென்சிலால குத்து குத்தெண்டு குத்தி, அதின்ர கூரை மொட்டையாக்கி, கிறுக்கு கிறுக்கெண்டு எதை யாவது கிறுக்கித் தன்ர கோபத்துக்கு வடிகால் தேடப் பார்க்கும் அந்த சின்னப் பெடியின்ர ஆதங்கத்தை ஆருமே விளங்கிக் கொள்ளேல்லை.

சில நேரங்களில உம்மிட தம்பி இப்பிடிச் செய்தான் அப்பிடிச் செய்தான் எண்டு முறைப்பாடுகள் எண்ணிட்டையும் வரும். எனக்கும் வெக்கமாத்தான் இருக்கும். ஆனாலும் நான் அதுகளைக் கணக்கெடுக் கிறதில்லை. அம்மாட்ட வந்து சொல்றதோட சரி.

ஒருக்கா இப்பிடித்தான் அஞ்சாம் ஆறாம் வகுப்பில அவன் படிக் கேக்க ஆரோ ஒரு மாஸ்டர் தடியோட அடிக்கத் துரத்த, அவரை உச்சிப் போட்டுப் போய் . பள்ளிக்கூடத்தின்ர நடுவில ஆதரவுக் கரம் நீட்டுமாப் போல விழுதுவிட்டு சடை விரிச்சுக் கொண்டு நீண்ட ஆலமரத்தின்ர உச் சாணிக் கொப்புக்கேறி வீராதி வீரனைப் போல குந்தியிருக்க, பள்ளிக் கூட 'இன்ர வெல்' மணியடிக்க, முழுப் பள்ளிக்கூடமுமே அந்த 'குரங்குச் சேட்டை'யைப் பாத்துக் கெக்கலித்துச் சிரிச்சதும் அதுக்காக வீட்டில ஐயாட்ட பிரப்பம் தடியால வாங்கிக் கட்டினதும் அவன்ர பாலப் பருவக் கூத்துகளில மறக்க முடியாத ஒண்டுதான்.

அய்யா வீட்டில இல்லாத நேரம் அவரைத் தேடிக்கொண்டு வீட்டை வந்த மற்றொரு 'அடி' மாஸ்டருக்குப் பாடம் படிப்பிக்கவெண்டு உள்ள குசினிக்க ஓடிப்போய் விறகுக் கட்டையோட வந்து நிண்ட பெடியப் பாத்து, தனக்கு இப்பிடியொரு தடாலடி வரவேற்புக் கிடைக்கக் கூடு மெண்டு கனவிலயும் எதிர்பார்த்திராத அந்த மனிசன் குதிகால் பிடரீல அடிபட ஓடித் தப்பினதும் சுவாரஸ்யமான மற்றொரு கதை. அதுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யா அவனை நாள் முழுக்க பட்டினி போட வச்சதெல்லாம் அவ னைப் பொறுத்த மட்டில பச்சைத் தண்ணிதான்.

வீட்டில தம்பிக்கு அடி விழுந்தால் நாங்கள் தப்பினம். **Once at a time** எண்டதுதான் அய்யாட 'பொலிசி'. அதால தம்பியிட குழப்படிக்கு முன் னால எங்கிட குழப்படியள் அடிபட்டுப் போயிடும். பெரும்பாலும் எங்க ளுக்கு விழ வேண்டிய அடியளை எல்லாம் விரும்பியோ விரும்பாமலோ தானே வாங்கி எங்களைக் காப்பாத்தினது தம்பிதான். இப்ப இரக்கப் படுற நாங்கள் கூட அப்ப சுயநலமாத்தான் இருந்திட்டம்.

இப்பிடியெல்லாமிருந்த தர்மராசா ஏ' லெவலைத் தொட்டது பெரிய விஷயம்தான். மேல் வகுப்புக்குப் போகப்போக தானும் வெண்டு காட்டவேணுமெண்ட வைராக்கியமும் வெறியும் அவனுக்குள்ள வளர்ந் திருக்கு.

அன்புக்கும் ஆதரவுக்கும் அங்கீகாரத்துக்கும் ஏங்கிக் கொண்டி ருந்த அவன் காதலில விழுந்ததும் அதாலதான். அய்யா ஒரு பக்கம் எண் டால் எங்கிட வீட்டுச் சூழலும் இன்னொரு முக்கிய காரணம். எங்கிட வீட்டை அம்மாவைத் தேடி அவதரவளி பெண்டுகள் ஆரும் வந்தால் சரி. மற்றப்படி வேற பெண்டுகள் ஆரும் எட்டியும் பாராயினம். எங்களுக்கு மச்சாள் மாரெண்டு உறவு முறையில அஞ்சாறு பெட்டையள் இருந்தா லும் தொடுசல் குறைவு. அதுகள் எல்லாம் ஊரோட. அத்தி பூத்தாப் போல எப்பயெண்டாலும் காணுறதுதான்.

நாங்கள் எல்லாரும் படிச்சதும் **Boys School** லில. பெண்வாசனை தெரியாத 'ரிஷ்ய ஸ்ருங்கர்'களைப் போலதான் எங்கிட வளர்ப்பும். யாழ் ப்பாணத்தார் பொம்பிளப் பிள்ளையளை வேலி அடைச்சுக் காபந்து பண்ணி வளர்க்குமாப் போல கொழும்பு மாநகரில நாலு சுவருக்க பெடி யளக் 'கொன்றோல்' பண்ணி அய்யா வளர்த்துப் பாத்தார்.

ஆனா வயசு வந்தால் எல்லாம் தானா வரும்தானே? அய்யா தமிழ் தமிழ் எண்டு அதுக்குப் பின்னால திரிஞ்சதால, தொத்து வியாதி போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் எல்லாருக்கும் 'தமிழ்ப்பனி' கொஞ்சம் கூட. மேடைப்பேச்சு, கதை கட்டுரை எழுதிறதெண்டு தம்பிக்கும் அதில பயங்கர ஈடுபாடு.

அந்தக் காலத்தில இருந்தது ஒரு றேடியோதான். றேடியோ சிலோன். அதில ஆற்றயும் பேர் வாறதே பெரிய விஷயம். குரல் வாற தெண்டால்?சொல்லத் தேவையில்லை. அந்த ரேடியோவில **Relief Announcer** ராத் தம்பி எப்பிடியோ எடுபட்டிட்டான். சினிமாப் பாட்டெண் டால் அவனுக்கு ஒரே பைத்தியம். தியாகராஜ பாகவதரில துவங்கி சிவாஜி எம்ஜியார் எண்டு உள்ள நடிகன்கள் எல்லாரின்ரையும் பாட்டுப் புத்தகங்களா வாங்கியடுக்கி வீடெல்லாம் குப்பையாக்கி வச்சிருப் பான். நான்தான் எப்பெண்டாலும் அதுகளை எடுத்து அடுக்கி வைப்பன். அதுகளை எல்லாம் தூக்கி எரிக்கப் போறன் எண்டு அய்யா ஒருநாள் பயங்கரமாச் சத்தம் போட்டேர். எண்டாலும் நல்லவேளை எரிக்கே ல்லை. எப்பிடியோ மனம் மாறி, அவர் தன்ர சொந்த அரசியலில மூழ்கீற் றேர்

பழைய பாட்டுகளைத் தொகுத்து நிகழ்ச்சியைச் சுவாரஸ்யமாச் செய்யிறதில தம்பி விண்ணன். அந்தத் திறமை அவனுக்குள்ளை எங்க மறைஞ்சிருந்துதெண்டு எங்களுக்கே ஆச்சரியம்தான். வீட்டில உம் மாண்டியா இருக்கிற அவன் ரேடியோவில் வந்தால் காணும். விளாசித் தள்ளிப்போடுவான். அய்யாவுக்கும் அதில உள்ளூரச் சந்தோசம்தான். ஆனால் வெளீல காட்டிக் கொள்ளமாட்டேர்.

அங்கதான் - அந்த ரேடியோவிலேதான், அவற்ர காதலும் கனியத் துவங்கிச்சுது. தனக்கேற்ற ஒரு ராணிய ராஜா கண்டு பிடிச்சது **- Sorry** - காணாமல் பிடிச்சது அங்கதான். காணாமலே காதல் கொள்ளிற கதைய ளெல்லாம் சினிமால வந்தது இப்ப கிட்டடீலதான். அவற்ர வாழ்க்கை யில அது அப்பவே நடந்திட்டுது.

அந்த நிகழ்ச்சிக்கு ஆக்கங்களை எழுதிக்கொண்டிருந்த ஒரு குமரி அவன்ர குரலில மயங்க இவன் அவவின்ர எழுத்தில கிறங்க காதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்புப் பத்தீற்றுது. ஆளுக்காள் பேனா நண்பர்களா மாறிக் காதலில விழுந்திட்டினம்

அவன் போட்ட பாட்டைப் பற்றி, அதை அவன் சொன்ன விதத்தைப் பற்றித் தாளிச்சுத் தாளிச்சு அவ எழுதுவா. இதுக்கெண்டு விசேஷமான பேப்பர் வாங்கி. அதிலை 'சென்ற்' ரத தெளிச்சு, கண்ணில ஒத்திக் கொள்ளுமாப் போல முத்து முத்தான கையெழுத்தில எழுதுவா. தம்பி பொக்கிஷமாக கொண்டாந்து ஒளிச்சு வைக்கிறதை நாங்கள் கள்ளமா எடுத்து வாசிச்சுப் போடுவம்.

'அன்பே நீ அங்கே நான் இங்கே.. வாழ்ந்தால் இன்பம் காண்பதும் எங்கே....? எண்டும்

'உன்னை நினைக்கையிலே கண்ணே.. எண்ணக் கனவுக்கும் எண்ணிக்கை ஏதடி..?' எண்டும்

'அன்பே வா அழைக்கின்ற தெந்தன் மூச்சே..' எண்டும்

உடுமலையாரும் பட்டுக்கோட்டையாரும் கம்பதாசனும் எடுத்துக் குடுக்க, பிரிவுத் துயரைப் பகிரும் பாடல்களால தூது நடக்க, இப்பிடியே ஐந்தாறு ஆண்டுகள் அவர்களின் காதல் நாடகம் தடையின்றித் தொடர்ந்தது.

இதுக்கிடேல தம்பியும் படிச்சுக்கிடிச்சு ஒரு மாதிரிச் சோதினையள் பாஸ் பண்ணிப் பட்டதாரி ஆசிரியரா எடுபட்டு வேலையிலயும் கொழுவினாப்போல நல்ல நல்ல இடங்களில இருந்தெல்லாம் சம்பந்தங்கள் பேசிவரத் துவங்கிச்சுது.

அப்பத்தான் அம்மட்டு நாளும் ரகசியமா இருந்து வந்த அவற்ற காதல் விஷயமும் மெல்லமா வெளீல வெளிக்கிட்டு வந்துது. அய்யா துள்ளியடிக்கப் போறேராக்கும் எண்டு பாத்தால் அதிசயமா அவர் பம்மீற்றேர். போதாக் குறைக்கு பச்சைக் கொடிய வேற பறத்திக் காட்டீற்றேர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யா இப்பிடித்தான். அவரைச் சரியா விளங்கிக் கொள்ள ஏலாது. சில விஷயங்களில பழசைத் தூக்கிப் பிடிக்காமல் முற்போக் காயும் முடிவெடுப்பேர். பெரியண்ணன் மச்சாளைக் காதலிச்ச நேரம் அதை முழு மூச்சா எதிர்த்துக் கெம்பினவர் தம்பியின்ர விஷயத்தில விட்டுக் குடுத்திட்டேர். இதுலயும் அவர் எதிர்த்து நிண்டிருந்தால் நல்ல தாய் போயிருக்குமெண்டு இப்ப நினைக்க வேண்டிக் கிடக்கு.

கலியாணத்துக்கு முன்னால கொஞ்சக் காலம் பாட்டுக் கூத்து எண்டு வீடு 'பம்பலா' இருந்துது. தம்பியோட பகிடிவிட்டு முசுப்பாத்தி பண்ணுவம். ம்.... அதெல்லாம் ஒரு காலம். அய்யாட கெடுபிடியள் குறை ஞ்சு தம்பியும் கை நிறையச் சம்பாதிச்சு சந்தோஷமாயிருந்த இனிமை யான காலம்.

கொஞ்சக் காலத்துக்குப் பிறகு மச்சாள் வீட்டாருக்கு இந்தக் கலி யாணத்தில விருப்பமில்லையாம் எண்டும் ஒரு கதை அடிபட்டுது. நாங் கள் வேதக்காறர்; அவையள் சைவம். அதோட செவ்வாய் தோஷம் அதி தெண்டு சில நொண்டிச் சாட்டுகள். ஆனால் உண்மையில விஷயம் வேற மாதிரி. அவையளின்ர குடும்பத்தில அஞ்சும் பொம்பிளைப் பிள் ளையள். மச்சாள் நாலாவது. மச்சாள்க்கு முன்னால ரெண்டு அக்கா மார் முடியாமல் இருந்திச்சினம். அவையள் முடிச்சாப் பிறகுதான் இவ வுக்கு 'லைன் கிளியர்'ஆகும் எண்டதுதான் 'சிற்றுவேஷன் '.

அதால, தன்னைக் கட்டிறதெண்டால் அஞ்சாறு வரிசம் காத்திரு க்க வேணுமெண்டு மச்சாள் 'கொண்டிஷன்' போட்டுக் கடிதமெழுதினா. காத்திருந்தேர்; காத்திருந்தேர்; காலமெல்லாம் காத்திருந்தேர். சீதன பாதனமெண்டு அஞ்சேம் செலவில்லாமல் ஒரு கவுண்மென்ற் மாப் பிளை கிடைக்கிறதெண்டால் அந்தக் காலத்தில சும்மாவே? 'பம்பர் சுவீப்பெல்லோ?' என்ன நடந்தாலும் தம்பி விட்டுக் குடுக்கமாட்டான் எண்ட அவன்ர 'வீக் பொயின்ர'ப் பிடிச்சுக் கொண்டு, தாங்களும் ஒண் டும் குறைஞ்சுவை இல்லை எண்ட மாதிரிப் பவுசு காட்டி உதார் விட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டவை பிறகொருமாதிரி இறங்கி வருமாப்போல பாவலாக் காட்டி மடக்கீற்றினம்.

கடைசீல ஒருமாதிரிக் கலியாணமும் முற்றாச்சுது. சொந்தக் காறர் அண்ணன் தம்பி எண்டொருத்தருக்கும் சொல்லாமல், கலியாணத்தைக் 'கமுக் கமா' நடத்த வேணுமெண்டு மச்சாள் 'ஓடர்' போட்டா. மறுப்பேதும் சொல்லாமல் தம்பி அதுக்கும் மண்டைய மண்டைய ஆட்டினான்.

தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை ஒண்டு எங்கிட வீட்டில இருந்தது. சின்னன்ல தங்கச்சி விளையாடின விளையாட்டுச் சாமான்களில அதுவுமொண்டு. அதைப் போலத்தான் ஆகப்போறான் எண்டு அப்ப எனக்குத் தெரியாது. ஆனால் கலியாணத்துக்கு முன்னாலையே தலையாட்டத் துவங்கின அவன் பிறகு காலம் முழுக்க மச்சாள்ன்ர சொல்லுக்குத் தலையாட்டிற பொம்மையா மாறிப்போனதுதான் பெரிய சோகம்.

கலியாணத்தைத்தான் சிறப்பாச் செய்யேல்லை. 'ரிசெப்ஷனை எண்டாலும் நாலு பேருக்குச் சொல்லி எழுப்பமாச் செய்வமெண்டு எங்கிட வீட்டுக்காரர் துவங்கி 'காட்'டடிச்சு கொழும்பில ஹோல் பிடிச்சு 'வெடிங் கேக்'கிலயிருந்து பலகாரம் பணியாரம் எல்லாத்துக்கும் ஓடர் குடுத்து 'கிறாண்டா ' செய்ய வெளிக்கிட்டினம்.

அண்டைக்கெண்டு பாத்து அந்த மனிசன் - மச்சாள்ன்ர பெரியப்பர் மண்டையப் போட்டிட்டேர். பிறகென்ன, தம்பியும் மச்சாளும் குழறியடிச்சுக் கொண்டு செத்தவீடு நடத்தப் போயிட்டினம்

கடைசி நேரத்தில் இப்பிடி நடந்தால் என்ன செய்யிறது? ஓடர் குடுத்த சாமான்களைக் குப்பேல கொட்டிப் போட்டு வாற ஆக்களை [Very sorry எண்டு 'ரற்ரா' காட்டிப்] போகச் சொல்லிக் கலைச்சு விடுறதே? மனிசன்ர முகத்தைக்கூட நாங்கள் ஒழுங்காப் பாத்ததில்லை. ஆனாலும் இப்பிடி ஒரு பொறுத்த நேரத்தில மனிசன் போய்ச் சேந்த துக்கத்தைவிட எங்களுக்கெல்லாம் உள்ளுக்க ஒரு சொல்ல முடியாத ஆத்திரம்தான் அவரில. என்ன செய்யிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கத்துவங்கின ரிஸப்ஷனை குறையில்லாமல் நடத்தி முடிச் சம். எல்லாம் நல்லபடியா நடந்து முடிஞ்சாப் பிறகுதான் மெல்லமா விஷ யத்தை வெளீல விட்டம். மாப்பிளை பொம்பிளை இல்லாமல் ரிசப்ஷன் கொண்டாடின முதல் ஆக்கள் நாங்களாத்தான் இருக்கும்.

இந்தச் சகுனம் - சாத்திரம் எல்லாம் பாக்காத உத்தம வேதக்கா றரா அய்யா இருந்தது - மச்சாளின்ர பகுதியாருக்கு வாசியாப் போட் டுது. அவயளப்போல சைவக்காறரா நாங்கள் இருந்திருந்தால் உதுதான் சாட்டெண்டு நடந்த கலியாணத்தையே [குழப்பி] வெட்டி விட்டிருப்பம்.

தமிழ்ப் புலமையும் மேடேலை ஏறிப் பேசிற கெட்டித்தனமும் இருக்கிற பொம்பிளைதான் தனக்கு மனிசியா வரவேணுமெண்டது ஐயாவின்ர அந்தக்கால எதிர்பார்ப்பு. ஆனால் அம்மா விஷயத்தில அது பிழைச்சுப் போச்சுது. இலக்கிய இலக்கணம் எல்லாம் படிச்சு, ஆசிரிய கலாசாலையை மிதிச்சு வெளீல வந்தவதான் அவவும். ஆனால் மேடேல எல்லாம் ஏறி வெளுத்து வாங்கிற மாதிரியான ஆளா அவ இருக் கேல்லை. சமய பக்தியும் சமையல் பத்தியும்தான் அவவுக்குத் தெரிஞ்ச சங்கதியள். பர்த்தாவுக்கேற்றபதிவிரதையான பழங்காலப் பொம் பிளை அவ. தமிழ்ப் பண்பாட்டில ஊறின அமைதியும் அடக்கமுமான அவவின்ர அருமையான குணம் அய்யாவுக்கு விளங்கேல்லை. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை எண்ட மாதிரி, கற்பனை உலகில வாழ்ந்த அவருக்குப் புது மருமகளின்ர மேடைப் பேச்சுத் திறமையும் பட்டதாரி எண்ட பெருமையும் கண்ணை மறைச்சுப் போட்டது விதியின்ர விளை யாட்டுத்தான்.

ஐயாவின்ர அடக்குமுறையில இருந்து வெளியில வரக் கலியா ணம் தான் ஒரே வழி எண்டு நம்பின தம்பியின்ர நிலைமை அடுப்புச் சட்டிக்கை இருந்து எரியிற நெருப்புக்க விழுந்த மோட்டாமையின்ர கதி போலத்தான் ஆகீற்றுது.

பொம்பிளையள் ரெண்டு வகை. ஒண்டிலை புருசனுக்கு அடங்கிப் போய் அடிமையா ஆயிருவினம். அல்லது மனிசனை அடக்கி இருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பெட்டிக்கோட் கவண்மென்ற் ' நடத்துவினம். ஆனால் ரெண்டு வகை ஆக்களும் அதை ஒத்துக் கொள்ளாயினம். தாங்கள் அந்த மாதிரி இல்லை எண்டுதான் வெளீல காட்டிக் கொள்ளுவினம்.

தம்பியும் தன்னை அறியாமலே கொஞ்சம் கொஞ்சமா மச்சாள் ன்ர பிடிக்குள்ள மாட்டுப்பட்டிட்டான். சொந்த முயற்சியால படிச்சுப் பட்டதாரியாகிப் பிறகு அரசாங்கப் பாடசாலை அதிபராயும் வாற அளவுக்குத் திறமைசாலியா இருந்த அவனை, அந்த மாதிரி அவன் எழும்பிற துக்குத் தன்னை முடிச்சதுதான் காரணம் எண்ட மாதிரி மச்சாள் நினைக்கப் பண்ணீற்றா. அது அவ வின்ர கெட்டித்தனம்தான்.

மூளைச்சலவை செய்யிறது எப்பிடி எண்டு ஆரும் அவவிட்டத் தான் கேட்டுப் படிக்கவேணும். பாடம் படிப்பிக்கிறதிலயும், மற்றவேக்கு 'அட்வைஸ்' பண்றதிலேயும் அவவுக்கு வலு விருப்பம். தான் பீ ஏ படிச்சவ, அதால மற்ற எல்லாரையும் விடத் தான் மேல எண்டொரு 'கெப்பர் ' குணமும் அவவுக்கு. [என்னமோ தெரியேல்லை. கலைப்பட்டதாரியள் கன பேருக்கு உந்த வருத்தம் இருக்குது.] அறப்படிச்ச பல்லியப் போல அறவுரையும் அறிவுரையும் சொல்லிச் சொல்லியே ஆக்களின்ர தலயச் சுத்துறதில 'நம்பர் வண்'. 'தன் முதுகு ஒரு போதும் தனக்கேதான் தெரியாதாம். பிறகென்றால் நையாண்டி பேசுகிற ஆக்கள்' எண்டு இவையளப் போல ஆக்களைத்தான் சொல்லுறவை.

ஆனால் கலியாணம் முடிச்ச புதுசுல மச்சாள் எங்களோட பழகின மாதிரீல நாங்களும் தான் விழுந்து போனம். கதையில தேனும் பாலும் வழிஞ்சு ஒழுகும்; நடையுடை பாவனையள் கண்ணகியும் சானகியும் கூடப் பிறந்த வையோ எண்டு கேக்க வைக்கும்

ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது எண்டுவினம். அதுபோலத்தான் அவவும். படிப்பைத் தவிர ஒரு சாம்பலும் தெரியாது. வீட்டை ஒதுக்கி வடிவா வச்சிருக்கத் தெரியாது. போட்டது போட்ட இடத்தில. வீட்டுக்க வாற ஒரு கடதாசி குண்டூசி தன்னும் வெளீல போகாது. பிச்சைக்காரன் கோணிப்பையுக்க பொதிஞ்சு வச்சிருக்குமாப் போல எல்லாத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்க அங்க பொதிஞ்சு வச்சிருப்பா. எல்லாம் தேவை எண்டு கட்டிப் பிடிச்சுக்கொண்டு ஊர் ஊரா வீடு வீடாக் காவிக்கொண்டு திரியிறது தான் அவவின்ர பொழுது போக்கு.

எல்லாருக்கும் வாற மாதிரியான வருத்தம் துன்பங்கள்தான் அவ யளுக்கும் வந்துது. குடும்பத்தில மொத்தம் மூண்டு பேர்தான். ஒரே மகள். அவளும் பெரிசா ஒண்டும் வெட்டி விழுத்தேல்லை. முக்கித்தக் கித்தான் ஏ எல்லைப் பாஸ் பண்ணினாள்.

அவையோட ஒத்தவை எல்லாம் கொழும்பில வீடு வளவு கார் எண்டு எங்கயோ போய் நிக்க, முடிச்சு முப்பது வருஷம் கடந்தாப் பிற கும், ரெண்டு பேரும் உழைச்சும் ஒரு சதம் தன்னும் மிச்சம் பிடிக்க ஏலாத ஏமலாந்தியளா முழிசிக் கொண்டு நிண்டதுதான் அவயளிட சாதனை.

தம்பி ஒரு காலத்தில சொந்தக்காறருக்கு உதவி ஒத்தாசை எண்டு செய்தவன்தான். ஆனால் அவையள் கொஞ்சம் வசதியா இருந்த காலத் தில, அண்ணன் தங்கச்சி எண்டு நாங்கள் போனால், எங்க எதையாவது தண்டிக்கொண்டு போயிருவமோ எண்ட பயத்தில நசுக்கிடாமல் காரி யங்கள் பாத்து எங்களை அண்ட விடாமல் காய் வெட்டி விடுறதில வலு விண்ணி எங்கிட மச்சாள்,

'குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடை மெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்' எண்டு, இலக்கியத்தில மெத்தப்படிச்ச மேதாவி – மச்சாள், அப்படியான ஒரு நிலைமை தங்களுக்கும் வரக் கூடு மெண்டு கனவுகூடக் கண்டிருக்க மாட்டா. ஆனால் அவையளின்ர வாழ்க்கை எண்ட புத்தகத்தில அப்பிடியும் ஒரு அத்தியாயம் வரத்தான் செய்துது.

படிக்காத பட்டிக்காட்டுப் பொம்பிளையள் கூட கோழி வளத்து முட்டையை வித்து, தையலைத் தச்சு தொட்டாட்டு வேலையள் செய்து தங்கிட திறமையால பிள்ளையள டொக்டரா என்ஜீனியறா படிப்பிச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துப் போடுதுகள். மெத்தப் படிச்சுக் கிழிச்சு மச்சாளுக்கு அப்பிடி ஏலேல்லை.

வேலை ஒண்டும் கிடைக்கேல்லை. வெளிநாடு போக விருப்பம். அதுக்கு ஒரே வழி கல்யாணம்தான் எண்டு பெட்டை நினைச்சுது. அதால வெளிநாட்டு மாப்பிள்ளையைத்தான் கட்டுவன் எண்டு பெட்டை ஒற்றக் காலில நிண்டாள். ஆரையோ எவரையோ பிடிச்சு குடிகிடி இல்லாத திறம் பெடியா ஒண்டைத் தேடித் பிடிச்சினம். வெளிநாட்டு மாப்பிள்ளை எண்டால் சும்மாவே? வெறும் கை முழம் போடுமே? சீதனமா பத்து லட்சம் கேட்டினமாம். அந்த இந்தக் கலியாணச் செலவெண்டு மொத் தமா பதினைஞ்சாயிரம் தேவைப்பட்டுது

ஆனால். வைப்புச்செப்பெண்டு ஒண்டும் இல்லாதவை வெளிநாட் டுக்கனுப்ப ஆசைப்பட்டாலும் காசுக்கு எங்க போறது? கடனக் கிடன வாங்கிறதெண்டாலும் லட்சக்கணக்கில தர ஆர் இருக்கினம்?

வெளிநாடு போனவையளைப் பற்றி இளப்பமா வாய் வளைச்ச மச்சாளுக்கு இப்பதான் வெளிநாட்டுக் காசின்ர அருமை விளங்கிச்சுது போல. வெளிநாட்டவையளிட்டக் காசு சும்மா கொட்டிக் கிடக்குதாக்கு மெண்டு எங்கிட ஊர்ல இருக்கிறவை நினக்குமாய் போலத்தான் அவ வும் நினைச்சிருக்கிறா.

ஒரே தங்கச்சி எண்டிருந்தவ எங்கிட கையளை எதிர்பாராமல் மஞ்சூரியா நைஜீரியா எண்டு அலைஞ்சுலைஞ்சு ஒரு மாதிரியா யூகே யில போய்ச் செட்டில் ஆகியிருந்தா. அவவிட்டப்போய் வாய் கூசாமல் கடனாத்தா எண்டு தம்பியைக் கேக்க வச்சுப்போட்டா. குமர் காரியம். மறுக்கிறது வடிவில்லை எண்டுபோட்டு உள்ளதெல்லாத்தையும் வழிச் சுத் துடைச்சு தங்கச்சியும் எப்பிடியோ காசைப் பிரட்டி அனுப்பி வச்சிட் டுது. கலியாணவீட்டைப் பெரிய எடுப்பாச் செய்தவை காசு வந்த ரிஷி மூலத்தைப் பற்றி மூச்சும் விடேல்லை. 'இரவல் சீலையில இது நல்ல கொய்யகமாம்' எண்டு விஷயம் தெரிஞ்சவை தங்களுக்க குசுகுசுத்தின மாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பது அறுபது பேரைத் தனக்கு கீழ வச்சு வேலை வாங்கின பிரிஞ்சிப்பல், வீட்டு வேலைக்கொரு ஆளை வச்சிருக்க வக்கில்லாமல், சாமான் வாங்கச் சந்தைக்கு அலையிறதும் மனிசீட 'பெற்றிக்கோட்ட' அயர்ண் பண்ணி வைக்க அந்தரப்படுறதும் எண்டு சம்பளமில்லாத வேலைக்காரனா மாறிப்போனேர்.

கலியாணம் முடிச்சு அவுஸ்திரேலியாவுக்குப் போய்ப் பறிஞ்ச பெட்டை போன சுறுக்கிலேயே திரும்பி வந்திட்டாள். புருசனோட ஒத்துக் கொள்ளேல்லையாம். எப்பிடி ஒத்துக்கொள்ளும்? தாயைப் போல பிள்ளை இருக்கலாம். தேப்பனைப்போல புருஷன் கிடைப்பானோ? கிடைச்சிருந்தால் ஒத்துக்கொண்டிருக்கும். இனித் தாயும் மேளுமாச் சேந்து பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுக்கப் போயினமாம்.

உரிமையில்லாமல் மூலையில கிடக்கிற தம்பி தர்மராசாதான் பாவம். இப்ப பாத்தியள் எண்டால் ஆளை அடையாளம் காண மாட்டி யள். ஒட்டி உலர்ந்து துரும்பா இளைச்சுப் போனான். 'பட்ட காலில படும்...' என்னுமாப்போல நீரிழிவு எண்ட பணக்கார வியாதி வந்து ஆளைப் படுக்கையில தள்ளிப்போட்டுது. அவனைக் கவனிக்க மச்சாளு க்கு நேரமில்லையாம்.

அம்மணிக்கு. ஊர்த் துளாபாரம் பாக்கவும் கோயில் குளமெண்டு சுத்திவரவும்தான் நேரம் சரி. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியா தாம். அது போலத்தான் அவ செய்த திரிசமன் வேலையள் ஒண்டும் தம் பிக்குத் தெரிஞ்சிருக்கேல்லை. அவனைப் பொறுத்தமட்டில அவ ஒரு 'தேடக் கிடைக்காத திரவியம்'

அவ இப்பவும் நல்லாத்தான் இருக்கிறா. அவவக் குழப்பாதீங்கோ. தமிழ்ச்சங்கத்துல ஏதோ கூட்டமாம். அவதான் தலைமையாம். நேரத்துக் குப் போகாட்டில் மரியாதை இல்லை எல்லே. அதுதான் அவசரமா வெளிக்கிடுறா. அவவப் பொறுத்த மட்டில எல்லாம் நல்லபடியாத்தான் நடக்குது. எனக்குத்தான் என்னவோ பிழைபோலக் கிடக்குது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தர்மம் வெல்லும்' என்ற தார்மீக உண்மை செல்லாக் காசாகிப் போக, வலியது வெல்லும் என்ற விஞ்ஞான உண்மை நிதர்சனமாகி கெக் கலித்துச் சிரிக்கிறது நம்மைப் பார்த்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

tion.

இந்நூலாசிரியரைப் பற்றி.....



'மறைமுதல்வன்' எனும் புனைபெயரில் பரவலாக அறியப்பட்ட பல்கலை வித்தகர் G.P.வேதநாயகம்.

சிறுகதை, கவிதை, திறனாய்வு, நாடகம் என நவீன தமிழிலக்கியம் சார்ந்த பல்வேறு துறைகளிலும் கால் பதித்துப் பல பரிசுகளைச் சுவீகரித்துக் கொண்டவர்.

பத்திரிகை, மேடை, வானொலி, தொலைக்காட்சி எனச் சகல ஊடகங்களிலும் இவரது நாடகங்கள் நடைபயின்றுள்ளன. 1969 இல் இலங்கை வானொலித் தமிழ்ச் சேவையினரால் நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியிலான வானொலி நாடக எழுத்துப் போட்டியில் இவரது 'நீதியின் நிழலில்' எனும் துப்பறியும் நாடகம் முதற் பரிசீட்டியது.

2001 இல் தினகரனின் 'அமுது' சஞ்சிகையால் நடாத்தப்பட்ட படைப்பாற்றல் போட்டியிலும் 'இது ஒரு வழிப் பாதை' எனும் இவரது சமகால நாடகத்துக்கு முதற் பரிசு கிடைத்தது.

1978இல் இவரது முதலாவது சிறுகதை 'வீரகேசரி'யில் வெளியான போதிலும் அருந்தலாகவே எழுதியதால் இவர் சிறுகதை எழுத்துலகைப் பொறுத்த மட்டில் ஒரு புதியவரே. இவரது பல்வேறு வகைத்தான சிறு-கதைகளின் முதற் தொகுப்பு நூலிது.

ஓர் எழுத்தாளனாக, நடிகனாக, இலங்கை வானொலி அறிவிப்பாளனாகப் பல்வேறு முகங்களைக் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியரான இவர் 'நாளைய நாயகன்'(2000) எனும் சிறுவர் நாடக நூலையும் 'கழுதைக்கும் காலம் வரும்' (2005), காதல் போயின் கல்யாணம்' (2020) எனுமிரு வானொலி நகைச்சுவை நாடக நூல்களையும் 'கிடப்பில் கிடந்த கவிதைகள்' (2020) கவிதை நூலையும் 'இலங்கை வானொலியின் தமிழ் நாடக வரலாறு' (2020) ஆய்வு நூலையும் இதுவரை எழுதி வெளியிட்டுள்ளார். இவரது பவளவிழா ஆண்டுச் சிறப்பு நூல்களுள் ஒன்றாக இந்நூலும் வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கது.

Printed by
Sri Digital Press (0777 275 489) Colombo - 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org